
# சு.சமுத்திரம்



# எனது கதைகளின் கதைகள்

சு. சமுத்திரம்

# எனது கதைகளின் கதைகள்

ஏகலைவன் பதிப்பகம்

எனது
கதைகளின் கதைகள்

சு. சமுத்திரம்

முதற்பதிப்பு:
ஏப்ரல் - '96

அச்சும் வடிவமைப்பும்:
மாணவர் மறுதோன்றி அச்சகம்
சென்னை - 20
☎ 4911358

ஏகலைவன் பதிப்பகம்
நெ.9, இரண்டாவது குறுக்குத்தெரு
டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர்
சென்னை - 41.
☎ 4917594

விலை ரூ.45

# அணிந்துரை

திரு. சு. சமுத்திரம் அவர்கள் தமிழகத்தில் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவர். அனைத்திந்தியப் பரிசான சாகித்ய அகாடமி விருதைப் பெற்றவர். "கலை கலைக்காகவே", எனும் வசதிக்காரர்களின் கொள்கைக்கு நேர் எதிரான கருத்துக் கொண்டவர்.

உலகில் வாழும் ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கையில் குறிக்கோள் இருக்க வேண்டும்; உழைப்பின் பலனை தானும் பிறரும் இவ்வுலகில் அனுபவிக்க வேண்டும்; எதிர்கால சந்ததிக்கும் பயனளிப்பதாக இருக்க வேண்டும் என்ற கருத்துக்களை உயிர் மூச்சாகக் கொண்டுள்ளவர்.

திரு. சமுத்திரத்தின் கதைகளும், புதினங்களும் நாம் வாழும் தமிழ் சமுதாயத்தின் வாழ்க்கையை பிரதிபலிப்பவை; சிற்றூர்களின் பல்வேறு சாதிகளாகப் பிரிந்து வாழும் உழைக்கும் மக்களிடையே காணும் சிறந்த மானிடப் பண்புகளை சமுத்திரத்தின் படைப்புகளில் காண முடியும்.

சாதிஒழிப்பு என்ற உயர்ந்த லட்சியத்திற்கு கலப்புத்திருமணமும் ஒரு மாற்றாக ஒத்துக் கொள்கிறோம்; ஆனால் அதுவே இரு சாதிகளுக்குள் மோதலாக வெடித்து விடுகிறது; நீண்டகாலத்துக்கு நீடிக்கும் பகமையாக மாறி விடுகிறது. திரு. சமுத்திரத்தின் "ஒரு கோட்டுக்கு வெளியே" எனும் புதினத்தில் ஊரே சாதிக்கலகத்தில் எரிந்து விவசாயக் கூலியாக வாழும் ஒரு பெண்ணை சகோதரியாக வரித்துக் கொண்டு பாதுகாப்புக் கொடுக்கும் பேராண்மையை உணர முடிகிறது.

கிராம வாழ்க்கை மிகவும் சிக்கலானது; மனிதனின் சிறப்பை மதிக்காத சாதிக் கொடுமைகள், ஊர்க்கூட்டம் என்பது போலி ஜனநாயகம்; நாட்டாண்மைக் காரரின் குடும்ப மேலாதிக்கமே சில இடங்களில் நீடிக்கிறது. ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்குரலும், பழைய பத்தாம்பசலி ஆதிக்கத்தை நிலை நிறுத்த முடியவில்லை என்ற பிற்போக்காளர்களின் ஆதங்கமும் சு. சமுத்திரத்தின் படைப்புகளில் படம் பிடித்துக் காட்டப்படுகின்றன.

இன்றைய அரசியல், நிர்வாகச் சீர்குலைவு, நல்வாழ்வுத் திட்டங்களின் சலுகைகள் மக்களைச் சென்றடையாமல் பலபேர் கைமாறும் ஐஸ் கட்டியாக கரைந்து விடுவதை பல்வேறு கதைகளில் எழுதியிருக்கிறார்.

திரு. சு. சமுத்திரம் அவர்கள் சமூகப் பிரக்ஞையுள்ள எழுத்தாளர்; அவர் எழுதிய கதைகளுக்குக் கருவாக இருந்த நிகழ்ச்சிகளைத் தொகுத்து நூலாக வெளியிட்டு இருக்கிறார். இது புது எழுத்தாளர்களுக்கும், வாசகர்களுக்கும் பயனளிக்கும் என்று நம்புகிறோம்.

இன்றைய தமிழ் சமூகத்தின் சீரழிந்து வரும் அரசியல், பண்பாடுகளை துணிச்சலாகச் சாடி வருகிறார்; கதை உருவகங்களில் படைத்து வருகிறார். தனது படைப்புகளில் புதிய உத்திகளைக் கையாண்டு வருகிறார். அவர் மேலும் பல புதிய படைப்புகளைத் தமிழ் இலக்கியத்திற்கு வழங்கி சிறப்பிக்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

சென்னை
4.4.1996

ஆர். நல்லகண்ணு
செயலாளர்
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி
தமிழ் மாநிலக்குழு.

# பதிப்புரை

எங்கள் குடும்பத் தலைவரான எழுத்தாளர் சு. சமுத்திரத்திற்கு, ஏகலைவனை மிகவும் பிடிக்கும். அவன் கட்டைவிரல் வஞ்சகமாய் வெட்டப்பட்டதை அடிக்கடி, சொல்லிச் சொல்லி கொதித்துப் போகிறவர். "மகா பாரத" அர்ச்சுனனைத்தான் இன்றளவும் மாவீரன் என்கிறார்கள். "வில்லுக்கு விஜயன்" என்ற பழமொழியே இந்த வியப்பால் ஏற்பட்ட ஒன்று. ஆனால் இந்த வில்லாளி விஜயனோ வேடச் சிறுவனான ஏகலைவன், தன்னைவிட மிகப் பெரிய வில்லாளியாக விளங்குவதை நேரடியாகப் பார்த்து பொறாமையில் புழுங்கி, துரோணாச்சாரியாரைத் தூண்டிவிட்டு அவன் கட்டை விரலை வெட்ட வைத்தவன். ஆக அர்ச்சுனனின் உலகறிந்த வீரம் ஒரு மாபெரும் சதியில் முளைத்த சோரம்.

இன்று மலைமக்கள் தங்களின் கட்டை விரல்களை தாமாகக் கொடுக்கவில்லை என்றாலும், அந்த விரல்கள் பலவந்தமாக வெட்டப்படுகின்றன. தலித் தோழர்கள் முன்னேற வேண்டிய அளவிற்கு முன்னேற வில்லை என்றாலும், ஓரளவு முன்னேறிக் கொண்டு. இருக்கிறார்கள் என்பது உண்மை. ஆனால் மலை மக்களின் கட்டை விரல்கள், இன்னும் முஷ்டிகளாகவில்லை.

எங்கள் நோக்கமும், சு. சமுத்திரத்தின் நோக்கமும், எங்கள் முன்னோரான ஏகலைவனைப்

போல் இவர்களின் கட்டை விரல் வெட்டப்படாமல் இருப்பதற்கு எங்கள் அளவில் செயல்பட வேண்டும் என்பதே. இந்தக் கட்டை விரல்களே முஷ்டிகளாகும் என்பது எங்கள் நம்பிக்கை. இதனால்தான் ஏகலைவன் பதிப்பகத்தை துவக்கி இருக்கிறோம். சு. சமுத்திரத்தின் ஒரு சில சிறுகதைகள் அவற்றை பிரசுரிக்கக் கூடிய நிறுவனங்களுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்தும் என்பதால், இந்த பொறுப்பை "ஏகலைவன் பதிப்பகம்" மேற்கொள்கிறது. அடுத்தடுத்து பல்வேறு படைப்புக்களைப் பிரசுரிக்க இருக்கிறோம்.

இந்த நூலுக்கு திருக்குறள் போன்ற முன்னுரை எழுதிய பெரியவர் ஆர். நல்லகண்ணு அவர்களுக்கும், செம்மையாக அச்சிட்ட மாணவர் நகலக உரிமையாளர் சகோதரர் அருணாசலம் அவர்களுக்கும், இந்த நூலுக்கு அட்டைப்படம் வரைவது முதல் இது வெளியாவது வரை முழுப் பொறுப்பேற்ற கவிஞர் இளவேனிலுக்கும் எங்கள் நன்றி உரித்தாகும்.

**ஏகலைவன் பதிப்பகம்**
நெ.9, இரண்டாவது குறுக்குத்தெரு
டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர்
சென்னை-41
☎ 4917594

*''மக்களிடம் செல்லுங்கள்.*
*அவர்களுக்கு உண்மையான*
*மாணவனாய் இருங்கள்.*
*அவர்களது எதார்த்த*
*வாழ்விலிருந்து பாடம் பெறுங்கள்!''*

# எனது கதைகளின் கதைகள்

நான், கதை எழுத வந்ததே தனிக்கதை. பள்ளிக்கூடக் காலத்திலும், கல்லூரிக் காலத்திலும் ''மலர் கவிஞனாக இருந்திருக்கிறேன். அதாவது பள் ளிக்கூட கல்லூரி - கல்வி மலர்களில் கதை, கட்டுரை எழுதியிருக்கிறேன். பேச்சுப் போட்டிகளிலும் முதலாவ தாக வந்திருக்கிறேன். கல்லூரி காலத்தில், ஒரு கதை எழுதி ஒருபத்திரிகைக்கு காலையில் அனுப்பினால், அது மறுநாள் காலையில் திரும்பி வந்தது. ஆனால் 1973ம் ஆண்டு இதில் எனக்கு ஒரு திருப்புமுனை. இப்போது புதுதில்லியில் தொலைக்காட்சித் துறையில் செய்தி ஆசிரியராகப் பணிபுரியும் திரு. செல்வராஜு டன் அப்போதைய கதைகளின் தரம் மட்டமாய் இருப்பதாக அடிக்கடி சொல்வேன். (இப்போதோ அந்தக் கதைகள் உயர்தரம்) அவரும் ஒரு நல்ல

எழுத்தாளர். ஒரு தடவை "நீங்கள் வீணாக குறை சொல்லிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. ஒரு கதையை எழுதி பிரசுரித்துக் காட்டுங்கள். அதற்குப் பிறகு - பேசுங்கள்" என்றார். எனக்கு சற்று ரோஷம் வந்தது. அன்றிரவே, எழுதத் துவங்கினேன். அந்தக் கதையை, ஆனந்த விகடனுக்கு அனுப்பிவிட்டேன். கதை பிரசுரமாயிற்று. விசாரித்துப் பார்த்ததில், எனக்கு ஏற்கெனவே அறிமுகமாயிருந்த நண்பர் தாமரை மணாளனும், இப்போது மலேசிய தொலைக்காட்சியில் பணியாற்றும் நண்பர் ஜே.எம். சாலியும், இந்தக் கதை பிரசுரமாவதற்கு, பெரிதும் முயற்சி எடுத்தார்கள் என்பது தெரிய வந்தது. இந்தப் பின்னணியில் வாசகர்களிடம் எனது பல்வேறு கதைகளுக்குப் பின்புலனாக இருந்த மெய்யான கதைகளைப் பகிர்ந்து கொள்ளலாமென்று நினைக்கிறேன்.

திரு. செல்வராஜின் "நாக்கைப் பிடுங்குவது மாதிரியான" அறிவுரைக்கு, ஒரு கதையாவது பதிலாக வேண்டும் என்பதுதான் என் எண்ணம். நான், பிரபல எழுத்தாளனாக வேண்டும் என்பதல்ல. முதல் கதை என்பதாலோ என்னவோ, அந்தக் கதை எழுதுவதற்கு முன்னாலும், பின்னாலும் இருந்த என் மனப்போக்கு இப்போதும் நினைவுக்கு வருகிறது.

இப்போது, உருவம், உள்ளடக்கம், உத்தி போன்ற இலக்கிய அனாவசியங்களுக்குள் அவஸ்தைப்பட்டு, ஒரு சிறுகதை எழுத பல நாட்கள் எடுத்துக் கொள்கிறேன். அப்படி இல்லாமல், ஒரே ஒரு மணி நேரத்தில் மடமடவென்று எழுதிவிட்டேன். ஊரில் நடந்த பல நிகழ்ச்சிகளில், ஒரு நிகழ்ச்சியை மனதில்

நிலைப்படுத்தி, ஒரு சிறுகதையை உருவாக்கிவிட்டேன். கதையை முடித்ததும், ஒரு பரமார்த்த திருப்தி. அந்தக் கதையில் சில 'அறிவுரைகளும்' சொல்லப் பட்டதால், நாட்டைத் திருத்த என்னால் (என்னால் தான் அல்ல) முடியும் என்ற உறுதி. ஏதோ பிறந்ததற்கு பிரயோசனப் படுவது போன்ற நிறைவு. அந்தச் சிறுகதை நிச்சயம் பிரசுரமாகிவிடும் என்ற நம்பிக்கை. காரணம், அந்தக் காலத்துக்கு, அது வித்தியாசமான கதை. அரசியல் உப்பு கலந்த "பொடிக்" கதை. புதுதில்லியில் இருந்து எழுதிய கிராமத்துக் கதை. தனிநபர் வழிபாட்டை கண்டிக்கும் புதுக்கதை.

## அங்கே கல்யாணம் - இங்கே கலாட்டா

*1974*-ம் ஆண்டு நடைபெற்ற இந்த உரையாடல் என்னை என் கிராமத்திற்கு *1950*-களுக்குக் கொண்டு சென்றது. அப்போதைய காலகட்டம் மிகவும் வித்தியா சமானது. இப்போதைய தமிழன்போல் அறுக்கப்படும் போது கூட அழத் தெரியாத முயல்போல் இல்லாமல், போர்க்குணத்தோடு இருந்த காலம். இரயில், பேருந்து, சந்தை, கல்யாணம் போன்ற பொது நிகழ்ச்சிகளில் அரசியல் விவாதங்கள் அடிதடி அளவுக்குக் கூட போன காலம். அடைந்தால் திராவிட நாடு இல்லையா னால் சுடுகாடு என்றும், பண்டித நேருவை நேரு பண்டிதர் என்றும், உழைப்பால் உயர்ந்த உத்தமர் காமராஜை படிக்காத பாமரர் என்றும், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் வாதித்து வந்த காலம். இந்த இயக்கத்தின் தலைவர் அண்ணாவை, காங்கிரஸ்காரர் கள் ஒரு சிலர் கொச்சையாக வருணித்த காலம். பள்ளிக்கூடம், கல்லூரி முதலியவற்றில் இந்தித்

திணிப்பு பற்றிக் காரசாரமான விவாதங்கள் நடை பெற்ற காலகட்டம். நாலுபேர் கூடிவிட்டால் போதும், உடனே அரசியல் பேச்சு. உடனே அக்கம்பக்கத்தில் இருப்பவர்களும் கும்பலாகி விடுவார்கள். ரத்த ஆறு, இருப்பது ஒரு உயிர், அது இப்போது வேண்டுமானா லும் போகட்டும் என்ற புறநானூறு முழக்கங்களோடு, ஒசைப்படாத ''அகநானூறு'' நிகழ்ச்சிகளும் நடந்த காலம். கட்டிளங் காளைகள், கலைஞரின் பராசக்தி பாணியில், அதே சமயம் அரைகுறைத் தமிழில், அண்ணா பாணியில் சொல்லப்போனால் ''பருவ மங்கைகளுக்கு'', காதல் கடிதங்கள் எழுதிய காலம். கண்ணே, கற்கண்டே, கற்பகமே, பெட்டகமே என்று குறைந்தது இரண்டு பக்கத்திற்காவது ஒருத்தன் கடிதம் எழுதவில்லையானால், கடிதத்திற்குரிய காரிகை அவனை ஏறெடுத்துக் கூட பார்க்க மாட்டாள். சில அண்ணன்மாருக்கு நானே கூட பல காதல் கடிதங் களை எழுதிக் கொடுத்திருக்கிறேன். இதனாலேயே சில பெண்களிடம் செல்லமான முத்துக்களையும், வலி தாள முடியாத மொத்துக்களையும் வாங்கி இருக்கி றேன்.

இப்படிப்பட்ட காலப் பின்னணியில், எங்கள் பக்கத்து ஊரில் ஒரு வாத்தியாரும், அப்போதைய பெரிய படிப்பான எட்டாம் வகுப்பைப் படித்த ஒருத்தியும் காதலித்த நேரம். இருவரும் நிலம் பார்த்து, குலம் பார்த்துக் காதலித்தால் பிரச்சினை இல்லை. இவர்களின் ஒத்திகையை அரங்கேற்ற இருவீட்டாரும் தீர்மானித்து ஊரைக் கூட்டினார்கள். ஆனால், அய் யகோ! (அந்தக் கால பாணி) பெண் வீட்டுப்

பங்காளிகள் காங்கிரஸ்காரர்கள். மாப்பிள்ளை வீட்டுப் பங்காளிகள் தி.மு.க.வினர். வந்ததே வாதம். அந்தக் கால வழக்கப்படி எந்தத் தலைவரை ''இல்லற ஒப்பந்த விழாவிற்குத்'' தலைமை தாங்க வரவழைப்பது என்பது பிரச்சினையானது. தலைவர்கள் கடுமையாக விமர்சிக்கப்பட்டார்கள். இதனால் தொண்டர்கள் கம்புகளைத் தூக்க வேண்டிய கட்டம். இதனால், நம்புங்கள், அந்தத் திருமணமே நின்றுவிட்டது. தலைவர்கள் தங்களது கருத்து வேற்றுமைகளை மறந்து, கல்யாணக் காட்சிகளில் கலந்து கொள்ளும்போது, எங்க ஊர்க்காரன், கல்யாணம் போகட்டும், கருமாதியில் கூட கலந்து கொள்வது இல்லையே என்கிற ஆதங்கம் என் மனதில் இருந்தது. இதற்கு வடிகாலாக ''குட்டாம் பட்டியில் கலாட்டா - சென்னையில் கல்யாணம்'' என்ற தலைப்பில் ஒரு சிறுகதை எழுதினேன். இறுதியில் எந்தத் தலைவர்களுக்காக குட்டாம்பட்டிக் கல்யாணம் நின்றுபோனதோ, அந்த தலைவர்களின் மகனுக்கும், மகளுக்கும் திருமணம் நடப்பதாகவும், இதில் சர்வகட்சித் தலைவர்கள் கலந்து கொண்டதாகவும் கதையை முடித்தேன்.

திரு. செல்வராஜ் நான் கதை எழுத ஒரு தூண்டுகோல் என்றால், இப்பொழுது சென்னை பத்திரிகை தகவல் அலுவலகத்தில், தகவல் அதிகாரியாகப் பணிபுரியும் திரு. பாலசுப்பிரமணியம் என் இலக்கிய பிரவேசம் முதல் கோணல் ஆகாமல் பார்த்துக் கொண்டவர். புதுடில்லியில் என்னுடன் பணியாற்றிய இவர், ''வளவள வைக்கப்படப்பு'' என்று 20 பக்கங்கள் வரை எழுதிய இந்தக் கதையை பத்து பக்கங்க

ளாக்கி, முத்து முத்தான எழுத்துக்களில் நகல் எடுத்துக் கொடுத்தார். ஆனந்த விகடனுக்கு அப்போதைய காலகட்டத்தில் இது வித்தியாசமான கதை. பாலசுப்பிர மணியம் கத்தரித்து அனுப்பியதை, சுத்திகரித்து "அங்கே கல்யாணம் இங்கே கலாட்டா" என்ற பெயரில் பிரசுரித்தது. இதைப் படித்த டில்லித் தமிழர்கள் "சிரித்து சிரித்து வயிறு புண்ணாயிற்று. ஒரே தமாஷ்" என்று சொன்னபோது நான் நொந்து போனேன். தமிழன் பொது வாழ்க்கைக்காக, குடும்ப வாழ்க்கையை எப்படி சிதைக்கிறான் என்கிற ஆதங்கத் தைச் சரியாகப் புரிய வைக்கவில்லையோ என்று நான் நினைத்தபோது, புதுடில்லியில் இந்தியன் எக்ஸ்பிரஸ் தலைமைச் செய்தியாளரும், தலைசிறந்த சிந்தனையா ளருமான திரு. கே. சீனிவாசன், இந்தக் கதையில் உள்ள அரசியல் பொடி அபாரம் என்று சொல்லி என்னைப் பாராட்டினார். அதற்குப் பிறகுதான் எனக்கு தெம்பு வந்தது. மனிதர்களுக்காகக் கதையே தவிர, கதைக்காக மனிதர்கள் அல்ல என்ற இலக்கியக் கோட்பாடு வலுப்பெற்றது.

குறிப்பு: *திரு. செல்வராஜ் சிறந்த எழுத்தாளர். தாமரை யிலும், கணையாழியிலும் தரமான சிறுகதை களை எழுதியவர். இப்போது, தொலைக்காட் சித் துறையில் இருந்து, 'வாலண்டரி ரிடையர் மெண்ட்' எனப்படும் சுய ஓய்வில் விலகிய வர். தனியார் தயாரிப்பு நிகழ்ச்சி அமைப்பு ஒன்றை நிறுவி, பல்வேறு தொலைக்காட்சி நிறுவனங்களில், கொடிகட்டிப் பறக்கிறார். வாழ்க்கையில் ரிஸ்க் எடுப்பவர்கள்தான் முன் னேற முடியும் என்பதற்கு இவர் ஒரு உதாரணம்.*

# 2

# சாமியாடிகள்

எங்கள் ஊரில் (திப்பணம்பட்டி) கல்லெல்லாம் சாமி சிலைகள். கட்டிடங்கள் எல்லாம் கோவில்கள். உதிரமாடன் கோவில், சுடலைமாடன் கோயில், கோட்டை மாடன் கோவில், மாரியம்மன் கோவில், காளியம்மன் கோவில், ஐவராஜா கோவில், திரௌபதி யம்மன் கோவில் என்று சுமார் முப்பது கோவில்கள். உதிரமாடன் கோவிலில், அவரே கதாநாயகன். மாடத்தி, சுடலைமாடன், வீரபுத்திரன், மயானபுத்திரன் ஆகியோர் 'எக்ஸ்டிரா' தேவதைகள். இதேபோல், கோட்டை மாடன் கோயிலில், அவர் கதாநாயகன்; உதிரமாடன், சுடலைமாடன் எக்ஸ்டிராக்கள், இப்படி எக்ஸ்டிராக்கள்; கதாநாயகர்களாகவும், கதாநாயகர் கள், நாயகிகள் எக்ஸ்டிராக்களாகவும் உள்ள கோவில் களில் சாமியாட்டம் என்பது இந்தக் காலத்து சினிமா மாதிரி. சாமியாடும் ஒருவரின் பின்னங்கைகளில் கயிறு கட்டப்பட்டிருக்கும். அதே சமயம், அந்தக் கைகளை முன்னால் கொண்டுவரும் அளவிற்கு அந்தக் கயிறு நீக்குப்போக்காக இருக்கும். அவர் முன்னால் ஒரு பனை ஓலையில், முழுக்கோழியை அடித்து

வைத்திருப்பார்கள். அவர் சாப்பிடுவதற்காக தலை குனியும்போது, கயிறு மூலம் பின்னால் இழுக்கப்படு வார். ஆனாலும், சாமியாடி அந்தக் கோழியைத் தின்றாக வேண்டும். இல்லையேல், அவர் சாமியே இல்லையென்று அனுமானிக்கப்படுவார். இதேபோல், காளியாத்தா சாமியாடி, வெட்டப்பட்ட ஆட்டின் இரத்தத்தை பச்சையாகக் குடிக்க வேண்டும். இல்லை யென்றால் ஊர்க்காரர்கள் அந்தச் சாமியாடியை 'பச்சை 'யாகத் திட்டுவார்கள். எங்கள் ஊரில் பிள்ளைமார்கள், முருகனையும், பிள்ளையாரையும், எலுமிச்சை பழத் தோடு வழிபட்டபோது, எங்கள் ஆட்களும், ஆதி திராவிட மக்களும், பன்றி, ஆடுகளை கோயில்களில் கொன்று குவித்து வழிபட்டுக் கொண்டிருந்தார்கள். இருக்கிறார்கள்.

இந்தப் பின்னணியில், ஒரு கோவிலில் ஒரு நிகழ்ச்சி - நிகழ்ச்சி நிரலில் இல்லாத நிகழ்ச்சி. ஏதோ நிகழ்ச்சி. ஏதோ ஒரு ஆடி மாதம். ஊருக்கு ஒரு புறத்தில் உள்ள ஒரு மாடன் கோவிலில் விசேஷம். கணியான் பாடுகிறார். மேளம் ஒலிக்கிறது. இரயில்வே இலாகாவில் பணிபுரியும் ஒருவர், சாமியாடத் தயார் ஆகிவிட்டார். வழக்கமாக ஆடுபவர். பொதுவாக கதாநாயக சாமி, இதர சாமிகள் ஆடி அடங்கும் போதுதான் ஆடத் துவங்கும். நான் சொல்கிறவர், அழகாக இருப்பவர். ஒல்லியான - உறுதியான உடம்பு. அவர் தலையை ஆட்டத் துவங்கியதும், அவரது சட்டையைக் கழற்றிவிட்டு, வேட்டியைத் தார்பாய்த்துவிட்டு, சந்தனத்தை அப்பினார்கள். கரத் தில், கற்பூரத் தட்டைக் கொடுத்தார்கள். கெட்டிமேளம் முழங்கியது. அவ்வளவுதான். ஆசாமி பம்பரம் போல் சுழன்றார்.

பத்து நிமிடத்திற்குள், இன்னொரு குரல் கேட்

டது. சற்று கட்டையான மனிதர். குஸ்தி பயில்வான் போன்ற தோற்றம். அவர் ஒரு தீப்பந்தத்தை கையில் வைத்துக் கொண்டு, சத்தம் போட்டுக் கொண்டே வந்தார். ''நான்தான்டா கோட்டை மாடன். நீ எப்படிடா ஆடலாம்'' என்று கத்தியபடியே வழக்கமாய் சாமியா டுபவரைத் தடுத்தார். இருவரும் கட்டிப் புரண்டார்கள். ஒருவரையொருவர், அடித்துக் கொண்டார்கள். எப்ப டியோ பிரித்து விடப்பட்டு இருவரும் ஆடிக் கொண்டி ருந்தபோது, முதல் சாமியாடியின் சொந்தக்காரர்கள், ஏற்கெனவே ஆடுபவர்தான் ஆடவேண்டுமென்று வாதித்தார்கள். புதுச் சாமியாடியின் சொந்தக்காரர்கள், அவர்தான் ஆடவேண்டுமென்றார்கள். அடிதடி, சண்டை; எந்தச் சாமியாடி உண்மையான சாமியாடி என்று சோதித்துப் பார்க்க மனமில்லாமல், சொந்தங் களை வைத்து நிசமான சாமியை தீர்மானிக்கப் போனார்கள். புதுச்சாமி ஆள்பலம் இல்லாதவர். இறுதி யில் அடித்து விரட்டப்பட்டார். நிசமான சுடலைமா டனே அங்கே வந்து 'இந்த சாமியாடியிடம்தான் நான் ஆடுகிறேன்' என்று சொல்லி இருந்தாலும், மாற்றுச் சாமியாடியின் ஆட்கள், ஒரிஜினல் மாடனைக் கூட விரட்டி அடித்திருப்பார்கள். இதை வைத்து விகடனில் ''சாமியாடிகள்'' என்ற தலைப்பில் கதை எழுதினேன். ஏற்கனவே ஆடும் சாமியாடியை, ''ஆடும் சாமியாடி'' என்றும், விரட்டப்பட்ட சாமியாடியை, ''ஸ்தாபன சுடலைமாடன்'' என்றும் அந்தக் காலத்து அரசியல் பின்னணியில் பெயர் வைத்தேன்.

## அய்யாசாமியும் - பட்டிகளும்

இந்தச் சிறுகதைகளில் அய்யாசாமி என்ற ஒரு பாத்திரத்தை அறிமுகப்படுத்தினேன். இந்தக் கதைகள் நிகழும் இடத்தை, குட்டாம்பட்டி என்று அழைத்தேன். அய்யாசாமி ஆள்பலம் இல்லாத மிதவாதி. அதாவது

இப்படி நடக்க வேண்டுமென்று நினைத்தாலும் அதை செயல்படுத்த முடியாமல் இருக்கும் நம்மைப் போன்றவர். இவர் பேச்சில் நியாயம் இருந்தாலும், கேட்பார் கிடையாது. இந்தப் பாத்திரத்தை, எனது பெரும்பாலான சிறுகதைகளிலும், நாவல்களிலும் கொண்டு வந்திருக்கிறேன். இதேபோல், குட்டாம்பட்டியை, மையமாக்கி பல கதைகள் எழுதுகிறேன். பழமையில் ஊறியிருப்பவர்களைச் சித்தரிப்பதற்கு குட்டாம்பட்டி என்ற ஊரை எழுதினேன். ''ஒரு கோட்டுக்கு வெளியே'' நாவலில் குட்டாம்பட்டி வந்தது. வெறுமனே பேசிக்கொண்டு கிராமத்துப் பாணியில் சொல்லப் போனால், 'கீராமுட்டித்தனமாக' அல்லது ஏட்டுச் சுரைக்காயாக இருப்பவர்களை சுட்டிக்காட்ட ''சட்டாம்பட்டி'' என்ற பெயரைக் கொண்டு வந்தேன். ஒருவரிடம் மணி கேட்கும்போது, அவர் அதைத் தாமதமாகச் சொன்னால், அதற்காகவே, அவரைக் கொலை செய்யும் அளவிற்குச் செல்லும் மனிதர்களின் நடமாட்டத்தைக் காட்ட ''வெட்டாம்பட்டி'' என்ற ஊரைப் பெயராகச் சூட்டினேன். அதே சமயம் காலப் போக்கில் இந்த மூன்று பட்டிகளும் மாறுபட்டு வருவதாகவும் சுட்டிக்காட்ட நான் தவறவில்லை. இந்த மூன்று வித அளவுகோல்களை அதாவது பழமைவாதிகள், புதுமை என்று பெயரில் உள்ள பொய்யர்கள், புரட்சிக்கு தயாராகக் கூடிய முரடர்கள் ஆகியோரைச் சுற்றியே என் படைப்புக்கள், இதுவரை வருகின்றன.

எனது கதைகள் முற்போக்கு நிறைவுடன் அல்லது தார்மீகக் கோபத்தை எழுப்பும் அம்சத்துடன் முடியும். பெரும்பாலான கதைகள் நிஜக்கதைகள். இதனால் ''சாமியாடிகள்'' சிறுகதையும், ''ஒரு கோட்டுக்கு வெளியே'' நாவலும் என்னைச் சிக்கல்களில் சிக்க வைத்தன.

## 'சாமி ஆடிகள்' - வெளியான பிறகு

ஆனந்த விகடனில் 'சாமி ஆடிகள்' சிறுகதை வெளியான ஒரு மாதத்திற்குள் கித்தாப்புடன் ஊருக்குப் போனேன். என் உறவினர்களும், ஊரார்களும் என்னை பிரமிப்பாக பார்க்கப் போகிறார்கள் என்ற எண்ணம்; ஆனால் ஊருக்குப் போனவுடனேயே என்னை வாயார வாழ்த்தி வரவேற்பவர்கள் கூட, ஏற இறங்கப் பார்த்தார்கள். ஊர்க்காரர்களைக் கதாநாயகர்களாக்கிய பெருமையில் போன என்னை, அசல் 'வில்ல'னைப் போலப்பார்த்த பெரும்பாலோர் என்னிடம் பேசவில்லை. நானே வலிய பேசினாலும், முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டார்கள். வீட்டுக்குப் போன பிறகு, என் குடும்பத்தினர் விவரம் சொன்னார்கள். நான் எங்கள் ஊரைப் பத்திரிகையில கேவலப்படுத்தி விட்டதாக ஊரில் ஒரு பேச்சு அடிபடுவதாகக் கூறப்பட்டது. ஊரிலிருந்து நகரங்களில் வேலை பார்க்கும் படித்த பையன்கள் ஊரிலிருந்து ஒதுங்கிக் கொள்வார்களே தவிர, இப்படி சமுத்திரத்தைப் போல் கேவலப்படுத்தியது இல்லை என்றும் பேசிக் கொண்டார்களாம். இதில் ஒரு வேடிக்கை. நான் ஆடும் சுடலைமாடனாக காட்டிய பாத்திரத்திற்கு 'முத்துப்புதியவன்' என்று பெயர் வைத்திருந்தேன். இது தற்செயலாக வைத்த பெயர். சாமி ஆடியவர் வெளியே வேலை பார்த்ததால் எனக்குப் பரிச்சயம் இல்லாதவர். சாமி ஆடும்போது மட்டும்தான் அவரைப் பார்த்திருக்கிறேன். அதுவும் ''சல்லடையும், குல்லாயுமாக'' அவர் பெயரும் முத்துப்புதியவன் என்பது ஊருக்குப் போன பிறகுதான் தெரிந்தது. ஆகையால் அவரது குடும்பத்தினர் நான் வேண்டுமென்றே இழிவுபடுத்துவதற்காக எழுதியதாக நினைத்துக் கொண்டார்கள். நல்ல வேளை, அவர்கள் எங்கள் குடும்பத்திற்கு நெருங்கிய உறவினர் என்பதால், அடிதடி வராமல்

போய்விட்டது. ஆனாலும், அந்தக் குடும்பத்தினர் இப்போதுகூட என்னிடம் சரியாகப் பேசுவதில்லை. என்றாலும், என்னையும், என் குடும்பத்தையும் தாக்கி நான் பல கதைகள் எழுதியிருப்பதை அறிந்து அவர்களின் துவேசம் ஆவேசமாக் மாறி இப்பொழுது அதுவும் குறைந்து விட்டது.

*குறிப்பு: இப்போது, கிராமத்துக் கோயில்களில் பன்றிகளைப் பலியிடுவது நின்றுவிட்டது. வில்லுப் பாட்டும், கணியன் கூத்தும் போய் வீடியோ புகுந்துவிட்டது. சாமியாடிகள் இடைவேளையில் மட்டுமே ஆடுவதற்கு அனுமதிக்கப் படுகிறார்கள்.*

# 3

# 'ஒரு கோட்டுக்கு வெளியே' - பிறந்த கதை

இதுவரை நான் எழுதிய எட்டு நாவல்களில், ''ஒரு கோட்டுக்கு வெளியே'' என்ற எனது படைப்பு பிரபல திறனாய்வாளர்களான வல்லிக்கண்ணன், 'செம்மலர்' ஆசிரியர் திரு.கே.எம். முத்தையா, பேராசிரியர் பாக்கியமுத்து, பேராசிரியை சரோஜினி பாக்கியமுத்து, சிட்டி - சிவபாத சுந்தரம், செந்தில்நாதன், எஸ்.ஏ. பெருமாள், கதிரேசன் ஆகியோராலும், பல்வேறு வாசகர்களாலும் சிறந்த படைப்பாகக் கருதப்படுகிறது. இதனால் ஒரு வேளை இந்த படைப்பிலிருந்து நான் முன்னேற முடியவில்லையோ என்று எனக்குள்ளே ஒரு சந்தேகம் எழுவதுண்டு. என்றாலும், இந்த நாவல்தான் எனக்கும் பிடித்த நாவல். 'சோற்றுப்பட்டாளம்' முதலில் அச்சில் வெளிவந்தாலும், என் எழுத்தில் முதலாவது வந்த நாவல் இதுதான். அநுபவப்பட்ட

எழுத்தாளன் ஆனபிறகு, உருவாகிய படைப்புகளை விட, இந்த நாவல் எப்படி மக்களைக் கவர்ந்தது என்பதை நினைத்துப் பார்க்கிறேன். எனக்கே காரணங்கள் புரியவில்லை. ஒருவேளை, உத்தி, உள்ளடக்கம், உருவம், உதாரணங்கள் போன்ற இலக்கியத் தொல்லைகளைப் பற்றிக் கவலைப்படாமல் எனக்குத் தோன்றியதை உள்ளது உள்ளபடியே எழுதியதே இதன் வெற்றிக்கு ஒரு காரணமாக இருக்கலாம். இதனாலேயே இந்த நாவலை இந்தக் கட்டுரைக்காக மீண்டும் படித்தபோது என்னை நானே ஓரளவு பூட்டி வைத்திருக்கும் இலக்கியச் சிறையிலிருந்து மீள வேண்டும் என்பது போன்ற ஒரு எண்ணம் ஏற்படுகிறது. இந்த நாவல் பிறந்த கதையைப் பார்ப்போம்.

அப்போது தமிழகத்தின் வடபகுதியில் வெள்ளம் கரைபுரண்டு ஓடிய நேரம். நான் மத்திய அரசில் செய்தி விளம்பர அதிகாரி என்ற முறையில் செங்கை மாவட்டத்திலுள்ள உத்திரமேரூரில் திரைப்பட பிரிவுடன் முகாமிட்டிருந்தேன். பயணிகள் விடுதியில் தங்கியிருந்தேன். அப்போது பலத்த மழை. அங்குள்ள ஏரி உடைந்து விடுதிக்கு வரக்கூடிய அபாயம். வெளியுலகத்திற்கும் எனக்கும் தொடர்பு அற்றுப் போய்விட்டது. எப்படியோ ஒரு நண்பர் கஷ்டப்பட்டு ஒருவேளை சாப்பாடு கொடுத்தார் என்பதைத் தவிர, மற்றப்படி எந்த ஆள் அரவமும் இல்லாத சூழல். அப்போது எனது கடந்தகால வாழ்க்கையை நினைத்து பார்க்கத் துவங்கினேன். அப்படித் துவங்கியபோது-

உள்மன ஓட்டங்கள் வெள்ளம்போல் பிரவாகம் எடுத்து, எனது பெரியமனிதர் கரையை உடைத்து

நினைவு வெள்ளமாக ஓடத் துவங்கியது. இளமையில் கணவனை இழந்து கைம்பெண்ணான என் அன்னையை சொந்த ஜாதியினர் நடத்திய விதமும், என் அம்மா எனக்காக எல்லாவற்றையும் சகித்துக் கொண்டதும், நினைவுக்கு வந்தன. இதேபோல் எனது சாதியினரான நாடார்களே அந்தச் சாதியில் உள்ள பதநீர் இறக்கும் பாட்டாளிகளை ''பனையேறிப் பயலே'' என்று திட்டுவது திடீர் நினைவாகியது. எனக்கு பத்து வயது இருக்கும்போது பக்கத்தூரில் நடந்த ஒரு சம்பவமும் நினைவுக்கு வந்தது. வயதுக்கு வந்த ஒரு ஏழைப் பெண்ணை கிட்டத்தட்ட அதே வயதுள்ள ஒரு பண்ணையார் - வாலிபன், சாட்டைக்கம்பால் அடித்துக் கொண்டிருந்தான். அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் அவன் செய்வது அடாவடித்தனம் என்பதை அறிந்தவர்கள் போல் முணுமுணுத்தார்கள். ஆனால் எவரும் எதிர்ப்பைக் காட்டவில்லை. இந்த 'செல்லாக் கோப'ப் பொறுமை சாலிகளின் இயலாமையால் நான் கொதித்துப் போனேன். அதே சமயம் என்னாலும் ஒன்றும் செய்ய இயலவில்லை. ஆனால், அந்தப் பெண் அவன் கொடுத்த அடிகளையெல்லாம், கம்பீரம் கலையாமல் வாங்கிக் கொண்டே, அவனும், அவன் குடும்பத்தாரும் செய்த அயோக்கியத்தனத்தை சொல்லிக் கொண்டிருந்தாள். தன்னந்தனியாக ஒரு முரடனை சகல பலவீனங்களுடனும் பலமாகச் சாடிக் கொண்டிருந்தாள். இந்த நிகழ்ச்சியை நான் ஊருக்குத் திரும்பிய பிறகும் பல இரவுகளில் திடுக்கிடும் கனவாகக் கண்டதுண்டு.

## சேரிப் பால்

நான் பிறந்தபோது என் அன்னை எனக்குப் பால் கொடுக்க முடியாத நிலை. மார்பில் கட்டியோ புண்ணோ இருந்ததாகக் கேள்வி. அப்போது தாய்ப் பால் இல்லையென்றால் குழந்தை தேறாது என்ற - அதாவது புட்டிப்பால் யுகம் தோன்றாத காலம் - என்னை எப்படியும் காப்பாற்றி என் அம்மாவிடம் கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்த அரிசன மக்கள் (என் அம்மா வயதுடைய தாய்மார்கள்) எனக்கு மாறி மாறி பால் கொடுத்தார்கள். எனக்கு இன்னும் கூட அப்படி ஒரு தாயிடம் பால் குடித்தது நினைவில் இருக்கிறது. அதோடு என்னை இடுப்பில் எடுத்துக் கொண்டு வயல் வரப்பிற்கு செல்லும் என் அன்னை சேரித் தாய்மார்களுடன்தான் படும் துயரங்களைத் தெரிவித்ததும், அந்த தாய்மார்கள் என் தாய்க்கு அவ்வப்போது ஆறுதல் சொன்னதும் எனக்கு இன்னும் மனதில் பசுமையாக உள்ளன. ஊரில் வழக்குப் பேசும் பெரிய மனிதர்கள் எப்படி ஆளுக்குத் தக்கபடி நீதி வழங்கினார்கள் என்பதையும் காதாரக் கேட்டு, கண் ணாரக் கண்டேன்.

ஊராட்சி ஒன்றியங்கள் துவக்கப்பட்ட நேரம். பெருந்தலைவர் காமராஜரின் அரும்பெரும் பணியால் பல்வேறு கல்விக்கூடங்கள் திறக்கப்பட அரிசன இளைஞர்கள் தத்தம் உரிமைகளை சேரி மக்களுக்கு எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். எனது சொந் தக் கிராமமான திப்பணம்பட்டிக்கு அருகே பாவூர் சத்திரத்தில் இருந்த உயர்நிலைப் பள்ளிக்கூடத்தில் ஒன்பதாவது வகுப்பு படித்துக் கொண்டிருந்தபோது

கந்தசாமி என்ற அரிசனப் பையன் என்னோடு படித்துக் கொண்டிருந்தான். மத்தியானம் நாங்கள் ஒன்றாகச் சாப்பிடுவது உண்டு. ஒருநாள் எனது உணவு டப்பா அவனிடமும், அவனுக்குரியது என்னிடமும் எப்ப டியோ மாறிவிட்டது. நான் அவனது உணவு டப்பா வைப் பிரித்து எடுத்து உண்டுவிட்டேன். பிறகுதான் இது 'அரிசனனுக்குரியது' என்பதை உணர்ந்து முகம் சுளித்தேன். உடனே அந்த கந்தசாமி விஷயத்தைப் புரிந்து கொண்டு, இன்னும் திறக்காத என் உணவு டப்பாவை என்னிடம் நீட்டிவிட்டு, நான் எச்சில் படுத்திய தனது டப்பாவை வாங்கிக் கொண்டு எதுவுமே நடக்காதது போல் சாப்பிடத் துவங்கினான். நான் வெட்கித் தலை குனிந்தேன். அன்று முதல் நாங்கள், தோழர்களாக இருந்தோம். இளமையிலேயே தாய் தந்தையை இழந்த எனக்கு பல்வேறு வித இன்னல்கள். அப்போது ஆறுதல் சொன்னவர்கள், ஆற்றுப் படுத்தியவர்கள் பெரும்பாலும் சேரித் தோழர் களே.

## சித்தியின் போராட்டம்

இப்படி பல்வேறு நினைவுகள் ஏரிக்கரை மேல் உள்ள பயணிகள் விடுதியில் தங்கியிருந்த எனக்கு நினைவுக்கு வந்தன. அந்தச் சமயத்தில் என் சித்தி திருமதி. ராசம்மா சொந்தக் கிராமத்தில் நடத்திவந்த போராட்டம் நினைவுக்கு வந்தது. இவர் எனது அம்மாவின் தங்கை. எனது தந்தையின் தம்பியான திரு. பாண்டி நாடாருக்கு என் நலன் கருதி திருமணம் செய்து வைக்கப்பட்டார். சித்தப்பா வட சென்னையில் கோணி வியாபாரம் செய்தார். நான் இவர்களுடன்

தங்கி எனது கல்லூரிப் படிப்பை முடித்தேன். இவர்கள் தான் எனக்கு அம்மா அப்பா. நான் வேலையில் சேர்ந்தபோது, சித்தப்பா புற்றுநோயால் மரணம் அடைந்தார். சித்தி கிராமத்திற்கு குழந்தை குட்டிக ளோடு சென்று கொஞ்ச நஞ்சமிருந்த நிலபுலன்களைக் கவனித்துக் கொண்டிருந்தார். எனக்கோ, அவர்களுக்கு ஓரளவுதான் பொருளாதார ரீதியாக உதவக்கூடிய நிலை. இந்தச் சமயத்தில் ஊரில் இருந்த பங்காளிகள் என் சித்தி குடும்பத்தினரை படாதபாடு படுத்தினார் கள். நான் நினைத்திருந்தால், எனக்குச் சென்னையில் காவல் துறையிடம் இருந்த செல்வாக்கைப் பயன் படுத்தி அவர்களை உள்ளே தள்ளி அடக்குவதற்கு அதிக நேரம் ஆகியிருக்காது.

அதே சமயம், ஒரு ஏழை குடும்பத்தில் படித்து சப்-இன்ஸ்பெக்டராக உயர்ந்த ஒரு வாலிபன் எப்படி தனது சொந்தக் காரர்களையே சிறையில் போடுகிறான் என்று நான் ''எந்நன்றி கொன்றார்க்கும்'' என்று ஆனந்த விகடனில் எழுதிய சிறுகதை நினைவுக்கு வந்தது. ஆகையால், என் உறவினர்களுக்கு எதிராக என்னால் செயல்பட மனம் வரவில்லை. அதேசமயம் என் பொறுப்பைத் தட்டிக் கழிக்காமல் அவர்களை அவ்வப்போது அறிவுறுத்திக் கொண்டிருந்தேன். காட் டாற்று வெள்ளம் பாய்ந்த அந்த வேளையில், என் சித்தி அவர்களை எதிர்த்து தீரமாகப் போராடியதும், சொத்தில் ஒரு அங்குலத்தைக் கூட விட்டுக் கொடுக்கா மல் இருந்ததும், நெஞ்சில் நினைவுகளாக நங்கூரம் பாய்ச்சின.

## உடனடி விருப்பம்

இப்படி அந்த ஏரிக்கரை விடுதியில் நினைத்து பார்த்த சம்பவங்களை எழுதியாக வேண்டும் என்று விருப்பம் ஏற்பட்டது. உடனடியாக எழுதத் துவங்கினேன். அப்போது லியோ டால்ஸ்டாயை நான் படித்ததில்லை. ஆனாலும், அவர் சொன்னது போல் பத்துப் பக்கங்களுக்குப் பிறகு, அந்தப் பாத்திரங்களே 'என்னை இப்படி எழுது அப்படி எழுது' என்று உத்திரவிட்டன. முக்கால்வாசிப் பகுதியை நான்கு நாட்களில் உத்திரமேரூரில் முடித்துவிட்டு எஞ்சிய பகுதியை வீட்டில் வந்து எழுதினேன். உலகம்மை பட்ட இன்னல்களை விவரிக்கும்போதெல்லாம் என்னை அறியாமலேயே அழுகை வந்தது. கிட்டத் தட்ட ஒரு குழந்தை போலவே அழுதேன் என்று சொல்லலாம். இதே அநுபவம் டால்ஸ்டாய்க்கு பல தடவை ஏற்பட்டதாகப் பின்னர் அறிந்தேன்.

## நாவலின் நோக்கம்

இந்த நாவலை நான் மீண்டும் திருத்தி எழுதவில்லை. இலக்கணப் பிழைகளை வேண்டுமானால் ஆங்காங்கே திருத்தி இருப்பேன். இந்த நாவலின் நோக்கம் ஒரு சாதிக்குள்ளும் எப்படி இரு வர்க்கங்கள் செயல்படுகின்றன என்பதைக் காட்டுவதாக அமைந்தது. இது நாடார் சாதியை மட்டும் குறை கூறுவது போல் இருக்கக் கூடாது என்பதற்காக பேராசிரியர் பாக்கியமுத்து அவர்களை படித்துக் கருத்துத் தெரிவிக்கும்படி கேட்டேன். அதோடு பல்வேறு நாவல்களை கரைத்துக் குடித்த அவரது கருத்தை அறிந்து கொள்ள

வும் விரும்பினேன். இந்த நாவல் பூம்புகார் நிலையத்தினர் மூலம் வெளியாவதாக இருந்தது. அப்போது, கிறிஸ்தவ இலக்கிய சங்கத்தின் முக்கியப் பொறுப்பில் இருந்த பேராசிரியர் பாக்கியமுத்து இந்த நாவலை சி.எல்.எஸ். தான் வெளியிடும் என்று சொன்னார். பல்வேறு நாவல்களை அவற்றின் ஒரு சில பலவீனங்களுக்காக பிரசுரிக்காமல இருக்கும் பேராசிரியர், இப்படிச் சொன்னது என்னை நெகிழச் செய்தது. நானும் உடன்பட்டேன். பின்னர், பேராசிரியர் பாக்கியமுத்து மீண்டும் என்னுடன் தொடர்பு கொண்டு, உலகம்மை சேரிக்கு புறப்படுவதோடு நாவலை நிறுத்திவிடலாம் என்றும், அதற்குப் பிறகு அவள் சேரியில் சந்திக்கும் அனுபவங்களை உள்ளடக்கிய இரண்டு அத்தியாயங்கள் தேவை இல்லை என்றும் கூறினார். அதேசமயம் முடிவைப் பெருந்தன்மையாக என்னிடமே விட்டுவிட்டார். நானும் இணங்கினேன்.

## அரங்கேற்றமும், அடிதடி நிலைமையும்

இந்த நாவலை அரங்கேற்றிய பெருமையும் பேராசிரியர் பாக்கியமுத்துக்கே உரியது. சி.எல்.எஸ். நிறுவனத்தில் இதில் 300 பிரதிநிதிகளே விற்பனையாயின. இது நூலகங்களிலும் வைக்கப்படவில்லை. அப்படியிருந்தும், 'சு. சமுத்திரம் என்றால் ஒரு கோட்டுக்கு வெளியே' என்ற பெயர் ஏற்பட்டது. பேராசிரியர் பாக்கியமுத்து கிறிஸ்துவ இலக்கிய சங்கத்தில் ஆண்டுதோறும் நடத்திவந்த நண்பர் வட்டம், இலக்கிய ஆய்வு ஒன்றில் இந்த நாவலை பிரகடனப் படுத்தியதும், ஆய்வு கட்டுரை சமர்ப்பிக்கச் செய்ததும் இதன் வெற்றிக்கு ஒரு - ஒரே -

காரணம் என்று நினைக்கிறேன். இந்தச் சமயத்தில், குமுதத்தில் சுஜாதா எழுதிய ஒரு தொடர்கதை சாதிப் பிரச்சினையை கிளப்பிவிட்டது. 'கள்ளச் சாணாள் ஒத்திப்போ' என்பன போன்ற வார்த்தைப் பிரயோகங்கள் வெளியாகின. குமுதம் அலுவலகத்திற்கு அருகே ஒரு கல்யாண வீட்டில், இந்தத் தொடர்கதை, நாடார் குலத்தைக் கேவலப்படுத்துவதாகக் கூறப்பட்டு, அங்கிருந்த நாடார்கள் அனைவரும் குமுதம் அலுவலகம் சென்று வாக்கு வாதம் செய்திருக்கிறார்கள்; குமுதம், நிர்வாகத்தினரை கோபத்தில் ஏதேதோ திட்டியிருக்கிறார்கள். உடனே ஒருவர்; 'நமது குலத்திலேயே ஒரு கருங்காலி - சமுத்திரம் என்பவன் நாடார் சாதியை கேவலமாக எழுதியிருக்கிறான்' என்று ஒரு குண்டைத் தூக்கிப் போட, அங்கிருந்தவர்கள் என் வீட்டை நோக்கிப் படையெடுக்கத் தீர்மானித்தார்களாம். என் வீடு அங்கிருந்து சுமார் 15 கிலோமீட்டர் தொலைவில் இருந்தாலும், மேலும், அந்தக் கூட்டத்தில் இருந்த என் நண்பர்கள் தாக்குதலுக்குப் புறப்பட்டவர்களைத் தடுத்து விட்டதாகவும் கேள்விப்பட்டேன். இதற்குக் கூட, நான் அதிகமாக வருத்தப்படவில்லை. 'ஓங்கிய பனைமரங்களிலே வீரமாக ஏறிய பாட்டாளி பரம்பரை நாங்கள்' என்று பெருமிதப்பட வேண்டிய என் சாதியினர், 'நாங்கள் ஆண்ட பரம்பரையாக்கும்' என்று பல இடங்களில் ஊர்வலமாகப் போனதுதான் எனக்கு வேதனையாக இருந்தது.

இந்தப் பின்னணியில் எழுத்தாளர் சுஜாதாவை ஒரு தடவை சென்னை வானொலி நிலையத்தில் சந்தித்தேன். அதற்கு இரண்டு மாதத்திற்கு முன்பு ஒரு

நண்பர், ''நானும் கிராமியத்தை'' எழுதுகிறேன் என்று சொன்னபோது, 'ஆனாலும் சமுத்திரம் மாதிரி எழுதமுடியாது' என்று பதிலளித்தார். அந்த உரிமையில் வானொலி நிலையத்தில் அவரைப் பார்த்த போது இப்படிச் சொன்னேன்: ''சுஜாதா சார்! நீங்கள் போட்ட ஒரு சில வார்த்தைகளில் தவறில்லை. ஆனால் ஒரு பனை ஏறி, மனைவியின் மார்புத்துணியை வெள்ளைக்காரன் வாளால் விலக்குவது போலவும், அதை அந்தப் பனை ஏறி பார்த்துக் கொண்டிருப்பது போலவும் எழுதுனிங்க-பனை ஏறி போன்ற பாட்டாளிகளுக்கு இருக்கக் கூடிய ஒரே ஒரு சொத்து தன்மானம்தான். அதற்கு அவர்கள் வைத்திருக்கும் ஆயுதம் பாளை அறுவாள். அந்தத் தொடர்கதையில் நீங்கள் பாட்டாளி வர்க்கத்தை உங்களை அறியாமலேயே கொச்சைப்படுத்தியாத நினைக்கிறேன்.''

ஆனாலும், சுஜாதாவிற்கு நான் பேசியது பிடிக்கவில்லை என்பதை அவரது முகம் சொன்னது. ''மாடசாமி, பின்னால் கதாநாயகனாகப் போகிறான் என்பதற்குப் பிண்ணனியாக இதை எழுதினேன். இது கிளைமாக்ஸிற்கு உதவும்'' என்றார். அவர் நாடார் சாதியை இழிவுபடுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு அந்தத் தொடர்கதையை எழுதவில்லை. எப்படியோ அவருக்கு எதிராக நாடார் சாதியினரைத் தூண்டி விட்ட நாடார் எழுத்தாளர்களில், நானும் ஒருவன் என்பதுபோல் பத்திரிகை உலகில் அப்போது பேச்சு அடிபட்டது. பல்வேறு நாடார் அமைப்புகளில் என்னை பலர் தாக்கிப் பேசியதாகவும் கேள்விப்பட்டேன். ஒரு சில நாடார் அமைப்புகள் என்னை பேச வரும்படியும்

அழைத்தன. ஒரு எழுத்தாளன், சாதிகளுக்கு அப்பால் பட்டவன். எந்த சாதிக் கூட்டத்திலும் கலந்து கொள்ளக் கூடாது என்ற கருத்துள்ளவன் நான். ஒரு சமயம் திரு நா.பார்த்தசாரதி தினமணிக் கதிரில், சாதி மலர்களை போட்ட போது - நாடார் மலர் வந்த போது என்னிடம் புகைப்படம் கேட்டார். நான் என்னை எந்த சாதிக்குள்ளும் அடைத்துக் கொள்ள விரும்பவில்லை என்றேன். அப்படியும், அவர் என் புகைப்படத்தை வெளியிட்டார்.

*குறிப்பு*

1. *ஒரு கோட்டுக்கு வெளியே நாவல் அகில இந்திய வானொலியில் 14 மொழிகளில் ஒலிப்பரப்பாயிற்று. நேஷனல் புக் டிரஸ்ட் இதை 14 மொழிகளில் வெளியிட ஒப்பந்தம் செய்துள்ளது. இதன் முதல் கட்டமாக, சென்னை வானொலி நிலைய வர்த்தக ஒலிபரப்பு இயக்குநர் திருமதி விஜயலட்சுமி சுந்தர ராஜன் அவர்களால் மொழி பெயர்க்கப்பட்டு, இந்தியில் வெளியாகி உள்ளது. சென்னை தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகவும் அனுமதி வழங்கப் பட்டுள்ளது.*

2. *எழுத்தாளர் ஜானகிராமன் அவர்களை நான் டெல்லியில் சந்தித்தபோது இதன் நாடக வடிவத்தை மனமாறப் பாராட்டினார்.*

# 4

# கோலங்களான அலங்கோலங்கள்

## கலெக்டர் வருகிறார்

நான் பஞ்சாயத்து வளர்ச்சி அதிகாரியாக, செங்கை மாவட்டத்தில் ஸ்ரீபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியத்தில் பணியாற்றினேன். அந்தப் பகுதிக்கு கலெக்டர் வேட்டைக்கு வருவார். அவர் ஓய்வெடுக்கும் அறைக்கு வெளிப்பக்கம் நடக்கக்கூட விடமாட்டார் கள். கலெக்டருக்கு சுகக்கேடோ, தூக்கக்கேடோ ஏற்ப டுமாம். கலெக்டர்கள் முன்பு தாசில்தார்களும், ஆணை யர்களும் குழைகிற குழைவும், அவருக்கு இடைவெளி விட்டு, இவர்கள் நிற்பதும் பார்ப்பதற்கு வேடிக்கை யாக இருக்கும். கலெக்டருக்கு மூன்று அடி தொலை வில் தாசில்தாரோ, ஆணையரோ இருப்பார்கள். கலெக் டர் தாம் நிற்கும் இடத்திலிருந்து ஒரு அடி முன்னால் நகர்ந்தால், தாசில்தார் ஒரு அடி மட்டுமே முன்னால் நகர்வார். பின்னால் நகர்ந்தாலும் இப்படியே. எப்படி யும் மூன்றடி 'கேப்', பராமரிக்கப்படும். அந்தச்

சமயத்தில் ஒரு பஞ்சாயத்து யூனியனில் யாரோ ஒரு அலுவலர், கலெக்டரிடம் கோழி வறுவலையும் அதன் இதர வகையறாக்களையும் கொடுத்திருக்கிறார். உடனே கலெக்டர்: ''இவ்வளவு பணம் ஏன் செலவழித்தாய்'' என்று கேட்ட போது, அந்த ஆசாமி ''அவ்வளவும் ஒரு ரூபாய்'' என்றிருக்கிறார். கலெக்டர் ஐ.ஏ.எஸ். ஆச்சே.... விடுவாரா? அப்படியானல். கோழி விலை ஒரு ரூபாய்க்கும் குறைவாக இருக்கலாம் என்று அனுமானித்து, முப்பது ரூபாயை அந்த ஆசாமியின் கையில் திணித்து தினமும் ஒரு ரூபாய்க்கு, ஒரு கோழி வாங்கி தனது வீட்டுக்கு அனுப்பும்படி கேட்டிருக்கிறார். நடந்ததோ, நடக்கவில்லையோ, நடந்ததாக கூறப்பட்ட செய்தி. இதை வைத்து, ''கலெக்டர் வருகிறார்'' என்ற தலைப்பில் குமுதத்தில் ஒரு சிறுகதை எழுதினேன். சொந்தப் பெயரில் எழுத அச்சப்பட்டு (ஏனென்றால் நானும் அரசு ஊழியனாச்சே!) கடல்மணி என்ற பெயரில் எழுதினேன். அப்போது சேலத்தில் கலெக்டர்கள் மகாநாடு நடைபெற்ற நேரம். அந்த மகாநாட்டில் பல தாசில்தார்கள், முப்பது குமுதங்களை வாங்கி, கலெக்டர்கள் கண்ணில் படும்படியாக போட்டதாக அப்போது டெபுடி கலெக்டராக இருந்த எனது நண்பர் தெரிவித்தார்.

குமுதத்தில் வெளியான எனது முதல் கதை இது. இதில் ஒரு ரூபாய் ஒரு கோழி என்று சொல்லி அசட்டுத்தனமாக மாட்டிக்கொண்ட கிளார்க்கிற்கு பண்டாரம் என்று பெயர் வைத்தேன். இந்த பண்டாரம் பிறகு பல சிறுகதைகளில் வந்தான். அவனும் அசட்டுத்தனத்திலிருந்து படிப்படியாக முன்னேறி பலரை ஆட்டி வைக்கும் சக்தியைப் பெற்றான். நான் அலுவலகங்

களில் கேட்ட சங்கதி களில் இந்த பண்டாரத்தை புகுத்தி கதைகளாக்கினேன். இவற்றில் முக்கால்வாசி நடந்தவை.

## பண்டாரம் படுத்தும் பாடு

ஒரு அலுவலகத்தில் ஒரு குமாஸ்தா, ஆபீஸ் பணத்தை கையாடுவது வழக்கம். ஒரு நாள் திடீரென்று மேலதிகாரி பணத்தை சரி பார்க்க வந்தார். அந்த கிளார்க்கிடம், பணப் பெட்டியில் இருக்க வேண்டிய அளவிற்கு பணம் இல்லை. அதிகாரியோ, முன்னால் வந்து நின்று விட்டார். என்ன செய்வது என்று புரியாமல் விழித்த மோசடி ஆசாமிக்குள் ஒரு அதி மோசடி எண்ணம் உதயமானது. பெட்டியைத் திறந்து ரூபாயை அவர் முன்னால் கொட்டி 'இந்தாருங்கள் சார் எண்ணுங்கள்'' என்றார். அதிகாரி எண்ணிக் கொண்டிருக்கும் போதே, பாத்ரூம் போய் வருவதாகச் சொல்லி பத்து நிமிடம் கழித்து வந்தார். பணத்தை எண்ணிய அதிகாரி திரும்பி வந்தவரிடம் கடு கடுப்பாக 'பணம் குறைகிறதே' என்று கேட்ட போது, அந்த ஆசாமி ''நான் வைத்து விட்டுப் போனேன். நீங்கள்தான் எடுத்திருப்பீர்கள்'' என்று ஊரைக்கூட்டி சத்தம் போட்டான். மோசடியைக் கண்டுபிடிக்க வந்த அதிகாரி மோசடிக்காரனாக சித்தரிக்கப்பட்டார். அந்த ஆசாமி களவாணி என்று தெரிந்தாலும் மேலதிகாரிகளால் அவனை ஒன்றும் செய்ய முடியவில்லை. இனிமேல் பணத்தை சோதிக்கச் செல்பவர்கள் சம்பந்தப்பட்ட கேஷியரைத்தான் எண்ணச் சொல்ல வேண்டும். சோதிப்பவர் சும்மா இருக்க வேண்டுமே தவிர, காசு மீது கை வைக்க கூடாது என்ற ஒரு ஜி-ஓ (அரசாங்க உத்தரவாக) வெளியானது. அந்த ஆசாமி

என் பேனாவில் பண்டாரமாக வடிவம் பெற்றான்.

**நடந்தது.....**

இதுபோல் கர்நாடக மாநிலத்தில், மத்திய அரசு விளம்பரத்துறை தலைமை அதிகாரியாக பெங்களூரில் இருந்தேன். அப்போது அங்குள்ள தலைமை கணக்காயர் அலுவலதகத்தில் ஒரு சம்பவம் நடந்தது. ஒரு ஆடிட்டரை மங்களூருக்கு 'டூர்' அனுப்பினார்கள். அவர் ஒரு மாதமாக அந்த ஊரிலிருந்து வரவில்லை. ஒரு வாரத்தில் வரவேண்டியவர். அதிகாரிகள் குழம்பிப்போய் நின்றபோது ஒரு நாள் அவர்கள் முன்னால் அந்த ஆடிட்டர் தோன்றினார். ஒரு வார்த்திற்குள் திரும்பாமல் ஒரு மாதத்திற்கு பிறகு வந்ததற்கு அவரிடம் எழுத்து மூலம் விளக்கம் கேட்கப்பட்டது. உடனே அந்த சூரர், தனக்கு, இலாகாவிலிருந்து 'டூர் அட்வான்ஸ்' எனப்படும் முன்பணம் அனுப்பப் படவில்லை என்றும் கையில் காசில்லாததால், ஒரு வார காலப் பணியை முடித்துவிட்டு, மங்களூருக்கும், பெங்களூருக்கும் இடையேயுள்ள முன்னூறு கிலோமீட்டர் தூரத்தை 22-நாட்களாய் நடந்து வந்ததாக எழுதிக் கொடுத்தார். இதற்கு தனக்கும், 'நடை அலவன்ஸ்' கொடுக்க வேண்டும் என்றும் ஒரு சட்ட விதியையும் குறிப்பிட்டார். அதிகாரிகளால், அவரை ஒன்றும் செய்ய முடியவில்லை. அவர் கையை காலைப்பிடித்து, ஐந்து நாள் நடந்ததாகவும், எஞ்சிய நாட்களில் விடுமுறையில் இருந்ததாகவும், எழுதித் தரும்படி கேட்டுக் கொண்டார்கள். அவரும் போனால் போகட்டும் என்பதும் போல் பெரியமனது வைத்து எழுதிக் கொடுத்தார். இதை 'நடந்தது' என்ற தலைப்பில், கல்கியில் சிறுகதையாக எழுதினேன்.

# 5

# கிராமிய அனுபவங்கள்

## வளத்தம்மா

அம்மா இறந்த பிறகு, என் அம்மாவின் அம்மா வான வளத்தம்மாவிடம் வளர்ந்தேன். என் வளத்தம் மாவை 'பாப்பாத்தி' என்பார்கள். அந்த அளவிற்கு சிவப்பு, ஊரில் பிள்ளைகள் ''தாயை வாளா, போளா'' என்பார்கள். என் வளத்தம்மா, தன் பிள்ளைகள் தன்னை நீங்க நாங்க என்று பேசும்படி செய்தவர். வயல்வரப்பிற்குப்போகாதவள். ஏழையாக இருந்தா லும், பண்ணையார்த் தனத்தில் இருந்தவள். எஸ்.எஸ். எல்.சி. படிக்கும் வரை வளத்தம்மாவுடன், படுப்பேன். வளத்தம்மாவைப் பார்க்காமல், என்னால் இருக்க முடியாது. பிறகு, சென்னைக்கு படிக்க வந்ததும், தூங்கி எழுந்திருக்கும் போதெல்லாம், 'வளத்தம்மா, வளத்தம்மா' என்று சொல்லிக் கொண்டே எழுந்திருப் பேன். ஆனால் காலப்போக்கில், வளத்தம்மாவை

மறக்கத் தொடங்கி விட்டேன். நான் சென்னையில் பட்ட சிரமங்களும், வளத்தம்மா, மகள்கள் விஷயத்தில் மேற்கொண்ட திருமண முடிவுகளும், (அப்போது நான் பிறக்கக் கூட இல்லை) எனக்கு வளத்தம்மா மீது ஒருவித விருப்பமின்மையை ஏற்படுத்தின. மூத்த மகளை முதல் மனைவியைத் தள்ளி வைத்த அண்ணன் மகனுக்கு கொடுத்தது (அதாவது என் பெரியம்மாவை) எனக்கு ஏனோ ஒரு வித இடைவெளியை அவளிடமிருந்து ஏற்படுத்தியது. விடுமுறையில் ஊருக்குப் போகும்போதெல்லாம், வளத்தம்மாவுடன் பழைய பாசத்துடன் பேசியதில்லை. வளத்தம்மாவிற்கும், மகன் வழிபேரன்கள் - பேத்திகளும் நிறைய பேர் தோன்றிவிட்டதால், என்மீது பழைய பிடிப்பு இல்லை. ஆனாலும் வளத்தம்மாவிற்கு அவ்வப்போது பணம் அனுப்பிக் கொண்டிருந்தேன். அவளுக்கு 90 வயது வந்து விட்டது. குடும்பத்தில் ஒவ்வொருவராக இறந்தார்கள். வீட்டில் பெரியவர்கள் சாகவில்லை என்றால், சின்னவர்கள் சாவார்கள் என்ற மூடத்தனத்தை எனது உறவினர்கள் சொல்லும்போது, நானும் தலையாட்டி ரசிப்பேன். திடீரென்று ஒருநாள் வளத்தம்மா இறந்து போனாதாக தந்தி வந்தது. அலறி அடித்து ஊருக்கு சென்றேன். அப்போது தான் வளத்தம்மா, என்னை வளர்த்த விதம், அம்மா இல்லாத குறையை நீக்கியது, ஆசையோடு ஊட்டியது, அடுக்கடுக்கான அறிவுரைகளைச் சொன்னது - எனக்கு நினைவிற்கு வந்தது. சின்னப்பிள்ளை போல கேவிக்கேவி அழுதேன். இன்னும் கூட சில சமயம் அழுகிறேன். இந்தப் பின்னணியில் 'வளத்தம்மா' என்ற கதையை 'தாயில்' எழுதினேன். இதில் என்னையும் தாக்கிக் கொண்டேன்.

## அன்பில்லாத அண்ணனுக்கு

இதே மாதிரி இன்னொரு சுயவிமர்சனக் கதையையும் எழுதினேன். என்னைப் படிக்க வைத்த எனது சித்தப்பா இறந்துவிட்டார். எனது சித்தியும், பிள்ளைகளும் சென்னையிலிருந்து ஊருக்கு வந்து விட்டார்கள். மாதச் சம்பளம் வாங்கும் என்னால், அதிகமாக உதவ முடியவில்லை. என் சித்தியும், என்னிடமிருந்து அன்பைத்தான் எதிர்ப்பார்த்தாளே தவிர, பணத்தை அல்ல. ஆனாலும் சித்தப்பா மகள் ஒருத்தி வயதுக்கு வந்து விட்டாள். அவளுடைய திருமணத்திற்கு ஏற்பாடு செய்யும் பொருளாதாரச் சக்தி எனக்கில்லை. எப்படியோ அவளுக்கு ஒரு திருமணமும் முடிவாகி, எனக்கு அழைப்பிதழ் வந்தது. நான் அந்த அழைப்பிதழைக் காட்டியே ஜி பி எப் லோன் போடப்போனேன. நம்மால் திருமணத்திற்கு உதவ முடியவில்லை, என்றாலும் அந்த அழைப்பிதழையே மூலதனமாக்குறோமே என்று எழுதிய விண்ணப்பத்தை கிழித்துப் போட்டேன். அந்த குற்ற உணர்வில், 'குமுதத்தி'ல் ''அன்பில்லாத அண்ணனுக்கு'' என்ற சிறுகதை எழுதினேன்.

ஊர்க்காரர்களுக்கு கொஞ்சம் மகிழ்ச்சி. நான் அவர்களைப் பற்றி மட்டுமல்ல, என்னைப் பற்றியும் எழுதுவதால், என்னிடம் எந்தவித பாரபட்சமும் இல்லை என்பதை அவர்கள் புரிந்து கொண்டார்கள்.

## எந்நன்றி கொன்றார்க்கும்

எங்கள் ஊரில் ஒருவர் அந்தக் காலத்திலேயே சப் இன்ஸ்பெக்டரானார். அவரது குடும்பத்தாருக்கோ பெருமை பிடிபடவில்லை. ஊருக்கு அம்மன்

கொடைக்கு, அவர் வரும் போதெல்லாம் போலீஸ் பாராவோடு வருவார். ஒரு தடவை, அந்தக் குடும்பத்தில், பங்காளிகளுக்குள்ளேயே சண்டை ஏற்பட்டது. இந்த சப் இன்ஸ்பெக்டர், எந்த பங்காளிகள் அவரது பதவியை பெருமையடித்துப் பேசினார்களோ, அவர்களையே உள்ளே தள்ளிவிட்டதாக பேச்சு அடிபட்டது. இதை வைத்து, 'எந்நன்றி கொன்றார்க்கும்' என்ற ஒரு சிறுகதையை 'விகடனி'ல் எழுதினேன். இந்தக்கதை வெளியான பிறகு, அவரது மனைவி தகராறு வரும் போதெல்லாம் ''உங்க புத்திக்குத்தான்-சமுத்திரம் இப்படி எழுதியிருக்கிறான்'' என்று சொன்னதாகக் கேள்வி. இவ்வளவுக்கும் தூரத்து உறவினரான அவரை, நான் நேருக்கு நேர் பார்த்ததில்லை. பிறகு அவர் எஸ்பியாக பணியாற்றி, பணியிலேயே உயிர்நீத்தார். அவர்மீது, எனக்கு பிற்காலத்தில் ஒரு பாசம் ஏற்பட்டது. அவரும் என்னைப் பார்க்கத் துடித்ததாக அறிந்தேன். பார்க்கலாம் என்றிருந்த காலக் கட்டத்தில், அவர் பறந்து விட்டார். இப்போதும் திருச்செந்தூர் வட்டத்தில், அவருக்கு ஏகப்பட்ட நல்லபெயர். ஒரு குடும்பத்தில் முதன்முதலாகப் படித்து, காவல் துறைக்கு நேர்மையான ஒருவன் சென்றாலும் அவனைச் சொந்தக்காரர்கள் விட மாட்டார்கள் என்பதைப் புரிந்து கொண்டேன். இந்த பிற்கால ஞானோதயத்தின் அடிப்படையில், 'நெருப்புத் தடயங்கள்' என்ற எனது நாவலில் சொந்தக்காரர்களால் சுரண்டப்படும் நேர்மையான போலீஸ் அதிகாரியாக அவரைச் சித்தரித்தேன்.

## ஒரு சந்தேகத்தின் நன்மை

எங்கள் ஊருக்குப் பக்கத்து ஊரில், ஒரு இளம்

பெண் இறந்து விட்டாள். தாய் வீட்டில் இருந்த அவளை வெளியூரைச் சேர்ந்த கணவன் விஷம் வைத்துக் கொன்று விட்டதாகக் கேள்வி. அந்த பெண்ணின் உற்றார் உறவினர்கள், அவள் கணவனை எதிர்பார்த்து நின்றார்கள். அவனையும் வெட்டி, அவ ளுக்கு வெட்டிய குழியிலேயே போட்டுவிடுவது எனப்து முடிவு. இந்தக் கணவனின் பெரியப்பா மகள், அந்த ஊரில் திருமணமானவள். அவளுக்கு விஷயம் புரிந்துவிட்டது. அண்ணன்காரன் சற்றுத் தொலைவில் வரும்போதே "அடே அற்பப்பயலே, எங்க மதனியை விஷம் வ்ச்சாடா கொன்னே இங்கே வா, உன்னையும் வெட்டி புதைக்கப் போறோம் பாரு" என்று வாயிலும் வயிற்றிலும் அடித்தபடி அவனை நோக்கி ஓடினாள். உடனே அவனும் உயிர் பிழைக்க ஓடிவிட்டான். ஓடி தப்பித்து விட்டான். இந்தப் பெண் தனது பெரியப்பா மகனை இப்படி சாமர்த்தியமாக தப்பிக்க வைத்ததாக ஊரார் சொன்னபோது, அவளோ உணர்ச்சி வசப்பட்டு, தார்மீகக் கோபத்தில், "அப்படிச்" செய்ததாக சொல் லிப் பார்த்தாள். யாரும் அவளை நம்பவில்லை-நம்ப முடியாதுதான். அந்தப் பெண்ணை, இறந்து போன பெண்ணின் அண்ணனாக மாற்றி, 'ஒரு சந்தேகத்தின் நன்மை' என்ற ஒரு சிறுகதையை 'விகடனி'ல் எழுதினேன்.

## கதிர்வராத பயிர்கள்

நான் கல்லூரியில் படிக்கும் போது ஊரில் விடுமுறைக்குப் போவேன். ஒரு இளம்பெண் லேசாக சிரிப்பாள். அவள் எனக்கு தூரத்து முறைப்பெண்தான். எனக்குப் பயம். படிப்பு போய் விடக் கூடாதே என்ற

பயம். ஊரில் புரட்சிக்காரன் என்று பேர் வாங்கிய நான், 'அம்போக்கு' என்று அடிபட்டு விடக்கூடாதோ என்ற எச்சரிக்கை. அவள் எவ்வளவோ என்னிடம் பேசிப் பார்த்தாள். நான் என்னைக் கட்டுப்படுத்திக் கொண்டேன். ஒரு நாள் என்னால் இயலவில்லை. தனியாக வந்த அவளிடம், ஏதோ பேசப்போனேன். உடனே அவள் ''முகரக்கட்டையயும் மூஞ்சியையும் பாரு'' என்றாள். முழுக் கறுப்பனாகவும், முன் நீண்ட பற்கள் உடையவனாகவும், உள்ள நான் கோபத்தில் கண்சிவந்து, அவளைப் பதிலுக்கு திட்டிவிட்டு வந்து விட்டேன். நான்கு ஐந்தாண்டுகளுக்கு முன்பு, இருவரும் (அரைக்கிழடுகளான பிறகு) சந்தித்தோம். அவளிடம் 'முகரக்கட்டையை'ப் பற்றிக் கேட்டேன். உடனே அவள் 'செல்லமாக' சொன்னதாகச் சொன்னாள். நான் தான் அவள் காதலை புரிந்து கொள்ளாமல் திட்டிவிட்டதாக அங்கலாய்த்தாள். அன்புச்சக்தி எப்படி விபரீதமாகவும் மாறலாம் என்பதை வைத்துக் கதிர்வராத பயிர்கள்'' என்ற கதையை 'தேவி'யில் எழுதினேன்.

## பால்கணக்கு

அப்போது எனக்கு; ஆறு வயதிருக்கும், இன்னும் நன்றாகவே நினைவிருக்கிறது.

என் விதவைத் தாயாருக்கு 25 வயதிருக்கலாம். அம்மாவிற்குத் திருமணமான ஆறுமாதக் காலத்திற்குள்ளேயே, அப்பா இறந்து விட்டார். நான்தான் அம்மாவின் மூத்த-கடைசி மகன். ஆகையால், அம்மா என்னை 'படி படி' யென்று சொன்னதும், படிக்கவில்லை என்றால் அடித்ததும், இன்னும் நினைவிற்கு

வருகிறது. வெளியூரில் சொந்தக்காரர்களின் திருமண நிகழ்ச்சிகள் போன்ற விழாக்களில், கலந்து கொள்ளும் போது, எனக்கு இரவல் சட்டை வாங்கி இடுப்பில் தூக்கி வைத்துச் சென்றதும் இப்போது கூட, அழுத்த மாக நெஞ்சில் நெருடுகிறது. நான், அம்மாவோடுதான் தூங்குவேன். என் தாய் அதிகாலையில் வயலுக்குப் போய்விட்டு, இரவில்தான் வருவாள். அதுவரைக்கும், நான் நிலா வெளிச்சத்தில் கிளித்தட்டு, சடுகுடு போன்ற விளையாட்டுக்களை, இதர தெரு வீரர்களு டன் விளையாடியது ஞாபகம் வருகிறது. அப்போதெல் லாம், என் தாய் வயலிலிருந்து வந்த வேகத்திலேயே, என் விருப்பத்திற்கு விரோதமாக என்னைத் தூக்கிக் கொண்டு போய் விடுவாள். ஒருநாள், என் தாய் வெளியூரில் எனது பெரியம்மா வீட்டிற்கு சென்றிருந் தாள். சாயங்காலம் திரும்ப வேண்டியவள், திரும்ப வில்லை. மறுநாள் காலையிலும் வந்தபாடில்லை. உடனே நான் ஒரு வாதமடக்கி மரத்தில் ஏறி, அம்மா வரும் திசையை நோக்கி, கண்களைச் செலுத்தினேன். சிறிது நேரத்திற்குள், அம்மா அங்குமிங்குமாய் உட் கார்ந்து உட்கார்ந்து வருவது தெரிந்தது. அந்தக் கருப்புச்சேலை, அம்மாவாகத்தான் இருக்க வேண்டும் என்பது தெளிவாகிவிட்டது. ஒருவேளை அம்மாவாக அல்லாமல் இருக்கலாம் என்று நான் மரத்திலேயே இருந்துவிட்டு, சிறிது நேரம் கழித்து இறங்கினேன். என் அம்மா வேகவேகமாக வந்து, வீட்டுத் திண்ணை யில் படுத்தாள். உடனே வாந்தியும், பேதியுமாக வந்தது. என் தாத்தா, அம்மாவின் நாடியைப் பார்த்த விட்டு தலையில் அடித்துக் கொண்டு அழுதார். ஊரே கூடிவிட்டது. அம்மாவின் கண்கள், என் மீதே நிலைத்

திருந்தன; நான் அங்கே இங்கே நகரும்போதெல்லாம் அவள் கண்கள் நகர்ந்தன. அம்மாவிற்கு காலராவாம். அருகே உள்ள தென்காசிக்குப் பேயிருந்தால், ஒரு வேளை பிழைத்திருக்கலாம். அறியாமையும், மூட நம்பிக்கையும், அதற்கு மூலமான ஏழ்மையும், அம் மாவை மறுநாள் இறக்கச் செய்துவிட்டன. என்னைப் பாராமுகமாக இருந்த உறவினர்கள் அனைவரும், அன்று ஒருநாள் என் மீது அன்பு பொழிந்தார்கள். எனக்குகூட, அம்மா நான்கு நாள் இப்படி படுத்துக்கி டந்தால், நிலா வெளிச்சத்தில் தடையின்றி விளையாட லாமே என்ற ஒரு எண்ணம் ஏற்பட்டது இப்போதும் நினைவிற்கு வருகிறது. மறுநாள், வெள்ளிக்கிழமை, எனது தாயார் என்மீது கண்களை நிலை நாட்டியப டியே இறந்து விட்டாள். இந்தப் பின்னணியில், நான் நாற்பத்தைந்து வயது வந்தபிறகு, ''பால் கணக்கு'' என்ற சிறுகதை எழுதினேன். இது 'தாயி'ல் பிரசுரமா யிற்று. ஒரு ஏழைத்தாய் புற்றுநோயால் உயிருக்குப் போராடுகிறார். ஏழைபாளைகள் அவள் அவதிப்படா மல் இறந்தால் தேவலை என்று நினைக்கும்போதோ, அவளுக்கு இறப்பு வரவில்லை. இறுதியில் ஒருவர் அவளின் ஆறு வயது மகனைக் கூப்பிட்டு, காதுக்குள் கிசுகிசுக்கிறார். உடனே அந்தச் சிறுவன் அம்மாவின் அருகே சென்று ''நீ சந்தோஷமா போம்மா. நான் ஆடு மேய்ச்சோ, மாடுமேய்ச்சோ உன் பெயர் விளங்கப் பிழைத்துக் கொள்வேன்'' என்று மாறி மாறி சொல்லுகி றான். அந்தத் தாயின் உயிர் நிம்மதியாகப் பிரிகிறது. இந்தக் கதையை எழுதும்போது என்னையறியமால் அழுது விட்டேன். இது எனக்குப் பிடித்த அம்மாவைப் பற்றி எழுதிய பிடித்தமான கதை.

குறிப்பு

1. 'பால்கணக்கு' சிறுகதை பிரபல பிரசாத் ஸ்டுடியோ உரிமையாளரின் மகன் ரவியால் தயாரிக்கப்பட்டு தொலைக்காட்சியில் ஒளிபரப்பானது. ரவி இனிமையான இளைஞர். ஆனால், அந்தத் தயாரிப்பு எனக்கு கசப்பைக் கொடுத்தது. சாகும் தருவாயில் இருக்கும் அந்தப் பெண் எப்பொழுது சாவாள் என்று வெட்டியான் ஆவலோடு காத்துக் கொண்டு இருப்பதாகக் கதையில் இல்லாத ஒன்றைச் சேர்த்து அந்தக் கதை கொச்சைப்பட்டது. எந்த வெட்டியானும் இப்படி நடந்து கொள்ளமாட்டார். இது கிராமத்துப் பண்பு. நகரத்து 'டெஸ்ட டியூப் பேபி' மன்னர்களுக்கு இதெல்லாம் தெரியாது. இனிமேல் என் கதைகள் என் மேற்பார்வையின்றி ஒளி வடிவம் பெற அனுமதிக்கலாகாது என்று உறுதி பூண்டிருக்கிறேன்.

2. சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழத்துறை சார்பில் எழுத்தாளர்களை வரவழைத்து அவர்களையே தத்தம் கதைகளைப் படிக்கச் சொல்லி, ஒலிப் பேழையாக்கினார்கள். நானும், "வேலைக்காரியின் மகன்" "பால்கணக்கு" என்று இரு கதைகளை தமிழ் அறிஞர்கள் முன்னால் படித்தேன். பால்கணக்கு கதையைப் படித்தபோது கிட்டத்தட்ட அழுது விட்டேன். இறுதியில் 'என்னைச் சிலர் இலக்கியவாதி இல்லை என்கிறார்கள். நீங்கள்தான் பதில் சொல்ல வேண்டும்' என்றேன். உடனே தமிழ்த்துறை தலைவர் டாக்டர் பொற்கோ அவர்கள் வெகுண்டெழுந்து, 'உங்களை இலக்கியவாதி இல்லை' என்று சொல்பவர்களை நீங்கள் துச்சமாக மதிக்க வேண்டும் என்றார்.

# 6

# சேரி வாசனை

மண்வாசனையை வாசக நண்பர்களுடன் பகிர்ந்து கொண்ட நான் இப்போது சென்னை நகருக்கு உங்களை இழுத்துக் கொண்டு போகலாம் என்று நினைக்கிறேன். நான் வேண்டும் என்றுதான், அழைத் துக் கொண்டு என்று சொல்லாமல், இழுத்துக்கொண்டு என்ற பதத்தை பயன்படுத்தியிருக்கிறேன். காரணம், சேரியின் பின்னணியோ சின்னான், மங்கம்மா போன்ற பெயர்களோ, வருகின்ற கதைகளை மத்திய வர்க்கத் தைச் சேர்ந்த நாம் விரும்பிப் படிப்பதில்லை. என்னு டைய துரதிருஷ்டம் நான் யாருக்காக கதை எழுதுகி றேனோ அவர்கள், என் கதைகளைப் படிக்கும் நிலையில் இல்லை. ஆனாலும், வாசக நண்பர்கள், நண்பர் வட்டத்தில் நான் மூச்சுவிட்ட மண்வாச னையை தாங்களும் பகிர்ந்து கொண்டதுபோல் தோன் றுவதால், இப்போது சேரிவாசனைக்குப் போகலாம் என்று நினைக்கிறேன்.

## நல்லா கேட்டே ஒரு கேள்வி

1960களின் முதல் பகுதியில் சென்னையில் கல்லூரியில் படித்து வந்தேன். நான் இருந்த வீடு சேரிப்பகுதி. இருபது வீடுகளைக் கொண்ட காம்பவுண்ட் வீடு. ஒவ்வொரு அறையும், சின்ன சின்ன நரக அறைகள். உள்ளே படுத்தால், புழுக்கம்; மூட்டைப் பூச்சி; வெளியே படுத்தாலோ, கொசுக்கடி. நான் தங்கியிருந்த படித்த எனது சித்தப்பா வீடும், நாலடி குச்சு மாதிரி. ஓலைக்குப் பதிலாக ஒடு போட்டிருந்தது. அவ்வளவுதான். கிராமத்தில் கம்மாக்கரையில் சுற்றி, வயல்பரப்புகளில் நடந்து, வாலிபால் விளையாடி, விசாலமாகத் திரிந்த என்னை ஜெயிலில் போட்டதுபோல் இருந்தது. எப்படியும், பட்டப் படிப்பை முடித்து விட வேண்டும் என்ற ஒரே வைராக்கியத்தில் பத்துப்பேர் கொண்ட அந்தச் சின்ன வீட்டிற்குள் நானும் நாடமாடினேன். அதே சமயம் அங்கேயிருந்த சுமார் ஐம்பது பேரைக்கொண்ட மனித சமூகம், என்னைப் பெரிதும் வசீகரித்தது. ரிக்ஷா ஓட்டுபவர்கள், துறைமுகத்தில் கூலி வேலை பார்ப்பவர்கள், அப்பளம் சுடும் பெண்கள், வடை சுடும் ஆயா-இவர்களின் மாசுமருவற்ற அன்பு, எனது மனக் கஷ்டத்தை மறக்கச் செய்தது. இந்த ஐம்பது பேருக்கு இருந்தது, ஒரே ஒரு டாய்லட், அதுவும் கதவு இல்லாதது. "யாரு உள்ளே" என்று கேட்டுக் கொண்டே ஒருவர் போக வேண்டும். குளிப்பதோ, குழாயடிப்பக்கம். நான் குழாயில் இறங்கி தவலையில் தண்ணீர் பிடித்து டிரம்மை நிரப்பி, குளிக்க வேண்டும். ஜட்டியோடோ, துண்டோடோ, அத்தனை பேருக்கும் முன்னிலையில் ஐந்தரை அடி உடம்பை முக்கால்

நிர்வாணத்துடன் காட்டிக்கொண்டிருக்க கஷ்டமாக இருந்தது. பெண்களுடன் போட்டியிட்டு, குழாயடியில் தண்ணீர் பிடிப்பது என்னவோபோல இருந்தது. இந்தப் பின்னணியில், அந்த அசுத்தக் காற்றிலும் ஒரு தென்றல் வாடை கிடைத்தது. என் வீட்டிற்குப் பக்கத்து வீடு ஒரு பூக்காரக் குடும்பம் வாழ்ந்த வீடு. அங்கே வயதுக்கு வந்த ஒரு பூக்காரப் பெண். அம்மாவும், அண்ணனும், வாங்கி வரும் உதிரிப் பூக்களை மாலையாகத் தொடுக்க வேண்டியது அவளது பணி. ஆள் பார்ப்பதற்கு கவர்ச்சியாக இல்லை என்றாலும் அழகாக இருப்பாள். கலகலவென்று சிரிப்பாள். எதற்கெடுத்தாலும் 'நல்லா கேட்டே ஒரு கேள்வி!' என்பாள். அவளுக்கு என் மீது ஏனோ ஒரு அனுதாபம். நான் குழாயடியில் படும்பாட்டையும், கல்லூரித் தோழர்கள் வீட்டுக்கு வந்தால் அவர்களை உட்கார வைக்க இடம் கிடைக்காமல் திண்டாடுவதையும் கண்டவள். ஒரு நாள் குழாயடியில் தவலையுடன் இறங்கப்போன என்னை கீழே நின்ற அவள் கையாட்டித் தடுத்தாள். முகத்தை வெட்கமாக்கிக் கொண்டு, என் தவலையை வாங்கி, தண்ணீர் பிடித்துக் கொடுத்தாள். எவரும் கண்ணில் தென்படாதபோது, நான் குளிக்கப்போவதும், அவள் தண்ணீர் பிடித்துக் கொடுப்பதும் வழக்கமாகி விட்டது. கல்லூரிக்குப் போகும் போது வாசலில் நின்று வழியனுப்பி வைப்பாள். கல்லூரியில் பேச்சுப் போட்டிகளில் நான் வாங்கும் கோப்பைகளை இரவு நேரத்தில் ஜன்னல் வழியாக அவளிடம் கொடுப்பேன். அவள், அவற்றை வாங்கி கண்ணில் ஒற்றி என்னிடம் திருப்பிக் கொடுப்பாள். இவ்வளவுக்கும் தொட்டதில்லை, கெட்டதில்லை. நேருக்கு நேராகப் பார்த்துக் கொண்டோமே தவிர, பேசிக் கொண்டதில்லை'

இப்படியாக இருந்த அவன், ஒருநாள் என்னைக் கண்டபடி திட்டினாள். நான் அவளைப் பார்க்க முற்படும்போதெல்லாம், முகத்தைத் திருப்பிக்கொண்டால் கூட பரவாயில்லை. "சோம்பேறிங்க, பொறுக்கிங்க" என்று பொறுக்கி எடுத்த வார்த்தைகளால் சூடு போட்டாள். எனக்கு எதையோ இழந்ததுபோல் தோன்றியது. நான் அவளைப் பார்க்கப் பார்க்க, அவளின் திட்டுதல், வலுத்ததே தவிர குறையவில்லை. இதற்குள் கலியாணம் வேண்டாம் என்றிருந்த அவள், அப்போது வந்த ஒரு வரனுக்குச் சம்மதித்து வீட்டை விட்டுப் போய் விட்டாள். காலப்போக்கில், நானும் இதை மறந்துவிட்டேன். அல்லது அடிமனத்திற்குள் அவள் எண்ணத்தைப் போட்டுவிட்டேன். இருபது ஆண்டுகளுக்குப் பிறகு அதாவது மூன்றாண்டுகளுக்கு முன்பு ஒரு பஸ் நிலையத்தில் ஒரு பூக்காரியைப் பார்த்தேன். அவள் மாதிரியான சாயல், வற்றிப்போன உடல், பட்டுப்போன முகம். அசல் கிழவியானது மாதிரி தோற்றம். அவள் முன்னால் போய் நின்றேன். அவள் என்னை ஏறிட்டுப் பார்த்தாள். எதுவும் பேசவில்லை. பிறகு நானே 'நீ அவள்தானே?' என்று கேட்டபோது, அவள் கண்ணீர் சிந்தாத குறையாகத் தலையாட்டினாள். பிறகு 'நீ பட்டபாட்டுக்கு இப்போது இவ்வளவு நல்லா இருக்கிற; பார்க்கிறதுக்கு படா சந்தோஷமா இருக்கப்பா' என்றாள். நன்றாக இல்லாமல் போன அந்த ஏழைப்பெண்ணுடன் சிறிது நேரம் வீட்டில் உள்ளவர்களைப்பற்றிப் பேசிக்கொண்டேன். பிறகு அவளிடம் "உன் மேல் உயிரையே வச்சிருந்தேன். ஆரம்பத்தில் ஆசைகாட்டி விட்டு, அப்புறமாய் ஏன் திட்டினாய்?" என்று அவளிடம் உருக்கமாக கேட்டேன். அவள் விளக்கினாள். அவளும் என்மேல்

உயிரை வைத்திருந்தாளாம். ஒருநாள் பாழாய்ப்போகிற ஒரு கல்லூரித் தோழனைக் கூட்டி வந்தேனாம். அவனிடம் இவளைக் காட்டி ஏதோ சொன்னேனாம். உடனே அவன் அவள் அங்கங்களை பச்சையாக வர்ணித்தானாம். நான் தட்டிக் கேட்கவில்லையாம். ''இவனோட என்ன பேச்சு?'' என்ற முடிவுக்கு வந்து விட்டாளாம். எனக்கே ஞாபகமில்லை, அப்படி அவன் பேசியபோது, ஒருவேளை நான் அவள் மயக்கத்தில் இருந்திருப்பேன். அவளிடம் ரகசியம் பேசுவதுபோல் கேட்டேன். ''இப்பவாவது, சொல். அப்போ நீ என்னை காதலிச்சாயா?'' என்றேன். உடனே அவள், லேசாகச் சிரித்தபடியே, ''நல்லாக் கேட்டே ஒரு கேள்வி'' என்று இருபதாண்டுகளுக்கு முன்பு அடிக்கடி சொன்ன வார்த்தைகளை அப்போதும் சொன்னாள். அவள் அழகிழந்து, வயதிழந்து, வாலிபமிழந்து, இருந்த அந்த நிலையிலும், என்னைப் பார்த்து, சிரித்தது, என்னைப் புல்லரிக்க வைத்தது. ஏதோ ஒரு பெரிய சாதனை நடந்து விட்டது போல, நடத்திவிட்டது போல, நான் நினைத்தேன். இதற்குப்பிறகு அவளை நான் பார்க்கவேயில்லை. இருபதாண்டுகளுக்கு முன்பு பார்த்த அவளை அந்த அழகுக்கோலத்தில் மிதந்த அவளை இப்போதைய அலங்கோலத்தில் பார்க்க ஏனோ மனம் இடம் கொடுக்கவில்லை. இந்தக் கட்டுரை எழுதும் இந்தச் சமயத்தில் ஒரு வாரத்திற்குள் அவளைப் போய்ப் பார்க்க வேண்டும் என்பதுபோல் தோன்றுகிறது. இந்தப் பின்னணியில் ''நல்லாக் கேட்டே ஒரு கேள்வி'' என்று ஒரு சிறுகதை எழுதினேன். ஆரம்பக் காலத்தில் என் மனதில் ராணியாக இருந்த அவளை, ராணி பத்திரிகை வெளிப்படுத்தியது.

## அண்ணன் வரட்டுண்டா... கரிமூஞ்சி

கல்லூரிக் காலத்தில், எல்லா இளைஞர்களுக்கும் வரும் ''கெட்ட புத்தி'' எனக்கும் வந்தது.

அப்போது ஞாயிற்றுக்கிழமைதோறும் குமுதம் வரும். அதை அன்றே படித்து முடித்து விடுவேன். அதனால் திங்கட்கிழமை ஏதாவது செய்ய வேண்டும் என்று தோன்றும். அந்தக் குறுகுறுப்பில், மூன்றாண்டு கல்லூரிப் படிப்பு முடிந்தது. நான்காவது ஆண்டு சாப்பாட்டுக்கு வழியில்லை என்றாலும். குமுதம் கிடைத்துக் கொண்டுதான் இருந்தது. பல்வேறு சூழல்க ளால், சப்பாட்டிற்கே அல்லாடிய நான், என் ஒன்று விட்ட தங்கை வீட்டில் அவ்வப்போது சாப்பிட்டு வந்தேன். அவளும் எந்தவித பலனையும் எதிர்பார்க்கா மல் எனக்கு உணவளித்தாள். அந்த வீடும், நான் சொன்ன வீடு மாதிரி ஒரு காம்பவுண்ட் வீடு. பதினைந்து குடும்பங்கள் வாடகைக்கு வாழ்ந்த வீடு; அந்த வீட்டுக்காரம்மாவின் மகளுக்கு என்னைப் பார்ப் பதைத் தவிர, வேறு எந்த வேலையும் இருந்ததாகத் தெரியவில்லை. கையில் அண்ணன் குழந்தையை வைத்துக் கொண்டு, 'எப்போடா வேலைக்குப் போறே?'' என்பாள் ''கொஞ்சம் நல்லா டிரஸ் பண்ணக் கூடாதாடா'' என்று சீண்டுவாள். ''உனக்கு நல்ல வேலை கிடைச்சாதான் எனக்கு நிம்மதிடா'' என்பாள். நான் நிஜமாகவே அப்போது கிறுக்கன் என்று நினைக்கி றேன். இல்லை என்றால் டயலாக் சினிமாக்கள், குமுதம், ஆகியவற்றின் உந்துதலில் அப்படி ஒரு காதல் கடிதத்தை அவளுக்கு கிறுக்கி இருக்க மாட் டேன். அவசரம் அவசரமாக ஒரு காகிதத்தில் என்னமோ

எழுதி, அவள் அண்ணன் மகனிடம் கொடுத்துவிட்டு ஓடி விட்டேன். மத்தியானம் மகிழ்ச்சியோடு எனது தங்கை வீட்டுக்குப்போனேன்; பாவி கெடுத்தாள். அண்ணன் மகனை இடுப்பில் வைத்துக் கொண்டே, இப்போதும் நின்றாள்; ஆனால் டயலாக்தான் வேறு. ''ஏண்டா கரிமூஞ்சி.... உன் மனசிலே என்னடா நினைச்சுக்கிட்டே.... பெரிய மன்மதன்னு நினைப்பா? என் அண்ணன் வரட்டும். ராத்திரி வரட்டும் அப்ப இருக்கு வேடிக்க'' என்று கூசாமல் சொன்னாள். நான் வெலவெலத்துப்போனேன். அவள் அண்ணன் வஸ்தாது; நல்ல மனிதர்; என்றாலும், தனது குடும்பத்துப் பெண்ணைத் தவறாக அணுகுபவர்களை உண்டு, இல்லை என்று பார்க்கக்கூடியவர். ஒரு தடவை ஒரு ரவுடியை அவர் அடியடி என்று அடித்ததை என் கண்ணாலேயே பார்த்தேன். பயந்துபோன நான் ஓடி னேன், ஓடினேன் எனது சித்தப்பா வீட்டு ஓரத்திற்கே ஓடினேன். அங்கே சித்தப்பாவும் இல்லை; சித்தியும் இல்லை; சோறும் இல்லை, கஞ்சியும் இல்லை. இரண்டு நாட்கள் ரொட்டி, பிஸ்கட்களைத் தின்றுகொண்டு வயிற்றைக் காத்தேன். மூன்றாவது நாள் என் தங்கை வந்தாள். நான் கிடந்த கோலத்தைப் பார்த்துவிட்டு, என்னை வலுக்கட்டாயமாக வீட்டிற்கு அழைத்தாள். எனக்குப் பசி ஒரு பக்கம்; பயம் ஒருபக்கம். அவளை அனுப்பிவிட்டு, ராத்திரி பத்து மணிக்கு, தலையில் முக்காடு போடாத குறையாக தங்கை வீட்டிற்குப் போனேன். ''அவள்'' பார்க்கமாட்டாள் என்ற நம்பிக் கையில், சாப்பிடப்போனேன், அவ்வளவுதான். சண் டாளி வந்துவிட்டாள். தூங்கி வழிந்த அண்ணன் மகனை தோளில் போட்டுக் கொண்டு ''ஏண்டா

பயந்திட்டியா? உன்னெ எப்படிடா காட்டிக்கொடுப் பேன்... சோமாறி'' என்று செல்லமாகத் திட்டினாள். எனக்குப் போன உயிர் வந்தது. ஆனாலும் அவளைப் பார்க்கப் பிடிக்கவில்லை. சொன்னதே சொன்னாள். ''கறுப்பா'' என்று சொல்லியிருக்கலாம். கரிமூஞ்சி என்றல்லவா சொன்னாள்... அவளுக்கு ஒரு பெரிய கும்பிடாக போட்டேன்; அதிலிருந்து அவளை ஏறெடுத் தும் பார்ப்பதில்லை. அந்த ஆதங்கத்தில், அவள் எப்போதாவது ''அண்ணனிடம் சொல்லட்டுமா'' என்று மருமகக் குழந்தையிடம் பேசும்போது, நான் செயற்கைத்தனமாகச் சிரிப்பேன். இவளையும், பதி னைந்து ஆண்டுகளுக்கு முன்பு வடசென்னையில் சந்தித்தேன். ஆனால் பூக்காரப் பெண்ணிடம் கேட்டது மாதிரி இவளிடம் கேட்கவில்லை. அவளும் எதுவும் நடக்காதது போல் ஒதுங்கிக் கொண்டாள். இந்த நிகழ்ச்சியை, மையமாக்கி குமுதத்தில் ''அண்ணன் வரட்டும் சொல்லுகிறேன்'' என்று ஒரு சிறுகதை எழுதினேன்.

## வளர்ப்பு மகள்

வடசென்னையில் பல்வேறு குடித்தனங்களைக் கொண்ட ஒரு வீட்டில் வாழ்வது என்பது, நரக வேதனை. அதிலும் வீட்டுக்காரியின் அடாவடித்தனம் சிலசமயம் அசிங்கமாகவே இருக்கும். எல்லோரும் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது, மின்சார வெளிச் சத்தை அணைப்பாள். உழைக்கும் மக்கள் அந்த இரவில் ஏதாவது உல்லாசமாகப் பேசிவிட்டால் போதும். ''என்ன பேச்சு? தூக்கத்தைக் கெடுக்கிற பேச்சு'' என்பாள். காலையில் குழாயடியில் ஏழைப்

பெண்கள், தண்ணீர் பிடித்துவிட்டு, வெளியே வேலைக்குப் போவதற்காகத் துடிப்பார்கள். ஒவ்வொருத்தியும் குடங்களை வைத்துக்கொண்டு, ஒவ்வொரு படியாக நிற்பாள், குடத்தை குழாய்க்குக் கீழேயும் வைத்துவிடுவாள். அப்போது வருவாள் வீட்டுக்காரம்மா. எல்லா குடங்களையும் வேலைக்காரியை வைத்து வெளியே அனுப்புவாள். அரைமணி நேரம், இவள், குடம் குடமாகப் பிடிப்பாள். இவள் போய் விட்டு, ஏழைப்பெண்ணின் குடம் வரும்போது, குழாய் பெருமூச்சுவிடும். சில வீடுகளில் வீட்டுக்காரிகள், வாடகைப் பெண்களை மாவு ஆட்டச்சொல்வதும் உண்டு. வீட்டுக்காரிகள் ரேடியோ போட்டால், அது இசை. வாடகைக்காரிகள் ரேடியோ போட்டால், அது கூச்சல், இப்படி எல்லா வீடுகளிலும் பெரும்பாலாக வீட்டுக்காரி அம்மாள்கள், முதலாளித்துவ தாண்டவமாடுவதுண்டு. இவர்களையும் ஆங்காங்கே அடக்குகின்ற வாடகை வீட்டுக்காரிகளும் உண்டு. இந்தப் பின்னணியில் ஒரு வீட்டுக்காரியின் அட்டூழியத்தைப் பற்றி தாமரையில் குடித்தனம் என்று ஒரு சிறுகதை எழுதினேன். 'வளர்ப்பு மகள்' என்ற நாவலில் நான் வசித்த வீட்டில், இட்லி சுட்டு விற்கும் ஆயா, என்னை சொந்த தம்பிபோல அனுமானித்த ஏழைப்பெண்கள், என்படிப்பை பெரிய படிப்பாக நினைத்து பிரமித்துப் பார்த்த ரிக்ஷாக்காரர்கள், ஆகியோரை அந்த நாவலில் பாத்திரங்களாக்கினேன்.

## யோகி ரங்கசாமி செட்டியார்

இந்த ரிக்ஷாக்காரர்கள், இட்லி விற்கும் ஆயாக் கள், மூட்டைச் சுமப்பவர்கள், பூக்காரர்கள் இவர்கள்

தான் நான் இருந்த இடத்தில் குடித்தனக்காரர்கள். இங்கே இருந்து லாரி டிரைவர்களும், காய்கறி புரோக்கர்களும், இந்த மக்களுக்கு 'விஐபி'' க்கள். வீட்டிற்கு வெளியே உள்ள திண்ணையில் பேட்டை ரவுடிகள் கத்தியோடு உட்கார்ந்து கொண்டு, உரையாடுவதும், அதேசமயம் தாங்கள் இருக்கும் பகுதியில் ஒழுங்காக இருக்க வேண்டும் என்ற கொள்கையை, பொதுவாக அவர்கள் கடைபிடித்ததும் நான் கண்கூடாகப் பார்த்தது. இந்தச் சூழலில் பட்டப்படிப்பைப் படித்து வந்த எனக்கு, கிட்டத்தட்ட டாக்டரேட்டிற்குரிய ஒரு கல்வியும் கிடைத்தது. கோணி வியாபாரியான எனது சித்தப்பா வீடு இரண்டு அறைகளைக் கொண்டது. ஒன்றில் சுமார் ஆயிரம் கோணிகள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும். இவற்றை ரெங்கசாமி செட்டியார் என்ற ஒருவர் தைத்துக் கொடுப்பார். காலையில் ஏழு மணிக்கு வந்தால் இரவில் ஒன்பது மணிக்குத்தான வீட்டிற்குப் போவார். இவர், பர்மாவிலிருந்து இரண்டாவது உலகப்போரில், தமிழகத்திற்கு அகதியாக வந்த தெலுங்குச் செட்டியார். இவருடைய தந்தை பர்மாவில் பிரபலமாக விளங்கியவராம். பர்மாவிலிருந்து காடு வழியாகத் தப்பி வரும் போது எத்தனையோ உயிர்கள் குண்டுகளுக்குப் பலியாவதையும், வயதானவர்களையும் நோயாளிகளையும், சொந்தக்காரர்கள் காடுகளிலேயே விட்டு விட்டு வந்ததையும் இவர் சொல்லும் போது, கண்களில் கண்ணீர் உகுக்கும். இவர் புத்தபிட்சுக்களிடமும், சில சந்நியாசிகளிடமும் பழக்கப்பட்டவர். சித்த வைத்தியத்தில் நிபுணர். ஒரு தடவை சூத்துக்கல்லாக இருந்த என் சித்தியின் நாடியைப் பார்த்துவிட்டு, ''மரணநாடி

பேசுகிறது. உன் சித்தி மூன்று மாதங்களில் இறந்து விடுவார்'' என்று எனக்கு மட்டுமே ரகசியமாச் சொன்னவர். ஜோதிடத்தில் நிபுணர், சாமுத்திரிகா லட்சணத்தை நன்கு தெரிந்தவர். ஒரு ஆளைப் பார்த்தே, அவரது சிரிப்பு, உட்காரும் விதம் ஆகிய வற்றை வைத்து கணித்துவிடுவார். அதோடு, பிரணா யத்தின் மூலம் ''வாசி'' என்ற கலையைக் கற்று, எதிர்காலத்தைக் கணிப்பவர். நான் கல்லூரியை விட்டு வந்ததும், தூசியும், தும்பும் நிறைந்த அந்த அறைக் குள் இவரோடு பேசிக் கொண்டே இருப்பேன். எனது எதிர்காலம் சிறப்பாக இருக்கும் என்றும், நான் எழுத்தாளனாக மாறுவேன் என்றும் குறிப்பிட்டார். பல்வேறு காரணங்களால் படிப்பை இடையில் நிறுத் தப்போகும் போது, இவர்தான் அவ்வப்போது ஆறுதல் கொடுத்தார். ஆகையால் எனது கதாபாத்திரங்கள் தரையில் பெருவிரலால் கோலம் போடுவதும், கனைத் துக்கொண்டே சிரிப்பதுமாக எழுதுவதும், மூக்கு சப்பையாக இருப்பதாக குறிப்பிடுவதும், நெற்றி விசாலமாக இருப்பதாக எழுதுவும், அல்லது கரங்கள் குவியும் போது விரல்கள் அதிகமாக ஒட்டிக் கொள்வ தாய் வருணிப்பதும், ஒருவித சாமுத்திரிகா லட்சண அடிப்படையில் அந்தப்பாத்திரங்களின் தன்மைக் கேற்ப எழுதப்பட்டவை. ஏனோதானோ வர்ணனைகள் அல்ல. இவரது பாதிப்பில் பல கதைகள் எழுதியிருக்கி றேன்.

## ஒரு துரோகியின் விசுவாசம்...

இவரிடம் பலர் வருவார்கள். வியாபாரிகள், காதலில் தோல்வியுற்றவர், நோயாளிகள், நோய்

இருப்பதாக நினைக்கிறவர்கள். இப்படி எத்தனையோ பேர் வருவார்கள். இவர்களில் ஒரு பெண் சலவைத் தொழிலாளி. அப்போது அவருக்கு 50 வயதிருக்கும். 'சின்ன வீடு' செட்டப் செய்த தனது கணவர், மீண்டும் தன்னிடம் வருவாரா என்று இந்தப் பெண், அடிக்கடி அவரிடம் கேட்பாள். அதோடு, எனது துணிமணிகளை இந்தப் பெண்தான் சலவை செய்து கொடுப்பாள். இரண்டு மூன்று உருப்படிகள் மட்டும் வைத்திருந்த எனக்கு, தேவைப்படும் போதெல்லாம், ஸ்பெஷல் சலவை செய்து 'உருப்படியாக' கொடுத்த பெண்மணி இவள்; கிட்டத்தட்ட இவளின் வீட்டில், நான் ஒரு உறுப்பினனாகவே மாறிவிட்டேன். இவளுக்கு ஒரு இளம் மருமகள்; கறுப்பாக இருந்தாலும், கற்சிலை போன்ற தோற்றம். எனக்கு சகோதரிக்குச் சமமானவள். பல தடவை இவளும், ஒரு வயதான மூதாட்டியும், அக்கம்பக்கம் பார்த்தபடி காரசாரமாகப் பேசிக் கொள் வதையும், கடைசியில் அந்த மூதாட்டி கண்ணீர் விட்டுக் கொண்டே போவதையும் பார்த்திருக்கிறேன். அப்படி ஒரு தடவை அந்த மூதாட்டி போனதும், அந்தப் பெண்ணிடம் நான் விவகாரத்தைக் கேட்டேன். முதலில் தயங்கிய அவள், பிறகு ஒப்பித்தாள். அந்தக் கிழவி இவள் தாயாம். இந்தப் பெண்ணுக்கு பத்து வயது வந்த போது, யாரோ ஒரு 'கஸமாலத்தை' இஸ்துகிட்டுப் போயிட்டாளாம். இருபது ஆண்டுகளுக் குப் பிறகு, ஓராண்டுகாலமாக மகளைப் பார்க்கிறா ளாம். இப்போது இயலாமையாகி விட்டதால், மகள் தன்னைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று மன்றாடுகிறாளாம். இந்தப் பெண்ணும் அதற்கு சம்ம தித்துவிட்டாளாம். ஆனால் அநதக் கிழவியோ தன்னை

'இஸ்துகின்னு' போன அந்தக் காலத்து வாலிபனும், இந்தக் காலத்துக் கிழவனுமான இரண்டாவது கணவ னையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்றாளாம். இதற்கு மகள்காரி மறுத்துவிட்டாள். ஆனால் அந்த மூதாட்டியோ, "ஒரு காலத்தில் என்னைக் கூட்டிக் கிட்டு போய் வாழ வைத்தவன் வகைதொகை இல்லா மல் கிடக்கும் போது நான் மட்டும் வர்றது இன்னா நியாயம்" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாளாம். எனக்கு கண்கள் கலங்கின. பெற்ற மகளையும், கைபிடித்த கணவனையும் விட்டுவிட்டுப் போன அந்தப் பெண், தன்னை இஸ்துகின்னு போன ஒரு வனை கைவிடாமல் இருக்க வேண்டும் என்பதில், காட்டிய அக்கறை அவளை கண்ணகிக்குச் சமமாக எண்ண வைத்தது. இதை வைத்து, குங்குமத்தில் ஒரு சிறுகதை எழுதினேன்.

## இடம் தேடி....

நான் எழுதிய நூற்றுக்கணக்கான கதைகளில் எனக்குப் பிடித்த பத்துக் கதைகளைச் சொல்லச் சொன்னால், அதில் "இடம் தேடி" என்ற சிறுகதை முன்னணியில் நிற்கும். இது குமுதத்தில் எழுதப்பட்ட கதை. சென்னைத் தொலைக்காட்சியில் பிரபல மக்கள் இயக்குனர் அருண்மொழியால் இயக்கப்பட்டு நல்ல பேர் வாங்கிய நாடகம். இதுவும், எனது அனுபவ அடிப்படையில் எழுந்தது. எனது பெரியப்பா ஒருவர் எங்கள் ஊரில், தலைவர் போல வாழ்ந்தவர். ஏதாவது ஒரு வீட்டில் ஒருவர் மரணமடைந்து விட்டால், அங்கு இவர் போகும் போது எல்லோரும் இவரிடமே ஆறுதல் கேட்பார்கள். திருமணம் என்று வந்துவிட்டால், மாப்

பிள்ளைக்கு அடுத்த ஸ்தானத்தில் இருப்பவர் இவர் தான். தலையிலே குடுமியோடு, செக்கச்சிவந்த நிறத் தோடு பார்ப்பதற்கு கம்பீரமாக இருப்பார். ஊரில் பெரிய வழக்காளி; அப்படிப்பட்ட பெரியப்பா, பஞ்சம் பிழைப்பதற்காக, எல்லோரையும் போல சென் னைக்கு வந்தார். எட்டுப் பிள்ளைகள். அத்தனை பேரும் ஆண்கள்; ஆனாலும் பெரிதாக யாரும் முன்னேற முடியாத சூழல். எப்படியோ நான்கைந்து பிள்ளைகளுக்கு திருமணம் செய்து வைத்தார். இறுதிக் காலத்தில் நோய்ப்பட்டு ஸ்டான்லி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் ஓரளவு குணமாகி, மகன்கள் வீட்டிற்குத் திரும்பி வந்தார். மருமகள்கள் ஏதோ சாக்குப் போக்குச் சொல்லி அனுப்பிவிட்டார்கள். இறுதியில் உறவினர் வீட்டில் அவர் அடைக்கலம் தேட வேண்டியதாக இருந்தது. இந்தப் பெரியப் பாவை, ஒரு பெண்ணாக மாற்றி, சிறுகதை எழுதி னேன். அப்போது ஓரளவு பரபரப்பை ஏற்படுத்தியது இந்த கதை. இலக்கியப் பண்டிதர்கள் தவிர, மற்றவர் கள் இதைப் படித்து விட்டு, அழாமல் இருக்க முடியாது. இன்னும் பெரியப்பாவின் உருவமும், இறுதிக்காலத்தில் அவர் பட்டபாடும், என் நெஞ்சி லேயே இருக்கிறது.

## ஒரு நோயின் அறிகுறி

மீண்டும் எனது குரு ரெங்கசாமி செட்டியார் விவகாரத்திற்கே வருவோம். அவருக்கு ஒரு மகன். அசல் ரவுடி; ஆனால் கேடியல்ல. இவருக்கு வடசென் னையில் அப்போது கொடி கட்டிப் பறந்த ஒரு அரசியல் பிரமுகர் தூரத்து உறவினர். செட்டியாரிடம்

வரும் ஒருவர் அம்பத்தூரில் சைக்கிள் பாக்டரியில் வேலை பார்த்தவர். அந்தப் பையனுக்கு அதே பாக்டரி யில் வேலை கிடைக்க ஏற்பாடு செய்தார். நிர்வாகமும் இணங்கியது; ஆனால் முக்கிய பிரமுகர் ஒருவரிடம் தான் காண்டக்ட் சர்டிபிகேட் வாங்கி வரவேண்டும் என்று வற்புறுத்தியது. ரெங்கசாமி செட்டியாரும் தனது தூரத்து உறவினரான அதே பகுதியில் குடியிருக்கும் அந்த அரசியல் பிரமுகரிடம் விவகாரத்தைச் சொன் னார். அவர், எல்லா விவரங்களையும் கேட்டுக் கொண்டு, 'நாளைவா' என்றார். 'நாளை' வரவே யில்லை. இவர் விசாரித்துப் பார்த்தபின், அந்தப் பிரமுகர் சம்பந்தப்பட்ட கம்பெனிக்கு போன் செய்து, இந்தப் பையனுக்குப் பதிலாக தனக்குத் தெரிந்த ஒருவனை வேலையில் நியமிக்கும்படி கேட்க, நிர்வாக மும் அரசியல் செல்வாக்குப் பெற்ற அவரது ஆளுக்கு வேலையைக் கொடுத்து விட்டது. கொதித்துப்போன நமது செட்டியார், அந்த பிரமுகரின் வீட்டிற்கு முன்னால் போய் நின்று கையில் மண்ணை வைத்துக் கொண்டு மூன்று தடவை ஊதினார். அதன் விளைவு ஆறுமாத காலத்திற்குள், அந்தப் பிரமுகர் கடுமையான சிக்கலில் சிக்கி அதன் பாதிப்பு வாழ்க்கை முழுவதும் இருக்கும் அளவுக்கு ஆகிவிட்டது. அதற்குப் பிறகு, அவர் அரசியலிலும் எடுபடவில்லை. இந்தச் செட்டி யார் பின்னால் வருத்தப்பட்டாலும், முன்னால் நடந் ததை மாற்ற முடியவில்லை. இதை வைத்தும் ஒரு சிறுகதை எழுதினேன். ஆனால் ஜாக்கிரதையாக சாப மிட்டதையோ, அதன் விளைவையோ குறிப்பிட வில்லை. கதையின் நோக்கம் வல்லமை வாய்ந்த ஒருவன் எளியவனுக்கு கிடைக்கும் வேலையையும்

எப்படித் தட்டிப்பறிக்கிறான் என்பதைச் சொல்ல வேண்டும் என்பதே. மூட நம்பிக்கை மாதிரி தோன்றக் கூடியதை நான் குறிப்பிட விரும்பவில்லை.

இந்தப் பையன், ஒரு முழுக் குடிகாரனாக வாழ்க்கையை, தொலைத்துவிட்டான். 'குடி' ஒரு நோயின் அறிகுறியே தவிர, நோயல்ல' என்பதைச் சொல்வதற்காக அந்தக் கதைக்கு 'ஒரு நோயின் அறிகுறி' என்று வைத்தேன்.

## ஒரு நாள் போதுமா?

கல்லூரி படிப்பை முடித்த பிறகு, அங்குமிங்குமாகச் சுற்றிவிட்டு, நான் மத்திய அரசின் திட்டம் என்ற பத்திரிக்கையில் உதவி ஆசிரியராக வேலைபார்த்தேன். அப்போது.... கீதா என்ற தொழிற்சங்க தோழியரின் பரிச்சயம் கிடைத்தது. இந்தக் கீதா, மதுரையில் வசித்த பிரபல மார்க்சீய தத்துவவாதியும், கம்பராமாயண இலக்கயவாதியுமான அறிஞர் ராமகிருஷ்ணனனின் மகள். பாட்டாளி மக்களுக்காக, கல்லூரியில் ஆசிரியை வேலையையும் ராஜினாமா செய்து விட்டு, காதலித்து கைபிடித்த கணவனுடன் கட்டிடத் தொழிலாளர் சங்கத்தைத் துவக்கினார். கீதா, நான் இந்தத் தொழிலாளர்கள் பற்றி ஒரு நாவல் எழுத வேண்டும் என்று கேட்டார். அவருடன் பல்வேறு சேரிப்பகுதிகளுக்குச் சென்றேன். தேனாம்பேட்டை, சூளை, ஆகிய விடங்களில் உடலுழைப்பை விற்பதற்காக மண் வெட்டி கூடைகளோடு, நிற்கும் ஆண்களையும், பெண்களையும், அவர்களது அவல நிலையையும் பார்த்தேன். சேரிப் பகுதிகளில் தக்க கழிப்பிடம்

இல்லாததால், பெண்கள், எல்லாவற்றையும் அடக்கி அடக்கியே சிறுநீரகக் கோளாறுக்கு உட்பட்ட பல சம்பவங்கள் தெரிந்தன. காண்ட்ராக்டர்களும், மேஸ்திரிகளும், இவர்களைச் சுரண்டும் விதங்களும், விவரங்களும் கிடைத்தன. மேலே இருந்து கீழே விழுந்தால் இவர்களுக்கு நஷ்ட ஈடு கிடையாது. நிரந்தரத் தொழிலாளர்களைப்போல் இவர்களுக்கு எந்தவித வசதியும் இல்லை. மழை வந்துவிட்டால், இவர்கள் பிழைப்பிலே மண். ஒரு தாய், இருந்த உணவில் முக்கால் வாசியை தான் உண்டு விட்டு, கால் வாசியை மட்டுமே குழந்தைக்குக் கொடுத்தாள். குழந்தையோ பசி பொறுக்க முடியாமல் கத்துகிறது. அந்த தாயிடம் நான் கேட்டேன். அவள் சொன்னாள் இப்படி-

''என் வவுறு கொஞ்சம நிறைஞ்சாத்தானே சாமி, வேலை பாக்கலாம், இல்லாட்டி, மயங்கி விழுந்திட்டா இந்தக் குளந்தய யார் கவனிக்கிறது? பொறுத்துக் கோடா ராசா... சாங்காலமா கூலி வாங்கினு வந்து அம்மா ஒனிக்கி நல்ல சோறு போடுறேன்... மசால் தோச வாங்கித்தர்றேன்!''

இப்படிச் சொல்லிவிட்டு, அந்தப்பெண் எதுவுமே நடக்காதது போல் போய்க் கொண்டிருந்தாலும், அவள் அழுதுகொண்டிருந்த தன் ஆறு வயது மகனைக் கண் கலங்கத் திரும்பித் திரும்பிப் பார்த்ததையும் நான் பார்த்தேன். எவ்வளவு பெரிய யதார்த்த உண்மை இது! எல்லா உணவையும் பிள்ளைக்குக் கொடுத்து விட்டு, வயறு காய்ந்து, மாடியிலிருந்து மயங்கி விழுந்து தன்னோடு குழந்தையையும் சாகடிக்கும் ஒரு தாயை விட, இந்த யதார்த்தமான தாய் எனக்கு ரொம்பப்

பிடித்து விட்டாள். இப்படி எத்தனையோ நெஞ்சை உருக்கும் சம்பவங்கள். இவற்றை வைத்து "ஒரு நாள் போதுமோ" என்று ஒரு குறு நாவல் எழுதினேன். நயனதாரா என்ற பத்திரிக்கையில் மாத நாவலாக இது வெளி வந்தது. தாமரையில் நான் சொன்ன இந்தத் தாயை மட்டும் மையமாக வைத்து 'மண்சுமை' என்ற சிறுகதையும் எழுதினேன்.

## பொதுவுடமை தத்துவம் தந்தவர்

**யோ**கி ரெங்கசாமி செட்டியாரைப் பற்றியும் அவர் என் எழுத்துக்களில் ஏற்படுத்திய தாக்கம் பற்றியும் விவரித்திருந்தேன். ஆனால் அவர் சொல்வதை முழுமை யாக ஏற்றுக்கொள்ள முடியாத அளவுக்கு அதே காலக் கட்டத்தில் இன்னொரு நட்பு கிடைத்தது. நான் வசித்த குடித்தன வளாகத்தில், ஒரு தையல் தொழிலாளி இருந்தார். என்னைவிட பத்து வயது அதிகமாக இருக்கலாம். அந்த வளாகத்திற்குள் வீட்டுக்காரி அடாவடியாகப் பேசும்போது, எல்லோரும் குமுறுவார் கள், ஆனால் அவரோ லேசாகச் சிரிப்பார். இது மாதிரி பேச்சுக்களும் ஏச்சுக்களும், எதிர்பார்க்க கூடியதுதான் என்பதுபோல, புன்முறுவல் செய்வார். இதை நெடுநாட் களாகக் கவனித்துக் கொண்டிருந்த நான், ஒரு தடவை அவரை அணுகினேன். அவர் மூலம் ஒரு மாபெரும் தத்துவத்தையே அணுகினேன் என்று சொல்லலாம். நான் அவரது சிரிப்பைப் பற்றி கேட்டதற்கு "அந்த அம்மாவிற்கு முதலாளித்துவ குணம். அந்தக் குணம் உள்ளவர்கள் அப்படித்தான் பேசுவார்கள்" என்பார். தெருத் திண்ணைகளில் ரவுடிகள் கத்தி கம்புகளோடு, அட்டூழியமாக அரட்டை அடிப்பதைப் பார்த்துவிட்டு,

இவர்கள் லும்பன்கள்; இப்படித்தான் இருப்பார்கள் என்பார். இப்படி அவரிடம் ஏற்பட்ட நட்பு, நாளடை வில் தத்துவார்த்த ரீதியான நட்பானது. கல்லூரியின் பொருளாதார பாடத்தில் ''கார்ல் மார்க்ஸ் சொல்வது தவறு. இருபது ரூபாய் புத்தகமும், இருபது ரூபாய் செருப்பும் சமமாகுமா'' என்று ஒரு உருப்படாத கிரிட்டிஸிஸம் வரும். இன்னும் அப்படித்தான் வந்து கொண்டிருக்கிறது என்று நினைக்கிறேன். இத்தகைய பொருளாதார மாணவனான எனக்கு, அந்தத் தையல் தொழிலாளி பாட்டாளி வர்க்கத்தைப் பற்றியும், முத லாளித்துவ வர்க்கத்தில் உள்ள போலித்தனமாக மரபு கள் பற்றியும், விவரமாக எடுத்துரைத்தார். இது எனக்கு ஒரு புதிய பார்வையைக் கொடுத்தது. பி.யு.சி. படிக்கும்போது, என்னைச் சென்னை நகர மாணவர்கள் ''அண்ணாச்சி'' என்று கிண்டல் செய்வார்கள். என்னு டைய நிறமும், போக்கும், ஆடையும் அவர்களுக்கு நேரப்போக்காக இருந்ததை அறிந்தேன். இதனால் கூனிக்குறுகிப் போனேன். கல்லூரியில் குளிரில் கூட உடம்பு வேர்த்தது. ஆனால் இந்தத் தையல் தொழிலா ளரின் பரிச்சயம் ஏற்பட்ட பிறகு, பாட்டாளி மக்களின் கலாசாரமும், பழக்க வழக்கங்களும், எப்படி முதலா ளித்துவ வர்க்கத்தாலும் பூர்ஷ்வாக்களாலும் ஏளனத்துக் குரியதாகவும், அடக்கி வைக்கப்படுவதற்குரியதாக வும் ஆகிறது என்பதை அறிந்து தெளிந்தேன். இதனால் என்னைக் கிண்டல் செய்த மாணவர்களை துச்சமாக மதிக்கக் கற்றுக் கொண்டேன். அவர்களிடத்தில் அவர் களின் நலிவுற்ற கலாசாரத்தையும், சொல்லத் துவங்கி னேன். இதன் விளைவு, நான் தலைவனாகி விட்டேன். கல்லூரியில் வேலைநிறுத்தத்திற்குத் தவிர்க்க முடியாத

மாணவர் தலைவர்களில் நானும் ஒருவன். அதுமட்டுமல்ல. திராவிட முன்னேற்றக் கழக மாணவர்கள் 99 சதவிகிதம் இருந்த சர் தியாகராயா கல்லூரியில் நான் தமிழ் மாணவர் மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டேன். இப்போதைய தலைவர்களான திரு என்.வி.என்.சோமு, திரு கே.ஏ.கிருஷ்ணசாமி திரு பெ.சீனிவாசன், விசுவநாதன் முதலியவர்கள் பல்வேறு பேச்சுப் போட்டிகளில் என்னோடு கலந்து கொண்டவர்கள். இப்படி நான் வெற்றிகளைக் குவிப்பதற்கு ரங்கசாமி செட்டியார் ஒரு காரணம் என்றால், இந்த தையல் தொழிலாளியும் இன்னொரு இணையான காரணமாகும். நான் எழுதிய 'சத்திய ஆவேசம்' என்ற நாவலில், இந்த தையல் தொழிலாளியை ஒரு ப்ரூப் ரீடராகச் சித்தரித்து, அவர் எப்படி மார்க்சீய தத்துவத்தை மனம் குமுறிப்போகும் கதாநாயகனுக்கு உணர்த்தி, தெளிய வைக்கிறார் என்று எழுதியிருந்தேன். துரதிருஷ்டவசமாக இந்தத் தொழிலாளித் தோழர் ஒரு குடும்பச் சிக்கலில் மாட்டி, நான் அவருடன் பரிச்சியப்பட்ட மூன்று மாத காலத்திற்குள்ளே எங்கேயோ போய்விட்டார். இப்போது அவர் எங்கே இருக்கிறாரோ, எப்படி இருக்கிறாரோ. பார்க்க ஆவலாக இருக்கிறது. இவருடைய தாக்கத்தால் தான் தாமரை, செங்கோல், (அப்போது செம்மலர் இல்லை) ஜனசக்தி ஆகிய வித்தியாசமான பத்திரிகைகளைப் படித்து, சிந்தனை நோக்கைத் தீட்டிக் கொண்டேன்.

## சுகமாகிப் போன வெயில்

இந்தச் சந்தர்ப்பத்தில், பக்கத்து வீட்டில் முப்பது வயது பெண் ஒருத்தி இருந்தாள். கணவன்காரன்

அவளைத் தள்ளி வைத்துவிட்டான். இவள், கூலி வேலை பார்த்து, கொஞ்சம் கொஞ்சமாக பணம் சேமிப்பாள். ஐந்தாறுமாதம் கழித்து நாடு திரும்பிய காட்டு விக்கிரமாதித்தன் போல் அவள் கணவன் காட்டான் வருவான். பேண்ட் சட்டையோடு கிருதா மீசையோடும் இருக்கும் கணவனைப்,பார்த்து. இந்த அப்பாவிப் பெண் மயங்கிவிடுவாள். அவனும் அவள் பணத்திலேயே ஒருவாரகாலம் அவளிடம் உல்லாச மாக இருந்துவிட்டு, முடிந்தால் அவளுடைய நகை நட்டுகளையும் எடுத்துக்கொண்டு போய்விடுவான். இவள் குமுறிக்குமுறி அழுவாள். அவனைக் கண்டபடி திட்டுவாள். இனிமேல் அவனைச் சேர்க்க மாட்டேன் என்று சபதமிடுவாள். பிரசவ கால சபதம்தான். என்னால் தாள முடியவில்லை. இப்படி அவன் அவளை ஏமாற்றிய பிறகு, அந்த அக்காளிடம் போய் ''இப்படி ஏமாறலாமா?'' என்று கேட்டால் அதற்கு அவள் அளித்த பதில் எனக்கு வியப்பைக் கொடுத்தது.

''நீ சொல்றது நியாயம்தான் நயினா... ஆனா காட்டி ஒண்ணு சொல்றேன் கேளு சினிமா பாக்கோம். அதிலே வரது வெறும் கததான்னு தெரியும். ஆனாலும், அந்தச் சமயத்தில அத நெசமா நம்பி அயுவுறோம், சிரிக்கிறோம். இதுபோல அந்தக் கசமாலம் காசுக்காவ என்னெ ஏமாத்தறான்னு எனக்கே தெரியும். ஆனாலும், அவன் பேசற அந்தச் சமயத்தில் சினிமாவுல நம்ம மறக்கிறதுமாதிரி மறந்துடறேன். இன்னொன்று இந்தத் தடவையாவது அந்தக் கம்மனாட்டி நெசமாவே இருப் பான்னு அக்காவுக்கு ஒரு ஆசெ.''

இப்படிச் சொல்லிவிட்டு அந்தப் பெண், ஏங்கி

ஏங்கி அழுதாள். எல்லா சேமிப்புப்பணமும் தீர்ந்து போய், பழையபடியும் வாழ்க்கையைத் துவக்கி, காசு சேர்ப்பாள். இப்படிச் சேர்ப்பதும், அதுக்காகவே அவன் அவளோடு சேருவதும் வாடிக்கையாக இருந்தது. பின்னாளில் ஒரு பத்திரிக்கை கதை கேட்டபோது, இந்தச் சம்பவம் நினைவுக்கு வந்தது. இதையே கதையாக எழுதினேன். குங்குமத்தில் பிரசுரமானதாக ஞாபகம்.

## பூவம்மாவின் குழந்தை

இன்னொரு சமாசாரமும் என்னைப் பெரிதும் நெகிழ வைத்தது. நான் இருந்த வீட்டு வளாகத்திற்கு பக்கத்து வளாகத்தில் ஒருத்தன். அவன் பெண்டாட்டி ஒரு லாரி டிரைவரோடு ஓடி விட்டாள். கைக் குழந்தையையும் எடுத்துக் கொண்டு போய்விட்டாள். அந்த டிரைவருக்கும், இவன் பெண்டாட்டிக்கும், இஸ்குதோஸ்கு இருந்தது எல்லோருக்கும் தெரியும். ஆனால் இந்த அப்பாவிக்கு தெரியாமல் போய்விட்டது. ஆனால் அவராலோ அந்த ஐந்து அல்லது ஆறு மாதக் குழந்தையைப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. மகாபலிபுரத்திற்கருகே உள்ள ஒரு கிராமத்தில், அவர்கள் இருப்பதைக் கண்டுபிடித்து, அவன் போயிருக்கிறான். குழந்தையைக் கொடு என்று கேட்டிருக்கிறான். அவளோ, அந்த குழந்தை 'உனக்குப் பிறக்கவில்லை. இவருக்குத்தான் பிறந்தது' என்று சொல்லியிருக்கிறாள். இவன் குழந்தையை விட்டு விட்டு, புறப்படத் தயாராக இருந்திருக்கிறான். ஆனால், அந்தக் குழந்தையோ, இவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு விம்மி இருக்கிறது. இவன் நெகிழ்ந்து

போனான். அந்தக் குழந்தை தனக்கு ஒருவேளை பிறந்திருக்காது என்பது தெரிந்தாலும், அவனுக்கு அந்தக் குழந்தையைவிட மனமில்லை. கூட்டிக் கொண்டு வந்து விட்டான். இப்படிப்பட்ட ஒரு தந்தை, தந்தையின் தந்தையான கடவுளுக்கு சமம் போல் தோன்றியது. ஒரு அப்பாவி மனிதன் - ஆனாலும் தனக்குப் பிறக்காத அந்தக் குழந்தை மீது அப்படி அன்பைப் பொழிந்தான். இத்தகைய நிகழ்ச்சிகளை இப்போது நினைக்கும் போதெல்லாம் இவர்களை எல்லாம் பார்க்க வேண்டும் என்று மனம் துடிக்கிறது. இதை வைத்து குமுதத்தில் 'பூவம்மாவின் குழந்தை' என்ற ஒன்று பிறந்தது.

*குறிப்பு:*

1. *சாமுத்திரிகா லட்சணத்தில் இப்போது எனக்கு நம்பிக்கை கிடையாது. சப்பை மூக்குக்காரர்கள் திறமையற்றவர்கள் என்றால் ஜப்பான் காரன் நம்மைப் பார்த்துச் சிரிப்பான்.*

2. *வளர்ப்பு மகள் நாவல் பல்வேறு பதிப்புகளைக் கண்டது. பல பல்கலைக்கழகங்களிலும், மத்திய மேலநிலைப் பள்ளிகளிலும், பாடநூலாகப் பயன்பட்டது. டாக்டர் சாலை இளந்திரயன் அவர்கள்தான் முதன் முதலில் மேல்நிலைப் பள்ளியில் இதைப் பாடநூலாகக் காரணமானவர்.*

# 7

# கன்னட வாசனை

சென்னை தொலைக்காட்சி நிறுவனத்திலிருந்து, பதவி உயர்வு பெற்று கர்நாடக மாநிலத்தில், மத்திய அரசின் செய்தி விளம்பரத்துறைக்கு, மாநில அதிகாரி யாக பொறுப்பேற்றேன். நான் பொறுப்பேற்ற மறு நாள், ஒரு கன்னடப் பத்திரிக்கையில் தமிழர்களின் ஆதிக்கத்திற்கு என்னுடைய நியமனத்தை மேலும் ஒரு அத்தாட்சி என்று வர்ணித்திருந்தார்கள். விசாரித்துப் பார்த்ததில், எனது அலுவலகத்திலேயே ஒரு சில கன்னட வெறியர்கள் இருக்கிறார்கள் என்பது தெரிய வந்தது. (இவர்கள் இந்த அளவிற்கு தமிழர்கள் என்றாலே கடும் கோபம் கொள்வதற்கு, நம்மவர்களும் ஒரு காரணம் என்பது வேறு விஷயம்.) சரி... சொல்ல வந்ததற்கு வருகிறேன்.

எனது அலுவலகத்தில், நான் வித்தியாசமான தமிழன் என்பதையும், என்னிடம் பாகுபாடு கிடை யாது என்பதையும் அலுவலக ஊழியர்கள் புரிந்து

கொள்ளத் துவங்கினார்கள். பிரபல கவிஞர் சித்தலிங்கையா என்னைப் பற்றி கேள்விப்பட்டு அடிக்கடி என்னைப் பார்ப்பதற்காகவே, அலுவலகம் வந்தது, கன்னட ஊழியர்களிடையே என் மீது அன்பை ஏற்படுத்தியது. ஆனாலும், ஒரு ஆசாமி, அவர் டெப்த்திரி - அதாவது பியூனிற்கும், கிளார்க்கிற்கும் இடையிலான அபாயப் பதவி. இந்த ஆசாமி நன்கு விவரம் தெரிந்தவர். எல்லா அலுவலகர்களையும் கைக்குள் போட்டுக் கொண்டு தலைமை அதிகாரிகளை ஆட்டிப் படைத்தவர். அவர்களை தப்புகள் செய்யத் தூண்டிவிட்டு, அந்த தப்புகளாலேயே அவர்களை அடிப்பவர். இவரது வேலை பைல்களை எடுத்து வைப்பது. ஆனாலும் சட்டையில் ஒரு தூசு படாமல் இருப்பவர். ஒரு தடவை, எங்கள் அலுவலகக்கட்டிடத்தை மாற்றும்போது வேலை செய்ய வேண்டியது இருக்கும் என்பதற்காக விடுப்பெழுதிப் போட்டுவிட்டுப் போய்விட்டார். இது வேண்டும் என்றே செய்ததென்பதால், நான் மெடிக்கல் சர்ட்டிபிகேட் கேட்டேன். அவர் திரும்பி வந்த பிறகு. அந்த சர்டிபிகேட்டை கொடுக்காதது மட்டுமல்ல, ஏன் கொடுக்க இயலவில்லை என்று கூடச் சொல்லவில்லை. ஆகையால், நான் அவரது விடுப்புக்கால சம்பளத்தைப் பிடித்தேன். உடனே அவர் டில்லியில் உள்ள மேல் அதிகாரிகளுக்கு தந்தி அடித்தார். பொதுவாக, மேல் அதிகாரிகள் ஒரு பிரச்சினையின் நியாய அநியாயத்தைப் பார்க்காமல், பிரச்சினையே இருக்கக்கூடாது என்று நினைப்பவர்கள். கொலை செய்தால் கூட அவர்கள் சம்மதிப்பார்கள். ஆனால் அது பிரச்சனையாகக் கூடாது. இந்த மனோபாவம் உள்ள டில்லி மேலதிகாரிகள் அவரது

சம்பளத்தை நான் உடனடியாகக் கொடுக்க வேண்டும் என்று ஆணையிட்டார்கள். எனக்கோ இது அதிக்ப்படியாகத் தெரிந்தது. அந்த ஆசாமிக்கு சம்பளத்தை நான் கொடுத்து விட்டேன் என்றால், பிறகு கர்நாடக மாநிலம் முழுதிலும் உள்ள, எங்கள் துறையின் ஊழியர்கள் என்னுடைய ஒவ்வொரு நடவடிக்கையையும் எதிர்த்து தந்திகள் அடிக்கலாம். ஆகையால், நான் துணிந்து தந்தி அடித்தவரை சஸ்பென்ட் செய்தேன். மேல் அதிகாரிகளிடம், என் அனுமதியின்றி தந்தி அடித்ததை அதற்குக் காரணமாகக் காட்டினேன். தில்லி அதிகாரிகளுக்கு என்மீது கோபம் என்றாலும் - எனது சஸ்பென்ஷன் உததிரவை அவர்கள் ரத்துச்செய்யலாம் என்றாலும், அவர்களுக்கு எதையும் எழுத்தில் கொடுக்க பயம்; பேசாமல் இருந்துவிட்டார்கள். இந்த சந்தர்ப்பத்தில்தான் ஒரு பயங்கரமான உண்மை எனக்குப் புரிந்தது: அதாவது இந்த அரசாங்கத்தில் ஒரு கழுதையைக் கூட வேலையில் சேர்த்துவிட முடியும். ஆனால் அந்தக்கழுதையை நீக்குவது என்பது முடியாத காரியம். இந்த ஆசாமியை சஸ்பெண்டு செய்து விட்டு நான் ஏதோ சஸ்பெண்டு ஆனதைப் போல அலைந்தேன். அரசாங்க உத்தரவுகளைத் தெரிந்து வைத்திருக்க வேண்டிய என்னுடைய நிர்வாக அதிகாரியோ, நான் சொல்வதற்கெல்லாம் ''எஸ் ஸார்'' போடமாட்டார். ஏனென்றால், எடுத்த எடுப்பிலேயே ''எஸ்'' என்கிற வார்த்தை மரியாதைக்குறைவானது என்பது அவருடைய கருத்து. ஆகையால் ''ஸார் எஸ்'' என்றுதான் சொல்வார். நீட்டின இடத்தில் கையெழுத்தைப் போடுவதைத் தவிர வேறு எதுவும் தெரியாத மனிதர். சஸ்பெண்டு செய்யப்பட்ட ஆசாமிக்கோ

அரசின் விதிமுறைகள் தெரிந்த ஓய்வு பெற்ற ஒரு அண்டர் செக்கரட்டரி துணை. அவரிடமிருந்து ஒரு நாளைக்கு ஒரு கடிதம் வீதம் வரும்.. அத்தனையும் சட்டதிட்டங்களைக் கொண்டதாக இருக்கம். நான் அந்த ஆசாமியை டாக்டரிடம் போகச் சொன்னதே தவறு என்று ஒரு செக்ஷனைச் சுட்டிக்காட்டி ஒரு கடிதம் வந்தது. அந்த குறிப்பிட்ட செக்ஷனைப் படித்தால், நான்காவது பிரிவு அலுவலரை மருத்துவ சான்றிதழிக்காக டாக்டரிடம் அனுப்பக் கூடாது என்றும் ஒரு விதி இருக்கிறது. இது எனக்குத் தெரியாதது நியாயமே. ஏனென்றால் நான் அடிப்படையில் ஒரு பப்ளிசிட்டி ஆபிசர். ஆனால் என் நிர்வாக அதிகாரிக்கும் தெரியாமல் போனதுதான் அநியாயம்.

நிர்வாக அதிகாரியையும் இழுத்துக் கொண்டு ஒவ்வொரு அலுவலகமாக சட்டவிதிகளைத் தெரிந்து கொள்ள லோ... லோ... என்று அலைந்தேன். ஒருவரை சஸ்பெண்டு செய்து விட்டால், அவருக்கு சார்ஜ் ஷீட் கொடுக்க வேண்டும். இதற்கு அவர்கள் பதில் அளித்ததும், அதில் திருப்தி ஏற்படவில்லை என்றால் விசாரணை நடத்தலாம். விசாரணை அதிகாரியை நியமித்த பிறகு, அந்த 'விசா' அதிகாரியே எகிறுவார். அவரை நீக்க அதிகாரம் கிடையாது. ஆனால், அந்த விசாரணை அதிகாரி வேண்டாம் என்று சஸ்பென்டு செய்தவர் சொல்லலாம். அவர் சார்பில் டிபென்ஸ் அஸிஸ்டென்ட் என்று ஒருவரை வைத்துக் கொள்ளலாம். அவர் அலுவலகப் பழைய குப்பைகளை கிளறலாம். மேல் அதிகாரி மீது என்னென்ன பழிகளையெல்லாம் போட முடியுமோ, அவற்றையெல்லாம் போடலாம். என்

பக்கமோ விவரமே தெரியாத நிர்வாக அதிகாரி. சஸ்பெண்டு ஆனவர் பக்கமோ சட்ட திட்டங்களைக் கரைத்துக் குடித்த அண்டர் செக்கரட்டரி; நான் அறிவுரை கேட்கப்போன அலுவலகங்களில் எல்லாம் ''உங்களுக்கு எதுக்கு சார் வம்பு... பேசாமல் அந்த ஆசாமிகிட்ட மன்னிப்புக் கேட்டு அவரை வேலையில் சேர்த்து விடுங்க.'' என்று உபதேசங்கள். நானும், சஸ்பெண்டு ஆனவரை ஒருநாள் கூப்பிட்டு ''நடந்த தற்கு வருத்தம் தெரிவித்தால் உன்னை வேலையில் சேர்க்கிறேன்'' என்று சொன்னேன். அந்த ஆசாமியோ, ''பார்க்க வேண்டிய இடத்தில் பார்த்துக்கலாம்'' என்று சொல்லிவிட்டு நிற்காமல் போயவிட்டார். ஒருவேளை அவர் நின்றிருந்தால் ''இரண்டு பேருமே வருத்தம் தெரிவித்துக் கொள்ளலாம்பா'' என்று சொன்னாலும் சொல்லி இருப்பேன்.

## நாயர் பிடித்த புலிவால்

இந்தச் சமயத்தில், ஒரு அறிவுரையாளர் ஒரு வெடிகுண்டைப் போட்டார். இப்படித்தான் ஒரு பியூனை அவர் சஸ்பெண்டு செய்தாராம். இந்த சம்பந் தப்பட்ட பியூன், இரவில் குடித்து விட்டு, அலுவலகம் வந்து, வாட்ச்மேனை அடித்து, பல்லை உடைத்து விட்டாராம். ஆனால் விசாரணையில் அப்படி ஒரு சம்பவமே நடக்கவில்லை என்று நிரூபிக்கப்பட்டதாம். காரணம் பல்லுடை பட்ட ஆசாமி, இன்னொரு பல்லும் உடையக்கூடாது என்பதற்காக தன்னை அந்தப் பியூன் தாக்கவில்லை என்றும் சத்தியம் செய்து விட்டாராம். இதனால் சஸ்பெண்டு ஆன பியூன் சகல மரியாதைகளு டன் வேலையில் சேர்க்கப்பட்டாராம். இப்போது

எனக்கு அறிவுரை சொல்லிக் கொண்டிருக்கும் இந்த அதிகாரியின் பல்லை உடைக்கப் போவதாக பகிரங்க மாக சவால் விடுகிறாராம். இதை, பயந்தபடியே என்னிடம் தெரிவித்த அந்த அதிகாரி, ''எது செய்தா லும் சஸ்பென்டு மட்டும் செய்யக்கூடாது சார்''. என்றார். அந்த சமயத்தில் என்னுள் அதிகாரி என்பவர் இறங்கி, எழுத்தாளன் என்பவன் மேலோங்கினான்.

இந்தப்பல்லுடைப்பு சமாச்சாரங்களை வைத்து ஒரு கதை எழுதலாமே என்று தோன்றியது. உடனே பண்டாரத்தின் ஞாபகம் வந்தது. அவனை சஸ்பென்டு ஆன பல்லுடைத்த பியூனிற்கு டிபென்ஸ் அஸிஸ்டன் டாகப் போட்டேன். பண்டாரம், பல்லுடைபட்ட வாட்ச்மேனைப் பார்த்து ''ஒரு பியூன் அடித்த அடியி லேயே உனக்குப் பல் உடைகிறது என்றால், பழைய ராணுவ வீரனான நீ எப்படிய்யா... ஆபீச காவல் காப்ப? இதுக்காகவே உன்னை டிஸ்மிஸ் செய்ய வேண்டும்'' என்று ஒரு போடு போட்டவுடனேயே, பல்லுடைபட்டவன் பயந்து விடுகிறான். பிறகு பண் டாரம் சம்பந்தப்பட்ட அந்தப் பியூன் குடித்துவிட்டு வந்தான் என்ற குற்றச்சாட்டையும் பொய்யாக்குகி றான். அவன் குடித்துவிட்டு வந்தான் என்பதற்கு ஆதாரம், அந்த பியூன் ''ஆடுவோமே... கள்ளு பாடுவோமே...'' என்று அலுவலகம் வந்து தள்ளாடிய படியே பாடியதுதான். பண்டாரம் சம்பவம் நடந்த நாள் சுதந்திர தினம் என்பதை அறிந்து, பல்லுடைத்த பியூன் செக்கிழுத்த சிதம்பரனாரையும், இதர தியாகிக ளையும் நினைத்து எல்லாவற்றிற்கும் மேலாக பாரதி யின் நினைவு பொங்கி 'பள்ளு பாடுவோமே'..

என்றுதான் பாடினான் என்கிறான். பாடியது பள்ளா, கள்ளா என்பது விவாதம். பண்டாரம் இன்னொன்றை யும் கண்டு கொள்கிறான். சுந்திர தினத்தன்று எல்லா அலுவலகங்களிலும் தேசியக் கொடியை ஏற்ற வேண் டும். ஆனால் அந்த அலுவலகத்திலோ அது ஏற்றப்பட வில்லை. பண்டாரத்திற்குக் கொண்டாட்டம், தேசியக் கொடி ஏற்றப்படாத வெங்கொடுமையை நினைத்து பல்லுடைத்த பியூன், பாரதியார் பாட்டைப் பாடி தனது தேசபக்தியை நிலைநாட்டினான் என்றும். இதைப் பொறுக்காத அதிகாரிகள், அவனைப் பழிவாங்குகிறார் கள் என்றும் எதிர்க்குற்றம் சாட்டினான். இந்த நாட் டிலே தேச பக்திப் பாடலை அபிநயத்துடன் ஒரு தேசபக்தன் பாடினால், அது குடிகாரத்தனமா? என்று திருப்பிக் கேட்டான். பல் உடைத்தவன் மன்னிப்புக் கேட்கிறான். பல் உடைந்தவனோ கொக்கறிக்கிறான். இப்படி ஒரு கதையை எழுதி கல்கிக்கு அனுப்பினேன். பிரசுரித்தார்கள்.

## பார்லிமென்டில் ஒரு கேள்வியும் - பண்டாரமும்

சென்னைத் தொலைக்காட்சியில் உதவி செய்தியா சிரியராகப் பணியாற்றிய எனக்கு நியாயமாக அங் கேயே பதவி உயர்வு கொடுத்திருக்க வேண்டும்.. அப்போது சக அதிகாரி ஒருவரின் சூழ்ச்சியால் கர்நாடக மாநிலத்திற்கு மாற்றப்பட்டேன். இந்த அதிகாரி நான் தொலைக்காட்சிக்குப் போவதற்கு முன்பு வியாபாரச் செய்திகளை திணித்தார். பத்திரிகை தகவல் அலுவலகத்தில் பணியாற்றிய இவர் செய்தி ஆசிரியரையும் கைக்குள் போட்டுக் கொண்டார். நான் அங்கே போன பிறகு இத்தகைய வியாபாரச் செய்கை

களை நிறுத்தினேன். நிறுத்த முடியாத சமயங்களில் மேலதிகாரிகளுக்கு தெரியப் படுத்தினேன். இதனால் வெகுண்டெழுந்த இவரும், செய்தி ஆசிரியரும், அப்போதைய நிலைய இயக்குநரும் தீரமான அம்பேத் கார் வாதியுமான திரு சௌடேகர் மீதும் என் மீதும் பல அவதூறுச் செய்திகளை தொலைக்காட்சியில் நான் சேர்ந்ததால் பிழைப்பற்றுப் போன நிருபர்களின் மூலம் பத்திரிகைகளில் இடம்பெறச் செய்தார்கள். மேலிடம் விசாரணை நடத்தி, நானும், சௌடேகரும் குற்றமற்ற வர் என்பதைக் கண்டறிந்து; சம்பந்தப்பட்ட அந்த அதிகாரி தொலைக்காட்சி நிலையத்தை வியாபாரத் தலமாக்கிவிட்டார் என்று குற்றம் சாட்டி அவரை டெல்லிக்கு மாற்றியது. லஞ்ச லாவண்யத்தை தடுத்த என்னையும் பெங்களூருக்கு மாற்றியது. அப்போது சென்னை தொலைக்காட்சி நிலையத்தில் இரண்டு செய்தியாசிரியர் பதவிகள் இருந்தன. சமமான இந்த இரு பதவிகளில் ஒன்றை செய்தியாசிரியர் என்றும் மற்றொன்றை கூடுதல் செய்தியாசிரியர் என்றும் அழைப்பதுண்டு. டெல்லிக்கு தண்டனை மாற்றமாகச் சென்ற அந்த அதிகாரி - எந்த தொலைக்காட்சி நிலையத்தை வியாபாரத் தலமாக்கினாரோ அங்கேயே செய்தியாசிரியராக வந்தார். ஏற்கனவே அங்கு ஒரு செய்தியாசிரியர் அங்கு இருந்ததால் இவர் கூடுதல் செய்தி ஆசிரியராக நியமிக்கப்பட்டிருப்பார் என்று ''மக்கள்'' அனுமானித்தார்கள். இதே 'மக்கள்', நாடா ளுமன்ற உறுப்பினர் ஒருவரை அணுகி, இந்த அடாவடி நியமனத்தை ஒரு கேள்வி கேட்கச் செய்தார் கள். இன்னாரை கூடுதல் செய்தி ஆசிரியராக நியமிக்க லாமா என்பது கேள்வி. இல்லை என்பது பதில்...

எப்படி என்கிறீர்களா... அவர் செய்தி ஆசிரியராகவே நியமிக்கப்பட்டிருக்கிறார்... கூடுதல் என்ற வார்த்தை எடுக்கப்பட்டுவிட்டது... இந்த வார்த்தைக்குள் அதிகாரிகள் விளையாடி விட்டார்கள்... இது தாயில் பிரசுரமாயிற்று.

அதாவது ஊழல் அதிகாரியை கூடுதல் ஆசிரியராக நியமிக்கலாமா என்ற கேள்விக்கு நியமிக்கவில்லை என்ற பதில்; செய்தி ஆசிரியராகத்தான் நியமித்தோம். கூடுதல் ஆசிரியராக நியமிக்கவில்லை, என்று நியாயமாகச் சொல்ல வேண்டிய பதிலை, ''இல்லை'' என்று சாமர்த்தியமாக முடித்து விட்டார்கள். ஒரு வேளை அந்த உறுப்பினர் திருப்பிக்கேட்டால் நீங்கள் கேட்டது கூடுதல் செய்தியாசிரியர் நியமனம் பற்றி; செய்தி ஆசிரியர் நியமனம் பற்றி அல்ல என்று சொல்லி விடலாம். இப்படி வார்த்தைகளுக்குள்ளேயே விளையாடி, பார்லிமென்ட் உறுப்பினரின் கேள்வி அடிபட்டுப் போனது. யாரோ சொல்லிக் கேட்ட அந்த உறுப்பினரும், மீண்டும் அந்தக் கேள்வியை வற்புறுத்த மாட்டார் என்பது அந்த அதிகாரிகளுக்கும் தெரியும். இந்தச் சம்பவத்தைப் பின்னணியாக வைத்து பண்டாரத்தைக் கொண்டு வந்தேன். கூடுதல் ஆசிரியராக நியமிக்கவில்லை என்றாலும், ஆசிரியராக நியமித்திருக்கும் போது இல்லை என்று எப்படிச் சொல்ல முடியும் என்று மேல் அதிகாரியான டைரக்டர், கேட்கும் போது பண்டாரமோ ''மாண்புமிகு'' உறுப்பினர்கள் மிகப் பெரிய மனிதர்கள். நாம் அவர்களுக்கு வேலைக்காரர்கள் மாதிரி; ஆகையால் பெரியவர்கள் கேள்விக்கு உண்டு

அல்லது இல்லை என்று ஒரே வார்த்தையில்தான் பதில் சொல்ல வேண்டுமே தவிர அதிகப்பிரசங்கித்தனமாகப் பேசக்கூடாது, என்று பவ்வியமாச் சொல்லி விட்டு பண்டாரம் கிண்டலாகச் சிரிப்பான். திகைத்துப்போன டைரக்டரிடம் ''கவலைப்படாதீங்க சார்... நிர்வாகக் காரணங்கள், பொதுமக்கள் நலன், ஆகிய இரண்டு வார்த்தைகள் இருக்கும் வரை ''மாண்புமிகு'' உறுப்பி னர்களோ, மேதகு பார்லிமென்டோ நம்மை எதுவும் செய்ய முடியாது'' என்று குறுஞ்சிரிப்பாய் சிரித்துச் சொல்வான். இது கல்கியில் பிரசுரமாயிற்று.

இந்தப் பண்டாரத்தோடு பண்டாரமாக, இன்னும் சில கதைகளை எழுதி, பண்டாரம் படுத்தும் பாடு என்று, ஒரு சிறுகதைத் தொகுப்பை வெளியிடலாம் என்று நினைக்கிறேன். இந்த மாதிரி வி.கே.என். என்ற மலையாள ஆசிரியர், பையன் என்ற ஒரு பாத்திரத்தை பல சிறுகதைகளிலும், நாவல்களிலும், உலவவிட்டி ருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறேன். இந்த வி.கே. என். சிறிது காலம் புதுதில்லி வானொலி நிலையத்தில் மலையாள செய்திப்பிரிவில் பணியாற்றியவர். அப் போது தமிழ் செய்திப் பிரிவில் அவருடன் ஒரே அறையில் பணியாற்றிவன் நான். மலையாளிகள் ஒற்றுமையாகவும், தமிழர்கள் சண்டை போட்டுக் கொள்வதும் எங்கேயும் நடப்பது போல அங்கேயும் நடந்தது. இதை வைத்து அவர் ''அசுரவாணி'' என்ற ஒரு நாவலை எழுதியதாகக் கேள்விப்பட்டேன்.

## அலிய சந்தானம்

கர்நாடக மாநிலத்தில் இன்னொரு கொடுமை

நிலவுகிறது. இதற்கு அலிய சந்தானம் என்று பெயர். நான், தொழில் நிமித்தம் எனது மங்களூர் பப்ளிசிட்டி ஆபீசருடன் குந்தபுரா என்ற பகுதிக்குப் போனேன். பின்னர் மூகாம்பிகை கோயிலுக்குப் போய்விட்டு, அதற்கு அருகே ஒரு மலைப் பகுதியில் திரைப்படம் காட்டப் போனோம். அங்கே ஒரு இளம் பெண்ணிடம் ''உன் புருஷன் எங்கே இருக்கிறார்'' என்று அரைகுறை கன்னடத்தில் கேட்டேன். அவள் உடனே ''அவர், அவர் வீட்டில் இருக்கிறார். நான் என் வீட்டில் இருக்கிறேன். உனக்கு என்ன வந்தது'' என்றாள். ஒரு வேளை, இது விவாகரத்து கேஸாக இருக்கலாம் என்று நினைத்து, இன்னொரு பெண்ணைக் கேட்டேன். அவளும் இதே பதிலைத்தான் சொன்னாள். பிறகு, எனது பப்ளிசிட்டி ஆபீசர் விளக்கினார். அந்தப் பகுதியில் கேரளத்தில் நிலவிய மறு மக்கள் மானியம் சகல பலவீனங்களோடும் நிலவி வருவதாகக் குறிப்பிட்டார். இதன்படி ஒருவன், ஒருத்தி கழுத்தில் தாலியைக் கட்டிவிட்டு தன் வீட்டுக்குப் போய், சகோதர சகோதரிகளோடு வாழ்வான். எப்போதாவது மனைவியின் வீட்டுக்குப் போய், அவளுக்கு ஒரு குழந்தையை கொடுத்துவிட்டு வந்துவிடுவான். இந்தக் குழந்தைகளுக்கு அப்பா பரிச்சயம், அமாவாசை - ஆடி மாதிரி. தாய் மாமாக்கள், அத்தைகள் இல்லாமல் வாழும் அவஸ்தையைப் பார்த்தவர்கள். இந்தப் பெண்களின் முகங்களில் ஒரு வெறுமை இருப்பதை கண்டேன். கேரளத்திலாவது கணவன், மனைவி வீட்டில் வாழ்ந்தான். ஆனால் இங்கேயோ கணவனும், மனைவியும் வருடத்தில் நான்கைந்து முறை மட்டுமே சந்திப்பார்கள். இந்தப் பெண்களிடம் பேசிப்பார்த்ததில், அவர்

கள் இந்த முறையினால் பெரிதும் பாதிக்கப் பட்டிருப் பதும் இதனை வெறுப்பதும் புரிகிறது.

இந்த அவல நிலையை, பெங்களூர் டி.வி. நிலைய இயக்குநர், வானொலி நிலைய இயக்குநர், பிரச்சாரத் துறை உட்பட பல உயர் அதிகாரிகளைக் கொண்ட பப்ளிசிட்டி ஒருங்கிணைப்பு கமிட்டியிடம் தெரிவித்து, இதற்காக ஒரு பிரச்சார இயக்கத்தை மேற்கொள்ள வேண்டும் என்று சொன்னேன். யாரும் அதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. அப்படி ஒரு முறை இல்லை என்று அடிக்காத குறையாகத் தெரிவித்தார்கள். இந்தப் பெண்களின் நிலைமைப் பற்றி நான் தாமரையில் விரிவாக ஒரு சிறுகதை எழுதியதைத்தவிர வேறு எனக்கு எதுவும் செய்யத் தெரியவில்லை.

### மலைக்கதை

மூகாம்பிகை கோவில், பயங்கரமான மலைப்பகு திக்குள் இருக்கிறது. இதற்கு அருகே உள்ள ஒரு மலைக் கிராமத்திற்குப் போனேன். காதுகளிலும், கைகளிலும் பெரிய பெரிய ஈய நகைகளைப் போட்ட பெண்களும், கிழிந்த வேட்டி கட்டிய ஆண்களுமாக இருந்த கிராமம். இங்கே புதிய தலைமுறைப் பெண் கள் பாவாடை தாவணியை கஷ்டப்பட்டு அணிந்து வர முயற்சி செய்கிறார்கள். இந்தக் கிராமத்தில் ஒரு இளம்பெண் கைக்குழந்தையோடு கண்ணீரும், கம்ப லையுமாக இருந்தாள். அவள் கணவன் குடித்து, குடித்தே, இறுதியில் தன் உயிரை தானே குடித்து விட்டான். கூட்டுக் குடும்பத்தில் வாழும் இந்தப்

பெண், சந்தோஷமாக இருப்பதாக மற்றவர்கள் சொன்னபோது இவளும் தலையாட்டினாள். ஆனால் தனிமையில் இவளைச் சந்தித்துக் கேட்டபோது, இவள் மறுமணம் செய்துகொள்ள விரும்புவதாகவும், ஆனால் மலை ஜாதி தலைமை அதற்கு மறுப்பதாகவும் பன்னிப்பன்னிச் சொன்னாள். மெஜாரிட்டியின் சர்வாதிகாரம் எப்படிப் போகும் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு. இவளையும் பின்னணியாக வைத்து ஒரு கதை எழுதினேன். அது குமுதத்தில் பிரசுரமானது.

## தாய்மைக்கு வறட்சியில்லை

வட கர்நாடகத்தில், நான் ஊழியர்களோடு சுற்றுப் பயணம் செய்யும் போது வறட்சி மிகுந்த குல்பர்க்கா என்ற இடத்திற்குப் போனேன். அங்கே பண்ணை நிலம் காய்ந்து கிடந்தது. நாங்கள் அங்கே போய் கையோடு கொண்டு வந்த உணவுப் பொட்டலங்களைப் பிரித்துச் சாப்பிட்டபோது, ஒரு ஆணும், பெண்ணும் அடியற்ற மரம் போல் சாய்ந்து கிடப்பதைக் கண்டேன். அவர்களை எழுப்பி விசாரித்ததில், அந்த நிலத்துச் சொந்தக்காரர், 'பயிர் செய்து கட்டுபடியாகாது. நீங்கள் எங்கே வேண்டும் என்றாலும் போகலாம்' என்று சொல்லிவிட்டு, பெங்களூருக்குப் போய்விட்டாராம் காரில். இந்தத் தம்பதி, குழந்தை குட்டிகளோடு குடிக்கக் கூழ் கூட இன்றி அல்லாடினார்கள். அந்த நிலப்பிரபு அப்படி நடந்து கொண்டது சரிதான் என்பது மாதிரியான மனோ நிலையில் இருந்தார்கள். இவர்களிடம் போய் ''உங்களால் இந்த நிலம் விளைந்த போது உங்களுக்கு கூலியைத் தவிர பிரமாதமாக எதையும் கொடுக்காத இந்தப் பண்ணை

யார், வறட்சி வந்த போது உங்களைக் கைவிடுவது நியாயமா?'' என்று கேட்டேன். அப்போது தான் அவர்களுக்கு ஆங்கிலத்தில் சொல்வோமே 'கான்ஷியஸ்னஸ்' என்று அந்த உணர்வு ஏற்பட்டது. பண்ணையார் இருக்கும் பெங்களூர் திக்கை அவர்கள் கோபமாக முறைத்துப் பார்ப்பது போல் எனக்குத் தோன்றியது. இப்படித்தான் இன்று நாட்டில் பெரும்பாலான ஏழைகள், தாங்கள் ஏன் இந்த நிலையில் இருக்கிறோம் என்ற உணர்வில்லாமலேயே இருக்கிறார்கள். இவர்களுக்குப்போய்ச் சேருகின்ற, நடிகை நளினி குழந்தை பெற்ற வரலாறு, ஸ்ரீபிரியாவின் காதல் தோல்வி, ஆகிய சமாச்சாரங்களை மீறி நடப்பு நிலையை எடுத்துரைப்பது இவர்களுக்கு இப்போதைய படைப்பாளிகளுக்கு தலையாய கடமையாகிறது. இந்தக் கடமையின் ஒரு பகுதியாக, ஒரு கதை எழுதிக் குங்குமத்தில் இடம்பெற வைத்தேன்.

## தஞ்சைக் காவேரியாகாத தலைக்காவேரி

மைசூருக்கும், மங்களூருக்கும் இடையே மலை சூழ்ந்த பகுதி மெர்க்காரா; இதை தமிழில் குடகு என்று சொல்கிறோம். இங்கே ஒவ்வொரு குடும்பத்தினரும் நமது பாதுகாப்பு படையில் பணிபுரிபவர்கள். தன்மானப் பிரியர்கள். இங்குள்ள பெண்கள் பேரழகிகள். எழில் சிந்தும் இயற்கை. இந்தப் பகுதிக்குச் சென்ற நான் அப்பாவித்தனமாக ஒரு விடுதியில் ஆறிப்போன அதோடு அரைகுறையாய் வெந்த மீன் வறுவலைத் தந்ததற்காக ஹோட்டல்காரரிடம் சென்று சண்டை போட்டேன். வாய்ச் சண்டை தான். உடனே நான் கைந்து, கூர்க் இளைஞர்கள் என்னைச் சுற்றி வளைத்

தார்கள். ஒருவன் அடிப்பதற்கு கையை ஓங்கிவிட்டான்.

நான் வெலவெலத்துப் போனேன். என்னுடைய பப்ளிசிட்டி ஆபீசர், உதவியாளர், ஆகியோர் முன்னிலையில் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டதற்காக வருந்தினேன். எனது கன்னட உதவியாளர்களும், பேசமுடியாமல் நின்றார்களே தவிர, எனக்கு ஆதரவாக ஒரு துரும்பைக் கூட எடுத்துப் போடவில்லை. ஒரு வேளை விவகாரம் விபரீதமாக வேண்டாம் என்று நினைத்திருக்கலாம். என்னை அவசர அவசரமாக அங்கிருந்து அப்புறப்படுத்தப் போனார்கள். ஆனால், நானோ எதிர்ப்புக் குரல் காட்டி நின்றேன். உடனே ஒரு ஆசாமி கொஞ்சு தமிழில் ''நாங்களும் அப்போது பார்த்தே உன்னைக் கவனிக்கிறோம். நீ என்னடான்னா கூர்க்கு பெண்கள் ரொம்ப அழகா இருக்காங்கன்னு சொல்றே. அவங்கள உத்து உத்து பாக்கறே. ஜாக்கிரத! அவளுங்க ஒவ்வொருத்தி கிட்டயும் துப்பாக்கி இருக்கு. ஒரு புல்லட்டுல்ல நீ போயிடுவே'' என்றார். இந்த ''தண்ணி'' ஆசாமியைத் தொடர்ந்து, பலரும் என்னை மொய்த்துக் கொண்டார்கள். நல்லவேளையாக, அந்தப் பக்கமாக வந்த ஒரு கூர்க்கு ஆசாமி, ஏதோ கூர்க்கு மொழியில் சொன்னார். உடனே என்னைத் திட்டியவர்கள் பெட்டிப்பாம்பாகி, மன்னிப்புக் கேட்டார்கள். வந்தவர், நான் கர்நாடக மாநில விளம்பர அதிகாரி என்றும் கூர்க்கு பகுதிகளில் திரைப்படங்களைக் காட்டுவதற்காக வந்திருக்கிறேன் என்றும், சொல்லியிருக்கிறார். உடனே என்னை எந்த வேகத்தில் திட்டினார்களோ, அந்த வேகத்தில் நண்பர்க

ளாக ஆனார்கள். எல்லாம் முடிந்ததும், நான் என்னை ஏன் அப்படித் திட்டினீர்கள் என்று கேட்டேன். உடனே ஒருவர் ''நான் கோயம்புத்தூரில் இருக்கும்போது உங்க ஆட்கள் என்னைத் திட்டினாங்கோ - இது பதிலுக்குப் பதில்'' என்றார்.

ஒரு கூர்க்கு திருமணத்தையும், மெர்க்காரா மலை நகரத்தில் நான் பார்த்தேன். பெண்கள் அழகோவியங் கள். அவர்கள் நம் பெண்களை மாதிரி முந்தானையை முன்னால் போடாமல், தோளில் இருந்து கீழே அங்கிமா திரி போட்டிருந்தார்கள். இந்தக் கோலத்தில் அவர்கள் நிச்சயமாக மயில் மாதிரியே தோன்றினார்கள். இந்தக் கல்யாணத்தில், கையில் வாளோடும், பல்வேறு வித மான மெடல்களோடும் நான்கைந்து பேர் உட்கார்ந்தி ருந்தார்கள். இவர்கள், குரு பரம்பரையாம். சின்னப் பையனிடம்கூட, பெரியவர்கள் காலில் விழுந்து ஆசீர்வாதம் பெற்றது எனக்கு ஆச்சரியமாக இருந்தது. என்னதான் என்னைத் திட்டியவர்கள் நண்பர்களாகி விட்டாலும், எனக்கு மனம் கேட்கவில்லை. நான்குபேர் முன்பு அவமானப்பட்டது போன்ற எண்ணம். இந்த எண்ணச் சுமையோடு மறுநாள் ஒரு மலைக் கிராமத் திற்கு ஜீப்பில் திரைப்படப் பிரிவுடன் சென்றேன். மெர்க்காரா நகரிலிருந்து சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவில் பஸ் போக்குவரத்து இல்லாத தொலைந்து போன கிராமம். வழியெல்லாம் மலைக்குகைகள், அந்தக் கிராமத்திலோ நாலு பக்கமும் மலை. அதன் மேலுள்ள ஆகாயத்தில் கூட மலைகள் ஆக்கிரமித்தி ருந்தன. இந்தக் கிராம மக்கள் சூரியோதயத்தை பார்க்க முடியுமா என்பதே சந்தேகம். ஆனாலும்,

இங்கே வாலிபால் கோர்ட் இருந்தது. பங்களாக்கள் இருந்தன. எங்களைப் பார்த்ததும், அந்த ஊர் மக்களுக்கு ஏகப்பட்ட மகிழ்ச்சி. ஆங்கிலம் தெரிந்தவர்கள் பலர் இருந்ததால், நான் பல்வேறு விஷயங்கள் பற்றி அவர்களுடன் உரையாடினேன். இந்த மாதிரி அடிக்கடி நான் வந்து சினிமா போட்டுக் காட்ட வேண்டும் என்று அந்த ஊர்ப்பிரமுகர்கள் கேட்டுக் கொண்டார்கள். இந்தச் சமயத்தில் ஒரு இளம்பெண் என்னை தயக்கமாகப் பார்த்தாள். அவளுக்கு முப்பது வயது இருக்கும். முழு ஆப்பிள் நிறம். சிறிது நேரம் கழித்து 'நீங்கள் மெட்ராசா' என்று தமிழில் கேட்டாள். எனக்கு ஆச்சரியமாகவும், ஆனந்தமாகவும் இருந்தது. என் உதவியாளர்களிடமே தமிழில் உரையாட முடியாத எனக்கு அந்தக் காட்டு சூழலில் ஒரு பெண் தமிழில் பேசுவதில் ஆனந்தம் அடைந்தேன். பேச்சுக் கொடுத்துப் பார்த்ததில், அவள் தனது தங்கை வீட்டிற்கு (சென்னை) அடிக்கடி வருவாள் என்றும், அங்கே தமிழ் கற்றுக் கொண்டதாகவும் சொன்னாள். அவள் குடும்பச் சூழ்நிலையைப் பற்றிக் கேட்டதும் யாருக்கும் தெரியாமல் தன் கண்ணீரை துடைத்துக் கொண்டாள். பின்னர் சிறிது தூரம் என்னை பின்னால் நடக்கச் சொன்னாள். எனக்கு ஒரே பயம். கூர்க்கு நண்பர்கள் சொன்ன துப்பாக்கிச் சூடு, வாயைக் கட்டிப் போட்டது. ஆனால் அவளோ நெடுநாளைய தோழனைப் பார்த்ததுபோல் 'திக்கு தமிழில்' தனது குடும்ப சோகத்தைச் சொன்னாள். அவள் டென்னிஸ் விளையாட்டுக் காரியாம். ஒருவரைக் காதலித்து கை பிடித்திருக்கிறாள். ஒரே ஜாதி என்பதால் பிரச்னை இல்லை. இரண்டு குழந்தைகளுக்கும் தாயாகிவிட்டாள். ஒரு நாள் ஏதோ நிலத்தகரா

றில், அவள் கணவனை, கணவனின் தம்பி துப்பாக்கி யால் சுட்டுக் கொன்று விட்டானம். ஊர்காரர்களோ பாராமுகமாக இருந்ததுடன், கொலைகாரன் தப்பிக்கும் வகையில் விவகாரத்தை பூசிமெழுகி விட்டார்களாம். இதுவும் போதாது என்று ஊர்க்காரர்களோ அவளை உதாசீனம் செய்துவிட்டு, கொலைகாரனையே, கொலையுண்டவனின் ஈமச்சடங்கை நிறைவேற்றச் சொன்னார்களாம். அவள் சொல்லிச் சொல்லி அழுதாள். கணவனைக் கொன்றவனை ஒரே வீட்டில் தினமும் பார்க்கும் அவல நிலையை நினைத்து தினமும் அழுவதாகக் கூறினாள். நான் அவளுக்கு ஆறுதல் சொன்னேன். ஆண்டவன் பொறுப்பில், தன்னை ஒப்ப டைத்து விடும்படி தேற்றினேன். குழந்தைகளை வளர்ப்பதில் தீவிரமாக இருக்கும்படி எடுத்துச் சொன் னேன். எவருமே இந்த உலகில் நிரந்தரமாக இருக்கப் போவதில்லை என்பதை நினைத்து, இருக்கிற காலத்தை பிறருக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் நல்லவிதமாய் கழிக்கும்படி சொன்னேன். உடனே அவள் என் கைகளைப் பிடித்துக் கொண்டு கண்ணீர் விட்டாள். அவள் முகத்தில் லேசான தெளிவு தெரிந் தது. ஒரு மணி நேரம் பேசிக் கொண்டு இருந்தோம். பிரியும் வேளை வந்தது. இனிமேல் நாங்கள் மீண்டும் சந்திக்கப் போவதில்லை என்பது அவளுக்கும் புரிந் தது. ஏனென்றால் நான் சென்னைக்கு மாற்றலாகிப் போகிறேன் என்பதை அவளிடம் சொன்னேன். அவள் திடீரென்று தனது விரலில் இருந்த ஒரு ஐம்பொன் மோதிரத்தை எடுத்து என்னிடம் தந்தாள். இந்த மோதிரம், கர்நாடக மாநிலத்தில் புகழ் பெற்ற தர்மஸ் தலா ஆலயத்தின், லிங்கத் தோற்றத்தை கொண்ட

மோதிரம், ''இதை கோவிலில் வைத்து அர்ச்சனை செய்து ஒரு வருடமாக போட்டுக்கிட்டேன். என் ஞாபகமாக நீங்க போட்டுகோணும்'' என்றாள். நான் அதை வாங்கி கண்களில் ஒற்றிக் கொண்டு கையில் போட்டுக் கொண்டேன். இந்த நிகழ்ச்சி நடந்து பலப்பல வருடங்கள் ஆகின்றன. எனக்கு வாழ்க்கையில் சலிப்பு தோன்றும் நேரத்தில் எல்லாம் இந்த மோதிரத்தையும், அந்தப் பெண்ணையும் நினைத்துக் கொள்கிறேன். இந்தப் பின்னணியில், ''தஞ்சைக் காவேரி ஆகாத தலைக் காவேரி'' என்ற சிறுகதை ஒன்றை எழுதினேன். ''குங்குமம்'' அதைப் பிரசுரித்தது.

## கன்னி நியாயம்

பிருந்தாவனுக்கு அருகே ஒரு கிராமம். நானும், என் உதவி அதிகாரியும் ஒரு தேநீர்க் கடைக்குப் போனோம். அங்கே நான் தமிழ்நாட்டிலிருந்து வந்த பெரிய அதிகாரி என்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டேன். உடனே, அங்கிருந்த கன்னடக்காரர்கள் '' இங்கே தமிழன் ஆதிக்கம்தான்''. கன்னடத்தை சேர்ந்த ஒருவரைப் போட்டால் என்ன என்கிற பாணியில் முணுமுணுத்தார்கள். எனக்குச் சங்கடமாக இருந்தது. அரைகுறைத் தமிழில் உரையாடிய அவர்களை வேதனையோடு பார்த்தபோது கீழே ஒருவர் தரையில் உட்கார்ந்து தனிக் கிளாசில் டீ குடித்துக் கொண்டிருந்தார். உடனே அவர் யார் என்றேன். ஆதிதிராவிடர் என்று பதில் வந்தது. உடனே நான், 'தமிழனும், கன்னடனும் ஒரே ஜாதிப்பா... ஏன்னா நாம ரெண்டு பேருமே ஆதி திராவிடர்களை இப்படித்தான் அமுக்கி

வைக்கிறோம்' என்று கிண்டலடித்தேன்... 'உன் ஆளை கீழே வைத்துக் கொண்டு, என் ஆளைச் சாடுவதற்கு உனக்கு என்ன யோக்யதை இருக்கிறது' என்று கோபமாக கேட்டுவிட்டு, அவர்கள் ஏச்சுக்கு பயந்து வெளியேறினேன். அப்போது அவர்கள், 'பன்னி, பன்னி...' என்றார்கள். நானும் அவர்களை ஒரு காட்டுப்பன்றி முறைப்பது போல் முறைத்தேன்... கடைசியில் விசாரித்தால், பன்னி என்ற கன்னட வார்த்தைக்கு 'வாங்கோ... வாங்கோ...' என்ற மரியா தையான அர்த்தமாம். அதாவது என்னை நடத்திய குற்ற உணர்வில் அவர்கள், கொடுத்த மரியாதையான வரவேற்பு... கல்கியில் இது 'கள்ளிநியாயம்' என்ற பெயரில் கதையானது... கன்னடத்தில் 'ஹள்ளி' என்றால் கிராமம்... நான் இரு பொருளில் இந்த தலைப்பை வைத்தேன்.

## எக்குடி தோற்பினும்

எனது ஹாசன் பப்ளிசிட்டி ஆபீசருடன் குதிரை மூக்கு என்ற இடத்திற்குச் சென்றேன். இந்தப் பகுதி யில் இரும்புத் தாது எடுக்கப்பட்டு, ஈரானுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இங்குள்ள மலைக் குதிரைமூக்கு மாதிரி இருக்கிறது என்பதால், இதற்கு குதிரை மூக்கு என்று பெயர் வைத்தார்களாம். இங் குள்ள விருந்தினர் மாளிகையில் தங்கினேன். இந்தத் தொழில் திட்ட பொதுமக்கள் தொடர்பு அதிகாரி, எனக்கு மேல் அதிகாரியாக இருந்தவரின் மகன். என்னை நன்றாகவே கவனித்தார். இங்குள்ள தொழிலா ளர்களுக்கு குடியிருப்பு வீடுகள், திரையரங்குகள், விளையாட்டு மைதானங்கள் என்று எல்லா வசதிகளும்

செம்மையாக உள்ளன. பெருக்குகிறவர்களுக்குக் கூட இரண்டாயிரம் ரூபாய் வரை சம்பளம். ஆனாலும், இந்த டவுன்ஷிப் தெருக்களைச் சுத்தப்படுத்துவது, பூங்காக்களைப் பராமரிப்பது, விருந்தினர் விடுதியை சுத்தப்படுத்துவது போன்ற களப்பணிகளை கான்ட்ராக்டர்களே ஒப்பந்த தொழிலாளர்களை வைத்து அவர்களுக்கு ஐந்தோ, பத்தோ கொடுத்து சுத்தம் என்ற பெயரிலே சுரண்டல் செய்து கொண்டிருக்கிறார்கள். அமைப்பு ரீதியில் இல்லாத இந்த அப்பாவி தொழிலாளர்கள், இந்த திட்டப் பகுதியிலிருந்து மூன்று கிலோ மீட்டருக்கு அப்பால், ஒரு பொந்துப் பகுதியில் கோலோச்சுவதாகக் கேள்விப்பட்டேன். பி.ஆர்.ஓ., இந்த இடம் கள்ளச்சாராயத்திற்கு பேர் போனது என்றும், நான் போவது நல்லதில்லை என்றும் குறிப்பிட்டார். அவரை ஒதுக்கிவிட்டு, எனது திரைப்படப் பிரிவுடன் அந்தப் பகுதிக்குப் போனேன். அங்கிருந்த மக்கள் கிட்டத்தட்ட மலைப் பொந்துகளிலேயே இருந்தார்கள். நான்கு குச்சிகளை நிறுத்தி அவற்றை கோணிகளால் மூடி, வீடு கட்டியிருந்தார்கள். கொசுக்கள் குருவிகள் போல் வட்டமடித்தன. சதசத என்ற தரைப்பகுதி. சுமார் ஐநூறு தொழிலாளர்கள் இருப்பார்கள். தமிழ்க்காரி, இந்திக்காரரை கல்யாணம் செய்திருந்தாள். மலையாளத்தாளுக்கு கூர்க்கா கணவன். தெலுங்குப் பெண்ணுக்குப் புருஷன் தமிழன். இப்படி ஜாதி தொழில் பேதமின்றி தாம்பத்தியம் வைத்திருந்த அந்தத் தொழிலாளர்கள் ஒரு சின்ன இந்தியா போல் காட்சியளித்தார்கள். இவர்கள் என்னைப் பார்த்ததும் மெய்சிலிர்த்துப் போனார்கள். இப்படி ஒருவர் தங்களைத் தேடி வந்ததில்லை என்பதே அதற்குக் காரணம்.

குதிரை மூக்கு திட்டப் பகுதியில் நிரந்தர தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தபோது, நிர்வாகம், இவர்களை, அந்த இடங்களில் அமர்த்துவதற்கு முன் வந்தார்களாம். இவர்களோ மறுத்துவிட்டார்களாம். இத்தகைய, இவர்களின் வர்க்க உணர்வு, என்னை புல்லரிக்க வைத்தது. திரைப்படத்திற்குப் பிறகு, இவர்களிடம் இருந்து பிரியாவிடை பெற்றேன். இவர்கள் காட்டிய அன்பும், ஆரவாரமும் நான் கண்ட இனிமையான சுகங்களில் ஒன்று. இவர்களைப் பின்னணியாக வைத்து - இவர்கள் தங்களுக்கு வலிய வந்த நல்ல வேலையை தொழிலாளர் வர்க்கத்திற்காக, அதுவும் பாராமுகமாக இருந்த தொழிலாளர்களுக்காக விட்டுகொடுத்ததை மகோன்னதமான தியாகம் என்றே நினைக்கிறேன். இதை வைத்து ''எக்குடி தோற்பினும்'' என்ற தலைப்பில் ஒரு சிறுகதை எழுதினேன். கதை செம்மலரில் பிரசுரமாயிற்று. பின்னர் இதே கதை தமிழகத்தின் சிறந்த சிறுகதைகள் என்ற புத்தகத்தில் இடம் பெற்றது. தாய் இதழில் 'சிகரங்களைத் தொட்ட சிறுகதைகள்' என்ற தலைப்பில் மீண்டும் பிரசுரமாயிற்று. இது எனக்கு மிகவும் பிடித்த கதைகளில் ஒன்று.

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் பொறுப்பாசிரியர்களில் ஒருவரும், தலைசிறந்த சிந்தனையாளருமான திரு எஸ்.ஏ. பெருமாள் ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன்பு இந்த சங்கத்தின் திருச்சி மாநில மாநாட்டில் சந்தித்தபோது இந்தக் கதை பாட்டாளி வர்க்க கலாச்சாரத்தை மிகச் சிறந்த நேயத்தோடு குறிப்பிடுகிற கதை என்று என்னிடம் தெரிவித்தார்.

இப்போதும் நான் அதை நினைத்துக் கொள்வேன்.

## காக்கைச் சிறகினிலே...

பெங்களூரில் காலையில் உலவச் செல்வதே ஒரு அலாதி இன்பம். அழகான கட்டிடங்கள், தூய்மையான தெருக்கள். சிநேக பாவமுள்ள மக்கள். பொதுவாக ஒரு பெண் எந்த நேரத்தில் வேண்டுமென்றாலும் தனித்துச் செல்லமுடியும். பெண் தனியாகப் போகிறாள் என்பதற்காக சென்னை நகரத்தைப் போல் அங்கே யாரும் தொடர்வதில்லை. சிவாஜி நகரில் இருந்த நான், எம்.ஜி.ரோட்டிற்கு (எம்.ஜி. ரோடு என்பது நமது சென்னை நகர அண்ணாசாலை மாதிரி அதாவது மகாத்மா காந்தி ரோடு. பலருக்கு மகாத்மாவின் நினைவிலான சாலை என்பது தெரியாது. வெறுமனே எம்.ஜி. ரோடு தான்.) இந்தப் பகுதியில் நான் 'காலை வாக்கிங்' போனபோது, ஒரு பெரிய மைதானத்தில் அடர்ந்த மரங்களுக்கு இடையே காகங்கள் கூச்சலிட்டன. கிட்டே போய் பார்த்தேன்; ஒரு காகக்குஞ்சு, கீழே விழுந்துக் கிடந்தது. அது தத்தி தத்தி துள்ளியதும், பறக்க முடியாமல் அவதிப்பட்டதும், பெரிய காகங்களைப் பரிதாபமாக பார்த்ததும், என் நெஞ்சைப் பிழிந்தது. அந்தக் குஞ்சை எடுத்து, மரத்தில் வைக்கலாம் என்று போனேன். ஆனால், கத்திக் கொண்டிருந்த காகங்கள் என்னைத் தாக்கத் தொடங்கின. இதற்கு இடையே, இரண்டு மூன்று நாய்கள் அந்தப் பக்கமாக வந்தன. நான் அவற்றிடமிருந்து அந்தக் குஞ்சை காப்பதற்காக இரண்டு கல்களை கைகளில் வைத்துக் கொண்டு நின்றேன். எம்.ஜி. ரோடு வழியாக போய்க் கொண்டிருந்த ஆட்டோக்களும், சைக்கிள்களும்

உடனே நின்றன. என்னையும், என் கையில் இருந்த கற்களையும் மாறி மாறிப் பார்த்தனர். பைத்தியம் பிடித்த நான் கல் எறிவேன் என்று பயந்ததுபோல் சிலர் ஒதுங்கி நின்றபடியே என்னை வேடிக்கை பார்த்தார்கள். தற்செயலாக அந்தப்பக்கம் பார்த்த நான் நிலமையைப் புரிந்து கொண்டேன். கற்களைப் போட்டுவிட்டு, அசல் பைத்தியம் போலவே ஒடினேன். நல்லவேளை பைத்தியம் என்று என்னை யாரும் விரட்டிப் பிடிக்கவில்லை. இதேபோல், சென்னையில் பெசன்ட் நகரில் ஒரு காகக் குஞ்சிற்கு இத்தகைய நிலமை ஏற்பட்டது. இங்கேயும் அதைக் காப்பாற்றப் போன என்னை காகங்கள் தாக்கின. ஆனாலும், நான் இரவு பத்து மணி வரை, கையில் கல் ஆயுதங்களுடன் அந்தக் குஞ்சை, பூனையோ, நாயோ நெருங்க விடாமல் காவல் காத்தேன். மறுநாள் காலையில் அலுவலகம் போகும்போது, வழியில் அந்தக் குஞ்சை காணவில்லை. சற்றுத் தொலைவில் அதன் இறக்கைகளும், நகப் பகுதிகளும் கிடந்தன. புரிந்து கொண்டேன். நெஞ்சு கனத்தது. இந்த இரண்டு நிகழ்ச்சிகளின் பின்னணியில் ''காக்கை சிறகினிலே'' என்ற சிறுகதையை எழுதினேன். கலைமகள் பொங்கல் மலருக்காக எழுதப்பட்ட கதை. இது பின்னர் பாரதியார் பல்கலைக் கழகத்தில் சிறுகதை தொகுப்பில் ஒரு கதையாக இடம் பெற்றது.

## தாயாகி... மகளாகி - குப்பைத் தொட்டி

வட கர்நாடகத்தில், அத்தனி என்ற இடம்; இது பம்பாய் கலாச்சாரத்தை உள்ளடக்கிய பகுதி - இங்கே தேவதாசி திட்டத்திற்கு எதிராக போர் தொடுத்தோம்.

கர்நாடக அமைச்சர் திரு சிந்தியாவின் தலைமையில், தேவதாஸி முறைமைக்கு எதிராக கல்லூரி மாணவ மாணவியரை வைத்து ஊர்வலம் நடத்தினோம். பிறகு ஒரு தேவதாஸிக்கும் ஒரு சமூகத் தொண்டருக்கும் திருமணம் செய்து வைத்தோம்.

இந்த தேவதாஸிப் பெண்ணும், இந்த ''சமூகத் தொண்டரும்'' இப்படி பல இடங்களில் பல விழாக்க ளில் திருமணம் செய்து கொண்டவர்கள் என்பது பின்னர் தெரியவந்தது. சொன்னாலும் வெட்கமடா - சொல்லாவிட்டால் துக்கமடா என்ற கதை தான். இந்த விழாவில் ஆடியன்ஸ் பஞ்சத்தைப் போக்குவதற்காக, மகளிர் காப்பகத்திலிருந்து சுமார் நூறு பெண்கள் வரவழைக்கப்பட்டிருந்தார்கள். இந்தப் பெண்கள், விடுதிக்குப் போன பிறகு ஒரே அழுகை மயமாய் இருப்பதாக எனக்குத் தகவல் வந்தது. உடனே, அதை விசாரிப்பதற்காக அந்த விடுதிக்கும் போனேன். இந்தப் பெண்கள் கற்பழிக்கப்பட்டவர்கள், அல்லது காதலர்க ளால் கைவிடப்பட்டவர்கள். இவர்களைத் தேவதாஸிக ளாக கூட்டத்தில் நிறுத்தியது அவர்களுக்கு கேவலம் ஆகிவிட்டதாம். எல்லாப் பெண்களும் அழுது அழுது கண்கள் வீங்கிப் போயிருந்தார்கள். இவர்களே இளக் காரமாக நினைக்கும் அளவிற்கு இருந்தால், தேவதாஸி களின் நிலமை எப்படி இருந்திருக்கும் என்பதை யூகிக்கலாம். இந்தப் பெண்களைச் சமாதானப்படுத்தி விட்டு, அவர்களில் பல பெண்களின் வாழ்க்கையைக் கேட்டேன். கேட்க கேட்க மனம் கொதித்தது. ஒரு பெண்-தர்மஸ்தலா பகுதியைச் சேர்ந்தவள். பணக்கார குடும்பத்தைச் சேர்ந்தவள். அந்தக் குடும்பத்தில்

வேலைக்காரனாக இருந்த ஒரு இளைஞனை காதலித்து கடிமணம் செய்து தனிக்குடித்தனம் நடத்தியிருக்கி றாள். இதைப் பொறுக்காத அவள் தந்தையும், அண்ணனும் இவள் கணவனைக் கொலை செய்து விட்டார்கள். கொலைகாரர்கள் கைது செய்யப்பட்டு, கோர்ட்டில் வழக்கு நடக்கிறது. இந்த பெண் சுமார், 600 கிலோமீட்டர் தொலைவில் உள்ள இந்த விடுதிக்கு அனுப்பப்பட்டாள். இவளை, இவள் அம்மாவும், இவளது அண்ணன் மனைவியும் அடிக்கடி வந்து பார்த்தார்களாம். அம்மாக்காரி. தன் கணவனுக்கு மடிப்பிச்சைக் கேட்கிறாள். மகனின் உயிரைப் பறித்து விட வேண்டாம் என்று மகளிடம் மன்றாடுகிறாள். அண்ணிக்காரியும் மடிப்பிச்சைக் கேட்கிறாள். இந்தப் பாவி பெண்ணுக்கோ என்ன செய்வது என்று புரிய வில்லை. ஏதோ எனக்கு தோன்றியதைச் சொன்னேன். இப்போது என்ன ஆச்சுதோ தெரியவில்லை.

இதேபோல் இன்னொரு இளம்பெண். கைவிடப் பட்ட பெண்களின் நிலைமையைப் பற்றி ஆய்வு செய்து டாக்டர் பட்டம் வாங்குவதற்காக ஒரு பெங்க ளூர் பயல் இந்த விடுதிக்கு வந்திருக்கிறான். இந்தப் பெண்ணை காதலிப்பதாகவும், கல்யாணம் செய்து கொள்ளப் போவதாகவும் வாக்குக் கொடுத்திருக்கி றான். அனாதை விடுதியிலேயே பிறந்து வளர்ந்த அந்த அப்பாவிப் பெண், வாழ்க்கையின் சுகந்தத்தை சுவா சிக்கலாம் என்று மனம் மகிழ்ந்தாள். இந்த விடுதியின் தலைவியும், அந்த வாலிபனை வெகுவாகப் பாராட்டி யிருக்கிறாள். ஆனால், அந்தப் பயலோ ஆய்வு முடிந்ததும் திரும்பிப்பாராமல் போய்விட்டான். இந்தப்

பாழும் பெண்ணோ மீண்டும் அனாதை ஆனது போல் துடித்ததை நானே நேரில் பார்த்தேன். இந்த இரண்டு சம்பவங்களையும் இரண்டு சிறுகதைகளாக்கி அனுப்பினேன். பத்திரிகைகளில் பிரசுரமாயின, ஒன்று "சிறுகதை இதழில்"; இன்னொன்று 'குங்குமத்தில்'

## பெங்களூர் தெரேஸா

எனது அலுவலகக் காரில் எம்.ஜி. ரோடில் போய் கொண்டிருந்தேன். எனது டிரைவர், ஒரு வயதான அம்மாவை நேராகக் குறிவைத்தது போல் மோதி விட்டார். நேரடியான ஹிட். அந்த அம்மா சுருண்டு விழுந்தார். நானும் டிரைவரும், பதறிப்போய் அவரைத் தூக்கினோம். அருகே இருந்த போக்குவரத்து கான்ஸ்டேபிள் வழக்குப்பதிவு செய்யப் போனார். வழக்குப் பதிவானால் நான் டிரைவரை சஸ்பென்ட் செய்தாக வேண்டும். ஏற்கனவே அவர் இன்னொரு விபத்தில் ஒருவரைக் கொன்றவர். இந்தப் பின்னணியில், என்ன செய்வதென்று தெரியாமல், அந்தக் கான்ஸ்டேபிளைப் பார்த்து "ஒரு ஏழையை இன்னொரு ஏழைதான் காப்பாற்ற வேண்டும்" என்று மன்றாடினேன். அவரும் பெரிய மனது வைத்து, அந்த அம்மாளுக்கு ஆட்சேபம் இல்லை என்றால், வழக்குப்பதிவு செய்யவில்லை என்று கூறி, உடனடியாக மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றுவிட்டு, தன்னைப் பார்க்கும்படி கேட்டுக் கொண்டார். அவரது பெருந்தன்மையைப் பாராட்டி, அந்த அம்மாவை காரில் தூக்கிப் போட்டோம். அவருக்கு கால் முறிந்திருந்தது. வலி தாங்க முடியாமல் துடித்தார். ஆனால் இந்த மாதிரி சமயங்களில் விபத்துக்குள்ளானவர் திட்டுவாரே, அப்படித் திட்ட

வில்லை. நாங்கள் பதறிப்போய், துடித்ததைப் பார்த்து, மெல்ல புன்முறுவல் செய்தார். ''ஏசுவே ஏசுவே'' என்பதைத் தவிர எந்த வார்த்தையும், அவரிடமிருந்து வரவில்லை. அரசாங்க மருத்துவமனையில் சேர்த்தால் வம்பு என்று அவரை தனியார் மருத்துவமனையில் சேர்க்கப் போனோம். அங்கே இருந்த டாக்டர்கள் பயந்துவிட்டார்கள். ஆனாலும் அங்கிருந்த வார்டு பாய்க்கு கையில் பத்து ரூபாயை ''காப்புக்கட்டி'' அந்த அம்மாவை, எப்படியோ சேர்த்து விட்டோம். கால் முறிவுக் கட்டுப்போடப் பட்டது. இதற்குள் அந்த அம்மாவின் பையன்களும், பெண்களும் தகவல் தெரிவிக்கப்பட்டு, வந்தார்கள். குய்யோ முறையோ என்று கூப்பாடு போட்டார்கள். அவர்களில் ஒருவர் கூட எங்களைத் திட்டவில்லை. இந்த மாதிரி சந்தர்ப் பங்களில் நன்றாக அடி கிடைப்பதும் உண்டு. ஆனால் இந்த அம்மாவின் பிள்ளைகளோ எங்களை அதிர்ந்து கூட ஒரு வார்த்தை பேசவில்லை. அந்த அம்மாள், பிள்ளைகளுக்கு ஆறுதல் கொடுத்தபடியே எங்களை ஆசீர்வாதம் செய்வது போல் பார்த்தார். நான் நெக்குரு கிப் போனேன். இந்த மாதிரி அற்புதத் தாயைப் பார்த்ததில்லை. அவருக்கு எங்களால் இயன்ற உதவி கள் அனைத்தையும் செய்து, விவகாரத்தை முடித்து விட்டோம். இப்படி அநியாயமாக அடிபட்ட போதி லும், ஒரு வார்த்தை கூட திட்டாத அந்த அம்மாவை வைத்து 'பெங்களூர் தெரேஸா' என்ற சிறுகதையை எழுதினேன். குமுதத்தில் பிரசுரமாயிற்று. என்றாலும் அந்தக் கதையில் டிரைவர் முக்கியத்துவம் பெற்று, அந்த அம்மாள் அதிக முக்கியத்துவம் பெறவில்லை என்பது ஒரு விமர்சனம். குமுதம் இந்தக் கதையை

ஒருவேளை சுருக்கிப்போட்டதால் இருக்கலாம்.

**சாக்கம்மா**

கர்நாடக மாநிலத்தில் இன்னும் மறைமுகமாக தேவதாசி முறை இருந்து வருகிறது. அரசு இதை சட்ட விரோதம் என்று அறிவித்துவிட்ட போதிலும் இந்தக் கொடூரம் இன்னும் நிலவத்தான் செய்கிறது... ஒரு கிராமத்தில் தாழ்த்தப்பட்ட அல்லது பிற்படுத்தப் பட்ட சாதியில் ஒரு அழகான இளம் பெண் இருந்து விட்டால் போதும்... ஜாதி இந்துக்களுக்குப் பொறுக் காது. உடனே அவளை தேவதாசியாக்க வேண்டு மென்று அவளைப் பெற்ற சாமானியனிடம் சொல்லி விடுவார்கள்... சொன்னால் சொன்னதுதான்... இல்லை யானால் அந்தக் குடும்பமே நிர்மூலமாக்கப்படும். வேறு வழியில்லாமல் அவள் தேவதாசியாக்கப் படு வாள்... இந்தச் சடங்கும், அதன் சம்பிரதாயமும் அறுவறுக்கத் தக்கது. அந்தப் பாவிப் பெண்ணுக்கு சிவமாகவும், சக்தி சொரூபியாகவும் உள்ள எல்லம்மா சார்பில் பூசாரி அவளுக்குத் தாலி கட்டுவான்... இவளின் முதலிரவு அந்த பூசாரிக்கு... மறுநாள் இரவு இந்த சடங்குச் செலவை ஏற்றுக்கொண்ட மேட்டுக்குடி காரனுக்கு; அப்புறம் அடுத்தடுத்து அந்தஸ்து வரிசை யில் உள்ள மேல் ஜாதிக்காரர்களுக்கு... பூவும், காம்புமாய் கசக்கப்படும் இந்தப் பாழும் பெண் நான்கைந்து தகப்பன் பெயர் தெரியாத குழந்தைக ளைப் பெற்றெடுத்து, ரோகியாகி வீதியிலே வீசப்படு வாள்.

இந்தச் சடங்கு பெரும்பாலும் வட கர்நாடகத்தி

லுள்ள எல்லம்மா கோவிலில் நடைபெறும். புராணத்தில் வரும் ஜமாதக்னி முனிவரின் மனைவி, ஒரு கந்தர்வனை அதிசயமாகப் பார்த்து கற்பு கெட்டுப் போனதாகக் கருதப்பட்டுத் தந்தையின் ஆணைப்படி மகன் பரசுராமனால் கொலை செய்யப்பட்டவள்... ஆனாலும் புத்துயிர் பெற்று பெல்காமிற்கும், தார்வார் நகரங்களுக்கிடையே சுடுகாட்டுப் பகுதி போன்ற இடத்தில் எல்லம்மாவாக விளங்குகிறவள். இந்தக் கோவிலில் இன்றும் இளம் பெண்கள் பலவந்தமாக கொண்டு வரப்பட்டு தேவதாசிகளாக ஆக்கப்படுகிறார்கள். இது சட்டவிரோதம் என்றாலும் அதிகாரிகள் மாமூலாக நடந்து கொள்வார்கள். நான் பெல்காமிற்குப் போகும் வழியில் இந்த கோவிலுக்குப் போனேன். அங்கே முடியெல்லாம் சடையாக, உடம்பெல்லாம் வியாதியாக பிச்சையெடுத்துக் கொண்டிருந்த வயதான தேவதாசிகளையும், பலியாடாக நிறுத்தப்பட்டிருந்த அப்பாவி பெண்களையும் கண்டு, இப்போதுகூட மனதிற்குள் அடிக்கடி அழுகிறேன். என் துறையின் சார்பில் இவர்களுக்காக நான் ஒரு இயக்கமே நடத்தினாலும் அது பலித்ததா என்பது சந்தேகமே. இங்குள்ள பூசாரிகள் அசல் ரௌடிகள்... எதிர்ப்பு தெரிவிப்பவர்களை தீர்த்துக்கட்டவும் துணிந்தவர்கள்... இவர்களுக்கு அங்கிருந்து பெங்களூர் வரை ஒவ்வொரு கிலோ மீட்டர் வரைக்கும் அடியாட்கள் பட்டாளம் உண்டு. நாவலாக எழுத வேண்டிய இந்தக் கொடுமையை மேலே குறிப்பிட்ட பெயரில் சிறுகதையாக்கினேன்... மணியன் அவர்கள் புதிதாகத் துவங்கிய சிறுகதை இதழில் முதலாவது இதழிலேயே இது பிரசுரமாயிற்று...

கர்நாடக மாநில மக்களைப் பற்றி மிக அதிகமாக சிறுகதைகள் எழுதிய தமிழ் எழுத்தாளன் நான் தான் என்று நினைக்கிறேன். இதற்காக, கின்னஸ் புத்தகத்தில் என் பெயர் இடம்பெற வேண்டும் என்று சொல்ல வில்லை. ஆனால் அண்மையில் வெளியான ஒரு புத்தகத் தொகுப்பு என் மனதை வெகுவாகப் புண்படுத் திவிட்டது. கர்நாடக அரசு, தென் மாநில மொழிகளில் வெளியான இருபது சிறுகதைகளைத் தொகுத்து கன்ன டத்தில் வெளியிட்டுள்ளது. இந்த வகையில், தமிழிலி ருந்து 20 சிறுகதைகள் தேர்ந்தெடுக்கப்பட்டு கர்நாடக அரசு சார்பில் கன்னடத்தில் வெளியாகியுள்ளது. இந்தத் தொகுப்பில் என் கதை இடம் பெறவில்லை. சொந்த மொழிக்கதைகளைத் தொகுப்பவர்களுக்கு கர் நாடக மாநில மக்களைப் பற்றி தமிழில் வெளியான கதைகள் தெரிந்திருக்க வேண்டும். தெரியாதது, அந் தத் தொகுப்புக்கு நஷ்டமே தவிர, எனக்கல்ல. தமிழ் திறனாய்வும், பிறமொழி பெயர்ப்பும், முதுகு சொரிப வர்களுக்கே முக்கியத்துவம் ஆகிவிட்டது என்ற எனது கணிப்பை இந்தத் தொகுப்பு, மீண்டும் நிசப்படுத்தியி ருக்கிறது.

வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல், ஒரு கட்டுரை தினமணியில் வெளியானது. பெங்களூர் கல்லூரி ஒன்றில் பணிபுரியும் நண்பர் கார்லோஸ் (தமிழவன்) இனிமையானவர். பெங்களூரில் நான் பணியாற்றிய போது, நானும், அவரும் சந்தித்து, விரிவாகப் பேசியிருக்கிறோம். அவர் பொறுப்பேற்ற 'இன்று' என்ற பத்திரிகையிலும், நான் தொடர் கட்டுரை எழுதியிருக்கிறேன். இந்த நண்பர், 'சிறுக

தை' இதழில் நான் எழுதிய 'தேவதாசி' பற்றிய கதையை வெகுவாகப் பாராட்டினார். அந்த நடை தனக்கு மிகவும் பிடித்தது என்றார். அந்த கதையில், எனக்குப் பிடிக்காமல் போனது இந்த நடைதான். அத்தகைய நடையை நான் இப்போது விட்டுவிட்டேன். ஆனால் நண்பர் தமிழவன், இந்த நடை தம்மை மிகவும் கவர்ந்ததாகவும் கதையும் சிறப்பாக இருந்ததாகவும், என்னிடம் குறிப்பிட்டார். ஆனால் கட்டுரை என்று வந்த போது தமிழ் சிறுகதைகளைக் கொண்ட கன்னடத் தொகுப்பில், நகுலனின் கதை விட்டுப் போனதைப் பற்றி குறைப்பட்டுக் கொண்டார். ஆனால் என் கதை விடுபட்டது, அவருக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. குறைந்தபட்சம் நான் கன்னட மக்களைப் பற்றி கதை எழுதியிருப்பதைச் சுட்டிக்காட்டி, அவை தொகுப்பில் இடம் பெறும் அளவுக்கு முழுமையாக இல்லை என்றாவது, அவர் சொல்லியிருக்கலாம். அந்த மக்களைப் பற்றி முழுமையாக எழுதியவனைப் பற்றி ஒருவரி கூட அவர், எழுதாதது எனக்கு வேதனையை அளித்தது. நண்பர்கள் என்றாலும், நேரிடையாக பாராட்டினாலும், கட்டுரை என்று வரும் போது, தங்களுக்கென்று இருக்கக்கூடிய முகமூடிகளை போட்டுக் கொள்வது, இயல்பாகிவிட்டது என்பதற்கு, அவரது விமர்சனக் கட்டுரை ஒரு எடுத்துக்காட்டு. இதனாலேயே பெங்களூரில் உள்ள எனது நண்பர்கள் சிலர் எனது கதைகளை - அதாவது கன்னட மக்களைப் பற்றி எழுதிய கதைகளை, கன்னட மொழியில் கொண்டு வர வேண்டும் என்று என்னிடம் கேட்கிறார்கள். எனக்குத்தான் நேரம் இல்லை. அதோடு கன்னடத்தில் எனது கதைகள் வெளிவராததால் கன்னட

மக்களின் குடியோ அல்லது எனது குடியோ கெட்டுப் போகப்போவதில்லை என்ற ஒரு எண்ணமும் காரணம். என்றாலும் திறனாய்வு என்ற பெயரில், முதுகுசொரியும் படலம் தொடர்ந்து தமிழ் இலக்கியத்தை சனியன் மாதிரி பிடித்திருக்கிறது. இதையும் மீறித்தான் ஒரு ஆத்மார்த்த எழுத்தாளன் மேலே எழும்ப வேண்டியிருக்கிறது.

# 8

# மீண்டும் கிராமப் பயணம்

ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில், நான் அதிகமாகக் கதைகள் எழுதவில்லை. அதற்கு முன்பு, எல்லா பத்திரிகைகளிலும், ஏதாவது ஒருவிதத்தில், என் பெயரோ அல்லது கதையோ அல்லது நான் பேசிய உரையின் ஒரு பகுதியோ வெளியாகிக் கொண்டிருக்கும். ''சோற்றுப் பட்டாளம்'' திரைப்படமாகப் போன போது, அதற்கு வசனம் எழுதுவதற்காக, எடுத்துக் கொண்ட ஆறுமாத இடைவெளி, ஐந்தாண்டு கால இடைவெளியாகி விட்டது. அவ்வப்போது, நான் இருக்கிறேன் என்பதைக் காட்டிக் கொள்ளவே கதை எழுதும் நிலைக்கு வந்துவிட்டேன். பொதுவாக, பத்தி ரிகைகளுக்கு நானாக கதை அனுப்புவதில்லை என் றும், கேட்டால் எழுதுவது என்றும், தீர்மானித்தேன். பத்திரிகைகளும் கண்டு கொள்ளவில்லை, நானும் அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால் பலர் 'துக்கம்' விசாரிக்க ஆரம்பித்தார்கள். பிரபல பத்திரிகைகளோ,

டி.வி.யில் மலரும் நினைவுகள் வருவது போல, என்னை, பொங்கல், தீபாவளி மலர்களுக்கு மட்டுமே, எழுதச் சொல்வது என்று தீர்மானித்து விட்டன. ஏதாவது ஒரு பத்திரிகை ஒரு கதை கேட்டாலோ, என்னால் உடனடியாக எழுத முடியவில்லை. அதுவும் ஒருகாலத்தில் மூன்று மணி நேரத்தில் ஒரு சிறுக தையை முடித்த எனக்கு, மூன்று நாட்களில்கூட முடிக்க முடியவில்லை. அலுவலக வேலைப்பளுவா லும், நமது 'சீசன்' முடிந்துவிட்டது என்ற எண்ணத்தா லும், நானும் அதிகமாகக் கவலைப்படவில்லை.

## தோழியரே! தோழியரே!

இந்தப் பின்னணியில், ஓரிரு மாதங்களுக்கு முன்பு நெல்லை மாவட்டத்தில் உள்ள எனது கிராமத் திற்குப் போயிருந்தேன். நான், ஒரு காலத்தில் மனதுக் குள்ளாவது ரசித்த பெண்களில் பலர் பேத்திகள்கூட எடுத்துவிட்டார்கள். என்னுடைய தோழர் ஒருவர், ஊராட்சி ஒன்றியத் தலைவராகி, சதா அரசியலைப் பற்றியே புலம்பினார். அப்போதைய தோழர்கள், இப்போதைய குடும்பத் தலைவர்களாகி, தெருவாசிக ளுக்கும் உதவாத சிறியவர்களாகிவிட்டார்கள். இளைய தலைமுறையோ பரிச்சயமற்றது. ஆனாலும் நானே இளைய தலைமுறையினரிடம் வலியப் பேசி னேன். சிலர் "எங்கள வச்சிக் கதை எழுதவா" என்று சொல்லி நழுவினார்கள். சிலர் நம்ம ஊரைக் கேவலப்ப டுத்துகிறீர்களே என்றார்கள். நான் அவர்களுக்கு நம்முடைய பண்பாட்டில் நாம் பெருமைப்பட வேண் டும் என்று லெக்சர் அடித்தேன். சிலர் சிரித்தார்கள்; சிலர் ரசித்தார்கள். ஊரிலிருந்து திரும்பும்போது, "ஒரு

வண்டிக்'' கதைகளுடன் திரும்பினேன். இப்போது மடமடவென்று எழுதிக் கொண்டிருக்கிறேன். கிராமத் தொடர்பு, ஐந்தாண்டுகளாக அற்றுப் போயிருந்ததால் தான், கதை எழுத இயலாதவனாகி விட்டேன் என்ற உணர்வு, எங்கள் ஊருக்குப் போன பிறகுதான் தெரியவந்தது. ஒருவேளை, நான் எனது கதைகளை டெஸ்ட் டியூப் பேபிகளாக, சோதனைக்கூடத்தில் எழுதாமல் இருப்பதை ஒரு வைராக்கியமாக வைத்திருப்பதும், இதற்கு ஒரு காரணமாகும். எனக்குக் கிடைத்த கதைகளை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ளவே இந்தப் பீடிகை.

ஊருக்குப் போனபிறகு, அங்கே பீடி சுற்றும் தொழில் பெரிதாக வளர்ந்திருப்பதைப் பார்த்தேன். 'ஒரு விவசாய சூழல், தொழில் துறைச் சூழலாக மாறும்போது, பண்டைய மரபுகள் அற்றுப்போகும் என்பது, சமூக இயல்.

வீடியோ - ஆடியோ சூழலிலும், பெண்கள் மத்தியில் முற்போக்குச் சிந்தனை வளர்ந்து கொண்டு தான் இருக்கிறது. அங்குள்ள ஒரு இளைஞர் - கண்ணாடிக்காரர் என்று அழைக்கப்படுகிறவர், கம்யூனிஸ்ட் கட்சி இயக்கத்தில் ஈடுபட்டு, இந்தப் பெண்களுக்கு சங்கம் அமைக்கப் பாடுபடுகிறார். அந்தக் கிராமத்தில் கம்யூனிஸ்ட் கட்சி பெயர் அடிபடுவதே, அண்மையில்தான். ஒரு காலத்தில் அதாவது அறுபதுகளில், நான் அந்தக் காலத்து மூக்கு வழிப் பேச்சாளர்களால், தமிழர்கள் முழு மூடர்களாகி விடுவார்கள் என்று சரியாகக் கணித்ததால், அப்போதிருந்த ஒரே ஒரு பழுதுபட்ட-தவிர்க்க முடியாத இயக்கமான காங்கிரஸ்

கட்சியில் பேச்சாளனாக இருந்தேன். எங்கள் கிராமத்தில் கட்சிக்கொடியை ஏற்றப்போகும்போது, ஒருவர் ''அமைதியாக இருக்கும் இந்த ஊரில், அரசியலைப் புகுத்திக் கெடுக்காதே'' என்றார். அவர் சொன்னது, சரியாகப்பட்டதால், நானும் ஒதுங்கிக் கொண்டேன். அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகமும், காங்கிரஸ் கட்சியும் கொடிகட்டின. இதுகூடப் பெரிய அளவில் இல்லை. ஆனால் இப்போதோ கம்யூனிஸ்ட் இயக்கம், பெண்கள் மத்தியில் ஒரு பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. சங்கம் அமைக்க முற்பட்ட கண்ணாடிக்காரன், பீடி முதலாளிகளிடம், தான் சங்கம் வைக்காமல் இருக்க பணம் கேட்டதாக ஒரு புரளியை ஊரில் கிளப்பிவிட்டிருக்கிறார்கள் என்று என்னிடம் முறையிட்டார். நான் ''கவலைப்படாதே, உன்னை வைத்தே ஒரு கதை எழுதி ஊக்கப்படுத்துகிறேன்'' என்றேன். சொன்னபடி ''தோழியரே, தோழியரே'' என்ற சிறுகதை தாயில் பிரசுரமாயிற்று. அதற்கு இலக்கியச் சிந்தனை பரிசும் கிடைத்தது.

## பூனைக்கும் மணிகட்டலாம்

எங்கள் ஊரில் ஒரு காலத்தில் யார் வேண்டுமானாலும் அடிக்கலாம் என்பது மாதிரி இருந்த ஒரு குடும்பம், இப்போது எழுச்சிபெற்று நிற்கிறது. அந்தக் குடும்பத்தின் இளைஞர்கள் இப்போது எந்த கொம்பனையும் எதிர்ப்பதற்குத் தயாராகிவிட்டார்கள். இதை வைத்து ''பூனைக்கும் மணி கட்டலாம்'' என்று ஒரு சிறுகதையை ''தாய்'' பெற்றுக் கொடுத்தாள்.

## ஒரு போலீஸ் படையின் கிராமப் பிரவேசம்

எங்கள் ஊருக்குப் பக்கத்து ஊரான சிவநாடான் ஊரில் ஒரு சம்பவம் அப்போது நடைபெற்றது. போலீஸ்காரர்களில் ஒரு பகுதியினர், ஒரு வேனில் கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களிடம் மாமூலாகக் குடித்துவிட்டு, வழியில், வயலுக்குத் தண்ணீர் கொண்டு போன ஒரு இளைஞனை வேனில் தூக்கிப்போட்டுக் கொண்டு போயிருக்கிறார்கள்; அவனை எங்கெல்லாமோ நிறுத்திவிட்டு, அவன் முன்னாலேயே சாராயமும் குடித்திருக்கிறார்கள்; சட்டமும் பேசியிருக்கிறார்கள். அந்த இளைஞனின் தந்தை ஒரு ஆசிரியர். 'ஜாக்டி' அமைப்பாளர்; அந்த வேனை ஊர்க்காரர்கள் மறித்து, போலீஸ்காரர்களை பலவந்தமாக இறக்கி, காலில் கிடந்த பூட்ஸ்களை கையில் பிடிக்கச் செய்து, ஊர்வலமாக நடத்தி இருக்கிறார்கள். இதைப் பின்னணியாக வைத்து, ''ஒரு போலீஸ் படையின் கிராமப்பிரவேசம்'' என்ற சிறுகதையை 'செம்மலரில்' எழுதினேன். எனக்குப் பிடித்த கதை. நான் ஏதோ ஒரு அப்பட்டமான பிரசார நெடியை அலைமோத விட்டிருப்பதாகவும், 'செம்மலர்' என்பதால், கதையை முற்போக்காக முடித்திருக்கிறேன் என்றும், நமது ஞான பண்டிதர்கள் நினைக்கலாம். ஆனால் கதை முழுக்க முழுக்க நடந்த நிகழ்ச்சி.

### சாமியாடிகள்

எங்கள் ஊரில் பல குடும்பங்கள். சுமார் 100 தலைக்கட்டுக்களைக் கொண்ட ஒவ்வொரு பங்காளிக் கூட்டமும், பல்வேறு பெயர்களால் அழைக்கப்படும்.

பண்டாரக் கூட்டம், மாதவன் கூட்டம், சங்கிக் கூட்டம், குழியன் கூட்டம், இப்படி பலப்பல கூட்டங் கள். இந்தக் கூட்டங்களில் அருகருகே உள்ள இரண்டு கூட்டங்களுக்குத் தீராப் பகை. மாமா மச்சான்களாகப் பழகியவர்கள், தத்தம் குல தெய்வங்களுக்கு ஒரே சமயத்தில் போட்டி போட்டு, கொடை கொடுத்தார்கள். இந்தச் சூழலில், இந்தக் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு பெண், எதிரிக் கூட்டத்தைச் சேர்ந்த ஒரு இளைஞ னோடு ஓடி விட்டாள். பெண் பிறந்த குடும்பக் கூட்டத்தினர் இதை ஒரு தலைகுனிவாக நினைத்தார் கள். பையனின் கூட்டமோ, அவர்களை அவமானப்ப டுத்தி விட்டதுபோல் துள்ளினார்கள். விவகாரம், காவல் துறைக்குச் சென்றது. ஆனால் காவல் துறையின் சப்-இன்ஸ்பெக்டரோ கிராமத்திற்கு வந்து இந்த விவ காரத்தை முழுமையாக விசாரித்து, ஒரு முடிவெடுக்கா மல், பையனைப் பெற்ற குடும்பத்தோடு சேர்ந்து, ஏற்கனவே அவமானப்பட்டது போல் துடித்த குடும்பத் தினரை மிரட்டத் துவங்கினார். இதில் எனது உறவின ரும் பாதிக்கப்பட்டார். நான் அந்த சப்-இன்ஸ்பெக்டருக்கு எனது நண்பரான ஊராட்சி ஒன்றி யத் தலைவர் மூலம், நிலைமையை எடுத்துச்சொல்லி, அவர் ஓரம் சாயாமல் பார்த்துக் கொண்டேன். ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஏற்பட்ட அல் லது ஏற்படுத்தப்பட்ட காதல், எப்படி விஸ்வரூபம் எடுத்து, பல தலைகளை விழ வைக்கும் நிலைமைக்குக் கூடப் போகும் என்பதை உணர்ந்தேன். இந்தக் காதலில், அந்தப் பையனோ, அல்லது அந்தப் பெண்ணோ முக்கியத்துவமற்று, சுமார் முந்நூறு பேரின் மானமே நடுத்தெருவுக்கு வந்ததுபோல், ஒரு

எண்ணம் ஏற்பட்டது; ஏற்படுத்தப்பட்டது. நமது ''புனிதக் காதல்'' எழுத்தாளர்கள் இத்தகைய சூழலை ஆழ்ந்து பார்த்து, எழுத வேண்டும்; எழுதினால் நன்றாக இருக்கும். இப்போது ஓடிப்போனவனும், உடன்போனவளும் இரு கூட்டங்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டார்கள் என்ற சுப செய்தி எனக்குக் கிடைத்தது. ஆனால் இருதரப்பிலும் ஏதாவது ஒரு தரப்பு சற்று மிதமிஞ்சிப் போயிருந்தால், கொலை அல்ல, படுகொலை விழுந்திருக்கும். காவல்துறையி னரோ 'மாமூலாகத்தான்' நடந்தார்கள். இந்தக் கொலை கள், காவல்துறை இருந்தும் நடைபெறவில்லை என்ப துதான் முக்கிய அம்சம்! இந்தப் பின்னணியில் 'கோலவடிவு' என்ற தொடர்கதையை 'தினகரனில்' எழுதினேன்.

*குறிப்பு: நான் எழுதியதில் ஒரு வரியைக்கூட மாற்றாமல் வெளியிட்ட தினகரனுக்கு நான் நன்றி சொல்லியாக வேண்டும். இந்தத் தொடர்கதை 'சாமியாடிகள்' என்ற தலைப்பில் மதுரையில் உள்ள மீனாட்சி பதிப்பகத்தால் வெளியிடப்பட்டது. இன்றைய கிராமங்களில் வீடியோ - ஆடியோ தாக்கங்கள் எப்படி இருக்கின்றன என்று விலாவாரியாக எடுத்துக்கூறும் படைப்பு.*

# 9

# பெண்ணிய அனுபவங்கள்

இந்த மாதம் பெண்கள் மாதம் என்பதால், பெண்களைப் பற்றி நான் எழுதிய கதைகளை நினைத்துப் பார்த்தேன். கற்பழிப்பு என்ற ஒன்றை வில்லன் மூலம் நடத்த விட்டு, பிறகு அந்தப் பெண்ணிற்காக பரிதாபப்பட்டு, எழுதும் எழுத்து வகையை, நான் தொட்டதில்லை. இது பெரும்பாலும் செக்ஸ் உப்பு போட்டு, கொடுக்கின்ற ஒரு பாசாங்கு எழுத்து என்பதுதான் என் கருத்து. இலக்கியத்தைப் பற்றி லியோ டால்டாய் சொல்லுகின்றபோது, ''எழுத் தாளன் ஒருவன், அல்லது ஒருத்தி என்ன மனவுணர் வோடு எழுதுகிறாரோ, அந்த உணர்வு வாசகர் மனதில் பதிய வேண்டும். நல்லுணர்வு படிந்தால், அது நல்லியக்கியம். நச்சுணர்வு பதிந்தால், அது நச்சிலயக் கியம்'' என்றார். நமது எழுத்தாளர்களில் பெரும்பா லோர், மானசீகமாக ஒரு பெண்ணை கற்பழித்துக் கொண்டே கதை பண்ணுவதால், வாசகன் மனதில்

செக்ஸ் ரசனையே மிஞ்சி நிற்கிறது. தார்மீகக் கோபம் ஏற்படுவதில்லை. ஆகையால் பெரும்பாலும் பெண்களின் செக்ஸ் அல்லாத பிரச்னைகளை எழுதுவது என்றே, நான் தீர்மானித்தேன். ஆனால், செக்ஸ் மனோபாவம் பற்றி எழுதியிருக்கிறேன். பொதுவாக எனது கதைகளிலும், நாவல்களிலும், படிக்காத கிராமத்துப் பெண்கள் பண்புள்ளவர்களாகவும், படித்த பெண்கள் ஒரு தினுசாகவும் வந்திருக்கிறார்கள். இந்த அணுகு முறையிலிருந்து இப்போது நான் மாறி இருக்கிறேன். பெண்களை மேன்மைப்படுத்தும் வகையில்தான் எனது பெரும்பாலான கதைகள் வந்துள்ளன.

## சோற்றுப் பட்டாளம்

28 ஆண்டுகளுக்கு முன்பு, எங்கள் குடும்பத்தில் நடந்த நிகழ்ச்சியே சோற்றுப்பட்டாளமாக வடிவெடுத்தது. எனது அம்மாகூடப் பிறந்த சித்தியை, அவரது சொந்த தாய்மாமா மகனுக்கு சென்னையில் கட்டிக்கொடுத்திருந்தது. எனக்கு, சித்தியும் சித்தப்பாவும் எவ்வளவோ செய்திருக்கிறார்கள். சித்தி நாற்பது வயதில் இறந்து போனாள். சித்தப்பாவிற்கு 50 வயது இருக்கும். இன்னொரு கலியாணம் செய்ய ஊருக்குப் போன அவருக்கு, இருபது வயது நிரம்பிய எனது கடைசி சித்தியை கலியாணம் செய்து கொடுக்க ஏற்பாடு நடந்து கொண்டிருந்தது. சென்னையில் கல்லூரியில் படித்த நான், விஷயத்தைக் கேள்விப்பட்டு, ஒரு கத்தியை எடுத்துக் கொண்டு, அந்தக் கல்யாணத்தைத் தடுப்பதற்காக ஓடினேன். ஆனால் அதற்குள் திருமணம் முடிந்து விட்டது. அந்த ஊரில் அப்போதைய ஒரே படித்த மனிதரான உள்ளூர் ஆசிரியர்தான் இந்த

அநியாயத்தை நியாயப்படுத்தி, செயல்பட வைத்த பெரிய மனிதப் பேர்வழி. சம்பந்தப்பட்ட உறவினர் ஒவ்வொருவரும் அந்தத் திருமணத்தால் தனக்கு என்ன லாபம் வரும் என்று யோசித்தார்களே தவிர, சித்தியின் பாதிப்பைப் பற்றி நினைத்துக்கூட பார்க்கவில்லை. கோபத்தோடு குமுறிய என்னைப் பார்த்து பரிகாசம் செய்தார்கள். ஊரில் உள்ள பெரிய மனிதர்கள்கூட அந்தத் திருமணம் அநியாயமானது என்று தெரிந்தாலும், அதைத் தடுக்க முன்வரவில்லை. இந்தப் பின்னணியில் எழுந்ததுதான் ''சோற்றுப்பட்டாளம்''. வெறுமனே ஒருத்தியை சாகடிக்காமல் சற்று முற்போக்காகக் காட்ட வேண்டும் என்பதற்காக சோற்றுப்பட்டாள நாயகி சுந்தரி, இறுதியில் பொருந்தாக் கலியாணத்தை எதிர்த்து புரட்சி செய்கிறாள். இதை அப்போது கற்பனாவாதம் என்று சொன்னார்கள். ஆனால், ஒருசில பத்தரிகைகளில், வரதட்சணை அதிகமாக்க் கேட்கப் பட்டது என்பதற்காக, மேடையிலிருந்து குதித்த மணமகளையும் தாலி கட்டுவதற்கு முன்போ அல்லது பின்போ அக்னி சுற்றி வலம் வந்தபோது, மணமகனுக்கு தொழுநோய் இருப்பதைக் கண்டுபிடித்து, அந்தத் திருமணத்தை அங்கீகரிக்காத ஒரு பெண்ணைப் பற்றிய செய்தியும் வெளியாயின. ''ஒரு கோட்டிற்கு வெளியே'' நாவலை நான் முன்னதாக எழுதினாலும், ஆனந்தவிகடனில் தொடர் கதையாக வெளியாகி, பின்னர் பேராசிரியர் பாக்கியமுத்து அவர்களால், சி.எல்.எஸ். நிறுவனம் மூலம் முதலாவதாக வந்த நாவல் இந்தச் ''சோற்றுப்பட்டாளம்''. இது பத்தாண்டுகளுக்கு முன்பு டி.வி.யில் நாடகமாக வந்தது. இன்னும் மிகச் சிறந்த நாடகமாகப் பேசப்படுகி

றது. பின்னர் இது "பாசம் ஒரு வேசம்" என்ற தலைப்பில் திரைப்படமானது. ஆனால் எடுக்கத் தகுதியில்லாதவர்கள் எடுத்ததால், அது பார்க்கத் தகுதியில்லாமலேயே போய்விட்டது.

## மானுடத்தின் நாணயங்கள்

பெண்ணைப் பற்றி எழுதிய எனக்குப் பிடித்த ஒரு சிறுகதை, 'மானுடத்தின் நாணயங்கள்! என் மனைவி வழி சொந்தக்காரப் பெண் ஒருத்தி, கிராமத்திலிருந்து கணவனுடன் எண்ணூரில் வசித்து வந்தாள். அவள் கணவன், இன்னொருத்தியைச் சேர்த்துக் கொண்டு, அவளைக் கொடுமைப்படுத்துவதாகத் தகவல் வந்தது. எப்படியாவது அந்தப் பெண்ணை மீட்டு அவளுக்கு வாழ்வளிக்க வேண்டும் என்று சொந்தக்காரர்கள், என்னைக் கேட்டுக் கொண்டார்கள். பப்ளிசிட்டி ஆபீசராக, சற்று போலீஸ் செல்வாக்கில் உள்ள நான், அந்தப் பெண்ணின் சித்தப்பாவுடன் எண்ணூருக்குப் போனேன். அங்கிருந்த டிஎஸ்பி என்னுடைய நண்பர். "ஐயோ இதெல்லாம் பொம்பள விவகாரங்க. போலீஸ்காரனை கிழிச்சிப்பிடுவாங்க" என்றார் அவர். உடனே ஒரு கான்ஸ்டபிள் டமார் என்று சல்யூட் அடித்து, தான் இந்த விவகாரத்தை முடித்து வைப்பதாகக் குறிப்பிட்டார். டிஎஸ்பி நண்பர் வேண்டாவெறுப்பாகச் சம்மதித்தபோது, (பின்னால் அந்தக் கான்ஸ்டேபிளுக்கு, சம்மன் இல்லாமல் ஆஜரானதற்காக டோஸ் கிடைத்திருக்கலாம்) அந்தக் கான்ஸ்டேபிளுடன், இன்னும் நான்கைந்து போலீஸ்காரர்களுடன் என் சொந்தக்காரப் பெண் வீட்டிற்குப் போனோம். அவள் தலை மொட்டையடிக்கப்பட்டு, கூனிக்குறுகி இருந்தாள்.

அவளின் தாலி கட்டாத சக்களத்தி, இரண்டு குழந்தைக ளோடு கும்மென்று இருந்தாள். கான்ஸ்டேபிள் எடுத்த எடுப்பிலேயே அந்தக் காதல் மன்னனை நாயே பேயே என்று பேசினார். அடிக்கக்கூட போய் விட்டார். அதற்குள் அவன், அவர் காலிலும் என் காலிலும் விழுந்து, என்ன சொன்னாலும் கட்டுப்படுவதாக வாக்களித்தான். என்னுடன் வந்த பெண்ணின் சித்தப் பாவும் அந்த கான்ஸ்டேபிளும், அவன் வைப்பாட் டியை அப்போதே துரத்திவிட வேண்டும் என்று மிரட்டினார்கள். அவனும் போலீஸைப் பகைத்து அந்த ஏரியாவில் வாழ முடியாது என்பதால், அதற்கு உடன்பட்டான். ஆனால் எனக்கோ மனசு கேட்க வில்லை. நான் இதை என் சொந்தக்காரப் பெண் ஒருத்தியின் பிரச்னையாக அணுகாமல், ஒரு பெண் ணின் பிரச்னையாக அணுகியதால், எனக்கு அவனது வைப்பாட்டி பிரச்னையும் மனதை நெருடியது. இவ னால் இரண்டு குழந்தைகளுக்குத் தாயாக்கப்பட்ட அவள், எங்கே போவாள்? என்ன செய்வாள்? என் சொந்தக்காரப் பெண்ணும் அவளும் பிரச்னையைப் பொறுத்த அளவில் இடம் மாறுகிறார்களே தவிர, பிரச்னை தீர்ந்தபாடில்லை. நான் மனதைக் கல்லாக்கிக் கொண்டு, அவள் இரண்டு பெண்களோடும் வாழட் டும்; இருவரில் எவளையாவது கொடுமை செய்தால், போலீஸ் அவனை உதைக்க வேண்டும் என்று சொல்லி விட்டேன். இதனால் என் சொந்தக்காரப் பெண்ணுக் கும் அவள் சித்தப்பாவிற்கும் என்மேல் வருத்தம் தான். ஆனால் என் முடிவு எனக்கு இன்னும் சரியானதாகவே தெரிகிறது. இந்த அடிப்படையில், 'மானுடத்தின் நாணயங்கள்' என்று, ஒரு சிறுகதை எழுதினேன்.

குமுதத்தில் பிரசுரமாயிற்று. இதேபோல் காவல்துறையிடம் கள்ளக்காதலியுடன் பிடிபட்ட கணவன், வீட்டிற்கு கொண்டு வரப்பட்ட போது அவன் மனைவி, கணவனைத் துரத்திவிட்டு அவன் காதலிக்குப் பாதுகாப்பு கொடுத்தாள் என்று ஒரு கற்பனைக் கதையையும் எழுதினேன். மானுடத்தின் நாணயங்கள், டி.வி. நாடகமாக ஒளிபரப்பானது. நாடகத்தில் கணவன், மனைவியை காட்டுத்தனமாக அடிப்பதைக் குறைத்திருக்கலாம் என்று நமது 'மனிதாபிமானிகள்' மனம் பொறுக்காமல் கூப்பாடு போட்டார்கள். அடிக்கின்ற காட்சியையே காணக்கூசும் இவர்களால், நிதர்சனத்தை எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்?

## ஆபீஸ் மோகினி

ஒரு பிரச்னையை உள்ளது உள்ளபடி சொல்ல வேண்டும் என்று எண்ணுவதால் படித்த சில பெண்கள் அலுவலகங்களில் மேலிடத்தை கண்வீச்சால் அடித்து சகாக்களை காலால் உதைக்கும் பல சம்பவங்களைக் கண்டிருக்கிறேன். பாதிக்கப்பட்டு இருக்கிறேன். சென்னை வானொலியில் என்னுடைய சகா, ஒரு பெண். போலீசில் ஒருவர், சினிமாவில் ஒருவர், தனது இலாகாவில் ஒருவர், அடியாட்களில் ஒருவர் என்று விதவிதமான மனிதர்களைப் பரிச்சயம் கொண்டவர். புதிதாக வேலைக்கு வந்த, என்னை இவர் படாதபாடு படுத்திவிட்டார். ஒரு பெண்ணின் திருமணத்தையே நிறுத்துவதற்கு முயற்சி செய்தவர். தன்னை வேலையில் சேர்த்த ஒருவரையே தூக்கியெறியும்படி செய்தவர். இவர் பேசினால் அசல் கண்ணகியே மறுபிறவி எடுத்தது போல் தோன்றும். என்னிடத்திலும் இவர்

வேலையைக் காட்டத் துவங்கினார். ஆனால் நான் விட்டுக் கொடுக்கவில்லை. திருப்பி போராடினேன். இந்த அம்மையாரைப் பற்றி புதுதில்லியில் உள்ள அதிகாரிகளுக்கு புகார் கடிதங்கள் எழுதிப்போட்டேன். விளைவு அவர் மாற்றப்பட்டார். அப்படியும் திருப்தியுறாமல், ''அவள் ராட்சஸி'' என்ற ஒரு சிறுகதையை குமுதத்தில் எழுதினேன். ''ஆபீஸ் மோகினி'' என்ற எனது மாத நாவல் இந்த அம்மையாரை மையமாக வைத்து வெளி வந்தது. குமுதத்தில் மாலைமதி வெளியான முதல் ஐந்து மாதங்களில் பிரசுரமான நாவல் இது. இதில் ஒரு வேடிக்கை; இவரது மகளை நல்ல பெண்ணாகவும், யோகத்தில் ஈடுபாடு கொண்டவளாகவும் அம்மாவை எதிர்த்துப் போரிடுபவளாகவும் காட்டினேன். உண்மையிலேயே அந்தப் பெண் இப்போது யோகத்தில் ஈடுபடுபவளாக, அம்மாவின் போக்குப் பிடிக்காமல் அவளிடமிருந்து விடுபட்டு, தனித்து நிற்கும் பண்புள்ள பெண்ணாக வாழ்ந்து கொண்டிருக்கிறாள். ஆனால் இப்போது நினைத்துப் பார்க்கும் போது, ஒரு சகாவை இழிவுபடுத்தி இப்படி எழுதியது சரிதானா என்று தோன்றுகிறது. நீலபத்மநாபன் விவகாரத்தில், அவருக்காக நான் இன்னும் அனுதாபம் கொள்கிறேன் என்றாலும், ஒரு அலுவலக சகாவைப் பற்றி அவர் இழிவாக எழுதக் கூடாது என்று எழுத்தாளர் விக்ரமனிடம் வாதித்தேன். உடனே அவர், ''நீங்கள் மட்டும் என்னவாம்?'' என்று ஆபீஸ் மோகினியைச் சுட்டிக்காட்டினார். அதிலிருந்து அந்த நாவலை எழுதியிருக்க வேண்டாம் என்றே நினைக்கிறேன். இதற்காக அலுவலக சமாச்சாரங்கள் எழுதக் கூடாது என்பதல்ல. ஆனால் அந்தப் பாத்திரம் நமக்குத்

தெரிந்த ஒருவரின் உருவத்தை வர்ணிப்பதாகவோ, முழுக்க முழுக்க அவரைப் பற்றி வருவதாகவோ இருக்கலாகாது என்பது என் கருத்து. எழுத்தில் நிராயுதபாணிகளாக இருக்கும் அவர்களை, நமது எழுத்தாயுதத்தால் தாக்கக் கூடாது என்று இப்போது நினைக்கிறேன். இதே நாவல் "'பிற்பகல்' என்ற பெயரில், வானதியால் வெளியிடப் பட்டது.

## அம்மாவைத் தேடி.....

பெண்மையை மேன்மைப்படுத்தி நான் எழுதிய ஒரு கதை இன்னும் என் உடம்பை புல்லரிக்க வைக்கிறது. பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு ''அம் மாவைத் தேடி'' என்று ஆனந்தவிகடனில் எழுதிய சிறுகதை. ஒரு நாள் காரிலோ, ஸ்கூட்டரிலோ போய்க் கொண்டு இருக்கும்போது, மரணத்தின் தருவாயில் இருக்கும் ஒருவர், யாரைப்பற்றி சிந்திப்பார் என்ற ஒரு கற்பனை வந்தது. நிச்சயம் அவர் குழந்தையாகி, தனது அம்மாவைப் பற்றியே சிந்திப்பார் என்று தோன்றியது. உடனே ஒரு கற்பனை ஏற்பட்டது. இப்படி எல்லோருமே அம்மாவைப் பார்க்க வேண்டும் என்று நினைத்து மரணமடைகிறார்கள். ஆகையால் அனைவருமே ஆவிக் குழந்தைகளாய் ஆகிறார்கள். அம்மாவைத் தேடி ஆகாயத்தில் பறக்கிறார்கள். அங்கே ஆதி பராசக்தியின் முன்னால் லட்சக்கணக்கான குழந்தைகள் நிற்கின்றன. ஒவ்வொரு குழந்தையும் தனது அம்மாவைத் தேடுகிறது; அம்மா இல்லை. இரண்டு குழந்தைகள் பேசிக் கொள்ளும் போதுதான் ஒரு குழந்தைக்கு இன்னொரு குழந்தை அம்மா என்பது தெரிகிறது. ஆனால் அந்த அம்மா குழந்தையும்

கடைசிக் காலத்தில் தனது அம்மாவைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணத்துடனேயே இறந்ததால், குழந்தையாகவே வடிவம் பெறுகிறது, எல்லாக் குழந்தைகளும் திகைத்து ஆதிபராசக்தியைப் பார்த்தபோது, அவள், ஒவ்வொரு குழந்தைக்கும் அதன் தாய்போல் வடிவம் காட்டுகிறாள். மீண்டும் சுயவடிவுக்கு வருகிறாள். ஆவிக் குழந்தைகளுக்கு இந்த ஆதிபராசக்தி தான் அனைவருக்கும் தாய் என்ற ஒரு எண்ணம் ஏற்படுவதாக சிறுகதையை முடித்தேன். இது இந்து மதக் கதை போல் தோன்றினாலும் அப்போது ஆனந்த விகடனில் உதவி ஆசிரியராக இருந்த முஸ்லீம் நண்பரான எழுத்தாளர் ஜே.எம். சாலி, இந்தக் கதை தான் தனக்குப் பிடித்த கதை என்று அடிக்கடி சொல்லுவார். அனுபவத்தின் அடிப்படையில் எழுதாமல், கற்பனாவாதத்தில் எழுதப்பட்ட கதை இது என்றாலும், இந்தக் கதை பெண்மையின் தாய்மையை மேன்மைப்படுத்தியதுபோல் வேறு எந்தக் கதையும் செய்யவில்லை என்று நினைக்கிறேன். அதாவது எனது கதைகளில்.

## தாய்மை

'தாய்மை' என்ற தலைப்பில் சென்னை வானொலி நிலையத்தில் அகிலன் அவர்களின் தூண்டுதலின் பேரில் ஒரு சிறுகதை படித்தேன். அதுவும் அனுபவக் கதையே. ஒரு தடவை சென்னைக் கடற்கரையில் ஒரு கதைக்கு கரு தேடி அங்குமிங்குமாக சுற்றியபோது, நான்கைந்து வாட்டசாட்டமான ஆசாமிகள் ஒரு இளம் பெண்ணுடன் வந்து என்னைச் சுட்டிக்காட்டி "இவன் தான் உன்னிடம் வாலாட்டியவனா?" என்று கேட்டப

டியே, என்னைக் கோபமாகப் பார்த்தார்கள். அவள் தற்செயலாக மேலும் கீழும் தலையை ஆட்டியிருந்தால் கூட போதும், நான் அப்பளமாகியிருப்பேன். ஆனால் அவள் நானில்லை என்று தலையாட்டிவிட்டாள். உடனே ஒரு சின்ன கற்பனை ஏற்பட்டது. இப்படி வாலாட்டியவனை அவள் கண்டு கொண்டாலும், அண்ணன் தம்பிகளிடம் சொல்லி அவனை அடித்துத் துன்புறுத்த அவள் தாய்மை இடம் கொடுக்கவில்லை; ஆகையால் தப்புச் செய்தவனையே சம்பந்தப்படாத வன் போல் சொல்லுகிறாள் என்னும் வகையில் எழுதினேன். இப்படி மட்டும் கதையை முடித்தால் அவள் ஏதோ அந்தப் பயலின் கண்ணசைவில் ரசனை கண்டவள்போல் ஆகிவிடும். ஆகையால் யாருக்கும் தெரியாதபடி, அந்தப் பயலுக்கு மட்டும் தெரியும்படி, அவனைக் காப்பாற்றி விட்டு, காறித்துப்பியபடியே நடந்தாள் என்று கதையை முடித்தேன். ஒரு நிகழ்ச்சியை, உள்ளது உள்ளபடிச் சொல்லல் நடப்பியல், அதையே நடப்பியலுக்குப் புறம்பாகாதபடி நடக்கும் வகையில் சமூகத்திற்குப் பயன்படும் வகையில், மனிதனை மேன்மைப்படுத்தும் வகையில் முடிப்பது யதார்த்தம். சென்னை வானொலி நிலையத்தில் 'தாய்மை' என்ற தலைப்பில் ஒலிபரப்பாயிற்று.

## பதிலடி

நான் இருக்கும் திருவான்மியூருக்கருகே என் வீட்டுப் பக்கமாக ஒரு குடிசை. அங்கே ஒரு குடிகாரக் கணவன். அவன் மனைவி பிள்ளை குட்டிகளோடு இருந்தான். இருவருமே இளம் வயதினர். புருஷன் குடிகாரன். வேலைக்கு வேறு போக மாட்டான். இவள்

வீட்டு வேலைக்குப் போய்விட்டு வருகிற எஞ்சிச் சோறை சாப்பிட்டு விட்டு, இவள் சம்பாதிக்கிய பணத்தில் குடிப்பது தான் அவனுடைய ஒரே வேலை. குடிகாரன் சமயத்தில் மிகவும் நல்லவன். ஆனால், தொடர்ச்சியாக அவன் குடித்ததால், அவனின் நல்லவனைக் காண்பது கடினம். இரவில் திடீரென அவன் மனைவி வெளியே அலறி அடித்து அங்குமிங்குமாக ஓடுவாள். இவன் கையில் கம்பை வைத்துக்கொண்டு அவளை விரட்டுவான். ''என்னைக் காப்பாத்துங்க காப்பாத்துங்க'' என்று அவள் அலறுவாள். பக்கத்தில் உள்ள அனைவரும் பங்களாக்காரர்கள். லைட்டைப் போட்டு வேடிக்கை பார்த்து, அந்தச் சம்பவத்தை லைட்டாகத்தான் எடுத்துக் கொள்வார்கள். ஆனால் எனக்கோ மனசு கேட்கவில்லை. பல தடவை நான் வெளியே வந்து, அவனைத் திட்டியிருக்கிறேன். போலீசில் பிடித்துக்கொடுப்பதாக மிரட்டியிருக்கிறேன். அவன் அடங்கிப் போவான். அவள் அழுது தீர்ப்பாள். இப்படிப்பட்ட சூழலில், அந்தக் குடிசைக்குள் வேலை தேடி அவள் தாய் மாமன் வந்தான். அங்கேயே தங்கி ஏதோ வேலை பார்த்துக் கொண்டிருந்தான். இவனும் சின்ன வயசுக்காரன். ஒருநாள் வழக்கம் போல், சாராயப் புருஷன் மனைவியை இரவில் துரத்த, இந்தத் தாய் மாமன், அவள் கணவனை புடம்போட்டு விட்டான். நான் இருவரையும் சமாதானப்படுத்தி அனுப்பினேன். ஆனால் அந்த பெண் தாய் மாமன் தூண்டுதலில் கணவன் மீது போலீசில் புகார் கொடுக்க, புகார் கொடுத்த நாள் மாதக்கடைசி என்பதால் போலீசார் புருஷன்காரனை வாரிக்கொண்டு போய் விட்டார்கள். மறுநாள் அந்தப் பெண் என்னிடம்

கண்ணீரும் கம்பலையுமாக வந்தாள். கணவனை போலீசில் ஒப்படைத்ததற்காக, அழுது தீர்த்தாள். அவனை எப்படியாவது மீட்டுத் தாங்க சார் என்று என்னிடம் மன்றாடினாள். நானும் என் பதவியைப் பயன்படுத்தி, சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு டெலிபோன் செய்து, அவனை விடுதலை செய்யும்படி கேட்டுக் கொண்டேன். இந்தப் பெண், கணவனுக்கு மசால் வடைகளையும், பீடிகளையும் வாங்கிக் கொண்டு ஆசையோடு போயிருக்கிறாள். அவளுடைய அன்பைப் புரியாத அந்தப் பயல், போலீசாரிடம் அவள் தாய்மாமனை வைத்துக் கொண்டிருப்பதாகவும், இருவரும் சேர்ந்து, தன்னை அடித்து துன்புறுத்துவதாக வும் சொல்லியிருக்கிறான். இந்தப் பின்னணியில் அங்கிருந்த போலீசார், கணவனை மீட்கப் போன இந்தப் பெண்ணை, கண்டபடி திட்டியிருக்கிறார்கள். 'விபச்சாரி' என்று ஏசியிருக்கிறார்கள். விபச்சாரத்தடை சட்டத்தில் வழக்குப் போடப் போவதாகவும் பயமுறுத் தியிருக்கிறார்கள். பிறகு அவனையும் விடுதலை செய்துவிட்டார்கள். ஆனால் இந்தப் பெண் புருஷனை சேர்க்க மறுத்துவிட்டாள். நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்தும் அவள் கேட்கவில்லை. தாய்மாமனோடு வாழத் துவங்கினாள். என்னைக் கண்டதும் தலையைக் குனிந்து கொள்வாள். இரண்டு மாதங்களில் தாய்மா மன் நடுரோட்டில் அவளை உதைத்திருக்கிறான். பயங்கரமாக அடித்திருக்கிறான். அக்கம்பக்கம் இருந்த சேரிப்பெண்கள், "புருஷனைத் துரத்திய அவளுக்கு சரிதான்" என்பதுபோல், சும்மா இருந்திருக்கிறார்கள். இந்த நிகழ்ச்சியைக் கேள்விப்பட்ட நான், ஒருதடவை அவளை வழியில் பார்க்கும்போது, "தாய்மாமனோடா

வது ஒழுங்காகக் குடித்தனம் செய்யக் கூடாதா?'' என்று கேட்டேன். அதற்கு அவள் எனக்குப் போட்ட பதில் கேள்வி, கிட்டத்தட்ட பகவத் கீதையைப் படித்ததுபோல் இருந்தது.

''ஏன் சாரே, ஒருத்தி ஒரு ஆம்புடையானோட வாழனும்னா, அவன் கொடுக்கிற உதையை வாங்கிட்டுத்தான் இருக்கணுமா? ஒருத்தனோடு அடிபட்டுகிட்டு தான் வாழனும்னா, அது இன்னா கொடும்பம்? இன்னா வாழ்க்கை? அந்தக் கசமாலமும் அடிச்சான் இந்தக் கசமாலமும் அடிச்சான். இனிமேகாட்டி எனக்கு எந்த கசம்மாலமும் வேணாம்...''

இந்தப் பெண் இப்போது எங்கே இருக்கிறாள் என்று தெரியவில்லை. அவள் கேட்ட கேள்வி என்னை இன்னும் உறுத்திக் கொண்டே இருக்கிறது. கணவன் காரன், பிறகு அவளிடம் எவ்வளவோ கெஞ்சியும், அவள் அவனோடு வாழ சம்மதிக்கவில்லை இதை வைத்து, ''பதிலடி'' என்று ஒரு சிறுகதையை குங்குமம் பத்திரிகைக்கு அனுப்பினேன். அப்படியே பிரசுரித்தார்கள்.

# 10

# அனுபவ படிப்பினை

எனக்கு எல்லோருக்கும் ஏற்படுவது போன்ற ஒரு அனுபவம் ஏற்பட்டது, அனுபவத்தில் இருந்து பாடம் கற்றுக் கொள்வதே, அனுபவத்தைவிட முக்கியம் என்று, லியோ டால்ஸ்டாய் சொன்னதுபோல், அந்த அனுபவத்தில் எனக்கொரு மகத்தான படிப்பினை கிடைத்தது. அது என் வாழ்க்கை அணுகும் முறையையும், எதிர்காலப் படைப்புகளையும் மாற்றக்கூடியது. ஆகையால் இந்த இதழில், என்னென்ன எழுதினேன் என்பதைவிட, என்ன எழுதப் போகிறேன் என்பதை உங்களுடன் பகிர்ந்து கொள்ளப்போகிறேன்.

### எதிர்கால நாவல்

சென்ற டிசம்பர் மாத மத்தியில் குடியரசுத் தலைவர் திரு. ஆர்.வி. அவர்கள் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் வைர விழாக் கூட்டத்தில் உரையாற்றுவதை செய்தியாக்குவதற்காகச் சென்றிருந்தேன். வயலுக்கு களையெடுத்தது மாதிரியாயிற்று, மாட்

டுக்கு புல் வெட்டியது மாதிரியும் ஆயிற்று என்பது போல், அங்கே படிக்கும் என் மகனை கடமையாற்றும் சாக்கில் பார்க்கப்போகிற மகிழ்ச்சியில் போனேன். இந்த மகிழ்ச்சியில், அதற்கு முன்பு மூன்று நாட்களாகச் சாப்பிடுவதில் ஒரு ஈடுபாடு இல்லாமல் போனதை உதாசீனம் செய்துவிட்டேன். பல்கலைக்கழகத்திலும் இரண்டு நாட்கள் இருந்தேன். உடம்பு ஒரு மாதிரி தோன்றியது. அந்த இரண்டு நாட்களிலும் காபி, பன் தவிர எதையும் சாப்பிடவில்லை. அதைப்பற்றி அலட் டிக்கவும் இல்லை. அங்கிருந்து மதுரை பாத்திமா மகளிர் கல்லூரிக்குச் சென்று, கண்ணகி கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றியதாகக் கூறப்ப டும் பேச்சு வழக்கு, கல் கொண்டு வந்த செங்குட்டு வன், ஆகிய அபத்தங்களால் தமிழகம் மக்காகியிருப் பதை மாணவிகளுக்கு எடுத்துரைத்தபோது, அவர்கள் கைத்தட்டி ஆரவாரம் செய்தது மகிழ்ச்சியாக இருந்தது. பேராசிரியை சக்திபெருமாள் அவர்கள், கொடுத்த விருந்திலும் சாப்பிடவில்லை. வழக்கம்போல் இதை யும் பொருட்படுத்தாமல், வானொலி நிலையத்திற்கு என் நண்பர்களைப் பார்க்கப்போகும் போது, மேகநா தன் என்ற நண்பரிடம் எதேச்சையாக என் பிரச்னை யைச் சொன்னேன். உடனடியாக அவர், தனது மைத்துனரான வயிற்று நோய் நிபுணரிடம் கூட்டிச் சென்றார். அங்கே ரத்தத் துளிகளோடு வாந்தி எடுத் தேன். அந்த நிபுணர், எனக்கு மஞ்சக்காமாலை வந்திருக்கிறது என்றும், இதற்குமேலும் தாமதித்தால் சிறுநீரகம் கெட்டுவிடும் என்றும் - ஒருவேளை இப்போதே கெட்டிருக்கலாம் என்றும் சொன்னதுடன், என்னை ஒரு நர்சிங்ஹோமில் சேர்த்துவிட்டார்.

நிலைய இயக்குனர் திருவேங்கடம் உட்பட பல அன்பர்கள், காட்டிய அன்பில் நெகிழ்ந்தேன். நோயின் வலிமையை குறைத்து மதித்துவிட்டேன். மஞ்சக்காமாலைதானே என்ற மெத்தனத்தில் சென்னைக்கு வந்தேன். மகாராஷ்டிர ஆளுநர் திரு. சி. சுப்ரமண்யத்தின் பேரனும், பிரபல வயிற்று நோய் நிபுணருமான திரு. பழனிச்சாமியிடம் சென்றபோது, அவர் சில பரிசோதனைகளைச் செய்யச் சொன்னார். எதிர்பார்த்ததுபோல் மஞ்சக்காமாலை 20 நாளாகியும் கூடியதே தவிர குறையவில்லை. இந்தப் பின்னணியில், எனக்கு ஆஸ்திரேலியா ஆன்டிஜீனா என்ற விஷக்கிருமியின் தாக்குதல் இருப்பதாக ஒரு சோதனை கூறியது. எனது உறவினர் டாக்டர் கலைவாணனிடம், ''வெளிநாட்டுக் கிருமியப்பா'' என்ற விளையாட்டாகச் சொன்னபோது, அவரோ ''ஐயோ இது கான்சருக்கு ஆரம்பமாகக் கூட இருக்கலாம்'' என்று உண்மையிலேயே பதறிச் சொன்னார். நான் துடித்துப் போய் விட்டேன். 'இறக்கப் போவது போல, உடனடியாக டாக்டர் பழனிச்சாமியிடம் சென்று, ''அப்படியா'' என்று கேட்டேன். அவரும் புன்முறுவல் செய்யாமல் பேசாமல் இருந்தார். ''எதற்கும் ஒரு ஸ்கானிங் எடுங்கள்'' என்று பட்டும் படாமலும் சொல்லிவிட்டார். அதாவது எனக்கு வந்த மஞ்சக் காமாலை கான்சரின் துவக்கமாக இருக்கலாம் என்பது மாதிரியான ஒரு அனுமானத்தைக் கொடுத்தார். எனக்கோ உடனடியாக சோதனை செய்து, அப்படியில்லை என்றாக வேண்டும் என்ற துடிப்பு. ஆனால் ஸ்கானிங் எடுப்பதற்கோ, மூன்று நாள் இடைவெளி இருந்தது. இதற்கிடையே இந்தியன் எக்ஸ்பிரசில் வந்த ஒரு கட்டுரையும் ஆஸ்திரேலிய கிருமி கேன்ஸரின்

முதலீடு என்பதை உறுதிபடுத்தியது. நான் என்ன பாடுபட்டிருப்பேன் என்பதைச் சொல்லவேண்டிய தில்லை. இதுவரை வாழ்ந்த வாழ்க்கையும், எழுதிய எழுத்தும், பொய்யாய், பழங்கனவாய் போனதுபோல் தெரிந்தது. வாழ்க்கையின் வரவுசெலவு கணக்கைப் போட்டுப் பார்த்தால் ஒரு வெறுமையே மிஞ்சியது. வாழ்ந்ததெல்லாம் வீண் என்பது மாதிரி; ஒவ்வொரு மனிதனுக்கும் பிறப்பிலே மரணம் பிறந்திருக்கிறது என்று தெளிவாகத் தெரிந்தபோதிலும் மனிதன் ஆடு கின்ற ஆட்டமும், (அதாவது நான்தான்) குதித்த குதியும், பரிகாசமாகத் தோன்றின. இதுவரை புரியாத ஒரு உண்மை புலப்பட்டது. மரம் செடி விழுந்தால் கூட, விறகாகும். ஆனால் மனிதன் இறந்தாலோ, ஒருபிடிச் சாம்பலாகிறான். இந்தப் பின்னணியைப் பார்க்கின்றபோது நமக்கப்பால் ஏதோ ஒரு சக்தி மட்டுமே நிரந்தரமாக நிற்கக்கூடியது என்ற எண்ணம் வந்தது. இந்த எண்ணம் எல்லோருக்கும் ஏற்படும் தான். ஆனால் மரணத்தின் கோரப்பிடியில் இருப்பதாக நினைக்கும் ஒருவருக்கு வந்தால் அது எப்படியிருக்கும் என்பதை, எழுத்தில் இயம்ப இயலாது. வள்ளலாரின் அருட்பெருஞ்ஜோதி அகவலை பல ஆண்டுகளாகப் படித்திருந்தாலும், அதன் புதிய தாத்பரியம் இந்தக் காலக்கட்டத்தில்தான் தெரிந்தது. நல்ல வேளையாக அப்படிப்பட்ட கிருமி போய்விட்டதாகவும், வயிற்றில் அத்தகைய நோய்க்குரிய (ஐயோ அதன் பெயரைச் சொல்லவே பயமாக இருக்கிறது) எதுவும் இல்லை என்றும் சோதனைகளில் தெரிந்து விட்டது. நாளாக நாளாக ஆன்மீக உணர்வு போய் ''உங்களுக்கு பழையபடியும் கொழுப்பு வந்துவிட்டது'' என்று என்

மனைவி சொல்லும் அளவுக்கு, உணர்வுகள் மாறிவிட்டன. நான் திடுக்கிட்டேன். ஒருவாரத்திற்கு முன்பு இருந்த வாழ்க்கை பற்றிய அனுமானத்தை மீண்டும் மாயை வந்து பற்றிக் கொண்டதே 'என்று பழைய உணர்வுகளுக்கு என்னை ஆட்படுத்தப் பார்த்தேன். இதிலிருந்து தெரிந்து கொண்டது, சங்கடங்கள், சஞ்சலங்கள் வரும்போது, ஒவ்வொருவரும் தனக்கு ஏற்படும் உணர்வுகளை எழுதி வைத்தால், அதுவே ஒரு காவியமாகும். நிலையற்ற வேளைக்குவேளை மாறுகின்ற மனித உணர்வுகளை, அத்தகைய டயரி, பரிகாசம் செய்து பக்குவப்படுத்தும். இந்தச் சமயத்தில் குசலம் விசாரிக்க வருவார்கள் என்று எதிர்பார்த்த சில நண்பர்கள் வரவில்லை. எதிர்பாராத சகாக்கள் வந்தார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக, பேராசிரியர் பாக்கிய முத்து, உடல்நலக்குறைவிலும், உச்சி வெயிலில் என்னைப் பார்த்தார். தில்லி தமிழ்ச்சங்கத்தின் துணைத் தலைவர் திரு. விஸ்வநாதன், 60 வயதைத் தாண்டிவிட்டாலும் கண்தெரியாத இரவில் தட்டுத்தடுமாறி என் வீட்டிற்கு வந்தார். இந்த இரண்டு பெரியவர்களும் என்னைவிட்டுப் பிரிந்தபோது, அவர்களின் முதுகுகளையே பார்த்துக் கொண்டு, அதேசமயம், அவர்களோடு சிறிது நடந்து வழி அனுப்பமுடியாத நிலையில் இருந்த நான், அல்லோகல்லோலப் பட்டேன். எந்தவிதப் பிரதிபலனும் இல்லாத அவர்களின் தூய்மையான அன்பு, வாழ்க்கை என்பது அன்பு ஒன்றையே அடித்தளமாகக் கொண்டிருக்க வேண்டும் என்ற ஒரு கோட்பாட்டைப் பதித்தது. நட்சத்திரங்கள் ஒன்றையொன்று

ஏற்பதுகூட அன்பால் தான். செடிகொடிகள் வளருவது கூட சூரியசக்தியின் அன்பால்தான். இத்தகைய அன்பு மானிடத்திடம் ஏன் அதிகமாக இல்லை என்ற ஒரு ஆய்வு நோக்கையும் ஏற்படுத்தியது.

சென்னை மயிலையில் வாழும் மாமுனிவர் குறிஞ்சி சுந்திர சாமிகளை நானும் என் துணைவியாரும் மருத்துவமனைக்குப் போய்விட்டு வரும் வழியில் பார்த்தோம். மரண விளிம்பில் இருக்கும் ஒரு நோயாளியாக அவரை நான் நோக்கினேன். காலையில் எட்டு மணிக்கு பத்மாசனம் போட்டு இரவு எட்டு மணி வரை அப்படியே அமர்ந்திருக்கும் இந்த எண்பது வயது முனிவர் எனக்கு ஆறுதல் கூறியதோடு, ஒரு எலுமிச்சம் பழத்தையும் கொடுத்து இது சுருங்கச் சுருங்க உன் நோயும் போய்விடுமென்றார். எனக்கு இது ஒரு பெரிய மனோதிடத்தைக் கொடுத்தது.

நான் படுத்து விட்டால் இலக்கிய உலகமே துடித்துப் போகும் என்று நினைத்தேன். சென்னை வானொலி நிலையச் செய்திப் பிரிவே இயங்காது என்ற மாய எண்ணம் எழுந்தது. அந்த மாதிரி எந்தப் பிரளயமும் ஏற்படவில்லை. ஒருவேளை மரித்திருந்தால் ஒரு சினிமா நடிகையின் கல்யாணச் செய்திக்குக் கீழே, ஒரு சின்னச் செய்தி வரலாம். அதுவும் எனக்கு சலுகை காட்டுவது போல்.

இந்தப் பின்னணியில், ஒரு நாவல் எழுதலாம் என்று இருக்கிறேன். ஒருவருக்கு நோய் வருவதோ, அல்லது வருவதாக அச்சுறுத்துவதோ சாதாரண சம்பவம்தான். ஆனால் சாதாரண சம்பவத்தையும், அசாதார

ணமாகச் சொல்ல முடியும் என்ற தாக்கத்தை நோய்க் காலத்தில் நான் படித்த ஒரு நாவல் ஏற்படுத்தியது. ஞானபீடப் பரிசு பெற்றவரும், காங்கிரஸ், ஜனதா தள பெருந்தலைகள் மோதிய கர்நாடக மாநில தார்வார் தொகுதியில், எழுத்தாளர் என்ற ஒரே காரணத்திற்காக 60 ஆயிரம் வாக்குகளைப் பெற்றவரும், ஒரு தேவதாசி யைத் துணிந்து மணந்தவருமான சிவராம் கரந்தின் ''எல்லாம் அழிந்த பிறகு'' என்ற கன்னட நாவலின் தமிழாக்கத்தைப் படித்தேன். பேராசிரியர் சித்தலிங் கய்யா, மொழி பெயர்ப்பு என்ற எண்ணம் ஏற்படாதவ கையில் அதை அழகாக இயல்பாகச் செய்திருந்தார். சராசரிக்கு சற்றே மேற்பட்ட ஒருமனிதர், குடும்பத் தைத் துறந்து, தன்னந்தனியாக வாழ்ந்தாலும் எவ்வ ளவு மனிதாபிமானியாக இருந்தார் என்பதை சித்தரிக் கும் நாவல். அந்தப் பாத்திரத்தின் மனிதாபிமானம் நமக்கும் இருக்கும். வானத்தை வில்லாய் வளைக்கும் அளவிற்கான மனிதாபிமானமல்ல. நம்மைப் போன்ற நல்லவர்களின் மனிதாபி மானத்தைப் போன்றதுதான். அதாவது கதைக்குரிய ''கிளைமாக்ஸ் மனிதாபிமான மல்ல'' ஆனாலும் சிவராம் கரந்த், அதைச் சொன்ன விதம் இருக்கிறதே, அது ஒரு சராசரி மனிதனையும் தன் வாழ்க்கையின் அர்த்தத்தை உணர வைக்கக்கூடி யது. இந்தத் தாக்கத்தில், எனது அனுபவத்தை மையமாக வைத்து நாவல் எழுதப்போகிறேன்.

# 11

# எனது களங்கள்

## ஒரு அமாவாசை பௌர்ணமியாகிறது

ஒரு அலுவலகத்தில் அரசுப் பத்திரிகையின் உதவி ஆசிரியராக நான் பணியாற்றினேன். அதன் ஆசிரியர் நோயால் அவதிப்பட்டதால், கிட்டதட்ட நானே அந்தப் பத்திரிகையை நடத்திக் கொண்டு இருந்தேன். இங்கே ஒரு ஏழைப்பெண் கிளார்க்காக இருந்தாள். இவளுக்கு தமிழ் டைப்ரைட்டிங் தெரியும் அப்போதெல்லாம் நான் அதிகமாகச் சிறுகதைகள் எழுதுவதால், அந்தக் கதைகளை அவளிடமே டைப் அடிக்கக் கொடுப்பதுண்டு. கதைகளுக்கு சன்மானம் கிடைத்ததால், அவளுக்கும் ஒரு கதைக்கு பத்து ரூபாய் கொடுப்பேன். சில நாவல்களும் டைப் அடிக்கப்பட்டு, அவளுக்கு நூற்றுக்கணக்கிலும் கொடுத்திருக்கிறேன். இந்த டைப் வேலை பொதுவாக அலுவலகம் முடிந்த பிறகே நடைபெறும். அந்தப் பெண்ணும் அலுவலகப்

பணியை சுறுசுறுப்பாகச் செய்வாள். அவள் ஏழை என்பதாலும், ஒரு பெரிய குடும்பத்தை சுமந்து கொண்டிருப்பதாகச் சொன்னதாலும், எனக்கு அவளிடம் ஒரு பரிவுணர்வு. எங்கள் இலாகா இயக்குனர் எனக்கு மிகவும் வேண்டியவர். சென்னைக்கு வந்திருந்த அவரிடம் வாதாடி, இந்தப் பெண்ணிற்கு இவள் தகுதிக்கு மீறிய ஒரு உயர்ந்த வேலையை இன்னொரு துறையில் வாங்கிக் கொடுத்தேன். ஒரு மாதத்திற்குப் பிறகு, ஒரு கடிதம் வந்தது. எங்கள் பத்திரிகையில் கட்டுரை எழுதிய ஒருவர், தனக்கு அன்பளிப்பு பணம் வரவில்லை என்று கடிதம் எழுதியிருந்தார். கேஷ் புக்கைப் பார்த்தால், அதில் அவருக்குக் கொடுக்கப்பட்டதாகக் கடிதம் எழுதியிருந்தது. அந்தப் பெண்ணைக் கூப்பிட்டு மிரட்டினேன். அந்த உத்தமி உண்மையை ஒப்புக் கொண்டாள். தில்லிக்கு இப்படி பணம் கொடுத்ததற்காக எழுதியக் கடிதத்தை கிழித்துப் போட்டுவிட்டு, டெஸ்பாட்ச் ரிஜிஸ்டரில் தில்லிக்குக் கடிதம் அனுப்பப்பட்டதாக எழுதியதாகவும், வேண்டுமென்றே மோசடி செய்ததாகவும் அவள் ஒப்புக் கொண்டாள். இந்த விவகாரத்தை நான் தில்லிக்குத் தெரிவித்திருந்தால், அவள் சின்னாபின்னமாகி இருப்பாள். எனக்கோ மனசு கேட்கவில்லை. பணம் அனுப்பாதவர்களுக்கெல்லாம் பணம் அனுப்பும்படி சொல்லி விவகாரத்தை விட்டுவிட்டேன். அப்போது ஏதாவது தப்பு செய்திருந்தால் இப்போதே சொல்லிவிடு. சரிக்கட்டி விடுகிறேன்'' என்று கூட சொன்னேன். அவள் சத்தியம் செய்தாள்.

ஒருநாள் அலுவலக டெலிபோன் கட்டாகியது. விசாரித்தால், டெலிபோன் பணம் கட்டப்படவில்லை

என்று சொல்லப்பட்டது. கேஷ் புக்கைப் பார்த்தால் கட்டப்பட்டதாக குறிப்பிடப்பட்டு இருந்தது.

அந்தப் பெண்ணை மீண்டும் கூப்பிட்டு விசாரித்தால், அந்த உத்தமியோ, அந்த ஒரே ஒரு தப்பைத் தவிர அடுத்த தப்பைச் செய்யவில்லை என்று சொல்லி விட்டாள். அவளிடம் நடந்ததை எழுதி வாங்கிக் கொண்டு வேறு வழியில்லாமல் நடந்தது அனைத்தையும் தில்லிக்கு எழுதினேன். இதற்குள் பழைய இயக்குனர் போய் விட்டார். புதிய மனிதர் உடனடியாக விசாரணைக்கு உத்தரவிடுவார் என்று நான் நினைத்தால், ஒருநாள் இன்னொரு அதிகாரி வந்து, நான் இனிமேல் கேஷ் விவகாரங்களைக் கையாளக் கூடாது என்று உத்தரவிட்டுவிட்டுப் போனார். என்னால் பொறுக்க முடியவில்லை. தில்லி மேல் அதிகாரிகளுக்கு கடிதம் மேல் கடிதம் எழுதிப் போட்டேன். அந்தப் பெண் சம்பந்தப்பட்ட கையாடலை விசாரித்து, என் பங்குபணி பற்றியும் கண்டறிந்து, தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கடுமையாக எழுதிப் போட்டேன். பதில் வரவில்லை. இந்தப் பெண் தில்லிக்குச் சென்று விளையாடி விட்டாள் என்பது பின்னர் தெரிந்தது. நானும் ஒழிந்து போகட்டும் என்று விட்டு விட்டேன்.

ஒருநாள், திடீரென்று, ஒரு சர்தார்ஜி அதிகாரி என்முன் தோன்றினார். அந்தப் பெண் மீது, நான் எழுதிய புகாரை விசாரிக்க வந்ததாகப் பைலைக் காட்டினார். அவர், கேட்ட குறுக்குக் கேள்விகள், நான்தான் அவளை அப்படிக் கையாட வைத்தேன் என்பதுபோல் இருந்தது. நான் பலமாக ஆட்சேபித்

தேன். உடனே அவர், ஒரு சிறு துண்டுக் காகிதத்தைக் காட்டினார். அதில் என் கைப்பட எழுதிய கணக்கு விவரம் இருந்தது. மொத்தம் 300 ரூபாய் இருக்கும். இதை அந்தப் பெண்ணிடம் நீங்கள் கொடுத்தது உண்டா என்று கேட்டார். எழுத்து என் எழுத்து. ஆனால் எப்போது கொடுத்தேன் என்பது தெரிய வில்லை. நான் குழம்பினேன். இதைத் திருட்டுத்தனமாகக் கருதிய அந்த அதிகாரி, இன்னின்ன தேதிகளில் இவ்வளவு இவ்வளவு பணத்தை அந்தப் பெண் உங்களுக்குக் கொடுத்ததாகவும், அது அலுவலகப் பணம் என்றும், ஆகையால் கையாடல் செய்ய வைத்தது நீங்கள்தான் என்று அவள் விளக்கம் அளித்திருக்கிறாள் என்றும் விளக்கினார். பிறகு இதற்கு பதில் சொல்லுங்கள் என்றார் கம்பீரமாக. நான் பதறியடித்து, அந்தக் காகிதத்தைப் பார்த்தேன். அதில் ''தினமணிக்கதிர்'', ''குங்குமம்'' போன்ற வார்த்தைகள் இருந்தன. திடீரென்று எனக்கு நினைவுக்கு வந்தது. அந்தப் பெண் டைப் அடித்ததற்கு அதிகமாகப் பணம் வாங்கி இருப்பதாக என் மனைவி என்னிடம் சொன்னதை, நான் அந்தப் பெண்ணிடம் சொன்னேன். உடனே அவள் ''இந்தந்தக் கதைகள் இந்தந்த பத்தரிகைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன, நீங்கள் இவ்வளவு பணம் தர வேண்டும். உங்களுக்கு ஞாபகமறதி அதிகம். ஆகையால் இதில் கையெழுத்துப் போடுங்கள்'' என்று கேட்க, நானும் அப்பாவித்தனமாகப் போட்டுவிட்டேன். எனக்குப் பற்றி எரிந்தது. ஆனாலும் அந்த அதிகாரியிடம் ''குமுதம்'' ''தினமணிக்கதிர்'' என்ற வார்த்தைகள் வந்திருந்தால், அது என்னவாக இருக்கும் என்று திருப்பிக் கேட்டேன்.

பிறகு நிலைமையை விளக்கினேன். அந்த அதிகாரியும் புரிந்து கொண்டார். ஒருமணி நேரத்திற்குப் பிறகு, அந்தப் பெண்ணிடம் பேசியிருப்பார் போலிருக்கிறது. எனக்கு டெலிபோன் செய்தார். அந்த பெண் என் காலில் விழுந்து மன்னிப்பு கேட்க, தயாராக இருப்பதா கவும், என்னால் காலை நீட்ட முடியுமா என்றும் கேட்டார். நான் அவள் முகத்திலேயே விழிக்க விரும்ப வில்லை என்று சொல்லிவிட்டேன். அவள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நான் இந்த விவரங்களையெல்லாம் மேல் அதிகாரிகளுக்கு எழுதி யும், அது கிணற்றுக்குள் விழுந்த கல்லாகியது. பிறகு விசாரித்துப் பார்த்ததில் அந்த சர்தார்ஜி அதிகாரி சென்னைக்கு மாற்றப்பட்டார் என்றும், பதவியில் சேருவதற்கு முன்பு, சென்னையில் வீடு பார்ப்பதற்காக வந்தார் என்றும், அதற்கு இந்த விசாரணையை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு சர்க்கார் செலவில் ஓடி வந்திருக்கிறார் என்பதும், தெரிய வந்தது. இப்படிப் பட்டவர்கள்தான் இந்த நாட்டிலே அதிகாரிகள். ஈரத்து ணியைப் போட்டு கழுத்தறுப்பவர்கள்தான் அலுவலர் கள். இப்படிச் சொல்வதால், எல்லாரையும் இப்படி சொல்ல மாட்டேன். ஆனால் இந்த பரந்து விரிந்த பாரதப் பெருநாட்டில், ஒரு தாலுகாவில் ஒரு காவல் நிலையம், ஒரு இன்கம்டாக்ஸ் ஆபீஸ் முழுமையாக லஞ்சப்பிடிப்பிலிருந்து விலகியிருக்கிறது என்று நம் மால் சொல்ல முடியுமா? அப்படிச் சொல்ல முடியாத வரை இப்படி ஒட்டுமொத்தமாகச் சொல்வதிலும் தவறில்லை. எப்படியோ, இந்தப் பின்னணியை வைத்து ஒரு குறுநாவல் எழுதினேன். குங்குமத்தில் பிரசுரமாயிற்று.

## தர்மவான் தோற்றாலும் தர்மம் ஜெயிக்கும்

நான் களவிளம்பரத்துறை அதாவது பீல்டு பப்ளிசிட்டி ஆபீசராக இருந்தேன். இது ஒரு வேடிக்கையான டிபார்ட்மென்ட். ஊர்ஊராக திரைப்படம் போடுவது, பப்ளிசிட்டி ஆபீசர் வேலை. அவருக்கு ஒரு ஜீப் உண்டு. ஆனால் இப்படி ஏழெட்டு பப்ளிசிட்டி ஆபீசர்களை மேற்பார்வையிடும் தலைமை அதிகாரிக்கு ஜீப் போகட்டும் - ஒரு சைக்கிள் கூட கிடையாது. ஆனால், இந்த தலைமை அதிகாரி பப்ளிசிட்டி ஆபீசர் ஜீப்பை எடுத்துக் கொண்டு கண்டபடி சுற்றுவார். மாமா வீட்டிற்குப் போவார். மச்சினி சடங்கான விழாவிற்கு குடும்பத்தோடு போவார். தான் மட்டும் போனால் போதாது என்று தன் தம்பியையும் தம்பி மனைவியையும் தனியாக அனுப்பி வைப்பார். இவற்றிற்கெல்லாம் கணக்கு பப்ளிசிட்டி ஆபீசர் எழுதவேண்டும். பொதுவாக இந்த பப்ளிசிட்டி அதிகாரிகள் தலைமை அதிகாரிக்கு ஜீப்பைக் கொடுத்துவிட்ட தைரியத்தில் தங்கள் பங்குக்கும் ஒரு சுற்று சுற்றுவார்கள். இவர்களுக்கு ஒரு சுற்று என்றால், இவர்களது பெண்டாட்டிகளுக்கு ஒன்பது சுற்று. இந்த ஜீப் போகின்ற கிலோமீட்டர்கள் பல கிராமங்களுக்குப் போய் திரைப்படங்கள் காட்டப் பட்டதாக (லாக்புக்கில்) எழுதப்பட்டிருக்கும். சென்னையில் பப்ளிசிட்டி ஆபீசராகச் சேர்ந்த நான், என் குடும்பத்தினரை எந்தக் காரணத்தைக் கொண்டும் ஜீப்பில் ஏற்றியதில்லை. இவ்வளவுக்கும் புதுப்பெண்டாட்டி; அரசு வண்டிகளை அத்தை மாமி வேலைக்கு பயன்படுத்துபவர்கள் சமூக விரோதிகள் என்று கருதுபவன் நான். ஆகையால் ஒரு மூடத்தனமான அக்கவுன்

டன்ட், ரிஜினல் ஆபீசர் மாமியின் பிரிட்ஜை ரிப்பேர் செய்ய ஜீப் வேண்டும் என்று கைப்பட எழுதிக் கொடுத்த போதும், நான் ஜீப்பைக் கொடுக்க மறுத்து விட்டேன். இதனால், தலைமை அதிகாரிக்கும் எனக்கும் வாய்ச்சண்டையும், பேப்பர் சண்டையும் நடைபெற்றது. என்னை அந்தமானுக்கு மாற்றுவது என்று தில்லி முடிவு செய்து விட்டது. நான் நினைத்திருந்தால், அந்த அக்கவுன்டன்ட் கைப்பட எழுதிய கடிதத்தை தில்லிக்கு அனுப்பி அவரையும், அந்த ரிஜினல் ஆபீசரையும் சின்னாபின்னமாக்கியிருக்கலாம். ஆனால் அர்ஜுனனைப் போல் நான் ''திவ்ய'' அஸ்திரங்களைப் பிரயோகப்படுத்த விரும்பவில்லை. ஆனாலும் போராட்டத்தை விடவில்லை. விளைவு நான் எச்சரிக்கப்பட்டேன். அதேசமயம் நான் எதற்காக சண்டை போட்டேன் என்பதைப் புரிந்து கொண்ட, தில்லி மேலதிகாரிகள், அரசு வண்டிகளைத் தவறாகப் பயன்படுத்தாமல் இருப்பதற்கு, சில கடுமையான உத்தரவுகளைப் பிறப்பித்தார்கள். இந்தப் போரில் நான் தோற்றாலும், நான் சுட்டிக்காட்டிய கொள்கை, கொள்கை அளவிலாவது ஏற்றுக் கொள்ளப்பட்டது. ஒரு கூட்டத்தில் திரு மா.பொ.சிவஞானம், தர்மவான் தோற்றாலும் தர்மம் ஜெயிக்கும் என்று பேசிய பேச்சு, நினைவுக்கு வந்தது. தர்மம் ஜெயிக்கும் என்ற தலைப்பில், குமுதத்தில் ஒரு சிறுகதை வெளியாயிற்று. எமர்ஜென்ஸி சென்சார் இருந்த நேரம். சம்பந்தப்பட்ட சென்சார் அதிகாரி, எனது தலைமை அதிகாரிக்கு விரோதி என்பதால், இந்தக் கதையை பிரசுரிக்க அனுமதித்து விட்டார். ஆனால் இந்த சென்சார் அதிகாரியே, பிறகு எனக்கு தலைமை அதிகாரியாக

வந்தார். ராமராவண யுத்தம் முடிந்து, மகாபாரத யுத்தம் துவங்கியது.

இந்த அனுபவங்களை வைத்து, பல கதைகளை எழுதியுள்ளேன்.

## ஒரு மணி நேர அறுவை

இப்படி அதிகார வர்க்கத்தோடு நான் அடிக்கடி போராடினாலும், பப்ளிசிட்டி ஆபிசர் என்ற முறையில் எனக்கு அலாதியான அனுபவங்கள் கிடைத்தன. ஒரு தடவை ஒரு ஊரில் மேல்நிலை தண்ணீர் தொட்டியை மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அப்போதைய அமைச்சர் காளிமுத்து திறந்து வைக்க வேண்டும். இதற்கு விழா எடுத்தார்கள். இதில் நானும் ஒரு பேச்சாளர். திரு காளிமுத்துக்கு என் எழுத்துமீது மிகுந்த மரியாதை உண்டு. இதே போல், மாவட்ட ஆட்சித் தலைவராக இருந்த தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த திரு.யூ.சுப்ரமணியத்திற்கும் என் மீது கொள்ளைப் பிரியம், (ஆனாலும் அவருக்கு அரசு வட்டாரத்தில் 'மிளகாய்' என்று பெயர்). நாங்கள் மூவரும் இந்த விழாவிற்குப் போயிருந்த போது பஞ்சாயத்து யூனியன் ஆணையாளர் என் காதில் கிசுகிசுத்தார். அமைச்சர் திறப்பதாக உள்ள மேல்நிலை தண்ணீர் தொட்டி சரியாக இயங்கவில்லை என்றும்,இப்போது அதை ரிப்பேர் செய்து கொண்டிருக்கிறார்கள் என்றும், அதற்கு ஒரு மணி நேரம் ஆகும் என்றும், அதுவரைக்கும் நான் மேடையில் பேசிக் கொண்டே இருக்க வேண்டும் என்றும் கையெடுத்துக் கும்பிட்டார். விழாத் துவங்கியதும், நான் பேசத்துவங்கினேன். குடும்ப நலம், நாட்டு நலம், மொழிநலம் என்ற சம்பந்தாசம்பந்

தம் இல்லாமல் பேசிக் கொண்டே போனேன். அமைச்சர் கடிகாரத்தைப் பார்த்தார் உடனே அவரைப் பற்றி ஒரு கால் மணி நேரம் துதி பாடினேன். உடனே கலெக்டர் கடிகாரத்தைப் பார்த்தார். இவரைப் பற்றி ஒரு கால் மணி நேரம் துதித்தேன். இப்படி அவரைப் பற்றியும், இவரைப் பற்றியும் மாறிமாறி புகழ்ந்துரைத்து முக்கால் மணி நேரத்தைப் போக்கிவிட்டேன். அதற்கு ஆணை யாளரும் தண்ணீர் தொட்டி ரெடியாகிவிட்டது என்று தலையசைத்தார். இதை வைத்து ''ஒரு மணி நேர அறுவை'' என்ற தலைப்பில் ஆனந்த விகடனில் ஒரு சிறுகதை வெளியாகினது.

## கிழவிகளைப் பிடித்து

ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுக்கு எத்த னையோ வேலைகள்; பல ஆதாயமானவை. ஒரு சில அப்படி அல்ல. குடும்பக் கட்டுப்பாட்டுக்கு ஆள் பிடிக்க வேண்டியதும், முதியர்வகளின் கண்பிறை நோயையை குணப்படுத்துவதற்கு முகாம் போடுவதும் அவர்களை முகம் சுழிக்கச் செய்யும் வேலைகள். ஒரு ஊராட்சி ஒன்றியத்தில், இப்படியாக, கண்நோய் சிகிச்சைக்கு பல கிழவர்கள் கிழவிகள் வைக்கப்பட்டி ருந்தார்கள். இவர்களுக்கு சுகமாகிறதா என்பது முக்கி யம் அல்ல. எத்தனை பேருக்கு சிகிச்சை வழங்கப்பட் டது என்ற புள்ளி விவரமே முக்கியம். அந்தச் சமயத்தின் அந்த ஒன்றியத்திற்கு நான் திரைப்பட பிரிவுடன் காம்ப் போயிருந்ததேன். இந்த முகாமில் ஒரு கிழவி காணாமல் போய் விட்டாள். பலருக்கு அவளை அடையாளம் தெரியவில்லை. ஆகையால் ஆணையாளர் ஜீப்பும், எனது அம்பாசிடர் காரும்

பறந்தன. அந்த வட்டாரத்தில் எந்தெந்த கிழவிகள் எல்லாம் தனியாக நடந்து கொண்டிருந்தார்களோ அவர்களையெல்லாம் காரில் தூக்கிப் போட்டுக் கொண்டு முகாமிற்கு வந்தோம். அவர்கள் கூப்பாடு போட்டார்கள். நாங்கள் விடவில்லை. புள்ளி விவரம் கூடியது. ஆனால் தப்பித்த கிழவி கிடைக்கவில்லை. இதை வைத்து ஆனந்தவிகடனில் ஒரு சிறு கதை எழுதினேன்.

## இல்லந்தோறும் இதயங்கள்

நெருக்கடி காலத்தில் தேனும் பாலும் ஓடியதாக மக்களிடம் சொல்ல வேண்டியது எங்களுடைய பொறுப்பு. தில்லியிலிருந்து ஒரு நாற்பது பேர் கொண்ட நாட்டியக் குழு சென்னைக்கு வந்தது ஒவ்வொரு பெண்ணுக்கும், தான் இந்திராகாந்தி என்ற நினைப்பு. (ஆனால் நான் அறிந்த அளவில் அன்னை இந்திரா எந்தவிதமான பந்தாவும் இல்லாத தலைவர்) இந்தக்குழுவுக்கு, குன்றத்தூர் பக்கம் ஒரு நாட்டிய நிகழ்ச்சி நடத்த ஏற்பாடாகியிருந்தது. எல்லாம் 20 அம்ச திட்டத்தைப் பற்றித்தான். நான் முன்னதாகவே போய் விட்டேன். நாற்பது அடி அகல மேடை போடப்பட்டது. அந்தப் பகுதி ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் திரு.அந்தோணி எனது பழைய பஞ்சா யத்து சகா. அவரும் நானும் இந்த தில்லிக் கலைஞர்கள் தங்கியிருந்த இடத்திற்குப் போனோம். அங்கே அவர் கள் பரிதாபமாக்ப் படுத்துக்கிடந்தார்கள். உடனே நான் அவர்களுக்கு தக்க வசதி செய்து கொடுக்க வில்லை என்ற காரணம் காட்டி, எனது நண்பர் அந்தோணியை சத்தம்போட்டு அதட்டினேன். உடனே

தூங்கிக் கொண்டிருந்த ஒரு ''மூதேவி''எழுந்தாள் எங்கள் பேச்சு, அவள் தூக்கத்தைக் கெடுத்துவிட்டதாக வும், இந்திரா காந்தியிடம் புகார் செய்யப்போவதாக வும் அதட்டினாள். நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். இவ்வளவுக்கும் அவள் தமிழ் நாட்டுக் காரி. ''அம்மா உங்களுடைய வசதிக்காகத்தான் பிடிஓ சார்கிட்டே சண்டை போடுகிறேன்'' என்று பரிதாபமாச் சொன்னேன். என்னை அறிமுகப்படுத்திக் கொண்டேன். ஆனாலும் அவள் கேட்கவில்லை. கண்டபடி திட்டி னாள். உடனே நானும் ''சரிதான் போடி'' என்று, சொல்லிவிட்டு ஆணையாளருடன் போய்விட்டேன். ஒரு மணி நேரம் கழித்துப் பார்த்தால், மேக்கப் அறையில் ஒரே கலாட்டா. நான் அந்தப் பெண்ணிடம் மன்னிப்புக் கேட்கவில்லை என்றால், கலைநிகழ்ச்சி நடக்காது என்பதோடு, விவகாரம் அன்னை இந்திரா காந்தியிடம் போகும் என்றார்கள். என்னுடைய மேல் அதிகாரி என்னை மன்னிப்புக் கேட்கச் சொன்னார். நான் மறுத்துவிட்டேன். உடனே அவர் என் சார்பில் மன்னிப்புக் கேட்டார். உடனே அந்த மன்னிப்புக்கும் எனக்கும் சம்பந்தம் இல்லைஎன்று நானும் உரக்கக் கத்தினேன். எப்படியோ கலை நிகழ்ச்சி கலைக்கப்பட வில்லை.

இந்த நாட்டியக்குழு நங்கையரை கூட்டிக் கொண்டு, உத்திரமேரூர் போனேன். இதற்குள் அந்தப் பெண்களுக்கு என் மேல் ஒரு பிடிப்பு ஏற்பட்டுவிட் டது. அவர்களது வசதிகளை நான் நல்ல படியாகக் கவனித்துக் கொண்டதும், நான் வெளிப்படையாக பேசக்கூடியவன் என்பதும், அவர்களுக்குப் பிடித்து விட்டது. உத்திரமேரூரில் இவர்களுடைய பிரமாத

மான நாட்டியம் நடந்து கொண்டிருந்தபோது உள்ளூர் முனியாண்டி ஹோட்டல் பக்கம் ஒரு சத்தம் கேட்டது. 'மதுரை மணிக்குறவன் மாண்ட கதை சொல்லுகிறேன்' என்று பாட்டு கேட்டது. ஒரு மைக் முன்னால் ஒருவர் மேளம் அடித்துப் பாட, இரண்டு, மூன்று ஆண்களும் பெண்களும் முன்னும் பின்னுமாக ஆடினார்கள். அற்புதமான குரல்; அதிசயமான ஆட்டம். எங்கள் நாட்டியத்தைப் பார்த்த எல்லா மக்களும் மணிக்குற வன் பக்கம் போய்விட்டார்கள். எங்கள் நாற்காலிகள் காலியாகக் கிடந்தன. இறுதியில் கலை நிகழ்ச்சியை மூட்டை கட்டிவிட்டு, நாங்களும் அங்கே போனோம், அப்போது ஒரு பாட்டு ''டி.வி.எஸ்.டிரைவர் தன்னை எட்ட நின்னு வெட்டுனானே'' என்று கேட்டது. நிகழ்ச்சி முடிந்ததும், இந்தப் பெண்களின் மத்தியில், மணிக்குறவனிடம் 'ஒரு வீரன், ''எதற்காக ஒருவனை எட்ட நின்னுவெட்ட வேண்டும்'' என்று கேட்டேன். உடனே அந்த ஆசாமி 'அறுவா அம்புட்டு நீளமுங்க' என்றார். நான் இந்தப் பெண்களிடம் ஒரு லெக்சர் அடித்தேன். கலை என்பது அடித்தளத்தில் இருந்து வந்தால்தான், அற்புதமாக வரும் என்று சொன்னேன். அவர்கள் புரிந்து கொண்டார்கள். கர்வபங்கப்பட்டது போல் லேசாக நமுட்டுச் சிரிப்பு சிரித்தார்கள். இதை வைத்தும் ஒரு கதை எழுதினேன் என்பதை நான் சொல்ல வேண்டியதில்லை. இந்த கூத்துக் கலைஞன் மேலே குறிப்பிட்ட நாவலில் ஒரு முக்கிய பாத்திர் ஆனார்.

## புதிய திரிபுரங்கள்

அலுவலக சம்பந்தமாக கன்னியாகுமரி மாவட்

டத்தில் சுற்றுப் பயணம் செய்த கொண்டிருந்தேன். அங்கே உள்ளவர்கள், சில எஸ்டேட் முதலாளிகளின் பேச்சும் போக்கும் கிட்டத்தட்ட திரைப்படங்களில் வருவது போலவே இருந்தன. அரசை ஏமாற்றி ஆயிரக் கணக்கான ஏக்கரை 99 ஆண்டு காலத்திற்கு லீஸ் என்ற பெயரில் வைத்துக் கொண்டு, தொழிலாளர்களை இவர்கள் படுத்தும்பாடு பெரும்பாடு. திரும்பி வரும் போது ஒரு எஸ்டேட்டில் ஒரு மரத்தில் ஒரு தொழிலா ளியின் பிணம் தொங்கிக் கொண்டிருந்தது. அக்கம்பக் கம் விசாரித்ததில், அவர் அடித்துக் கொல்லப்பட்டதாக முணுமுணுக்கப்பட்டது. இதற்குள் ஒரு கார் வந்து நின்றது. அதில் ஒரு கான்ஸ்டபிள் கம்பீரமாக வந்து இறங்கினார். கார், எஸ்டேட் முதலாளியுடையது 'அநதக் காரில் வந்து இறங்கும் போலீஸ்காரரிடம் எப்படி நியாயத்தை எதிர்பார்க்க முடியும்? அப்படியே அவர் நியாயமாக நடந்து கொண்டாலும் மக்கள் எப்படி நம்புவார்கள்? இதேபோல் தமிழக மினசார வாரிய காட்டுப்பகுதிகளில் ஒப்பந்தத் தொழிலாளர் கள், கோணிகளையே கதவுகளாகக் கொண்ட குடிசைக ளில் சேரும் சக்தியுமான கரைகளில் வாழ்வதைப் பார்த்தேன். இவர்களைப் பற்றி நிரந்தரமான தொழிலா ளர்கள் கவலைப்படுவதில்லை. இந்த இரண்டு பின்ன ணியையும் வைத்து ''புதிய திரிபுரங்கள்'' என்ற குறநாவலை எழுதினேன். 'நாகமணி' என்ற ஒரு அருமையான பத்திரிகை. இதன் ஆசிரியர் திரு.குமாரசு வாமி, பிரபல மருத்துவ நிபுணர். ஓய்வு என்பதே இல்லாதவர். ஆனாலும், சமூக பிரச்சனை காரணமாக நாகமணி என்ற பத்திரிகையைத் துவக்கினார். இந்தப் 'புதிய திரிபுரங்கள்' இந்தப் பத்திரிகையில் வந்தது.

'நாகமணி' நல்ல பத்திரிகை என்பதால் அதுவும் விரைவில் மூடப்பட்டது. எனக்குப் பிடித்த குறுநாவல்களில் இது ஒன்று.

## ஊருக்குள் ஒரு புரட்சி

செய்தி - விளம்பர அதிகாரியாக இருக்கும்போது நமது ஐந்தாண்டு திட்டங்கள் எப்படி சீரழிந்து செயல் இழந்து அமல் செய்யப்பட்டன என்பதை நேரிடையாகக் கண்டேன். பணக்காரர்கள், ஏழைகள் பெயரில் மாடுகளை வாங்கி பயன்படுத்திக் கொள்வதையும் சமபந்தி போஜனம் என்ற பெயரில் அரிஜன மக்களுக்கு சாப்பாடு போட்டே அவர்களைச் சாப்பிட்டதையும் கண்டேன். பெரும்பாலான வங்கிக் கடன்கள், உதவிப் பொருட்களை எல்லாம், ஏழைகள் பெயரில் பணக்காரர்கள் அமுக்கிக் கொள்வார்கள். மாவட்ட அதிகாரிகளும், ஜாதிக்கார கிராமங்களுக்குப் போய் பண்ணையாளர்கள் வீட்டில் கோழி வகையாறாக்களைத் தின்றுவிட்டுப் போய்விடுவார்களே தவிர, சேரிக்கார காலனிகளுக்குப் போகமாட்டார்கள். பொதுவாக, தாசில்தார், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், ஊராட்சி ஒன்றியத் தலைவர், சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஆகியோர் ஒன்றாகச் சேர்ந்துக் கொண்டு ஊர்களை அடித்து உலையில் போடுவார்கள். இவர்களோடு தனியார் பள்ளிக்கூட மானேஜரும் சேர்ந்து கொள்வார். கிராம நிர்வாக அதிகாரிகளும் இவர்களது கட்சி. இந்தப் பின்னனியில் ஏழை மக்களால் எதுவுமே செய்யமுடியாது. இந்த அம்சங்களை எல்லாம் வைத்து ஒரு குறுநாவல் எழுதினேன். 'கல்பனா' என்ற மாத நாவல் பத்திரிகை. எழுத்தாளர் ஜெயகாந்தனுக்கு

அடுத்தபடியாக சு.சமுத்திரம் என்ற பெயரில் ஒரு நாவல் வரவேண்டும் என்று நியூஸ் செஞ்சுரி புக் நிறுவனத்தின் தலைவரும், மார்க்சிய அறிஞருமான திரு. ராதாகிருஷ்ணனனும், செயலாளர் குசேனும் கேட்டு கொண்டதற்கு இணங்க இந்தக் குறுநாவலை எழுதினேன். ஆனால் பத்திரிகை ஆசிரியர் ஜெயகாந்தன் அடுத்த ஆறு மாதங்களுக்கான எழுத்தாளர் பட்டியலைப் போட்டு விளம்பரம் செய்துவிட்டார். அசோகமித்திரன், ச.கந்தசாமி போன்ற எழுத்தாளர்களின் பட்டியல் அது. அந்த அறுவர் பட்டியலில் என் பெயர் இடம் பெறவில்லை. ஆனால் நான் மனம் தளரவில்லை. அதையே பெரிய நாவலாக எழுதப் போனேன். இந்தச் சமயத்தில் தேவி பத்திரிகையில் ஒரு தொடர் கதை கேட்டார்கள். இதே நாவலை ''ஊருக்குள் ஒரு புரட்சி'' என்ற பெயரில் தேவியில் எழுதினேன். இந்த நூலுக்கு தமிழக அரசின் பரிசு கிடைத்தது. இதைத் திரைப்படமாகவும் தயாரித்தார்கள். உருப்படவில்லை. ஆனாலும் இந்திய அரசின் செய்தி விளம்பரத் துறையில் இந்தப் படம் 16 எம் எம் களாக ஆங்காங்கே திரையிடப்படுகின்றது.

இந்த நாவல் சம்பந்தப்பட்ட திரைப்பட அனுபவத்தையும், உங்களுடன் பகிர்ந்தால்தான் எனக்கு சுமை குறையும். 'ஒரு இந்தியக் கிராமத்தின் கனவு' என்ற திரைப்படத்தை தயாரித்து, விருது பெற்ற திருவாளர்கள் தேசிகன், வரதராஜன் ஆகியோர் இந்தப் படத்தையும் தயாரித்தார்கள். பணம் செலவாகிறது என்று அழுதுகொண்டே இந்தப் படத்தைத் தயாரித்தார்கள். டைரக்டராக ஆசை பட்ட ஒருவர் இவர்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் கொடுத்தார். கொடுத்தது கடன்.

ஆனாலும் இவர்கள் அதை இனாமாகக் கருதிவிட்டார் கள். படமும் வெளியாகி, சென்னையில் சோவியத் தூதரகத்தில் இது காட்டப்பட்டது. படத்திற்கு பலரின் பாராட்டுகள் கிடைத்தாலும் அது என்னமோ டப்பாவை விட்டு நகரவில்லை. இதற்குப் பிறகு, இரண்டு நண்பர்களும், எனக்குத் தெரியாமல் செய்தி விளம்ப ரத்துறையில் இதை விற்பதற்கு ஏற்பாடு செய்வதாகக் கேள்விப்பட்டேன். உடனே அவர்களை டெலிபோனில் கூப்பிட்டு வரவழைத்தேன். என்னுடைய கணக்கை செட்டில் செய்யும் முன்னால் படப் பிரதிகளை வாங்கக்கூடாது என்று புதுதில்லியில் உள்ள செய்த விளம்பரத்துறைக்கு எழுதப் போவதாக மிரட்டினேன். அப்படி நான் எழுதியிருந்தால் படப் பிரதிகள் விற்பனையாகாது என்பது அவர்களுக்கும் தெரியும். கையெடுத்துக் கும்பிட்டார்கள். செய்தி விளம்பரத் துறை படத்தை வாங்கிய உடன், எனக்கு பாக்கித் தொகையில் ஒரு பகுதியைக் கொடுப்பதாக எழுதிக் கொடுக்க முன்வந்தார்கள். ஏமாளியான நான் அவர்கள் விசுவாமானவர்கள் என்று கருதி ''எழுத வேண்டிய தில்லை உங்களை நம்புகிறேன் பிரதிகள் விற்றதும் சொன்னபடி பணத்தைக் கொடுங்கள்'' என்று சொன் னேன். ஆனால் அந்தப் பேர்வழிகளோ எனக்குத் தெரியாமலே படத்தை விற்று பணத்தையும் வாங்கிக் கொண்டார்கள். நீண்ட நாளுக்குப் பிறகு இதைக் கேள்விப்பட்ட நான் மீண்டும் அவர்களுக்கு டெலி போன் செய்தால், கோர்ட்டுக்குப் போ என்று சொல்லி விட்டார்கள். கோர்ட்டுக்கும் போயிருக்கிறோம்.

குறிப்பு:

1. தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத் தலைவரும், என் குடும்ப நண்பருமான தோழர் செந்தில் நாதன் இந்த வழக்கை எங்களுக்காக வாதாடினார். வெற்றி கிடைத்தது. சம்பந்தப்பட்ட தயாரிப்பாளர்களிடம் இருந்து 10,000 ரூபாய் வந்தது.

2. ''ஊருக்குள் ஒரு புரட்சி'', பாரதிதாசன் பல்கலைக் கழகத்தில் பாடநூலாய் இருந்ததாய் கேள்வி. கேள்வி என்று சொல்வதற்குக் காரணம் சம்பந்தப் பட்ட பல்கலைக் கழகங்கள் ஒரு எழுத்தாளரின் படைப்புகள் பாடநூலாக வைக்கப்படுவதை அவருக்கு தெரியப் படுத்துவதே கிடையாது.

# 12

# அதிகப் பிரசங்கித்தனம்...

## கேள்வித்தீ

கல்பனா மாத இதழுக்காக நான் எழுதிய குறுநாவல், 'ஊருக்குள் ஒரு புரட்சியாக' 'தேவி'யில் வந்துவிட்டது. என்றாலும், இப்படித் தாங்கள் கேட்டு எழுதப்பட்ட நாவல் வெளிவரமுடியாமல் போனதற்காக அந்த இதழை பிரசுரித்த நியு செஞ்சுவரி பிரசுரத்தின் நிர்வாகிகளான தோழர்கள் ராதாகிருஷ்ணன், குசேன் ஆகியோர் மிகவும் வருத்தப்பட்டார்கள். இரண்டு மூன்று மாதங்களுக்குப் பிறகு, என்னை என் அலுவலகத்தில் சந்தித்தார்கள். எப்படியோ, தவறு நடந்துவிட்டது என்றும், நான் உடனடியாக ஒரு குறுநாவலை ''கல்பனா''விற்கு எழுதித்தர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். அவர்கள் நினைத்தால் என்னை ஓரம் கட்டியிருக்கலாம். ஆனால் அவர்கள் மார்க்சிய மனிதநேயத் தொண்டர்கள்.

மனம்விட்டுப் பேசினோம். பின்னர் கல்பனாவில் எல்லோரும் பேசுகிற மாதிரி ஒரு நாவல் எழுதவேண்டும் என்று சிந்தித்தேன்.

பொதுவாக, நான் கதைகளோ அல்லது நாவல்களோ எழுதும்போது, பல்வேறு சம்பவங்களை சுமார் ஒரு மணிநேரம் வரை நினைத்துப் பார்பேன். இந்த முயற்சியில் பல கதைக்கருக்கள் மனதுக்குள் உருவாகும். இவற்றில் எதை எழுதலாம் என்று சமூக நோக்கத்தோடு கணக்குப் போடுவேன். இப்படி நான் சிந்தித்தபோது, கிராமப் புறங்களில் நடைபெறும் தனியார் பள்ளிக்கூட சங்கதிகள் நினைவுக்கு வந்தன. இப்போதாவது இந்த பள்ளி நிர்வாகிகளின் ஆட்டமும் பாட்டமும் ஓரளவு அடங்கியிருக்கிறது. ஆனால் 15 ஆண்டுகளுக்கு முன்பு இவர்களுக்கு இவர்களே எஜமானவர்கள்; ஆசிரியர்களுக்கு சரியாக சம்பளம் கொடுக்க மாட்டார்கள். அத்தைமகன், மாமாபிள்ளை, பெரியம்மா பேரன், சின்னம்மா புருஷன் ஆகியவர்கள் தான் பள்ளியில் ஆசிரியர்களாக இருப்பார்கள். நியாயம் கேட்கும் ஆசிரியர்கள் எல்லா விதத்திலும் அடிபட்டுப் போவார்கள். எங்கள் ஊர் பள்ளிக்கூடத்தில் ஒரு ஆசிரியைக்கு அப்போதைய சம்பளம் 400 ரூபாய். அந்த அம்மாவுக்கு மானேஜர் 100 ரூபாய் கொடுத்தார். அந்த ஆசிரியை '400 ரூபாயாச்சே' என்று கேட்டார். உடனே, அந்த மானேஜர் 'நீ வயலுக்கு களைவெட்டப் போனால் முப்பது ரூபாய் தானே சம்பளம். அதைவிட நான் மூன்று மடங்கு அதிகமாக சம்பளம் அழுகிறேனே' என்று சிரித்துக்கொண்டே சொன்னாராம். போதாக்குறைக்கு, அந்த ஆசிரியை

தனது சர்டிபிகேட்டை வேற இந்த நிர்வாகியிடம் கொடுத்திருந்தார். ஒரு பள்ளிக் கூட மானேஜர் இறந்ததும் அவரது இரண்டு மகன்களும் மானேஜர் வேலை யாருக்கு என்று போட்டா போட்டியில் இறங்கினார்கள். இறுதியில் உறவினர்கள் முன்னிலை யில் மானேஜ்மென்ட் உரிமை ஏலம் போடப்பட்டது. ஏலத்தில் அதிகத் தொகை கேட்ட தம்பிக்கு பள்ளி நிர்வாகம் கொடுக்கப்பட்டது. இந்த ஏலத்தை முதன் மையாக வைத்து ஆசிரியர் போராட்டத்தைச் சித்தரிக் கும் ''கேள்வித்தீ'' என்ற குறுநாவலை எழுதி கல்பனா வுக்கு கொடுத்தேன். ஆசிரியர்கள் சமூகத்தில் இன்னும் இந்த நாவல் பேசப்படுகிறது.

'கல்பனா' மாத இதழ் இன்றைய அசிங்கமான மாத நாவல்களைப் போல் அல்லாமல், தரமான நாவல்களைக் கொடுப்பதற்காக உருவானது. ஒரு நல்ல நோக்கம் கூட எப்படி தோற்கடிக்கப்படும் என்பதற்கு இந்த இதழின் ஆசிரியத்தனமும் அதற்கு உடன்பட்டுப் போன நிர்வாக முறைமையும் காரணங் கள். எடுத்த எடுப்பிலேயே அசோகமித்திரன், சா.கந்த சாமி என்று தெரியாத பாணியில் எழுதப்பட்ட நாவல்களை வெளிப்படுத்தினார்கள். பின்னர் வாசகர் வட்டம் என்ற பெயரில் பல்வேறு நகரங்களில் கூட்டங்கள் போட்டு எழுத்தாளர் ஜெயகாந்தனுக்கும் அவரது விசிறிகளுக்கும் மேடை கொடுத்தார்கள். இதற்காக பேச்சாளர்கள் போக்குவரத்து, கூட்டச் செலவு எல்லாம் கல்பனா இதழின் தலையில் கட்டப் பட்டது. அது நஷ்டப்பட்ட போது, வாசகர்கள் மேல் பழிபோடப்பட்டது. இந்த இதழை மட்டும் ஒழுங்காக

நடத்தியிருந்தால், இதற்கென்று இருந்த இடதுசாரி வாசர்கள் மத்தியில் இன்றும் அது கம்பீரத்துடன் உலா வந்து கொண்டிருக்கும். ஆனால் வாசகர் சந்திப்புக்கள் என்ற 'அதிகப்பிரசங்க' செலவுகள் இந்த இதழை சந்திக்கு கொண்டு வந்து இறுதியில் அதன் குரல்வ ளையை நெறித்துவிட்டன. நான் எழுதிய "கேள்வித் தீயும்" பொன்னீலன் எழுதிய "கொள்ளைக்காரர்கள்" குறுநாவலும் இதற்கென்று இருந்த வாசர்களிடம் நல்ல பெயரை வாங்கிக் கொடுத்தன. ஆனாலும் டு லேட். அழகியல்வாதிகள் என்று கருதப்படுபவர்களுக்கு இது 'டு லெட்' செய்யப்பட்டதால் கடைசியாக எழுதிய எங்களால் எதுவும் செய்ய முடியவில்லை. ஆனாலும் கல்பனா ஒரு அற்புதமான முயற்சி.

## இவர்களின் உலகம்

'இந்தியா டுடே'யில் அதன் ஆசிரியர் திரு. மாலன் கேட்டுக் கொண்டதற்கு இணங்க ஒரு சிறுகதை எழதப்போனேன். வழக்கம்போல் கடற்கரையில் உட் கார்ந்து சிந்தித்தேன். முன்பு பஞ்சாயத்து விஸ்தரிப்பு அதிகாரியாக பார்த்த ஆட்சித் தலைவரை, மாவட்ட அதிகாரிகளின் பார்வையில் பார்த்தேன். பல்வேறு நிகழ்ச்சிகள் நினைவுக்கு வந்தன. பொதுவாக மாவட்ட நிர்வாகம் செக்குமாடு மாதிரி ஆட்சித் தலைவரையே சுற்றிச் சுற்றிவரும். செகரட்டேரியட்டில் டெப்புடி செகரட்டிரிகளாக கிடக்கும் தூங்குமூஞ்சிகள் கூட மாவட்ட கலெக்டராகி மாவட்டங்களில் ஆட்சித் தலைவர்களாகி சக்கைபோடு போடுவார்கள். அண்மை யில்கூட ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத் திற்கு நான் போயிருந்தபோது, ஆட்சித் தலைவர்

காருக்கு என்று ஒரு மைதானத்தில் பாதி இடத்தை அடைத்து வைத்திருந்தார்கள். அவரைப் பார்க்கப் போகும் எவரும், காரை அந்த சின்னச் சுவர் கேட்டிற்கு அப்பால் நிறுத்தி விட்டுத்தான் போகவேண்டும். இத்தகைய சுல்தான் கோடுகள் இன்னும் நமது நிர்வாக வளாகங்களில் வரையப்பட்டுத்தான் வருகின்றன. இந்த நிகழ்ச்சியும் மனதுக்குள் வந்தது. இதை வைத்து ''இவர்களின் உலகம்'' என்ற சிறுகதையை எழுதினேன். தோழர் மாலன் ஒரு வரியைக்கூட சிதைக்காமல் அப்படியே பிரசுரித்தார். இந்தக் கதைக்கு நல்ல பேர்.

## மூன்று வரி விமர்சனம்

இந்தக் கதை பிரசுரமானதை விட என்னைப்பற்றி நண்பர் மாலனே மூன்று வரிகளில் எழுதியிருந்த விமர்சனம் எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்தது. 'பகிரங்கமான கிண்டலுக்கும் அதற்குள் மறைமுகமான எதிர்ப்புக் குரலுக்கும் பேர் போனவை சமுத்திரம் சிறுகதைகள்' என்று எழுதியிருந்தார். இதுதான் என்னைப் பற்றி நானும் கொண்டிருக்கும் கணிப்பு. இந்தக் கதையை பல வாசக நண்பர்கள் படித்திருப்பார்கள் என்ற அனுமானத்தில் இதனை எப்படி உருவாக்கினேன் என்பதை இதோ பகிர்ந்து கொள்கிறேன்.

## கொள்ள வேண்டியவை - தள்ள வேண்டியவை

மாவட்ட அதிகாரிகளுக்கு குறிப்பாக வருவாய்த் துறை நண்பர்களுக்கு கலெக்டரே உலகம். ஒரு வேடிக்கையான கதை கூடச் சொல்லுவார்கள். ஒரு டாவாலிப் பியூன் ஆட்சித் தலைவர் வீட்டுக் கிணற்றில் ஒரு தவலையைக் கட்டி தண்ணீர் மொண்டு கொண்டு

இருந்தாராம். கயிற்றை இழுத்து குடம் பாதி தூரம் வந்துவிட்டது. அந்தச் சமயம் பார்த்து ஒரு கிளார்க் வந்து அந்த ஆட்சித்தலைவர் மாற்றப்பட்டார் என்றும், புது ஆட்சித் தலைவர் பொறுப்பேற்க வந்திருக்கிறார் என்றும் சொன்னாராம். உடனே நமது டவாலி அந்தப் பாத்திரத்தை அப்படியே கிணற்றில் போட்டுவிட்டு புது கலெக்டர் இருக்கும் இடத்திற்கு ஓடினாராம். இப்படி, கலெக்டர்களுக்கே கொத்தடிமை என்று ஆகிப்போனவர்கள், ரயில் நிற்பதை பார்த்துவிட்டு, ''கலெக்டர் அம்மா வருகிற ரயிலை ஸ்டேஷன் மாஸ்டர் எப்படி நிறுத்தி வைக்கலாம்?'' என்று நினைக்கிறவர்கள். கலெக்டர் அம்மா ரயில்வே மாடிப் படிகளில் ஏறினால் உடம்பு வலிக்கும், என்று எண்ணி, அந்த ரயிலை வேறு பிளாட்பாரத்திற்கு விடக்கூட நினைக்கிறார்கள்'' என்று எழுதினேன். இந்த ஒரு வரியில் இவர்கள் கலெக்டர் என்ற மூல ஸ்தானத்தை எப்படி மார்க்கண்டன் மாதிரி பிடித்துக் கொண்டார்கள் என்பதை சித்தரித்தேன்.

## நோக்க வேண்டியவை...

இரண்டாவதாக ஒரு கதையை அல்லது அதில் வரும் கேரக்டர்களை எந்த எழுத்தாளனும் கொச்சைப் படுத்தக் கூடாது. முதலில் மனம்போன போக்கில் எழுதலாம். பின்னர் அதை நன்றாகப் படித்து சமூக நோக்கத்தோடு திருத்த வேண்டும். இந்தக் கதையில் டெப்புடி கலெக்டரான இளைஞன் இளவயது கலெக் டர் அம்மாவுக்கு வரவேற்பு மாலையை கழுத்தில் போடுகிறான். இதனைச் சொல்லிவிட்டு அந்த அம்மா ''புருஷன் போடுவது மாதிரி மாலையைப் போடு

கிறானே'' என்று கோபப்படாமல் அந்த மாலைக்காக மனதுக்குள் மகிழ்ந்து வெளியே ஒப்புக்காக மறுத்துப் பேசினாள்'' என்று எழுதியிருந்தேன். இப்படி எழுதி யதை பிறகு அடித்துவிட்டேன். காரணம் கலெக்டர் என்ற பதவி எப்படி நோக்கப்படுகிறது, அந்த பதவிக்குரியவர்கள் எப்படி நடந்து கொள்கிறார்கள் என்பதை சித்தரிக்கும் நோக்கத்தைக் கொண்டதே தவிர, அந்தப் பதவியில் இருப்பவர்களை மலிவாகக் கொச்சையாக விமர்சனம் செய்ய வேண்டும் என்ற நோக்கமல்ல. ஆகையால்தான் கலெக்டர் அம்மாவைப் பற்றி எந்த இடத்திலும் தரம் குறைத்து நான் விமர்சிக்கவில்லை.

மூன்றாவதாக ரயிலில் தன்னுடன் வந்த ஒரு தொழிலதிபரை கலெக்டர் அம்மா ''யு ஆர் அன் இன்டரஸ்டிங் பெர்சானாலிட்டி'' வீட்டுக்கோ ஆபீ சுக்கோ டெலிபோன் செய்து விட்டு வாருங்கள் என்கிறாள். இதில் ஆபீசுக்கோ என்று போட்டதன் நோக்கம், இந்த இளமங்கை, அந்த தொழிலதிபரை காதல் கண்ணோட்டத்தோடு கூப்பிடவில்லை என்ப தைச் சித்தரிக்கவும் பொதுவாக பெரிய அதிகாரிகள் பெரிய முதலாளிகளின் நலன்களையே பேணுவார்கள் என்பதை எடுத்துக்காட்டவும் போடப்பட்ட வார்த்தை. எழுத்தில் வீணான அர்த்தம் வராமலும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

நான்காவதாக அதிகாரவர்க்கம் என்பது ஆட்சித் தலைவரோடு நின்று விடவில்லை என்பதை விளக்கும் வகையில் மாவட்ட அதிகாரிகள் கலெக்டர் தங்களை தப்பாக நினைத்துக் கொண்டாரோ என்று கவலைப்

படும் போது 'கலெக்டர் அம்மா' சீப் செகரட்டரி தன்னைத் தப்பாக நினைத்திருப்பாரோ என்று கவலைப் படுவதாக இறுதியில் எழுதினேன்.

ஐந்தாவதாக எந்தச் சிறுகதையிலும் ஒரு சமூகப் பிரச்சினை தெளிவாகவே உணர்த்தப்பட வேண்டும். இந்தக் கதையில் ''குட்டாம் பட்டியில் மனுநீதி நாளுக்காக அதிகாரிகளின் வரவிற்கு பொதுமக்கள் காத்திருந்தாலும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள், கலெக் டர் மனதில் ஒரு நல்லெண்ணத்தை ஏற்படுத்தும் முன் னால் எந்த வேலையும் செய்வதில்லை என்பது போல் நின்றார்கள்'' என்று குறிப்பிட்டிருந்தேன். அதிகாரிக ளின் மனப்போக்கால் குடியானவர்களின் எதிர்பார்ப்பு எப்படி வீணாகிறது என்பதையும் இன்றைய அதிகார வர்க்கம் எப்படி செயல்படுகிறது என்பதையும் சித்த ரிப்பதே இந்தக் கதையின் நோக்கம். ஒரு கதையை எழுதி விட்டு அதைப் படிக்கும் போது எவையெல்லாம் எனக்கு போர் அடிக்கிறதோ அவை எல்லாம் வாசர்க ளுக்கும் போர் அடிக்கும் என்று நான் அடித்து விடுவேன் அல்லது திருத்திவிடுவேன்.

என்னடா இது, சமுத்திரம் சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளாமல் அவர்பாட்டுக்கு லெக்சர் அடிக்கிறாரோ என்று நீங்கள் நினைக்கலாம். சமுத்திரம் கட்டுரை இளைய தலை' முறை எழுத்தாளர்களுக்கு வழி காட்டக் கூடியவை என்று வாசக நண்பர்களின் கடிதங்கள் நண்பர் வட்டத்தில் அடிக்கடி பிரசுரம் ஆவதால் ஏற்பட்ட கோளாறு இது. இந்தக் கோளாறு இனிமேல் வராமல் பார்த்துக் கொள்வேன்.

*குறிப்பு : என்னைப் பொதுவாக மனமாறப் பாராட்டும் பெரியவர் வல்லிக்கண்ணன் அவர்கள் இந்த கதையின் பிலாக்கணத்தைக் கண்டித்தார். சமுத்திரத்திற்கு ஏன் இந்த வாத்தியார்த்தனம் என்று நண்பர் வட்டம் மூலமாகக் கேட்டார்.*

# 13

# யமுனைக் கரையில்...

'நண்பர் வட்டத்தின்' அக்டோபர்-நவம்பர் 90 இதழில் என்னைப்பற்றி ஆசிரியர் எழுதிய குறிப்பு, என் மனதை நெகிழச் செய்தது. பல்வேறு தோழர்கள், குறிப்பாக எழுத்தாளர்களும், எனக்குப் பல கடிதங்கள் எழுதினார்கள். ஏற்கனவே ஐந்தாண்டுகளுக்கு முன்பு எனக்கு ஏற்பட்ட தொலைக்காட்சி அனுபவத்தை வைத்து, 'சத்திய ஆவேசம்' என்ற நாவலை எழுதி னேன். இதேபோல், ஒருவேளை இதன் இரண்டாவது பாகமாக ஒரு நல்ல நாவல் வரலாம். ஒரு எழுத்தாள ருக்கு ஏற்படும் சோதனை படைப்பிலக்கியத்தில் சாதனையானால் அதுவும் நல்லதற்கே. என் அனுபவங் களை வைத்து அப்படிப்பட்ட சாதனையை நிகழ்த்த முடியுமா என்பதை காலம்தான் பதில் சொல்ல முடியும்.

இதற்கிடையே இரண்டு மாதங்களுக்கு முன்பு தில்லியில் ஒரு மாத காலம் தங்கியிருந்த அனுபவத்

தைப் பற்றி நான்கு சிறுகதைகளை எழுதினேன். அந்த அனுபவத்தை நண்பர்களிடம் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

## பயிற்சியோ-பயிற்சி

மத்திய-மாநில அரசுகளில் அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும் பயிற்சி வழங்குவதற்கென்று பல உருப்படாத அமைப்புக்கள் உண்டு. அதில் ஒன்று புதுதில்லியில் உள்ள ஒரு அமைப்பு. இங்கே இருப்பவர்கள் வாழ்வதற்காக எங்கெல்லாமோ பணியாற்றுபவர்கள், பயிற்சிக்காக 'சாகடிக்கப்படுவார்கள்'. யாருக்குமே தெரியாது. ஏதோ ஒரு கிளார்க் போடுகிற 'நோட்டில்' செக்ரட்டரி கையெழுத்துப் போட்டு அனுப்பி விடுவார் - லாட்டரி குலுக்கல் மாதிரி. ஆனால் லாட்டரியோ அதிர்ஷ்ட சீட்டுக்கள். பயிற்சியோ துரதிருஷ்ட சீட்டுக்கள். தற்காலிகமாக சிலரை கழித்துக்கட்டவும், சிலர் புதுதில்லி வேலைகளைப் புதுப்பித்துக் கொள்ளவும், இத்தகைய பயிற்சி உதவுவதுண்டு. இந்த வகையில் நானும், பயிற்சிக்காக அனுப்பப்பட்டேன். ஏற்கனவே இந்த அமைப்பில் மூன்று தடவை "பயிற்சி" பெற்றவன் நான். நான்காவது தடவையும் என்னை அனுப்பினார்கள். வெறுப்போடு சென்ற நான் பயிற்சி அதிகாரிகளின் பிரதிநிதியாக செயல்பட்டேன். அந்த வகையில் எனக்கு மகிழ்ச்சி. ஆனால் பயிற்சிக்கு வந்த அனைவருமே பயிற்சியாளர்களை பயிற்சிவிக்கும் தகுதியும் வயதும் பெற்றவர்கள். அந்த 'ஏட்டுச்சுரைக்காய்கள்' பேசும் போது தூங்குவதைத் தவிர வேறு வழியில்லை. என்றாலும், அரசு அலுவலகங்களில், துருப்பிடித்துக்

கிடந்த சொந்த 'பைல்களைத்' துடைப்பதற்கு எங்களைப் போன்றவர்களுக்கு பயிற்சி என்ற பெயரில் ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. இந்தப் பயிற்சி என்பது எப்படி நாட்டிற்கோ அல்லது சம்பந்தப்பட்டவர்களின் வீட்டிற்கோ உதவாதது என்பதுமல்லாமல், விவஸ்தை கெட்டது என்பதை ஒரு 'சட்டயர்' சிறுகதையாய் எழுதியிருக்கிறேன். பயிற்சிக்கு சென்ற ஒரு தமிழக அதிகாரி, பயிற்சி நிறுவன இயக்குனரைப் பார்த்து "28ம் தேதியே பயிற்சி முடிய வேண்டும்" என்கிறார். நிறுவனத்தலைவரோ, 31ம் தேதிதான் முடியும் என்கிறார். இருவருக்குமிடையே வாக்குவாதம். கடைசியில் நிறுவன இயக்குனர் 28ம் தேதி எதற்காக பயிற்சி முடிய வேண்டும் என்று கேட்க, அந்த அதிகாரி, 28ம் தேதி முடிந்தால்தான், நான் உடனே தில்லியிலிருந்து சென்னைக்குப் புறப்பட்டு, 31ம் தேதி பொறுப்புக்களை ஒப்படைக்க முடியும். ஏனென்றால் 31ம் தேதி நான் ரிட்டயர்டு ஆகிறேன் என்கிறார். இப்படி உள்நாட்டுப் பயிற்சிகள் அல்ல, வெளிநாட்டுப் பயிற்சிகளுமே இந்த லட்சணத்தில்தான் நடைபெறுகின்றன.

## சூடாமணியின் கண்ணீர்

புதுதில்லியில் அந்த அமைப்பிடம் உள்ள ஹாஸ்டலில் நாங்கள் தங்கினோம். பம்பாய்த் தொலைக்காட்சி ஆசிரியை, அஸாம் செய்தி விளம்பரத்துறை அதிகாரி, பெங்களூர் பத்திரிகை தகவல் அதிகாரி, முதலிய பல்வேறு மாநில அதிகாரிகள் ஒன்று சேர்ந்து ஒரு மாதம் இருந்தோம். இது புதிய அனுபவம்; இதே விடுதியில் பத்திரிகை இயல் பற்றி பட்டம் வாங்குவதற்காக பல மாணவ, மாணவிகள் இருந்தனர்; தமிழக

மாணவிகளும் நான்கைந்துபேர் இருந்தனர். இந்த இளைய தலைமுறையினரிடம் ஒரு அளவு கூட சமூகப்பிரக்ஞை என்பது இல்லை. பல ''தோழர் களோடு'' ஒருத்தி செல்வதும், ஒருத்தியுடன் பல ''தோழர்கள்'' செல்வதும், இரவெலாம் கும்மாளம் அடிப்பதும், தோழர், தோழிகள் ஒருவரை விட்டு ஒருவர் காதல்-காட்சிகள் மாறுவதும், சகஜம். (ஒரு வேளை பாதிக்கிழடுகளான எங்களுக்கு, பொறாமை யாகக் கூட இருந்திருக்கலாம்!) ஆனாலும் இந்த இளம் பட்டாளம் நடந்து கொண்ட முறை என்னவோ போலிருந்தது. குறிப்பாக அச்சம், மடம், நாணம், பயிற்பு என்ற அரும்பெரும் குணங்களைக் கொண்ட தாக கருதப்படும் நமது தமிழ் தாய்க்குலம், காஞ்சமாடு கம்பம் புல்லுக்குள் போன கதையாய் நடந்து கொண்ட விதம், பிரச்னையை இன்னும் ஆழமாய்ச் சிந்திக்கத் தூண்டியது. அதேசமயம் அங்கேயிருந்த ஒரு உத்திரபி ரதேச சமையல்காரப் பெண், அசல் தமிழ்பெண் போல் நடந்து கொண்டாள். எங்களுக்கும், மாணவர்களுக் கும் சப்பாத்திகள் வழங்கும்போது, அந்த இளம் பெண் ஒரு மூதாட்டி போல தாய்மைப் பரிவோடு நடந்து கொண்ட போக்கும், பாட்டாளி கலாச்சாரம் இன்னும் கெட்டுப் போகவில்லை என்ற எண்ணத்தை எனக்குத் தோற்றுவித்தது. நெருப்புக்கு நெருப்பாகவும், நீருக்கு நீராகவும், அந்தப் பெண் பல்வேறு தரப்பினரிடமும் பட்டும் படாமலும் அதே சமயம் தாய்மைப் பாசத்துட னும் நடந்து கொண்டாள். இப்படிப்பட்ட இரண்டும் கெட்டான் பெண்மையையும், இப்படித்தான் இருக்க வேண்டும் என்பதில் உறுதியாய் இருந்த சமையல் காரப் பெண்ணின் பெண்மையையும், இவற்றின்

முரண்பாடுகளையும் விவரித்து ஒரு சிறுகதை எழுதினேன். குங்குமம் கேட்டதற்கிணங்க, இந்த கதையை அனுப்பி வைத்தேன். பிரசுரமானது என்பதை சொல்லத் தேவையில்லை.

இந்த ஒருமாத இடைவெளி என்னை முழுக்க முழுக்க ஒரு கலைஞனாக்கியது. வானொலியிலும் பின்னர் தொலைக்காட்சியிலும் மாட்டிக் கொண்டு யந்திரமயமான வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்த எனக்கு, புதுதில்லியில், ஒருமாத காலம், பிரிந்துபோன கலைக்கண்கள் மீண்டும் பொருந்தின. ஒவ்வொரு நிகழ்ச்சியையும், கலாபூர்வமாகப் பார்த்து சமுதாய ரீதியில் சிந்தித்து மனோதத்துவ ரீதியில் எழுத முற்பட்டேன். இந்த ஒருமாத கால அனுபவம் பாலைவன பசுஞ்சோலை போன்றது. சென்னைக்குத் திரும்பியதும், செயற்கை வாழ்வு பிடித்துக் கொண்டது. இதிலிருந்து எப்படியாவது மீள வேண்டும் என்ற ஒரு உத்வேகமும், தொலைக்காட்சியில் செய்திகளைப் போடுவதில் காட்டும் ஆழத்தையும் அறிவையும் இனிமேல் இலக்கியத்தில் காட்ட வேண்டும் என்ற ஒரு எண்ணமும் ஏற்பட்டுள்ளது.

### சடையன்

அஸாம் தொலைக்காட்சி அதிகாரி ஒருவர் ஒரு தலைமை அதிகாரியைப் பற்றி சொல்லிச் சொல்லிச் சிரித்தார். அந்தத் தலைமை அதிகாரி அலுவலகக் காரில் போவாராம். காரை ஒருபக்கமாக நிறுத்திக் கொண்டு, டிரைவரை வாழைப்பழம் என்ன விலை என்று கேட்கச் சொல்வாராம். பக்கத்துக் கடையில்

கேட்டால் கார் இருப்பதால் விலையைக் கூட்டுவார்கள் என்று, ஒரு கிலோ மீட்டருக்கு அப்பால் தென்படும் ஒரு கடையை நோக்கி டிரைவரை நடக்கச் சொல்வா ராம். அந்த டிரைவரும் ஒரு கிலோ மீட்டர் நடந்து, வாழைப்பழம் விலை கேட்டு மறு கிலோமீட்டர் நடந்து இவரிடம் விலையைச் சொல்லுவாராம். மீண் டும் காசை வாங்கிக்கொண்டு, கடைக்குப் போவாராம். வாழைப்பழத்தோடு திரும்பியவரைப் பார்த்து, ''இந் தப் பழம் நல்லா இல்ல. பழத்தைக் கொடுத்து காசு வாங்கிட்டுவா'' என்று பழையபடி இரண்டு கிலோமீட் டர் நடக்க வைப்பாராம். இப்படிப்பட்ட பின்னணி யில், ஒரு டிரைவர், அதிகாரி முன்னாலேயே வாழைப்ப ழத்தை விழுங்கிவிட்டு, தனது சட்டைப்பையிலிருந்து காசை எடுத்துக் கொடுத்தாராம். இதனால் ஆண்டானுக் கும், அடிமைக்கும் பலத்த சண்டையாம். இப்படிப் பட்ட இந்த அதிகாரி அலுவலகத்திலும், ஏடாகோட மாம். இப்படிப்பட்டவர்களை நாம் சென்னையில் சடையன் என்று சொல்வதுண்டு.

## இடைவேளை - கதையாகாத நினைவுகள்

புதுதில்லியில் எனது பயிற்சி என்னைப் பொறுத்த படைப்பிலக்கியத்தில், அதற்குரிய சிந்தனைக்கு ஒரு பொற்காலம். ஏகப்பட்ட கதைகள், உவமானங்கள், என்னை அறியாமலே வந்தன. மைனாக்குருவி நடப்ப தைப் பார்க்கும்போது, கர்ப்பிணிப்பெண் நடப்பது போல் தோன்றியது. மேக்கப் போட்ட ஒரு 'அதிகாரி-பாட்டியின்' இளமைக்காலத்தைக் கிளறியபோது, அவர் தன்னை மறந்து, தனது காதல் திருமணத்தை விளக்கிய விதம், இன்னும் மனதைவிட்டு அகல

வில்லை. அதே சமயத்தில் என்னை மாதிரியான நடுத்தர வயதுக்காரர்கள், 'சின்னஞ்சிறுசுகள்' காதலிப் பதை அலட்சியப்படுத்துவதுபோல் லட்சியப்படுத்திய தும், லேசாக கண்களைச் சிமிட்டியபடியே ஒவ்வொரு வரும் தனக்குள்ளேயே ஒன்றையோ, பலதையோ தேடிப்பார்த்ததையும் நினைத்தபோது, இந்த இளைய தலைமுறையினரும், பிற்காலத்தில் இப்படித்தானே நினைக்கப் போகிறார்கள் என்ற சிந்தனை ஏற்பட்டு, வாழ்க்கை சுவையானதாகவும், ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், நினைவுகளின் சாம்பலின்றி வேறில்லை என்பது போலவும் தோன்றியது. ஒவ்வொரு நிகழ்ச்சியி லும், ஒரு கலை நயத்தைக் கண்டேன். ஒவ்வொருவர் பேச்சிலும், மனித உணர்வு சர்வதேசத் தன்மை வாய்ந்தது என்பதை உணர்ந்தேன். மொழி, மதம், என்பவை வெறும் போர்வைகளே என்பதை முன்பே கண்டிருந்தாலும், இந்த வயதில் கண்டது ஒரு அருமையான அனுபவம். இப்போது நினைக்கும்போ தும், மனது அடித்துக் கொள்ளுகிறது. அந்த ஒருமாத கால பொற்காலத்தில் இருந்து, மீண்டும் தமிழக கற்காலத்தில் விழுந்து கிடக்கிறேனே. விழுவதும் எழுவதற்கே - அதாவது எழுதுவதற்கே!

'நண்பர் வட்டத்தில்' எனக்கு சாகித்ய அகாதமி விருது கிடைத்ததைப் பாராட்டி எழுதிய பாங்கு என்னை மிகவும் நெகிழ வைத்தது. சாதாரணமாக ஒரு நட்புப் பத்திரிகையின் தோழமை வியப்புக்குரியது அல்ல. ஆனாலும், இந்த விருது பற்றிச் சில வகுப்புவா திகள், சில தமிழ் வியாபாரிகள் மேற்கொண்ட அணுகுமுறை விருதுக்குள்ளான எனது ''வேரில்

பழுத்த பலா'' என்ற நாவலில் உள்ளடக்கம் இன்னும் பூதாகாரமாக இருக்கிறது என்பதை உறுதிப்படுத்தியது. வகுப்புவாதிகளால் நடத்துவது போல் தோன்றும் கணையாழி பத்திரிகை 'இட ஒதுக்கீடு இலக்கியத்திற்கும் வந்து விட்டது' என்று எழுதியது. அதன் அடுத்த இதழில் ஐயருக்குப் பூணூல் இருப்பதால் விருது வருவதில்லை என்ற அர்த்தத்தில் ஒரு கடிதம் புலம்பியது. போதாக்குறைக்கு சுஜாதா என்னை வாழ்த்துவது போல் வாழ்த்தி வீழ்த்துவது போல் வீழ்த்துவதற்கு முயற்சி செய்வது போல் அதே பத்திரிகையில் 'கமெண்ட்' அடித்திருந்தார். இப்படி எழுத்துக்களைப் பூணூலை வைத்து அளப்பது இன்னும் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், பனையேறிகளை முன்னோர்களாகக் கொண்ட நான், என் இலக்கியத்தைப் பனை நாராலேயே அளக்கிறேன். பூணூலைவிடப் பனை நார் வலுவானது.

இப்படி வகுப்புவாதம் என்மீது ஏவி விடப்பட்டாலும், என் நாவலை விமர்சிக்காமல் என்னை விமர்சிப்பது முஸ்தபா என்ற பேருக்குள் ஒளிந்திருக்கும் எழுத்தாளருக்கு ஒரு பொழுதுபோக்கானாலும், நான் ஒரு வகுப்புவாதியாகவில்லை. காரணம் 'வேரில் பழுத்த பலா'வில் வரும் பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த சரவணன் என்ற கதாநாயகன் போலவே நானும் நடந்து கொள்ள விரும்புகிறேன். அந்தக் கதாநாயகன் இதேபோன்ற வகுப்புவாதிகளால் அல்லலுக்கு ஆளானாலும், அவன் வகுப்புவாதியாக மாறவில்லை. சந்தானம் என்ற பிராமண இளைஞனின், நியாயமற்ற வேலையையும், அதிகாரி என்ற முறையில், மனிதாபி

மானத்தின் உந்தலில் அவன் கட்டிக்காத்தான். சில பேர்வழிகள், வகுப்புவாத சாக்கில் என்னைச் சாடினாலும் இதை ஒரு வகுப்புவாத பிரச்னையாக பெரியவர்கள் எடுத்துக் கொள்ளவில்லை என்பது மகிழ்ச்சிக்குரியது. எடுத்துக்காட்டாக நான் விருது பெற்ற செய்தியை மிகச்சிறப்பாக வெளியிட்டவர் எனது நண்பரும் தினமலர் ஆசிரியருமான கிருஷ்ணமூர்த்தி. அதை இருட்டடிப்பு செய்தவர் ஒருவேளை எனது தூரத்து உறவினராக இருக்கக் கூடிய 'மாலைமுரசு' ஆசிரியர் ராமசந்திர ஆதித்தன். பழைய கசப்பான அனுபவங்களையும் மறந்து எனது பேட்டியை தான் பெற்ற குழந்தைக்குக் கிடைத்த பேறு போல பெருமிதத்துடன் போட்டவர் 'ஆனந்த விகடன்' ஆசிரியர் திரு. பாலன். பிற்படுத்தப்பட்ட சமூகத்தில் எழுச்சியுற்று வரும் சக்திகளை அடையாளம் காட்டும் இந்த நாவலுக்கான விருதை வெறுப்போடு அணுகியவர்களில் தமிழர் 'தளபதி'யும் ஒருவர். ஆகையால், இந்த அகாதமிப் பரிசில், வகுப்புவாத முலாம் பூசுவது சந்தர்ப்பவாதிகளுக்கு ஒரு சாக்கு என்பதும் அதே சமயம், அந்த வகுப்புவாதம் இன்னும் இருக்கத்தான் செய்கிறது என்பதையும் கண்கூடாகக் கண்டேன்.

## வேரில் பழுத்த பலா

'வேரில் பழுத்த பலா' என்ற குறுநாவல் வலம்புரி ஜானை ஆசிரியராக கொண்ட 'மெட்டி' என்ற மாத நாவல் இதழில் வெளியானது. ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த ஒரு பெண் முதன்முதலாக மத்திய அரசு அலுவலகத்திற்குள் வேலைக்கு வரும் போது மேல் ஜாதிக்காரர்கள் - குறிப்பாக பிராமணர்கள் அவளை

என்ன பாடுபடுத்துகிறார்கள் என்பது நாவலில் ஒரு அம்சம். சொல்லுக்குச்சொல் ''காலனிக்காரி, காலனிக் காரி,'' என்று அவளை ஒரேயடியாய் பிரமை அடிக்க வைத்து, அவள் தகுதிக்கோ, தேர்வுக்கோ குறைந்த, டெஸ்பாட்ச் செக்ஷனில் போடுகிறார்கள். இதே சமயம், சர்வீஸ் கமிஷன் தேர்வு மூலம் வராத சந்தானம் என்ற இளைஞனை அக்கவுண்டண்ட் வேலையில் வைக்கிறார்கள். இந்தச் சமயத்தில் பின்தங்கிய சமூகத்திலிருந்து வந்த சரவணன் என்ற இளைஞன் அந்த ஆதிதிராவிடப் பெண்ணை மேன்படுத்துகிறான். அவளுக்குரிய செக்ஷனைக் கொடுக்கிறான். ''கான்ட்ராக்டர்களுடன் உடன்பட மறுக்கிறான். இதனால், அலுவலக மேல்ஜாதிக்காரர்களாலேயே அல்லலுக்கு உள்ளாகிறான். ஆனாலும், அரசு விதிமுறைகளுக்கு மாறாக போராட்டத்திற்கு தயாராகிறான்.

விருதுக்கான பாராட்டு விழாவில் என்னை வாழ்த்திப்பேசிய பலர் கிராமத்தில் பிற்படுத்தப்பட்ட மக்கள் தூசி படிந்த கண்ணாடி மாதிரி; அதை துடைக்க வேண்டுமே தவிர உடைக்கக்கூடாது'' என்று சரவணன் தன் சகாக்களுக்குச் சொன்ன அறிவுரையை மேற்கோள் காட்டிப் பேசினார்கள். இந்த நாவலில் வருவதுபோலவே, ஒருவேளை என்மீதுள்ள பிரச்சார தூசியை துடைத்து என்னைப் பிரகாசப்படுத்துவதற்குப் பதிலாக நான் ஏற்கனவே சொன்ன பேர்வழிகள் என் முகத்தை உடைப்பதையே ஒரு பிரச்சாரமாக வைக்கிறார்கள். இதே நாவலில் சரவணன், மேல்ஜாதி ஜூனியர்களைப் பார்த்து, ''அரசாங்க வேலை என்பது உங்களுக்கென்ன பட்டா போட்ட சொத்தா'' என்று

கேட்பான். இதேபோல் நாடகம், நாட்டியம், கதை, நாவல் போன்றவற்றில் தங்களுக்குத்தான் பட்டா என்று நினைத்துக் கொண்டிருக்கும் அசோகமித்திரன், இந்திரா பார்த்தசாரதி போன்ற எழுத்தாளர்கள் தங்களது பட்டா பறிபோய்விட்ட ஆத்திரத்தில் நாவலை விமர்சிக்காமல், நாவல் ஆசிரியரை விமர்சிக்கிறார்கள். 'வேரில் பழுத்த பலா'வில் வருவது போலவே, ஒரு மர்மத்தனமாக கான்ட்ராக்டருக்கு உடன்போக விரும்பிய அலுவலக சகாக்கள் போல், அசோகமித்திரனை இலக்கிய மூலஸ்தானத்தில் வைக்க வேண்டும் என்றால், சா. கந்தசாமி, வண்ணநிலவன், போன்ற சூத்திரர்களை துவாரக பாலகர்களாக நிறுத்துவதற்கு முயற்சி செய்கிறார்கள். அதேசமயத்தில் இந்த வகுப்பு வாதிகளை நினைக்கும்போது மனித நேயத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட, என் மீது உயிரையே வைத்திருக்கும் பிராமண சமூகத்தைச் சேர்ந்த மதுராந்தகம் குமார், ஒரு பத்திரிகை என்னை இருட்டடிப்புச் செய்ததால் துடித்த கவிஞர் பீஷ்மன், எழுத்தாளர் சி.ஆர். கண்ணன், தீபம் திருமலை ஆகியோரை நினைத்துப் பார்க்கிறேன். வகுப்புவாதம் அதுவும் மாறும். என் அனுபவத்தில் வலுக்கட்டாயமாக வந்திருப்பது ஆச்ரியம் தான். ஆனாலும், கஸ்தூரி ரங்கன் போன்ற ஒரு பிராமண எழுத்தாளர் பீஷ்மன் போன்ற மனிதாபிமானிகளை விழுங்கிவிடும் கேந்திர நிலையிலிருக்கிறார் என்பதும் உண்மை. வேரில் பழுத்த பலாவில் மேலதிகாரியைப் பாராட்டிக் கொண்டே அவனுக்கு குழி பறிக்கும் சகாக்கள் போல், தினமணிக் கதிரில் என்னை இலக்கியவாதி என்று சொன்ன கஸ்தூரி ரங்கன், 'கணையாழி'ப் பத்திரிகையில், அதே

பேனாவால் 'இடஒதுக்கீடு' என்கிறார். எனது நாவலில் வரும் 'பட்டா போட்ட' கதாபாத்திரங்கள் போல், இந்த பூணூல் போட்ட மனிதர்கள் தங்களைக் காட்டிக் கொள்ளாமலே முஸ்தபா என்ற முஸ்லீம் பெயருக்குள் நுழைந்து கொண்டு பேடித்தனம் செய்கிறார்கள்.

எந்த நாவலில் என்ன எழுதினேனோ, அந்த சமாச்சாரங்கள் எனக்கே நடந்து விட்ட பின்னணியில் அந்த நாவல் எப்படி உருவானது என்பதைப் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

*1976*ம் ஆண்டு வாக்கில் சென்னை வானொலி' நிலையத்தில் வானொலி என்ற பத்திரிகைக்கு ஆசிரிய ராக இருந்தேன். வானொலி நிகழ்ச்சிகளை மட்டுமே கட்டம் போட்டுச் சொல்லிக் கொண்டு *10* ஆயிரம் பிரதிகளுடன் உலா வந்த அந்தப் பத்திரிகையில் வானொலி உரையாடல்கள், கட்டுரைகள், கவிதைகள், நாடகங்கள் ஆகியவற்றைப் பிரசுரித்து 50 ஆயிரம் பிரதிகளாகக் கூட்டினேன். ஆனால், ஒப்பந்தக்கார பிரிண்டர் ஒத்துழைக்கவில்லை. பயன் என்கிற வார்த்தை பய என்று வந்துவிட்டதே என்று கேட்டால் 'ய்' டைப் இல்லை' என்பார். இப்படிப்பட்ட ஆசா மிக்கு எனது அலுவலக அக்கவுண்டண்டும் ஒருசில ஊழியர்களும் உடன்பட்டனர். ஒரு ஊனமுற்ற கருப்பு இளைஞருக்கு நான் புதிய பொறுப்பைக் கொடுத்த போது முணுமுணுத்தனர். ஒரு, பெண் ஊழியை, ''சொஸைட்டியில் அந்தஸ்து இல்லாதவங்கல்லாம் ஆபிஸரா வந்துட்டாங்கண்ணு'' என் காதுபடவே சொன்னார். இறுதியில், அந்த கான்ட்ராக்டரைத் தூண்டி விட்டு நான் வேறு அச்சகத்திடம் இச்சகமாகி விட்டேன்

என்று புகார் மனுக்களை எழுத விட்டார்கள். அந்த ஆசாமியின் கடிதங்களுக்கு விளக்கம் கொடுக்கவே எனக்கு நேரம் போதவில்லை. போதாக்குறைக்கு இந்த காண்ட்ராக்ட் ஆசாமியின் சட்டகர் மத்திய அரசின் பிரசுரத்துறையில் துணை இயக்குநர். எனது நிலைய இயக்குநர் எம்.எஸ். கோபாலுக்கு என் மீது அனுதாபம் இருந்தாலும், அதைவிட பயம் அதிகம். சக்தி வாய்ந்த மேலதிகார வாய்மொழி உத்தரவுகளுக்கு அடங்கிப் போனார். ஆனாலும் நான் விட்டுக் கொடுக்கவில்லை. ஒப்பந்த விதிகளின்படி பிரிண்டருக்கு கடுமையான அபராதம் விதித்து, 'கமாண்டோ' நடவடிக்கைகளில் இறங்கினேன். இறுதியில் அந்தப் பத்திரிகை கோவையில் உள்ள அரசு அச்சகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த அனுபவத்தை வைத்து எழுதப்பட்ட நாவல்தான் 'வேரில் பழுத்த பலா'. பத்தாண்டுகளுக்குப் பிறகு இந்த பழைய அனுபவத்தை சமூக நோக்கோடு அணுகி விஞ்ஞான ரீதியாகப் பரிசீலித்து, அதை ஒரு நாவலாக வடிவம் கொடுத்தேன். இந்த நாவல் விமர்சனம் செய்யப்பட்டால், நம் சமூகத்தின்முன் இப்போதும் பூதாகரமாக வியாபித்திருக்கும் வகுப்பு பிரச்னைகளையும் வர்க்கப் பிரச்சனைகளையும் அடையாளம் கண்டு கொள்ள உதவும். ஆனால் அவர்களோ நிஜத்தை விட்டு நிழலை அடிக்கிறார்கள். நிழலை அடிப்பவன், எப்படிப்பட்டவன் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.

புதுதில்லியில் சாகித்ய அகாதமியில் நான் ஆற்றிய உரை அனைவராலும் பாராட்டப்பட்டது. தில்லித் தமிழ்ச்சங்கம், பாவேந்தர், பாரதிதாசன் பாசறை,

சந்திப்புமுனை போன்ற அமைப்புகள் எனக்கு சிறப் பான வரவேற்பை அளித்தன. தமிழில் சாகித்ய அகாதமி பெற்ற ஒருவருக்கு இப்படி எல்லா அமைப்பு களும் போட்டி போட்டு ஜாதி வித்தியாசம் இல்லாமல் நடந்து கொண்டது இதுவே முதல் தடவை என்று பலர் சொன்னார்கள்.

எழுத்தாளன்தான், கதாபாத்திரங்களைத் தீர்மா னிப்பான். ஆனால், பரிசுக்குப் பிறகு ஏற்பட்ட விமர்சன அமளியில் தேசிய வாதியான நான் வகுப்பு வாதியாகாமல் விஞ்ஞானபூர்வமாக நடந்து கொண்ட தற்கு நான் உருவாக்கிய சரவணன் என்ற பாத்திரம் ஒரு காரணம். ஒரு பாத்திரமே படைப்பாளனின் போக்கைத் தீர்மானிப்பது ஒரு அதிசயந்தான். ஆனா லும் உண்மை.

இந்த உணர்வை உணர்த்துவதற்கு தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஒரு பின்புல சக்தியாக விளங்கியது. செம்மலர் பத்திரிகை எனக்கு வாழ்த்து தெரிவித்ததோடு என்னை தண்டித்த கனையாழியை கண்டித்து எழுதியது. த.மு.எ.ச. தலைவர்களான தோழர்கள் கே.எம். முத்தையா, செந்தில்நாதன், அரு ணன், எஸ்.ஏ. பெருமாள் எனக்கு பக்கபலமாக நின்றார்கள். தமிழ்நாடு கலை, இலக்கிய பெருமன்றம் எனக்குப் பாராட்டு விழா நடத்தியது. தமிழ்நாடு காங்கிரஸ் (ஐ) கட்சியின் தலைவர் வாழப்பாடி ராமமூர்த்தியும், மக்களின் மரியாதைக்குரிய ஜி.கே. மூப்பனாரும் எனக்குத் தனித்தனியே விழா நடத்தி கௌரவித்தார்கள். கவிஞர் இளந்தேவனும் தனியாக விழா நடத்தினார். த.மு.எ.ச. கிளைகள் பலவற்றிலும்

எனக்கு விழாக்கள் நடத்தினார்கள். என் ஆஸ்தான பதிப்பகமான மணிவாசக நூலகத்தின் உரிமையாளர் ச. மெய்யப்பனும், அவரது சகாக்களான நாராயணன், குருமூர்த்தி ஆகியோர் இந்தப் பரிசு தங்களுக்குக் கிடைத்ததாகவே நினைத்தார்கள். தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சியின் தோழர்கள் தியாகராஜன், து. ராஜா, மகேந்திரன் ஆகியோர் மகிழ்ச்சி தெரிவித்தார்கள். பெல் நிறுவன ஊழியர்கள், வருமான வரித்துறை ஊழியர்கள், சங்கங்கள் இதே மாதிரி இயங்கின. கல்வி, விகடன் போன்ற மூத்த பத்திரிகைகள் வாழ்த்துகளை தெரிவித்தன. தினமணிக் கதிரும் அப்படியே... எழுத்தாளர் விக்கிரமன் அவர்கள் தாம் தலைமை ஏற்றிருக்கும் அகில இந்திய எழுத்தாளர் சங்கத்தின் சார்பில் ஒரு தேநீர் விழா கூட்டத்தை ஏற்படுத்தினார்... எழுத்தாளர்கள் பாலகுமாரன், இந்துமதி உட்பட பல எழுத்தாளர்கள் வாழ்த்திப் பேசினார்கள்... 'இலக்கியவீதி' சார்பில் அதன் தலைவர் இனியவன் செங்கையில் ஒரு பாராட்டு விழாவை நடத்தினார்... டாக்டர் தமிழ்க்குடிமகன் உட்பட பல சிந்தனையாளர்கள் வாழ்த்து தெரிவித்தார்கள்... டாக்டர் ரபீர்சிங், டாக்டர் குருநாதன், டாக்டர் இளவரசு, கவிஞர் இளவேனில் போன்ற சான்றோரும், பொன்னீலன், செ. யோகநாதன், கந்தர்வன், மேலாண்மை பொன்னுச்சாமி, கு. சின்னப்ப பாரதி, டி. செல்வராஜ், பிரபஞ்சன், திலகவதி போன்ற சமூக நோக்குள்ள படைப்பாளிகள் எனக்கு வாழ்த்துக் கடிதங்கள் எழுதினார்கள். கவிஞர் கே.சி.எஸ். அருணாசலம், டாக்டர் தயானம் பிரான்சிஸ் உட்பட தமிழகம் எங்குமிருந்தும் நூற்றுக்கணக்கான வாழ்த்துக் கடிதங்கள் வந்து குவிந்தன. என் சிந்தனையை வளமைப்

படுத்திய என் தோழர் இளவேனில் சத்திரியனில் என்னைப் பாராட்டி ஒரு கட்டுரையே எழுதினார். இவையே சாகித்ய அகாதமியை விடப் பெரியது. இவன் கிடக்கான் கணையாழிக்காரன்.

குறிப்பு : *அண்மையில் வெளியான சுபமங்களா பேட்டியில் திரு. கஸ்தூரி ரெங்கன் இட ஒதுக்கீட்டை அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை என்று பூசி மழுப்பினார்... என்மீதும், என் இலக்கிய முயற்சி மீதும் மரியாதை இருப்பதாகவும் தெரிவித்தார்.*

# 14

## செய்திக்காக போனபோது...

அகில இந்திய வானொலி நிலையத்தின் மூத்த செய்தியாளர் என்ற முறையில், நான் தமிழகம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்யலாம். வானொலி என்பதால், மாவட்ட நிர்வாகத்திடமிருந்து, கார், ஜீப், சர்க்யூட் மாளிகை ஆகியவற்றிற்கு குறைச்சலில்லை. செல்லுமிடமெல்லாம் கிட்டத்தட்ட ஆட்சித் தலைவர் தவிர அத்தனை அதிகாரிகளும் என்னுடன் வருவ துண்டு. இதில் ஒரு லாபமும் உண்டு, நட்டம் உண்டு. இவர்களின் முன்னிலையில் மக்கள் தங்களது குறை களை கூறுவது கடினம். அதே சமயம் வானொலிக்கு உரிய செய்திகள் தாராளமாக கிடைக்கும். இந்த 'பந்தாக்களையும்' ஊடுருவி நான் மக்களை ரகசியமா கச் சந்தித்து பல்வேறு சங்கதிகளை விவாதித்திருக்கி றேன். அந்த அடிப்படையில் ஒருசில சிறுகதைகளை எழுதியிருக்கிறேன். எழுதப்போகிறேன்.

## குடிக்கள்ளன்

அண்மையில் ஆறு தென் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்தேன். மதுரைக்கு அருகே கிடாரிப்பட்டி என்ற ஒரு கிராமம். அங்கே நிலச்சீர்திருத்த சட்டத்தால் கையகப்படுத்தப்பட்ட மிகுதி நில விநியோகம் பற்றி கண்டறியச் சென்றபோது ஒரு ரசமான செய்தி கிடைத்தது. அந்தக் கிராமத்திலும் அதன் சுற்றுப்புற வட்டாரத்திலும், முக்குலத்தோரில் கள்ளர் பிரிவினர் அதிகம். இதற்கு அடுத்தபடியாக முஸ்லீம்கள் இடம் பெறுகிறார்கள். நாடார்கள், மூப்பனார்கள் ஆகியோரும் உள்ளார்கள். பொதுவாக இந்தப் பகுதியில் சாதிச் சண்டை கிடையாது. சமயச் சண்டையும் கிடையாது. அதுவும் இந்து-முஸ்லீம் என்ற பேதமே எள்ளளவும் இல்லை. இதற்கு காரணம் குடிக்கள்ளன் என்ற ஒரு முறைமை அந்தப் பக்கம் இன்னும் பழக்கத்தில் இருக்கிறது. அதாவது சிறுபான்மையினரான ஒவ்வொரு முஸ்லீம் குடும்பத்திற்கும் ஒரு கள்ளர் குடும்பம் அதன் நல்லது கெட்டதுகளை கவனித்துக் கொள்ளும். இதற்குக் குடிக்கள்ளன் குடும்பம் என்று பெயர். இந்தக் குடும்பத்திற்கும் சம்பந்தப்பட்ட முஸ்லீம் குடும்பத்திற்கும் சகோதர பந்தம் உண்டு. இந்த முறை, இத்தகைய இரு குடும்பங்களுக்குமிடையே காலங்காலமாக இருந்து வருகிறது. உதாரணமாக ஒரு முஸ்லீம் குடும்பத்துப் பெண்ணை வெளியூரில் கட்டிக்கொடுத்து, அங்கே அவள் பல இன்னல்களுக்கு ஆளானபோது, அவளுடைய சொந்த ஊர் குடிக்கள்ளன் தனது சகாக்களோடு அவளது புகுந்த வீட்டிற்குப் போய் அவளைத் துன்புறுத்தியவர்களை

மரத்தில் கட்டி வைத்து விட்டார். ஒரு முஸ்லீமிற்கும், ஒரு கள்ளருக்கும் ஏதோ ஒரு தகராறு வந்தால், இந்த குடிக்கள்ளன், முஸ்லீம் பக்கம் நிற்பார். இவருடைய கல்யாணத்தில் அந்த முஸ்லீம் வீட்டிற்கு முதல் வெற்றிலை, அந்த முஸ்லீம் வீட்டு கல்யாணத்தில் இவருக்கு முதல் பாக்கு. இந்த செய்தி தமிழகத்தில் பெரும்பாலோருக்கு குறிப்பாக நமது எழுத்தாளர்களுக்கு நிச்சயம் தெரியாது. இந்த முறை, இப்போது அருகிக் கொண்டிருந்தாலும், இது மேலும் புதுப்பிக்கப் பட வேண்டிய ஒன்று. இதை வைத்து குடிக்கள்ளன் என்ற தலைப்பில் செம்மலரில் கதை எழுதினேன். அந்தக் கிடாரிப்பட்டியில் பார்த்தவர்களையெல்லாம் கேரக்டர்களாக்கி கதையாக்கி விட்டேன். அண்மையில் நான் எழுதிய கதைகளில் எனக்கு பிடித்த கதை இது.

## எழுத வேண்டிய இன்னொரு உலகம்மை

இதே போல் பசும்பொன் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்தபோது அரசு கடனுதவி பெற்ற ஒரு விவசாயத் தொழிலாளரின் ஊருக்குப் போனேன். இப்படி கடனுதவி பெறுகிறவர்களுக்கு, அவர்கள் அந்தக் கடனை திருப்பிக் கட்டினாலும் கட்டாவிட்டாலும் அவர்கள் இறக்க நேரிட்டால் இந்த கடனோடு இணைந்த இன்சூரன்ஸ் பணமான மூவாயிரம் ரூபாயை கொடுக்க வேண்டும். நான் குறிப்பிடுகின்ற தொழிலாளர் பாம்பு கடித்து இறந்தவர். அரசு விதிப்படி பாம்பு கடித்து இறந்தவர் குடும்பத்திற்கு மூவாயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும். இப்படி இரண்டு வகையில் தேறிய ஆறாயிரம் ரூபாயை, ஒரு நல்ல அதிகாரி, அவரது மனைவியைத் தேடி பிடித்து வாங்கிக்

கொடுத்து விட்டார். அந்தப் பெண்ணை நான் நேரில் விசாரிக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இதன்படி அந்தக் கிராமத்திற்குப் போனேன். எங்களைப் பார்த்தவுடனேயே அந்தப் பெண் கண்கலங்கினாள். முப்பது வயதுக்கு உட்பட்டவர். எங்கிருந்தோ வந்த அவள் மாமியார் - அதாவது இறந்தவரின் அம்மா, விறகுக் கட்டைப் போட்டுவிட்டு வாயிலும் வயிற்றிலும் அடித்து மகனுக்காக அழுதார். பிறகு, அந்தப் பெண்ணிடம் கொடுக்கப்பட்ட ஆறாயிரம் ரூபாயில் மூவாயிரத்தை வசதியாக உள்ள தனது கல்யாணமான மகள்களுக்கு கொடுக்க வேண்டும் என்று அழுதபடியே சொன்னார். ஆனால், மருமகள் காரி, மிக கண்ணியமாகவும், அதேசமயம் அழுத்தம் திருத்தமாகவும், ''இது என் ஐயாகூடப் பிறந்த அத்தை. இவுங்கள கண்கலங்காம காப்பாத்தணும் என்கிறதுக்காகத்தான் இங்கே இருக்கேன். இல்லன்னா இந்த ரூவாயோட பக்கத்து ஊர்லே இருக்குற எங்க அண்ணந்தம்பியோட போறதுக்கு எனக்கு அதிக நேரம் ஆகாது. நான் பிறந்த வீட்டுலேயே பிறந்த என் அத்தைய விட்டுட்டு நான் போகமாட்டேன். இந்த ஆறாயிர ரூபாய் இருந்தால்தான் பாங்கு வட்டியில் காலத்தை தள்ளலாம்'' என்றாள். கோதிமுடிந்த கொண்டை, மொச்சக்கொட்டை மாதிரியான உடம்பு, அழுத்தமான பார்வை அப்பப்பா..... இப்படி ஒரு கவுரமான துயரச் சுமையை சுமந்து கொண்டு கண்ணியமாகப் பேசும் ஒரு பெண்ணை நான் கண்டதில்லை. இதைக் கதையில் வர்ணிக்கப் போவதால் இத்துடன் விட்டு விடுகிறேன். இந்தப் பெண் மறுமணம் செய்துகொள்ள வேண்டும் என்று நான் வாதாடினேன்.

முதலில் அவள் லேசாய் சிரித்து விட்டு தேவையில்லை என்றாள். நான் வற்புறுத்தியபோது ''சரி, அந்த பேச்சு விட்டுட்டு அடுத்த பேச்சு பேசுங்க'' என்று கண்டிப்பு டன் கூறினாள். அந்தக் கண்டிப்பைக் கண்ணகி இவளைவிட அதிகமாகக் காட்டியிருக்க முடியாது. எனக்கு கண்ணகித் தன்மை பிடிக்காது என்றாலும், இந்தக் கோனார்ப் பெண் காட்டிய கற்பின் வலிமை, கண்மூடியபடியே காலங்கடந்த கணவனை நினைத் துப் பார்த்த சோகமயமான லாகவம், அத்தை மீது கொண்ட பாசம், சுயமரியாதையை விட்டுக் கொடுக்கா மல் அதிகாரிகளிடம் விடுத்த வேண்டுகோள் என்னை ஒரு கலக்கு கலக்கிவிட்டது. 'ஒரு கோட்டுக்கு வெளியே' நாவலில் வரும் உலகம்மை மாதிரியான வள். இவளை வைத்தே மிகப்பெரிய நாவல் ஒன்றை எழுதலாம். துவக்கத்தில் சிறுகதையாகச் செய்யலாம் என்று நினைத்திருக்கிறேன். இந்த 'பாழும் வேலையில்' மாட்டிக் கொண்டதால் அடுத்தவர்கள் சொல்வதைத் தான் செய்தியாக்க நேரம் இருக்கிறதே தவிர நான் சொல்ல வேண்டியதைச் சொல்ல காலநேரம் கிட்ட வில்லை.

## சுபேதாவா - சும்மாவா

வானொலி செய்தியாளர் என்ற முறையில் பல் வேறு தரப்பு மனிதர்களைப் பார்க்கும் அனுபவம் கிட்டுகிறது. ஒருதடவை, எழுத்தாளர் பொன்னீலன் அவர்களிடம் என்னால் எழுதமுடியவில்லை என்று குறைப்பட்டபோது ''நாட்டின் நாடித்துடிப்பையே அறிந்து கொள்ளும் நிலையில் இருக்கும் நீங்கள் இப்படியா சொல்வது'' என்றார். அவர் சொல்வது

போல் நாட்டின் நாடித்துடிப்பை அறியமுடிகிறதோ இல்லையோ, அரசியல்வாதிகளின் ஆசாபாசங்களை அவர்களைச் சார்ந்திருக்கும் ''ஒட்டுண்ணிகளை'' கண்டறியமுடிகிறது. பெருந்தலைவர்கள் புதுதில்லியிலிருந்து வரும்போது பத்திரிகையாளர்களோடு நானும் விமான நிலையத்திற்குப் போவதுண்டு. அப்போது பல மாறுபட்ட கட்சித் தலைவர்களின் வரவேற்பின் போதெல்லாம் ஒரு சமூக 'சேவகியை' அடிக்கடி பார்ப்பதுண்டு. விசாரித்துப்பார்த்ததில், இந்த சமூகத்துக்கு ஆகாத சேவகி பெரிய பெரிய தலைவர்களுக்கு பொன்னாடை போர்த்தி அதை வீடியோவிலும் கேமராவிலும் எடுத்துக்கொள்ள செட்டப் செய்வாளாம். இவள் தலைவர்களுடன் அந்தரங்கமாக உரையாடுவது போல் பத்திரிகைகளில் பலதடவை புகைப்படங்கள் வந்திருப்பதை நானே பார்த்திருக்கிறேன். இவ்வளவுக்கும் இவள், விபச்சார தடுப்பு சட்டத்தின் கீழ் பலதடவை கைதுசெய்யப்பட்டவளாம். இத்தகைய் குற்றம் புரிந்த ஒரு பெண் சமூக சேவையில் ஈடுபடக்கூடாது என்ற அற்பத்தனமான எண்ணம் எனக்கில்லை. ஆனால் இவள், அதே தொழிலை இப்போது நாகரிகத்தோடும் கவுரவத்தோடும் செய்து வருகிறாள் என்பது தான். ஒரு தடவை குறிப்பிட்ட ஒரு கட்சியின் உள்ளூர் தலைவர்கள், இவளை ஓரங்கட்ட முயற்சித்தார்கள். ஆனாலும் அவள், எப்படியோ டில்லியிருந்து வந்த பெரிய தலைவரோடு காரில் ஏறிச்சென்று, மேடைக்கே போய், அவருக்கு இணையாக மக்களைப் பார்த்து ஆசீர்வதித்திருக்கிறார். அதுமட்டுமல்லாமல், அந்த பெரிய தலைவரிடம், கிசுகிசுத்து, இந்த உள்ளூர் தலைவர்கள் கட்டாயத்தின்

பேரில் நீட்டிய காப்பியை சுவைத்து சுவைத்து குடித்திருக்கிறாள். எந்தக் கட்சியிலும் உறுப்பினராக இல்லாத இந்த அம்மையார் இப்படி பல அரசியல் கட்சிகளின் ஒட்டுண்ணியாக இன்றும் இருந்து வருகிறாள்.

மாநிலத்தலைவர்களைப் பார்த்து தேசிய தலைவர் 'அந்த மேடத்திற்கு காப்பி கொடுங்கள்' என்ற கட்டளையை இடச்செய்தவள். இப்படி இனி என்னெல்லாம் செய்யப்போகிறாளோ. இந்த கேரக்டரை வைத்து ''சுபேதாவா சும்மாவா'' என்று நான் எழுதிய சிறுகதை இதயம் பேசுகிறது பத்திரிகையில் பிரசுரமாயிற்று.

# 15

# தானாய்த் தோன்றிய தாழம்பூ

'தினந்தந்தி'யிலிருந்து தொடர்கதை எழுதும்படி ஒரு அழைப்பு வந்தது. நான் சிறிது தயங்கினேன். 'தினத்தந்தி' வாசகர்கள் அளவிற்கு கீழே இறங்கிப் போய் கதை சொல்ல முடியுமா என்று யோசித்தேன். வழக்கமான பார்முலா கதைகளை படித்துப் பழக்கப் பட்ட அடிமட்ட வாசகர்களிடம் என் எழுத்து எடுப டாது என்பது இப்போதும் என் நம்பிக்கை. ஆனால், பல நண்பர்கள் இப்படிப்பட்ட சமூகத்தின் அடிமட்ட வாசக, வாசகிகளின் மனோபாவத்தையும் ரசனையை யும் மாற்றுவதற்காவது நான் எழுத வேண்டும் என்றார்கள். அதோடு ஒரு எழுத்தாளனின் எழுத்து சராசரி வாசகனுக்கு புரிந்தால்தான் அந்த எழுத்திற்கு ஒரு நோக்கம் உண்டு என்றும் வாதித்தார்கள். இறுதி யில் நானும் தொடர்கதை எழுத உடன்பட்டேன்.

அடையாறில் கடற்கரையில் உட்கார்ந்து தொடர்

கதையின் மையக்கருத்து பற்றி யோசித்தேன். சாதாரண மக்களிடம் நிலவும் விவகாரங்களாக இருந்தால் நன்றாக இருக்குமே என்று நினைத்தபோது ஒரு சம்பவம் நினைவுக்கு வந்தது. அதுவே தாழம்பூ என்ற பெயரில் இப்போது தொடர்கதையாகி பின்னர் நாவலானது.

## அடிபட்ட நானும் - அடித்துவிட்ட அவளும்

சென்னை திருவான்மியூரில் நான் வீடு கட்டிய காலம். நான்கு ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சி. நாங்கள் குடியிருக்கும் தெரு கிட்டத்தட்ட ஒரு காடு மாதிரி. நாலே நாலு வீடுகள் இன்னும் உள்ளன. எஞ்சிய மனைகள் நீதிமன்ற வழக்கில் வைக்கப்பட்டுள்ளன. ஆகையால் இந்தப் பக்கம் திருடர்களுக்கும், திருடிகளுக்கும் கும்மாளம். ஒரு தடவை இருபது வயதுள்ள ஒரு இளம் பெண்ணும், அவளை விட ஐந்து வயது பெரிய ஒருத்தியும் ஒரு கோணி மூட்டையோடு வந்து, எதிர் வீட்டில் போட்டிருந்த இரும்பு முட்கம்பிகளைப் பிய்த்து கோணிமூட்டையில் போட்டார்கள். இதைப் பார்த்த என் மனைவி அவர்களை 'சத்தம் போட்டார்'. ஆனால் அந்தப் பெண்களோ என் மனைவியை நெருங்கி, கிட்டத்தட்ட அடிக்கப் போயிருக்கிறார்கள். என் மனைவியும் பயந்து போய் வீட்டுக்குள் ஓடிவிட்டார். மாலையில் வீட்டுக்கு வந்த என்னிடம் நான் என்னமோ அந்தப் பெண்களை அப்படி இரும்புக்கம்பிகளை பிய்க்கும் படி சொன்னதுபோல, மனைவியின் கோபதாபப் பேச்சுகளுக்கு உள்ளானேன். ஆனாலும் நான் அந்த

நிகழ்ச்சியை மறந்து விட்டேன். என்றாலும் அடுத்த மறுநாளே அந்த இரண்டு பெண்களும் அந்தப் பக்கம் வந்து அதே வீட்டில் மிச்சம் மீதி இருந்த இரும்புக் கம்பிகளைப் பிய்த்தார்கள். என் மனைவி என்னை உசுப்பினார். நானும் புறநானூற்று வீரன் போல் அவர்களை நெருங்கி அதட்டினேன். அவர்கள் எதிர்த் துப்பேசியதால், ஒருத்தி கையிலிருந்த கோணிப் பையை பிடித்து இழுத்தேன். இதற்குள், இன்னொருத்தி என்னை மல்லாக்க தள்ளி இரும்புக்கம்பியால் ஒரு அடி அடித்து விட்டு ஓடிவிட்டாள். இதற்குள் என் மனைவி போலீசுக்கு போன் செய்ய, போலீஸ்காரர்கள் ஆட்டோரிக்ஷாவில் ஓடி வந்தார்கள். மாயமாய் மறைந்த அந்தப் பெண்களை கண்டுபிடிக்க அவர்க ளோடு நானும் போனேன். இறுதியில் ஒரு இரும்புக் கடைக்குள் அந்தப் பெண்கள் உள்ளே போவதைக் கண்டதாக ஒருவர் சொன்னார். போலீஸ்காரர்கள் அந்தக் கடைக்குள் போகவில்லை. அது மாமூல் கடை. மாறாக என்னைப்பார்த்து ''ஒரு பொம்மனாட்டியை மடக்க முடியாமே ஏன் சார் விட்டே?.... வெளியில் சொல்லாதே சார் வெட்கம்'' என்று சொல்லிவிட்டு, போய் விட்டார்கள். நான் இதைக் கெட்டகனவாக நினைத்து மறந்திருப்பேன். ஆனால் வீட்டில் ஒரு சின்ன தகராறு வரும் போதெல்லாம் என் மனைவியும், என் மகளும் ''ஓங்கப் புத்திக்குத் தான்... குப்பத்துக்கா ரிகிட்டே அடிபட்டீங்க... அவளை உங்களால் ஒன் னுமே பண்ண முடியலே.... அவளை ஏதாவது பண்ணிட்டு அப்புறமா எங்களை திட்டுங்க'' என்றார் கள். அடிபட்டதை என்னால் மாற்ற முடியாது. ஆனால் மேற்கொண்டு ஏதாவது செய்ய வேண்டும். இல்லை

யென்றால் வீட்டில் சுய மரியாதையை புதுப்பித்துக் கொள்ள முடியாது என்ற இக்கட்டான நிலைமை. நானே தன்னந்தனியாய் அவளைக் கண்டுபிடித்து போலீசிடம் ஒப்படைக்க வேண்டும் என்று என்னுள் மறைந்திருந்த கிராமத்து மண் தூள்பரப்பியது. ஆனாலும் நகரத்தில் பழக்கப்பட்ட நான் ஒரு கையாளையும் கூட்டிக் கொண்டு அந்தப் பெண்கள் நடமாடும் பகுதிக்குப் போனேன். அவள் தனது வயதான உடம்பெல்லாம் ஆடிய தந்தைக்கு உணவூட்டுவதைப் பார்த்து மனம் நெகிழ்ந்தது. ஆனாலும் அதைக் கல்லாக்கிக் கொண்டு, அந்தப் பெண்ணை நானும் எனது கையாளும் சேர்ந்து பக்கத்திலிருந்த ஒரு போலீஸ்காரரிடம் ஒப்படைத்து, அவருடன் சென்று காவல் நிலையத்தில் அவளைப் பூட்டிவிட்டோம். எனது ஓரளவு பிரபலமான பேரையும், நான் இருக்கும் பதவியையும் கருத்தில் கொண்டோ என்னவோ, காவல் துறையினர் அவளிடம் கடுமையாக நடக்கத் தொடங்கினார்கள். அவளோ என்னைப் பார்த்து கையெடுத்துக் கும்பிட்டாள். அடிக்க ஓங்கிய அவள் கைகள், அனாதரவாக அல்லாடின. எனக்கு சொல்ல முடியாத துயரம். அவள் கண்களில் பொங்கிய கண்ணீரும், கூப்பிய கைகளும் என்னை நானே ஒரு அரக்கனாகப் பாவித்து குற்ற உணர்வில் துடிக்க வைத்தன. ஒரு மணிநேரத்திற்குப் பிறகு, ஒரு சப்-இன்ஸ்பெக்டர் என்னிடத்தில் வந்தார். அந்தப் பெண் 'சின்னச்சின்ன திருட்டுக்களை மட்டுமே செய்யக்கூடியவள் என்றும், ஒரு தள்ளாத தந்தையை கவனித்துக் கொள்ளும் பொறுப்பில் இருப்பவள் என்றும், அவ்வப்போது கள்ளச்சாராயம் விற்பவள் என்றும் சொல்லி விட்டு,

என் முகத்தைப் பார்த்தார். பிறகு அவளை என்ன செய்யலாம் என்பதுபோல் யோசனை கேட்டார். காவல் துறையினர் கண்டுபிடிக்க முடியாத குற்றங்களையெல் லாம் அவள் மேல் சுமத்தி, அவளை வேலூருக்கு 6 வருடத்திற்கு அனுப்பி வைத்து விடும் நிலைமையை யும் சுட்டிக்காட்டினார். அந்தப் பெண்ணை விடுவிக் கும்படி, நான் ஆலோசனை சொன்னேன். என்னுடைய புகாரையும் திரும்பப் பெற்றுக் கொண்டேன். இதனைச் சற்றும் எதிர்பாராத காவல்துறையினர் லாக்கப்பில் உள்ள அவளை என்னிடம் மன்னிப்பு கேட்க வைப்ப தற்காக கூட்டிவரப் போவதாகச் சொன்னார்கள். நான் மறுத்து விட்டேன். காரணம், அந்தப் பெண்ணை சிறுமையான ஒரு நிலையில் சந்திக்க நான் விரும்ப வில்லை. இப்படியாக தாழம்பூ தொடர்கதைக்கு மையக்கருத்து கிடைத்தது. இதில் சில திருத்தங்களை மேற்கொண்டு, அந்தப்பெண் கள்ளச்சாராயக்காரியாக ஆவதற்குரிய அடிப்படை காரணங்களையும் ஆங் காங்கே இணைத்து எழுதினேன்.

நான் எழுதிய 'தாழம்பூ' என்ற தொடர்கதையை 20 வாரங்களுக்குள் முடிக்க வேண்டும் என்று சொல்லி இருந்தார்கள். நானும் அதற்கு முன்னதாகவே முடித்து விடுவதாக வாக்களித்திருந்தேன். பட்டமேற்படிப்பு படித்தவர்களுக்கு எப்படி கணையாழிக்காரர்கள் இலக் கியவாதிகளோ, அப்படி எழுதப்படிக்கத் தெரிந்த சாதாரண மக்களுக்கு, நான் ஒரு ''இலக்கிய வாதிதான்'' என்று நினைத்ததால் எழுதுவதற்கே சங்க டப்பட்டேன். பெரும்பாலான இத்தகைய வாசகர்கள் எனது சிறுகதைகள் புரியவில்லை என்று சொல்லும்

போது ஆரம்பத்தில் மகிழ்ச்சியாக இருந்தது. (அப்போ நானும் இலக்கியவாதிதானே!)

இந்தத் தொடர்கதையை மிகவும் எளிமைப்படுத்தி நான் எழுதிக் கொண்டிருந்தாலும் அதில் வரும் நிகழ்ச்சிகள் அன்னக்காவடி மக்களின் அன்றாட வாழ்வில் நடைபெறுபவை. ஆகையால் என் இலக்கிய "தரத்தையும்" மீறி அந்தக் கதை தினத்தந்தி வாசகர்களால் ஆர்வமாகப் படிக்கப்படுகிறது என்பதை அறிந்ததும் நான் தப்பித் தவறிக் கூட "இலக்கியவாதியாக" இருக்கக்கூடாது என்று சபதம் மேற்கொண்டிருக்கிறேன். இது செக்ஸ்சோ அல்லது புனித காதலோ இல்லாமல், போலீஸ் கெடுபிடிகள், கள்ளச்சாராய காய்ச்சல்கள், பேட்டை ரவுடிகள், அலுவலக சித்திர குப்தர்கள் ஆகியவர்களைச் சித்தரிக்கும் இந்த நாவலை இருபது அத்தியாத்திற்குள் முடிக்க முடியாமல் முப்பதுக்கும் மேலே நகர்த்தினேன். தினத்தந்தி வாசகர்களுக்கு புதியதான இந்த கதை பெரிதும் வரவேற்கப்பட்டதால் நான் எத்தனை அத்தியாயங்கள் வேண்டுமென்றாலும் எழுதலாம் என்று சொல்லிவிட்டார்கள். ஆனாலும், நான் பழம் இனிக்கிறது என்பதற்காக கொட்டையோடு சேர்த்து சாப்பிட விரும்பவில்லை.

### கள்ளச்சாராயக் கலை

தாழம்பூவில் கள்ளச்சாராயம் காய்ச்சுதல் ஒரு பிரதான அம்சம். எப்படி காய்ச்சுகிறார்கள் என்பதையும் அதன் பின்னணியையும் தெரிந்து கொள்ளக் காய்ச்சல் லோகத்திற்கு போவதாகத் திட்டமிட்டேன்.

ஒரு சாராயக்காரர் என்னைக் கூட்டிக் கொண்டு போவதாக ஒப்புக்கொண்டார். எதற்கும் இரண்டு நாள் கழித்து பதிலளிப்பதாக குறிப்பிட்டிருந்தார். குறிப் பிட்ட அந்த நாளில் என்னைக் கூட்டிக் கொண்டு போக ஒரு நிபந்தனை போட்டிருந்தார். நானும் அவரோடு சேர்ந்து குடிக்க வேண்டுமாம். அப்போது தான் காய்ச்சலாளிகளுக்கு சந்தேகம் வராதாம். என் நோக்கம் தெரிந்தால் அங்கேயே என்னை வெட்டிப் போட்டுவிடுவார்களாம். நான் யோசித்தேன். ஒரு 'முடக்கு' குடிப்பதில் தப்பில்லை. ஆனால் அதுவே ஒரு விஷ சாராயமாக இருந்து கண்போய்விட்டால், ஒருவேளை அன்றைக்குப் பார்த்து போலீஸ் ரெய்டு நடந்து, அவர்கள் வலையில் பெரிய மீனான நான் அகப்பட்டு, பத்திரிகைகளுக்கு செய்தி போய் சாகித் திய அகாடமி எழுத்தாளர் குடிபோதையில் கைது என்று செய்திகளுக்கு செய்தியாகிவிடக்கூடாதே... எப்படியோ இறுதியில் கள்ளச்சாராயத்தில் கரை கண்ட ஒரு நண்பரை வைத்து, அந்தத் தொழிலின் ஊறல், காய்ச்சல், விநியோகம் ஆகிய முப்பெரும் நுணுக்கங் களை கற்றுக் கொண்டேன். சில குடிசைப் பகுதிகளுக் கும் சென்று இந்தத் தொழிலை இலை மறைவு காய் மறைவாகத் தெரிந்து கொண்டேன்.

இந்த அனுபவத்துடன், இன்னொரு அனுபவம் சேர்ந்தது. செங்கை மாவட்டத்தில் தமிழகமெங்கிலுமி ருந்து கொண்டுவரப்பட்ட சுமார் 500 போலீஸ்காரர்கள் கள்ளச்சாராய வேட்டையில் ஈடுபடுத்தப்பட்டனர். மூன்று நாட்கள் நடைபெற்ற இந்தச் சோதனையில் நூற்றுக்கணக்கான லிட்டர் ஊறல், பேரல்கள், முது

மக்கள் தாழி மாதிரியான கெட்டியான பானைகள் கைப்பற்றப்பட்டன. கள்ளச்சாராயம் கடத்திய இரண்டு கார்களும் பறிமுதல் செய்யப்பட்டன. ஒரு காரின் டிக்கி சாராய தொட்டி மாதிரியான அமைப்பாக மாற்றப்பட்டிருந்தது. காய்ச்சும் பானை மூன்று வகை. கீழே ஒன்று, மத்தியில் ஒன்று. அந்த மத்திக்கும் மத்தியில் ஒரு ஈயப் பாத்திரம்; அதற்கு மேலே குளிந்த நீரைக் கொண்ட ஒரு பானை, கீழே ஊறல். நெருப்பி னால் அது ஆவியாகி குளிர்ந்த பானையில் பட்டு சாராயமாக மாறி அலுமினியத் தட்டில் உள்ள டியூப் மூலம் வெளியே கேனில் வந்து விழும். இந்தத் தொழிலில் இப்போது விஞ்ஞான நுட்பம் புகுந்திருப்ப தாகவும் கேள்வி. குளிர்ந்த பானையில் தண்ணீரை அது சூடானதும் அடிக்கடி மாற்ற வேண்டும். அது சிரமம் என்று, இப்போது பம்ப்செட் தண்ணீரையே வாய்க்கால் மாதிரி அந்தப் பானை வழியாக விடுகிறார் களாம். ஊறல் கிக்காக 15 நாள் ஆகும். ஆனால் ஒரே நாளில் காரியத்தை முடிப்பதற்காக சில விஷங்க ளின் ஒரு சில சொட்டுக்களை விட்டு ஒரே நாளில் தேற்றி விடுகிறார்களாம். இந்த விஷச் சொட்டுக்கள் அதிகமானால் தான் அது விஷ சாராயமாக மாறுகிற தாம். ஸ்பெஷல் சாராயத்திற்கு ஊமத்தை விதைகளை ஒரு துணியில் போட்டு சாராயத்தின் மேல் ஒத்தடம் கொடுப்பார்களாம். ஒரு கிராமத்தில் ஒரு கிணற்றில் முக்காலடி உயரத்திற்கு சாராயத்தையே ஊற்றி வைத்தி ருந்தார்களாம்.

இத்தகைய அனுபவங்களை தாழம்பூவை நாவ லாக்கும்போது விரிவுபடுத்தி எழுதினேன். அதே

சமயம் எப்படி காய்ச்சலாம் என்ற ஒரு எண்ணத்தை கைத்தொழிலாக கற்றுக் கொடுக்காமல் சமூக பிரக்ஞை யோடு இவற்றை எழுத வேண்டும். இந்தத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு மாற்றுத் தொழில் கொடுத்தா லன்றி கள்ளச்சாராய காய்ச்சலை நிறுத்த முடியாது என்று காவல் துறையினரே கூறுகின்றனர். இதையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும்.

## போலீஸ் நண்பன்

செங்கை மாவட்டத்தில் நடைபெற்ற இந்தக் கள்ளச்சாராய வேட்டையின் இறுதி நாளில் கைப்பற் றப்பட்ட பொருட்களைப் பார்வையிடுவதற்காக வானொலி செய்தி ஆசிரியரான எனக்கும் இந்தத் துறையின் இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. அலெக்சாண் டரிடமிருந்து அழைப்பு வந்திருந்தது. 500க்கும் அதிக மான காவலர்கள் அணிவகுத்து நின்றனர். அவர்களுக் குப் பின்னால் கைப்பற்றப்பட்ட கள்ளச்சாராய உபகர ணங்கள். என்னை அறிமுகப்படுத்திப் பேசிய, திரு. அலெக்சாண்டர் என்னை போலீஸ் நண்பன் என்று வர்ணித்தார். உடனே கைதட்டல். நான் திடுக்கிட் டேன். பல ஐ.பி.எஸ். அதிகாரிகள் எனக்கு வேண்டிய நண்பர்கள் என்றாலும், நான் அவர்களையும், இந்தக் காவல்துறையினரையும், சாடாமல் இருந்ததில்லை. இன்னும் சொல்லப்போனால், போலீஸ்காரர்கள் ஏழை பாளைகளை லாக்கப்பில் என்ன பாடுபடுத்துகிறார்கள் என்பதை தமிழ் இலக்கியத்தில் என்னைவிட இன்னும் யாரும் நுணுக்கமாகவும், அழுத்தமாகவும், சித்தரிக்க வில்லை. இந்தத் தாழம்பூவிலும், காவல்துறையினர் பெரும்பாலோர் கள்ளச்சாராய ஏஜெண்டுகளாக எப்படி

செயல்படுகிறார்கள் என்பதை சித்தரித்து வருகிறேன். இந்தப் பின்னணியில் என்னை போலீஸ் நண்பனாக அறிமுகப்படுத்தியதும், ஒருவேளை நானும் காவல்துறையினரை அவர்களது சூழல் புரியாமல் வரம்புமீறி சாடுகிறேனோ என்று என்னுள் ஒரு சந்தேகம் ஏற்பட்டது. சிந்தித்துப் பார்த்தபோது போலீஸ் பற்றி எனது அணுகுமுறை மேலும் வன்மையானதே தவிர மென்மையாகவில்லை.

## என் வீட்டில் திருட்டு

''எனது வீட்டில் மூன்று மாதங்களுக்கு முன்பு ஒரு திருடு நடந்தது. ஒரு டு-யின்-ஒன், இரண்டு கைக்கடிகாரங்கள், பல்வேறு அரசாங்கம் பாஸ்களை கொண்ட லெதர் பேக், 500 ரூபாய் இரவோடு இரவாகப் போய்விட்டன. பத்திரிகைகளிலும் 'ரேடியோ அதிகாரி வீட்டில் திருடு'' என்று பெரிய செய்தியாக வந்தது. எனக்கு பொருட்கள் திருடு போனதைவிட, நான் விமான நிலையத்திற்குள் எந்த இடத்திற்கும் செல்லக்கூடிய ஏர்போட் பாஸ், பல கேந்திரமான நிலையங்களுக்குள் நுழையக்கூடிய செய்தியாளர் பாஸ், பறிபோனதில் அதிர்ச்சியுற்றேன். யாராவது விமான நிலைய 'பாஸை' வைத்துக் கொண்டு அங்கே ஏதாவது கோளாறு செய்யலாம். இதனால் பேரிழப்புகூட ஏற்படலாம். ஆகையால் நான் பதறியடித்து இரண்டு ஐ.ஜீக்களுக்கு டெலிபோன் செய்தேன். அவர்களின் அறிவுரையின்படி அருகே உள்ள காவல்நிலையத்திற்கும் நேரே சென்று எழுத்து மூலமும் புகார் செய்யச் சென்றேன். நான் இன்னார் என்று டெலிபோனில் சொல்லிக் கொண்டும் திருட்டின்

விபரீதத்தைச் சுட்டிக்காட்டியும் சம்பந்தப்பட்ட சப்-இன்ஸ்பெக்டரை ஒரு 10 நிமிடம் காத்திருக்கும்படி விண்ணப்பித்துக் கொண்டு புறப்பட்டேன். ஆனால் நான் போனபோதோ, அவர் எங்கேயோ போய்விட்டார் என்ற அலட்சியமான பதில். நான் அங்கே இருந்தவர்களைச் சாடினேன். கோபமாகக் கத்தினேன். புகார் வாங்க மறுத்த ஒரு ஏட்டையாவை வாங்கித்தான் ஆக வேண்டுமென்று வற்புறுத்தினேன். வீட்டுக்கு வந்து சம்பந்தப்பட்ட டெபுடி கமிஷனருக்கு புகார் செய்தேன். ஒரு மணி நேரத்தில் போலீஸ் நாய் வந்தது, போலீஸ் படையும் வந்தது. கைரேகை அது இது என்று என்னவெல்லாமோ எடுத்தார்கள். ஆனால் அதற்குப் பிறகு யாருமே திரும்பிப் பார்க்கவில்லை. டெலிபோன் செய்தாலோ முறையான பதில் கிடையாது. மேல் அதிகாரிகளுக்கு நான் புகார் செய்தேன் என்பதாலும் காவல்நிலையத்தில் கத்தினேன் என்பதற்காகவும் விபரீதத்திற்கு வித்தாகக் கூடிய ஒரு குற்றத்தைப்பற்றி காவல்துறையினர் அலட்டிக்கவில்லை. எனக்கே இப்படி என்றால் ஏழை பாளைகள் என்ன ஆவார்கள்? இதை எனது பக்கத்து வீட்டுக்காரரிடம் சொன்னபோது, அவரும் ஒரு விவாகரத்தை சொன்னார். யாரோ நான்கைந்து பேர் இரவோடு இரவாக பித்தளைப் பொருட்கள், மோட்டார் பைக் உதிரி பொருட்கள், பம்ப் செட் பாகங்கள் ஆகியவற்றை அருகே உள்ள புதரில் போட்டுவிட்டு சாவகாசமாக எடுப்பதற்காக திரும்பிப் போய்விட்டார்கள். இதைப் பார்த்துக் கொண்டிருந்த எனது நண்பர், தன்னால் குற்றவாளிகளை அடையாளம் காட்ட முடியும் என்று சொன்னபோது கூட அவரைப் பார்த்து ஒரு முறைப்பு முறைத்து விட்டு

''எங்களுக்குத் தெரியும்'' என்ற கண்டிப்புப் பதிலோடு போய்விட்டார்களாம். இதேபோல் முதலமைச்சர் போகும்போது காவல்துறையினர் மேற்கொள்ளும் கெடுபிடிகளால் ஏழை பாளைகள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். கொத்தவால் சாவடியில் காலையிலே காய்கறிகளை வாங்கிக் கொண்டு அவை வாடும் முன்னே மத்தியானத்துக்குள் விற்று வயிற்றை நிரப்ப வேண்டிய ஏழைமக்கள் போக்குவரத்து போலீஸ் கெடுபிடியால் படாதபாடு படுகிறார்கள். அவ்வளவு ஏன்? - சென்னை விமான நிலையத்தில் முதலமைச்சர் டில்லியிலிருந்து வந்திறங்க வேண்டும். விமானம் வருவதற்கு முன்பு, அரைமணி நேரத்திற்கு முன்னதாகவே சென்னை-கன்னியாகுமரி நெடுஞ்சாலையின் விமான சாலைப் பகுதியை காவல்துறையினர் அடைத்துவிட்டார்கள். ஆனாலும் அன்றிரவு விமானம் ஒரு மணி நேரம் லேட். அப்போது கூட போக்குவரத்தை மாமூலாக்கிவிட்டு மீண்டும் முடக்கிக் கொள்ளலாம் என்று காவல்துறையினர் நினைக்கவில்லை. முதலமைச்சர் விமான நிலையத்திலிருந்து வீட்டுக்குப் போவது வரைக்கும் யாரையும் விடப்போவதில்லை என்று 'ஒருவழி' செய்து விட்டார்கள். இவற்றையெல்லாம் தாழம்பூவில் கொண்டு வந்திருக்கிறேன்.

## அலுவலக கேசுவல்கள்

இந்தத் தொடர்கதையில் ஒரு அம்சம் அலுவலக கெடுபிடிகள். மக்களுக்கு அரசு அலுவலகத்தின் கெடுபிடிகள்தான் தெரியும். ஆனால் அந்த அலுவலகங்களுக்குள்ளேயே நடக்கும் அத்துமீறல்கள் அதிகமாகத் தெரியாது. உதாரணமாக நிரந்தரமான ஆட்கள்

விடுமுறையிலிருந்தால், அந்த இடத்தில் 'கேஷ்வல்கள்' என்ற பெயரில் வெளியாட்களை நியமிப்பார்கள். மாதம் ஆறு நாளைக்கு அன்றாட சம்பளத்தில் வைத்துக் கொள்ளலாம். எனது செக்ஷனிலே 7, 8 பட்டதாரிகளும் நான்கைந்து பியூன் வேலைக்காரர்களும், 10, 15 டைப்பிஸ்டுகளும் பணியாற்றுகிறார்கள். இந்த கேஷுவல்கள் என்றாலே நிரந்தரமானவர்களுக்கு இளக்காரம். ஒரு தடவை ஒரு டைப்பிஸ்டு பெண் ஒரு பியூனைப் பார்த்து ஒரு டீ வாங்கிக் கொண்டு வரச்சொன்னபோது, "உனக்கா, கேஷ்வலுக்கா, வேற ஆளைப் பாரு" என்று பதில் வந்ததாம். எனது டெலிபோன் எஸ்.டி.டி. வசதி கொண்டது. நான் இல்லாத சமயத்தில் பலர் கேஷுவல் பையனை மிரட்டி திருட்டுத்தனமாய் பல நகரங்களுக்கு டெலிபோன் செய்வதாகக் கேள்விபட்டேன். அந்தப் பையனைக் கூப்பிட்டு இத்தகைய பேர்வழிகளின் பட்டியலைக் கேட்டேன். அவன் விஷயத்தை ஒப்புக்கொண்டாலும், சொல்ல மறுத்து விட்டான். அப்படி அவன் சொல்லியிருந்தால் அவனை பாஸ் இல்லையென்று சொல்லி கேட்டில் நிறுத்தலாம். அவனுக்கு 'பில்' போடாமல் போகலாம். ஏதோ ஒரு திருட்டை அவன் மீது போடலாம். அவன் சொல்ல மறுத்ததால் நான் வேறுவழியின்றி அவனை வேலையிலிருந்து நீக்கிவிட்டேன். ஆனால் அவனோ ஒருவார காலம் என் பிரிவையே சுற்றிச் சுற்றி வந்தான். உள்வாங்கிய கண்களோடு, ஒட்டிப்போன வயிற்றோடு அவனைப் பார்க்க பரிதாபமாக இருந்தது. என் அறைக்குள் அவனைக் கூப்பிட்டு சம்பந்தப்பட்டவர்களின் பெயர்களை சொன்னால்தான் வேலையில் சேர்ப்பேன் என்றேன். அவனும் "டெலி

போன் சாவியை நான் கொடுக்காட்டி ஒங்க அப்பன் வீட்டு சொத்தாடா... கேஷுவல் பையா'' என்று திட்டுவாங்குவதாக அழுதான். ஆனால் நிசமான டெலி போன் திருடர்களின் பெயரைக் கொடுக்காமல் ''வாய் செத்த'' அப்பாவிகளின் பெயர்களை குறிப்பிட்டு அவர்கள்தான் தன்னை அப்படி மிரட்டுவதாகச் சொன் னான். எனக்கு அது பொய் என்று தெரியும். அதேசம யம் அவனுடைய நிலைமையும் புரிந்தது. அவன் ஏதோ உண்மையைச் சொல்வது போலவும், அதை நான் நம்புவது போலவும் ஒர பாவலா செய்து அவனை வேலையில் சேர்த்துக் கொண்டேன். கேஷுவல்கள் இந்தக் காலத்து தீண்டத்தகாதவர்களாய் எல்லா அலுவ லகங்களிலும் நடத்தப்படுகிறார்கள். இந்தப் பிரச்சி னையையும் தாழம்பூ எடுத்துச் சொல்கிறது.

## பேட்டை ரௌடிகள்

எங்கள் அலுவலகத்தைச் சுற்றியுள்ள குப்பங்க ளில் பேட்டை ரவுடிகள் ஆட்சி நடைபெற்று வருகி றது. ஆறுகொலை செய்துவிட்டு, அண்மையில் சிறைச் சாலையிலிருந்து திரும்பிய ஒருவரின் அண்ணனுக்கு சிலை வைக்க முயற்சி நடைபெறுகிறது. இதற்கு ஒரு அமைச்சரே பொறுப்பேற்று இருப்பதாகக் கேள்வி. பொதுவாக அமைதியும் அப்பாவித்தனமும் கொண்ட குடிசை மக்களிடையே இத்தகைய கொடுங்கோல், அரசியல் பின்னணியுடன் ஆதிக்கம் செலுத்துவதை கண்கூடாகப் பார்க்கிறேன். ஆகையால் தாழம்பூவில் ஒரு 'அண்ணாத்தே' வருகிறார். அவர் பேட்டை ரவுடிகளின் ஒட்டு மொத்தமான உருவம்.

தாழம்பூ பொதுவாக அதிகமாய் மணக்காது. ஆனால் எனது தாழம்பூவை மீண்டும் விரிவாகவும் திருத்தியும் மேலே சொன்ன விவரங்களை உள்ளடக்கி யும் நாவலாகக் கொண்டு வந்தேன். இது காகிதப்பூ வாக இருந்தாலும் நிச்சயம் மணக்கும் என்று நம்புகி றேன்.

இந்த நாவல் பாலக்காடு பல்கலைக்கழகத்தில் பாடநூலாக வைக்கப்பட்டிருப்பதாக பேராசிரியர் ராஜா ராம் தெரிவித்தார்.

# 16

# காலக்கிழம்

என் எழுத்தின் வெற்றிக்கு பெரும் காரணமான 'செம்மலர்' பத்திரிகை அக்டோபர் மாதத்திற்கு ஒரு கதை எழுதும்படி எனக்கு ஒரு கடிதம் அனுப்பியது. நானும் வழக்கம்போல் அடையார் கடற்கரையில் கடல் மண்ணை கைகளால் துழாவிக்கொண்டே சிந்தித்தேன். ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு ஆங்கிலப் பத்திரிகையில், புதிதாக விடுதலை பெற்று பொருளாதார வளர்ச்சி காணும் நாடுகளில் மக்கள் மனோபாவங்கள் எப்படியெல்லாம் மாறும் என்று ஒரு ஆய்வுக்கட்டுரை வெளியாகியிருந்தது. அதில் கற்பு, கண்டிப்பான கொத்தடிமை, பெண்ணடிமை போன்ற நில-பிரபுத்துவ நெறிகள் சிதறியடிக்கப்பட்டு, நீக்குப்போக்கான கற்பு, விழிப்புணர்வு போன்ற புதிய அம்சங்கள் தோன்றும் என்று கூறப்பட்டிருந்தது. அதோடு தொழில் ரீதியான பொருளாதார மாற்றத்தால், தனி நபர் வழிபாடு, மனோபயம், பாலுணர்வில் அதிக ஈடுபாடு இருப்பது

போன்ற மனோமாயம் போன்ற எதிர்மறை விளைவுக ளும் ஏற்படும் என்று எழுதப்பட்டிருந்தது. இந்தப் பின்னணியில் எனது கிராமத்தின் அப்போதைய நிலை யையும் இப்போதைய நிலையையும் ஒப்பிட்டுப் பார்த்தேன். அன்று கள்ளக் காதலுக்காக இரவோடு இரவாய் ''பாம்பு கடித்து செத்துப்போன'' பெண்களை யும் இப்போது யாரோ ஒரு இளைஞனுடன் நான் கைந்து நாட்கள் 'டூர்' போய்விட்டு மீண்டும் ஊருக்குத் திரும்பி பெற்றோரால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற பெண்களையும் ஒப்பிட்டுப் பார்த்தேன்.

அண்மையில் ஊருக்கு போயிருக்கும்போது கேள் விப்பட்ட ஒரு சம்பவமும் நினைவுக்கு வந்தது. பீடி சுற்றிக்கொண்டிருந்த ஒருத்தி, ஒருவனுடன் (வெளி யூர்க்காரன்) ஊரிலேயே சுற்றிவிட்டு, பிறகு அவனு டன் ஒடிப்போய்விட்டாள். ஓடிப்போன இடத்தில் அவர்களுக்குள் என்ன நடந்ததோ ஏது நடந்ததோ, ஒரு நாள் அந்தப் பெண் தன்னந்தனியாக ஊருக்கு வந்து, வீட்டுத் திண்ணையில் கூனிக்குறுகி உட் கார்ந்து விட்டாள். மகளைப் பார்த்து விட்ட தாய்க்காரி அவளை அப்படியே கட்டிப்பிடித்து, ''அய்யோ எம்மோ.... என் மகளை அந்த நொறுங்குவான் மயக்க மருந்து போட்டு கூட்டிட்டு போயிருக்கானே.. இல் லாட்டா என் ''பத்திரமாத்துத் தங்கம்'' அப்படிப் போகுமா.... இந்த அநியாயத்தை கேட்க ஆள் இல்லையா'' என்று ஒப்பாரி போட்டு, அந்த ஒப்பாரிக் கிடையே மகள் காதிலேயும் கிசுகிசுத்தாளாம். அந்தப் பெண்ணும் தன்னை, கைக்குட்டையில் தடவிய ஒரு மருந்தால் சம்பந்தப்பட்டவன் முகத்தை துடைத்தான்

என்றும், அதற்குப்பிறகு என்ன நடந்தது என்று தனக்குத் தெரியாது என்றும், தேம்பித்தேம்பி அழுத ழுது சொன்னாள். ஊரார் இதை நம்பவில்லை தான். ஆனாலும் அவள் பேச்சுக்கு மறுபேச்சு பேசாமல், அப்படி மருந்து போட்டுத்தான் அவள் மயக்கமாகி போய்விட்டாள் என்று அவள் சொன்னதை அங்கீகரிப் பதைப் போல் தலையாட்டிவிட்டு - அதேசமயம் தங்களுக்குள் கண்சிமிட்டியபடியே போய்விட்டார் கள். இப்படி ஓடிப்போன ஒருத்தியை ஊரார் ஒப்புத லோடு குடும்பம் கவுரமாக ஏற்றுக் கொண்டது. இந்த நிகழ்ச்சியையும், ஒருகாலத்தில் சைக்கிள்காரனை அவன் சைக்கிளுக்காக பார்த்த மகளை, அடித்துக் கொன்ற அப்பனையும் இணைத்து ஒரு சிறுகதை உருவாக்கினேன். எந்த மகளை அடித்துக் கொன்று அதைப்பற்றி அதிகமாக அலட்டிக் கொள்ளாமல் இருக்கிறாரோ அந்தக் கிழவனின் பேத்தி, இப்படி ஓடிப்போய்விட்டு அந்தக் கிழவன் கண்முன்னாலேயே வீட்டுக்குள் ஜம்மென்று போவதாக கதையை முடித் தேன். கொலைகார கணவனுடன் பேசாமலே நாற்பது ஆண்டுகளை கடத்திவிட்ட அந்த கிழவனின் மனைவி, அந்தக் கிழவனுக்கு கண்களால் சாட்டையடி கொடுப்ப தாகவும் விளக்கினேன். தலைமுறை இடைவெளியை யும், மாறி வரும் நெறிகளையும், ஒருவன் மாற வில்லை என்றாலும், காலம் தன்பாட்டுக்கு மாறிக் கொண்டே இருக்கும் என்பதையும் சித்தரிக்கும் இந்தச் சிறுகதை எனக்கு பிடித்த எனது சிறுகதைகளில் ஒன்று.

# 17

# கிறிஸ்துவக் கதைகள்

நமது சகோதர சகோதரிகள் கிறிஸ்மசைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இந்த தருணத்தில் கிறிஸ்துவ மதமும், அதைச் சார்ந்த நண்பர்களும் என்னில் எந்த அளவிற்கு தாக்கம் ஏற்படுத்தியிருக்கி றார்கள் என்று எண்ணிப் பார்த்தேன். இதுவரை சிந்தித்துப் பார்க்காத எனக்குப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திய இந்த மதமும், மக்களும் ஏன் இதுவரை என்னால் நினைத்துப் பார்க்கப்படவில்லை என்ற எண்ணம் ஏற்பட்டது.

## எலியபெத்தாகும் மாரியாத்தா

எங்கள் ஊரில் கிறிஸ்துவர்கள் நான் சார்ந்த சாதியிலேயே பாதி அளவு இருக்கிறார்கள். இவர்கள் 'தெக்கூர்காரர்'கள்; 'வடக்கூரில்' வாழ்கிறவர்கள் உதி ரமாடனையும், சுடலைமாடனையும் கோவிலில் கும்

பிட்டுக் கொண்டிருப்பவர்கள். முருகன், பிள்ளையார் கோவில்கள் இரண்டு உண்டு. இவற்றிற்கு பிள்ளை மார்கள்தான் போவார்கள். மாடன்களை வழிபட்டுக் கொண்டிருக்கும் 'வடக்கூரார்களுக்கு தாங்கள் இந்துக் கள் என்று தெரியாது. எனக்கும் அப்போது தெரியாது. கிறிஸ்தவ ஆலயக்காரர்கள் மாடன் கோவில்களுக்கு போவதும், மாடன் கோயில்களில் சாமியாடுகிறவர்கள் கூட கிறிஸ்தவ கோயில்களுக்குப் போவதும் அத்து படி. வருடத்தில் இரண்டு மூன்று தடவை அந்தக் கிறிஸ்தவ ஆலயத்தில் ஸ்பீக்கர்கள் கட்டப்பட்டு அனைத்து சினிமா பாடல்களும் ஒலிக்கும். அப்போது உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்த நானும் நண்பர்களும் குளத்துக்கரையில் ''வாராய் நீ வாராய்'' என்ற பாட்டையும் ''அமுதைப் பொழியும் நிலவே'' என்ற பாட்டையும் எங்களுக்குப் பிடித்த பெண்களை மனதில் நினைத்துக் கொண்டு கேட்டது நினைவுக்கு வருகிறது. பண்டிகை முடிந்ததும், செட் டுக்காரன் ஸ்பீக்கரை சுழட்டிக்கொண்டு டவுனுக்கு போகும்போது எங்களுக்கு என்னவோ போல் இருக் கும். ஏனென்றால், எங்கள் ஊரில் அப்போது ரேடியோ கிடையாது. கல்யாணத்தில் கூட மேளம்தான். ஆகை யால் எனக்கு கிறிஸ்தவ மதத்தில் (சினிமா பாட்டை கேட்பதற்கு) ஒரு ஈடுபாடு ஏற்பட்டது. அதோடு பெண் கொடுக்கல் வாங்கல் கூட ஒரே சாதிக்குள்தான் நடக்கும். மாடசாமி ஒரு நாளைக்கு எட்வர்டு என்றாகி ஒரு எலியபெத்தை திருமணம் செய்து கொள்வான். ராசம்மா திடீரென்று ரோஸ்லின் ஆகிவிடுவாள். ஆனால் பழக்கவழக்கத்திலோ மற்றவற்றிலோ எந்த வேறுபாடும் இருந்தது இல்லை. நிலைமை இன்னும்

அப்படியே நீடிக்கிறது. எங்கள் பக்கம் 'மண்டைக்காடு' வரவில்லை; வரவும் வராது.

எங்கள் ஏரியாவிலேயே அதிமாகப் படித்து ஒன்றிய ஆணையாளராகப் பணியாற்றிய ஒருவர், டில்லியில் வேலைபார்த்த என்னை நேரிடையாக அழைத்துத் தனது மகளை திருமணம் செய்து கொள்ளும்படி கேட்டார். அவர் கிறிஸ்துவர். எனக்கும் பெண்ணைப் பிடித்துவிட்டது. நானும் தலையாட்டினேன். உடனே அவர் ஞானஸ்நானம் எப்பொழுது வைத்துக் கொள்ளலாம் என்றார். நான் இலேசாய்த் தயங்கி மறுநாள் பதில் அளிப்பதாகத் தெரிவித்தேன். நான் வரட்டும் என்று அவரும், அவர் வரட்டும் என்று நானும் இருந்து விட்டோம். இல்லையானால் நான் ஒரு தாமஸ் ஆகவோ அல்லது ஜேசுராஜாவாகவோ மாறி இருப்பேன்.

## திடப்பட்டவள்

கிறிஸ்தவப் பின்னணியில் எனக்குப் பிடித்த ஒரு சிறுகதையை எழுதியிருந்தேன். அதற்கு திடப்பட்டவள் என்று பெயரிட்டேன். எங்களுடைய உறவுக்கார மூதாட்டி ஒருவர் இன்னும் தனது பாதிரியார் மருமகனுடன் இருக்கிறார். இவர் வாயில் அதிரடியான வார்த்தைகள் எதையும் கேட்க முடியாது. யாராவது திட்டினால் கூட 'ஏசுவே' என்றுதான் தனக்குள்ளே பேசிக்கொள்வார். எவராவது நோய்ப்பட்டிருந்தால், உடனடியாக அவர்களுக்காக ஜெபிப்பார். ஆனால் யாரையும் தனது வழிக்கு வரும்படி சொல்லவே மாட்டார். கிராமத்தில் ஆசிரியையாக பணியாற்றிய இவர் தனக்கு குழந்தை

இல்லை என்பதை அறிந்தும், நடுத்தர வயதில் தனது கணவனுக்கு தானே முன்னின்று திருமணம் நடத்தினார். இரண்டாவதாக வந்தவளுக்குப் பிறந்த குழந்தைகளைத் தன் குழந்தைகளாக நினைத்து மகிழ்ந்தார். ஆனால் அவருக்கோ பல சோதனைகள். கிராமத்தை விட்டு நகரத்திற்கு வர வேண்டிய கட்டாயம். நான் கூட அவரிடம் கணவருக்கு திருமணம் செய்து வைத்தது தவறு என்று வாதாடினேன். அவரால் அதை மறுக்கவும் முடியவில்லை. உடன்படவும் முடியவில்லை. 'ஏசுவே' என்று ஒரே பதில்தான். உத்தமியான இந்த மூதாட்டி இப்படி அல்லல்படுவதை நினைக்கும் போது சாமர்செட் மாம் எழுதிய மனிதபந்தம் (HUMAN BONDAGE) என்ற நாவல் நினைவுக்கு வந்தது. அதில் ஒரு கால் ஊனமுற்ற மாணவன் பொருமிக் கொண்டேயிருப்பான். அவனுடைய ஆசிரியர் அவனைக் கூப்பிட்டு ''ஆண்டவர் உலக பாவத்தை சுமப்பதற்காக உனக்கு ஒரு சிலுவை கொடுத்திருக்கிறார். உன்னால் தான் அதைத் தாங்கிக் கொள்ள முடியும் என்று உன்னைத் தேர்ந்தெடுத்திருக்கிறார். ஆகையால் நீ பெருமைப்படு. சிறுமைப்படாதே'' என்பது மாதிரியான வாசகங்கள் வரும். இவை எனக்கு மிகவும் பிடித்து மனதில் ஒலித்துக் கொண்டிருப்பவை. இதில் எனது நம்பிக்கை முக்கியமல்ல. இந்த மாதிரியான மானுட சேதங்கள் வாழ்வதற்கு இந்தக் கருத்து ஒரு மாமருந்து என்பதே காரணம்.

பேராசிரியை சரோஜினி பாக்கியமுத்து எழுதிய பிரபலமான ''விவிலியமும் தமிழும்'' என்ற நூல் வெளியீட்டு நிகழ்ச்சியில் நானும் உரையாற்றினேன்.

அந்தப் புத்தகத்தில் கிறிஸ்தவ பெரியவர்கள் தமிழ் உரைநடைக்குச் செய்த அரும் தொண்டை அப்போது தான் ஆழமாக அறிந்து கொள்ள முடிந்தது. இந்தப் பின்னணியில் சீகன் பால்குவும், அவரைப்போன்ற தமிழ் அறிஞர்களும் எனது மூதாதையர்கள் என்று நான் ஆங்கிலத்தில் சொன்னபோது அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட வெளிநாட்டுக்காரர்களும் மகிழ்ச்சி ஆரவாரம்-தெரிவித்தார்ள். உண்மைதான். தமிழ் இலக்கியத்திற்கு சேவை செய்த கிறிஸ்தவ பெரியவர்களை மூதாதைகளாக நினைக்காதவர்களும் கிறிஸ்தவத்தை நமது பாரம்பரியத்தின் ஒரு பகுதியாக சேர்க்க மறுப்பவர்களும் அரசியல்வாதிகளாக கொடி கட்ட முடியும். ஆனால் முழுமையான எழுத்தாளர்களாகத் திகழ முடியாது.

வழக்கமாக எழுதும் பாதையில் இருந்து இந்தக் கட்டுரையில் சிறிது விலகிவிட்டேனா என்று நினைக்கிறேன். எண்ணிப் பார்த்தால் நான் விலகவில்லை. ஒருவனின் எழுத்துக்கு அவனது அனுபவப் பின்னணியும் ஒரு காரணம் என்பதால் இந்த அனுபவ நினைப்பைப் பகிர்ந்து கொள்கிறேன்.

# 18

## சுண்டைக்காய் சுமப்பவர்கள்

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட வாசுகி பத்திரிக்கையி லிருந்து பழம் பெரும் எழுத்தாளரான திரு தாமரை மணாளன் எனக்கு டெலிபோன் செய்து, உடனடியாக ஒரு சிறுகதை வேண்டும் என்றும் அதை முதல் இதழிலேயே வெளியிட விரும்பவதாகவும் குறிப் பிட்டார். எனவே உடனடியாக கதை அனுப்புவது என்று தீர்மானித்தேன். ஆகையால் வழக்கம் போல் கடற்கரை மண்ணில் உட்கார்ந்து சிந்தித்தேன்.

அதிகார வர்க்கம், எந்தச் சூழலையும் தனக்கு சாதகமாத் தன் சுயநலத்திற்கு பயன்படுத்திக் கொள் ளும் வல்லமை பெற்றது. பாரதப் பிரதமரின் புதிய பொருளாதார கொள்கையை எங்களைப் போன்ற 'மூத்த' அதிகாரிகளுக்கு, விளக்க வேண்டுமென்று, டில்லி, பம்பாய், திருவனந்தபுரம், கௌஹாத்தி ஆகிய இடங்களில், கான்பரன்ஸ்கள் போட்டார்கள். நூற்றுக்க

ணக்கான கார்கள் பறந்தன. டின்னர்கள், பார்ட்டிகள். நான் கூட விமானத்தில் பறந்து போய்க் கலந்து கொண்டேன். இதே போல் மகாபலிபுரத்தில் மனித சக்தியை பயன்படுத்துவது எப்படி என்று வானொலி நிகழ்ச்சியை உருவாக்குவதற்கு, அகில இந்தியாவிலி ருந்தும் திரண்டுவந்த 60 பேர், ஒரு ஆலோசனைக் கூட்டம் போட்டார்கள். சென்னையில் போடாமல் ஏன் மகாபலிபுரத்தில் அதுவும் காட்டேஜ்களில் தங்கிக் கொண்டு போட வேண்டும் என்று நான் பொறுக்க முடியாமல் கேட்டேன். அதற்கு மனித சக்தியை பற்றி சிந்திக்க அமைதியான சூழல் தேவை என்று என் கிட்டவே ஒருவர் கண்ணைச் சிமிட்டிக் கொண்டு சொன்னார். இந்த அறுபது பேரும், இரண்டு 'டீலக்ஸ்' பஸ்ஸில் போயிருக்கலாம். மனிதசக்தி மாநாடா யிற்றே? அப்படி போகலாமா? நான்கைந்து அம்பாஸி டர் கார்கள் மூன்று மூன்று பேராக ஏற்றிக் கொண்டு மகாபலிபுரத்திற்குப் போய் விட்டு 'எம்டி'யாகத் திரும்பி, பழையபடியும் மனிதச் சுமைகளை ஏற்றிக் கொண்டு போவதும் வருவதுமாக இருந்தன. வருகிற வர்களுக்கோ ஏ.ஸி.ரூம்கள், விமான டிக்கெட்டுகள். ஆலோசனைக் கூட்டமோ, வேலையில்லாத குறிப்பாக பாமர மனித சக்தியை எப்படி உருவாக்கலாம் என்பது பற்றி என்னுள் எழுந்த ஒரு ஆவேசத்தில் ''சுண்டைக் காய் சுமப்பவர்கள்'' என்ற தலைப்பில் அன்று இரவே, இது குறித்து ஒரு சட்டயர் கதை எழுதினேன். இப்படிப்பட்ட மாநாட்டுக்கு வருகிறவர்கள், எப்படி ஓசைப்படாமல் பரமாசாரியாரைப் பார்க்கவும். ஏழும லையானைத் தரிசிக்கவும் போகிறார்கள் என்பதை விளக்கினேன். இத்தகைய கூட்டங்களில் டிரைவர்க

ளுக்கு ஓ.டி.கொடுக்காமல் சிக்கனத்தைக் கடைபிடிக்க வேண்டும் என்று பெரிய அதிகாரிகளை அறிவுரை சொல்ல மறக்க மாட்டார்கள். இந்த கதை 'வாசுகியின்' முதல் இதழில் பிரசுரமானது.

டிரைவர்கள் என்றதும் அவர்களுக்கும் எனக்கும் உள்ள உறவு நினைவுக்கு வருகிறது. பொதுவாக, நான் பணியாற்றிய அத்தனை அலுவலகங்களிலும் உள்ள டிரைவர்கள், என் மீது மிகுந்த அன்பு வைத்திருப்பவர்கள். காரணம், அவர்களுக்கும் போலீஸுக்கும் ஏற்படுகின்ற தகராறுகளை நான் தீர்த்து வைப்பதுண்டு. ஒரு தடவை, ஒரு அம்பாஸிடர் காரில், நானும் எனது பெரிய அதிகாரியும் போய்க் கொண்டிருந்தோம். வழியில், ஒரு கான்ஸ்டேபிள் டிரைவரை மடக்கினார். பிரகாசமான விளக்கை வண்டிகளில் போடக் கூடாது என்பது போக்குவரத்து விதி. இதனால் எதிரில் வரும் டிரைவர்களின் கண் கூசி விபத்து ஏற்படும் என்பதற்காக போடப்பட்ட உத்தரவு. எங்கள் டிரைவர் இரவில், எரிந்த விளக்கை, பகலில் அணைக்க மறந்து விட்டார்! இந்த கான்ஸ்டபிள் எப்படி பிரகாச மாக லைட்டைப் போடலாம் என்று பகலில் மிரட்டினார். டிரைவரோ, அநத விதி போடப்பட்ட காரணத்தைச் சுட்டிக்காட்டி, இப்போது எரியும் லைட், யார் கண்ணை கூச வைக்கிறது என்று கேட்டவரா? வழக்கு எழுதப் போனார். இந்த அநியாயத்தை தட்டிக்கேட்கும் தைரியமில்லாமல் எனது பெரிய அதிகாரி ஒரு தினசரி பத்திரிகைக்குள் தலையை முக்கிக் கொண்டார். நான், கான்ஸ்டேபிளிடம் கண்டிப்புடன் பேசப் போன போது ''டிரைவர்பாடு, கான்ஸ்டபிள்பாடு விடுங்க'' என்றார்.

நான் விடவில்லை. இந்த நிகழ்ச்சியோடு, இன்னொரு நிகழ்ச்சியும் நினைவுக்கு வந்தது. தாலுகா மட்டத்தி லுள்ள ஒரு அதிகாரி, ரத கஜ துரகபதாதி அலுவர்களு டன் டூர் போனார். பொதுவாக சீனியர் அதிகாரி முன்னிருக்கையில், அதுவும் இடது பக்கம் உட்காரு வார். ஜுனியர் அதிகாரி, டிரைவருக்கும் இந்த பெரிய அதிகாரிக்கும் மத்தியில் உட்காருவார். இந்த எழுதப்ப டாத விதியின்படி ஜீப் புறப்பட்டது. ஒரு ஓட்டலுக்கு போனது. அந்த அதிகாரியுடன் வந்த உதவியாளர்க ளும் அந்த பெரிய அதிகாரிகளும் எதிரும் புதிருமாக உட்கார்ந்தார்கள். டிரைவர் தெரிந்தோ, தெரியாமலோ அந்த அதிகாரியின் பக்கத்தில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்து விட்டார். உடனே அந்த பெரிய அதிகாரி ''வேற இடமா போய் உட்காருய்யா'' என்று அதட்டி னார். டிரைவர், உடனடியாக எழுந்தார். ஜீப்பை அங்கேயே விட்டுவிட்டு, எங்கேயோ மாயமாய் மறைந்து போனார். அவர் திரும்பவே இல்லை. இந்த இரண்டு நிகழ்ச்சிகளையும் ஒன்றாக்கி 'செம்மலரில்' கதை எழுதினேன்.

## பனிப்போர்

குமுதத்திலிருந்து ஒரு அழைப்பு வந்தது. 'அன்று இரவு எனக்கு தூக்கம் பிடிக்கவில்லை. காரணம் என்னவென்றும் தெரியவில்லை' என்ற முதல் வரி யோடு கதையைத் துவக் வேண்டுமென்றும், இதே வரியை வைத்து எழுத்தாளர்கள் பாலகுமாரன், சுஜாதா முதலியோர் எழுதுகிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். இரண்டு நாட்களில் கதை வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்கள். பொதுவாக பிறத்தியார் கொடுக்கும்

இத்தகைய வரிகளையோ அல்லது கருத்துக்களையோ பிடித்துக் கொண்டு கதை எழுதுவது எனது வழக்க மல்ல. ஒரு தொடர் கதையை 12 பேர் ஒவ்வொரு அத்தியாயமாக எழுத வேண்டுமென்றும், அவர்களில் நான் ஒருவராக இருக்கவேண்டுமென்றும், வேறு ஒரு பத்திரிகை கேட்டபோது, நான் மறுத்துவிட்டேன். ஆனால் இந்தக் குமுதம் ஆரம்ப காலத்தில், என்னை உருவாக்கிய பத்திரிகைகளில் ஒன்று; லட்சக்கணக் கான வாசகர்களைக் கொண்டது. இந்த வாசக பரப்பு டன் மீண்டும் ஒரு தொடர்பு ஏற்படுவதை நிராகரிக்க மனமில்லை. அதோடு நடந்த ஒரு சம்பவத்தை மையமாக வைத்து எழுதுகிற எனக்கு இது ஒரு சவாலாக தோன்றியது. இது, இப்படி சவாலாக தெரியத் தெரிய, அதை எதிர்நோக்க வேண்டுமென்ற ஒரு வைராக்கியமும் என்னுள் ஏற்பட்டது.

## ஞானமும் - பைத்தியமும்

கடற்கரையில் தனியாக உட்கார்ந்து சிந்தித்தேன். குமுதம் கொடுத்த இரண்டு வரிகளை எழுதிவிட்டு சம்பந்தமில்லாமல் கதையை வேறுபக்கம் எடுத்துக் கொண்டு போகலாம். இப்படித்தான் சுஜாதா தவிர, மற்ற எழுத்தாளர்கள், இந்த வரியை மட்டும் எழுதி விட்டு கதையை சம்பந்தமில்லாமல் எங்கோ கொண்டு போனார்கள். எனக்கோ தலைப்பை ஒட்டியே எழுத வேண்டுமென்று ஒரு எண்ணம். ஆகையால் தூக்கம் பிடிக்கவில்லை என்று பொருள் கொண்டேன். இந்தச் சந்தர்பத்தில் தூக்கம் வந்தாலும், தூங்க மனமில்லாமல் இரவில் நடமாடிய எனது உறவுக்காரப் பையன் ஒருவனின் அனுபவம் நினைவிற்கு வந்தது. பொது

வாக, மனநோயால் பீடிக்கப்படுகிறவர்களுக்கு ஆரம்பத்தில் கொடுக்கப்படுவது தூக்க மாத்திரைதான். எனது உறவுக்கார இளைஞனுக்கு மனநோய் முற்றி விட்டது. அவனது உறவினர்கள் என்னை அணுகினார்கள். உடனே நான், மனநோய் சிகிச்சையில் பிரபலமாக விளங்கும் டாக்டர் பாப்பா குமாரிக்கு, டெலிபோன் செய்தேன். தனியார் மருத்துவமனைக்கு வரும்படி கூறினார். மறுநாள் அந்த மருத்துவமனைக்கு அவனை கூட்டிக்கொண்டு போனேன். அவனோ விஷயத்தை யூகித்துக் கொண்டு, ''அண்ணாச்சி எனக்கு பைத்தியமுன்னு நினைக்கிற உங்களுக்குத்தான் பைத்தியம். வேணுமின்னா பாருங்க.... டாக்டரு, உங்களுக்குத்தான் பைத்தியமுன்னு, மருந்து கொடுக்க போறாங்க'' என்று சொல்லிவிட்டு அட்டகாசமாகச் சிரித்தான். நான், அவனை உறவினர்களை வைத்து சமாளித்தேன். மருத்துவ மனைக்கு டாக்டர் பாப்பா குமாரி அப்போது வரவிலலை. அந்த மருத்து மனையில் மனநோய் அல்லாத, மற்ற நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்தார்கள். ஒரு பெண் டாக்டர், பல நோயாளிகளுக்கு நோய்களுக்கு தக்கபடி மருந்துகளை கொடுத்துக் கொண்டிருந்தார். எனக்கு தொண்டை வலி இருப்பது நினைவுக்கு வந்தது. உடனே அந்த டாக்டர் அம்மாவை அணுகி, நான் பாப்பா குமாரியை பார்க்க வந்திருப்பதாக சுருக்கமாய் சொல்லி விட்டு, தொண்டை வலிக்கு மருந்து தரும்படி கேட்டுக் கொண்டேன். உடனே அந்தம்மா, என்னை ஏடாகோடமாகப் பார்த்துவிட்டு ''எது பேசணுமுன்னாலும் பாப்பா குமாரி வந்த பிறகு பேசுங்க'' என்றார் உடனே, நான் அலறி அடித்து ''எனக்கு ஒன்னும்

அப்படி இல்லேம்மா'' என்றேன். அந்தம்மாவோ, அனுதாபமாக என்னைப் பார்த்தபடியே, ''டாக்டர் பாப்பா குமாரியை பார்க்க வருகிற எல்லாருமே இப்படித்தான் உளறுவாங்க'' என்றார். பக்கத்தில் இருந்த அந்த உறவுக்காரப் பையனோ ''பாத்தீங்களா அண்ணாச்சி, நான் நினைச்சது சரியா போயிட்டது பாருங்க'' என்று அட்டகாசமாகச் சிரித்தான். உடனே நான் அவன் ஒரு ஞானவானாக இருப்பானோ என்று கூட ஆச்சிரியப்பட்டேன்.

இந்த நிகழ்ச்சி கடற்கரையில் உட்கார்ந்திருந்த எனக்கு மீண்டும் நினைவுக்கு வந்தது. ஞானத்திற்கும் பைத்தியத்திற்கும் நூல் இழை தான் வித்தியாசம் என்ற ஒரு பழமொழியும் நினைவிற்கு வந்தது. கதை கிடைத்து விட்டது. இந்த பின்னணியில் தூக்கத்தை ஒரு நடுத்தர வயதுக்காரர் ஒரு நாள் இரவு திடுதிப் பென்று வெறுப்பதாகவும், அன்று பகலில், நடந்த நல்லது, கெட்டதுமான அனுபவங்களை அவர், நினைத்துப் பார்ப்பதாகவும் குறிப்பிட்டேன். ஞானத் திற்கும், பைத்தியத்திற்கு கடந்தகால வாழ்க்கையும் ஒரு காரணமல்லவா? ஆகையால் தாயில்லாக் குழந்தை யான அவரது இளமைக் கால துயர அனுபவங்களை யும், அதே சமயம், அவரது சாதனைகளையும் ஒரு சேர கோடி காட்டினேன். அவரை திட்டுகிறவர்களை யும் சுருக்கமாக விவரித்தேன். அவருக்கு யேகாமுறை ஓரளவிற்கு அரைகுறையாகத் தெரியும் என்பதையும் விளக்கினேன். (இரவில் நானும் ஒரு வித யோகமுறை யைக் கையாளுகிறேன்).

இறுதியில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட

அவரை அவருக்கு பரிச்சியமான ஒரு சாமியார் விபூதியோடும், டாக்டர் ஊசியோடும் நெருங்குவதை குறிப்பிட்டு கதையை முடித்து, முடிவை வாசகர்களிடம் விட்டுவிட்டேன். இது எனக்கு மிகவும் பிடித்த கதை.

## பெண் என்றால் பெண்

புதிதாக ஆரம்பிக்கப்பட்டு, வர்த்தகத்திற்கும், இலக்கியத்திற்கும் இடைப்பட்ட நிலைக்களத்தில் வெளியாகிக் கொண்டிருக்கும் வாசுகி பத்திரிக்கையில் குடியும், குடித்தனமும் என்ற எனது சிறுகதை ஒன்று அண்மையில் வெளியானது. இது வழக்கம் போல் முழுக்க முழுக்க ஒரு அனுபவத்தை அடிப்படையாகக் கொண்டது. எனது உறவினர் ஒருவர் உறவுக்காரருக்கே உரிய இலக்கணப்படி நடக்காமல் என்னுடன் அன்பாகப் பழகுபவர். ஊரில் எப்படியோ குடிப்பழக்கம் ஏற்பட்டு இருந்த சொத்தையெல்லாம் சிதைத்து விட்டவர். பிறகு மனம் திருந்திக் குடியை விட்டாலும் நொடித்துப் போன குடும்பத்தை காப்பாற்ற முடியவில்லை. அவரது மனைவியும் எனக்கு உறவுக்கார பெண். ஆகையால் இருவரையும் சென்னைக்குக் கொண்டு வந்து தங்க வைத்தேன். பிறகு சென்னைத் தொலைபேசி வாங்கிக் கொடுத்தேன். ஒரு பேன்சி கடையையும் ஏற்பாடு செய்தேன். மீண்டும் குடிக்கக் கூடாது என்றும் அப்படிக் குடித்தால் தொலைபேசி துண்டிக்கப்படும் என்றும் ஒளிவு, மறைவு இல்லாமல், கண்டிப்புடன் சொல்லி வைத்தேன். இதற்குப் பிறகு நானே கடன் கேட்கும் அளவிற்கு மாதம் இரண்டாயிரத்துக்கு மேல் வருமானம் வந்தது. 400 ரூபாயில்

ஒரு வீடும் வாடகைக்கு கிடைத்தது. ஓராண்டுக்கு பிறகு, ஒருநாள் அவர் குடித்து விட்டு வீட்டுக்கார அம்மாவை (வீட்டின் உரிமையாளரை) கலாட்டா செய்வதாக செய்தி வந்தது. நானும் ஓடிப்போய்ப் பார்த்தேன். பழைய வாடகைக்காரி ஒருத்தியை அரிவாள் மனையால் வெட்டிய அந்த வீட்டுக்கார அம்மா, இப்போது குடித்துவிட்டு, 'மண் வாசனையுடன்' அவளைத் திட்டிக் கொண்டிருந்த என் உறவுக்காரரைப் பார்த்து நடுநடுங்கிக் கொண்டிருந்தாள். அந்த குடிமன்னன் அந்த அம்மாவை நோக்கி கால்களை தூக்கிக் காட்டினார். கைகளை ஓங்கிக்காட்டினார். இது அதிக பட்சமாக தெரிந்தது. ''உன்னை என்ன செய்கிறேன் பார்'' என்று அந்த போதைக்காரரை மிரட்டி விட்டு வெளியேறினேன். எனது கௌரவத்திற்கு பாதிப்பு ஏற்படுத்தும் அவர் சுபாவமே கூடாது என்றும் அதற்காக அவர் டெலிபோனை துண்டிப்பது என்றும், பேன்சி கடையை இழுத்து மூடி விடுவது என்றும் தீர்மானித்தேன். சிறிது நேரத்திற்குப் பிறகு அவர் மனைவி என்னை வீட்டில் வந்து பார்த்தாள். அவர் விட்டுப்போன குடியை தொட்டதற்கான காரணத்தை விளக்கினாள். வீட்டுக்காரம்மா, அவர்களை நாயே, பேயே என்று திட்டுவதாகவும், கைப்பம்பை பூட்டிப் போடுவதாகவும் கழிவறையை மூடிப் போடுவதாகவும், இரவில் சாப்பிடும் சமயத்தில் மின்சார சுவிட்சை ஆப் செய்து விடுவதாகவும் குற்றம் சாட்டினாள். அவளை சமாளிப்பதற்காக, தானே, கணவனை குடிக்கச் சொன்னதாக ஆணித்தரமாகச் சொன்னாள். அவள் சொன்ன விதம் என் மனதில் இன்னும் அப்படியே இருக்கிறது. ''இதுதான் கூகையாச்சே... குடிக்காட்டா

ரோஷமே வராது. அதனால்தான் நானே குடிக்கச் சொன்னேன். இனிமே குடிக்காம பார்த்துக்கறதுக்கு நானாச்சு'' என்றாள்.

இதையே 'குடியும் - குடித்தனமும்' என்று எழுதினேன். தமிழக அரசு திரு.ஜி.வி. -யை வைத்து எடுக்கும் மதுவிலக்கு பிரச்சாரப் படத்தில் குடியால் இருதயம் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு மேல்நாட்டில் சிகிச்சை அளிப்பதாக பல காட்சிகள் வருவாதகவும் அவற்றை படமாக்க படப்பிடிப்புக்குழு மேல்நாடு போகப்போவதாகவும் கேள்விப்பட்டேன். அதாவது நமது அரசுக்கு மேல் குடி மக்களே கண்ணில் படுகிறது. கதையின் முடிவில் இதைக் குறிப்பிட்டு விட்டு அந்த மதுவிலக்கு கமிட்டி எந்த உலகத்தில் இருக்கிறது என்று ஒரு வினாவை எழுப்பினேன். ஆனாலும் இந்தக் கதையை பிரச்சாரமாக கருதிவிடக் கூடாது என்று அப்படி எழுதியதை அடித்துவிட்டேன்.

# 19

## வாடாமல்லி நாவலின் வரலாறு

பல ஆண்டுகளுக்கு முன்பு கடலூருக்கு போயிருந்த போது - அப்போது மாவட்ட மக்கள் தொடர்பு அதிகாரியான திரு. சுபாஷ் அதன் அருகாமை யிலுள்ள ஒரு கடலோர கிராமத்திற்கு கூட்டிச் சென் றார். அங்குள்ள கூத்தாண்டவர் கோவிலில் ஆயிரக்க ணக்கான அலிகள் குழுமியிருந்தார்கள். அருகே இருந்த பெண்களுக்கும் இவர்களுக்கும் எந்த வித்தியாசமும் இல்லை. ஆண்டுதோறும் இங்குள்ள கூத்தாண்டவர் கோயிலுக்கு நாடெங்கிலுமிருந்து அலிகள் வருவ துண்டு. இவர்களில் கிட்டத்தட்ட அனைவரும் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள். இந்த கோவிலில் தங்களது கணவர் என்று இவர்கள் கருதும் கூத்தாண்டவருக்குச் சேவை செய்ய வருபவர்கள். முதல் நாள் கூத்தாண்டவ ருக்கு தங்களை அசல் திருமணப் பெண்களாக ஜோடித்துக் கொண்டு பூசாரி மூலம் தாலி கட்டி மனைவி ஆவார்கள். பிறகு நான்கு நாள் கழித்து

கூத்தாண்டவரான அரவான், மகாபாரதப் போரில் பலியாக்கப்பட்டதை நினைவுப்படுத்தும் வகையில் ஒரு பொம்மையை பலியிடும் போது இவர்கள் தாலிகளை கழற்றி விட்டு, பூப்பொட்டுகளை கலைத்து விட்டு, வெள்ளைச்சேலை கட்டி ஒப்பாரி வைப்பார்கள். பின்னர் ஒரு வாரம் கழித்து தத்தம் இருப்பிடங்களுக்கு கலைத்து போவார்கள்.

இந்த அலிகளின் பேச்சு, முகபாவம், சண்டை, சச்சரவு, சந்தோஷங்கள் என்னை ஆச்சரியப்பட வைத்தன. அவர்களிடம் பேசிப் பார்த்தேன். மனதுக்குள்ளே அழுது கொண்டிருக்கிறார்கள். மாமூல் மனிதர்கள் கிண்டல் செய்யும் போது வேதனைப்படுகிறார்கள். அதே சமயம் தங்களுக்குள் ஒரு கட்டுப்பாட்டை வைத்து வாழ்கிறார்கள். இவர்களின் பிரச்சினை என் மனதில் முள்ளாகக் குத்திக் கொண்டிருந்தது. இந்த அலிகளின் குடும்பத்தாருடன் பேசிப்பார்த்தேன். வரதட்சிணை கொடுமை வறுமை போன்றவைகளால் ஒரு குடும்பம் பாதிக்கப்படுவது போல் அலிகளை உருவாக்கும் குடும்பமும் பெரிதும் பாதிக்கப்படுகின்றது. முதலில் பெண்ணாக ஆசைப்பட்டு, முடிவளர்த்து புடவை கட்டும் ஆணை குடும்பத்தினர் அடித்து உதைத்து திருத்தப் பார்க்கிறார்கள். பிறகு துரத்தி விடுகிறார்கள். இடையில் நடப்பதோ சொல்லொண்ணாத் துயரம்.

ஒரு கிராமத்தில் படித்துக் கொண்டிருக்கும் ஒரு பையன் எப்படி படிப்படியாக அலியாக மாறுகிறான். அதனால் அவன் குடும்பமும் அவனும் எப்படிப் பாதிக்கப்படுகிறார்கள் என்பதே கதையின் கரு.

## அலிகளின் கிலிகள்

'வாடமல்லி'யை எழுதுவதற்கு முன்பு தினமல ரின் மூத்த செய்தியாளர் நூருல்லா, அலிகளைப் பற்றி எழுதிய ஒரு சிறு நூலை மீண்டும் படித்தேன். 'இந்தியா டுடே'யில் வந்த ஒரு கட்டுரையையும் படித்தேன். இவை அலிகளைப் பற்றி ஒரு அறிமுகமா வும், அவர்களது கேளிக்கை பற்றிய விமர்சனமாகவும் இருந்தனவே தவிர, முழுமையாக இல்லை. கடலூருக்கு அருகே உள்ள அதிராம்பட்டினத்தில் அலிகள் நடத்திய அரவான் விழாவை கண்ட அனுபவத்தில், சென்னை யில் அலிகள் குவிந்திருக்கும் பகுதிக்குச் சென்றேன். தமிழக அரசின் தலைமையகத்திற்கு அருகே சந்தும் பொந்துமான ஒரு குடிசைப் பகுதியில் சேலை கட்டிய அலிகள் நைந்தும் பிய்ந்தும் வாழ்வது கேள்விப்பட்டு இன்னொரு நண்பரோடு அங்கே சென்றேன். எங்களது உருவ அமைப்பைப் பார்த்துவிட்டு, நாங்கள் போலீஸோ என்னமோ என்னமோ என்று பயந்து விட்டார்கள். பேச வந்த இளம் அலிகளை, முதிய அலிகள், 'கபடி, கபடி' என்றார்கள். அதாவது ங்கள் போலீஸ் என்றார்கள். போலீஸ் என்றால் அவர்களுக்கு அவ்வளவு பயம். எப்படியோ அந்த அலிகளின் தலைவியான, குருவக்காவிடம் போனோம். அசல் பெண் மாதிரியான தோற்றம். சிறட்டைப் பொட்டு மாதிரியான நிறம் அவளிடம் அல்லது அவனிடம் நான் அவர்களது பிரச்சனைகளை ஆத்மார்த்தமாக மனிதாபிமானத்தோடு எழுதப் போவதாகக் குறிப்பிட் டேன். ஆரம்பத்தில் தயக்கம் காட்டிய குருவக்கா. பிறகு என்னைப் புரிந்து கொண்டாள். வீடுகளிலிருந்து

துரத்தப்பட்ட பல்வேறு அலிகளை எனக்கு அறிமுகம் செய்து வைத்தாள். அவர்களின் கதையைக் கேட்டால் கண்ணீர் வந்துவிடும், பல வசதி படைத்த பெற்றோர் கள் கூட இப்போதும் அந்தப் பக்கமாக வந்து தூக்கி எறியப்பட்ட தத்தம் செல்வங்களின் கைகளைப் பிடித்து கண்ணீர் மல்கி கதறுவார்களாம். அந்தப் பக்கத்துச் சேரியில் வாழும் இவர்கள் அந்தப் பக்கத்துச் சேரிக்காரர்களோடு இரண்டறக் கலந்தவர்கள்.

## அலித் தொழில்

இரவு நேரங்களில் மரங்களோடு மரங்களாக நின்று காரில், இரண்டு சக்கர வாகனங்களில் நிற்பவர் களை வாடிக்கையாக அழைப்பதே இவர்களது தொழில். கையும்களவுமாக இவர்கள் பிடிபடும்போது, காவல்துறையினர் நையப்புடைத்து விடுகிறார்களாம். அதோடு, கஞ்சா கடத்தியதாக வழக்குப் போடுகிறார்க ளாம். குருவக்கா, என்னிடம் ''நாங்க விபச்சாரம் செய்யுறதா வழக்குப் போடுங்க சார் அப்பவாவது எங்களோட நிலமை ஜட்ஜுக்குத் தெரியட்டும். நாங்க இதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும்? மார்க்கட்ல கடை போட்டா, பொட்ட பொட்ட என்கிறாங்க. வீட்டு வேலைக்கு யாரும் சேர்க்கிறது கிடையாது. கவிர் மெண்ட்லயும் வேலை இல்லை. எங்களுக்கும் வயிறு இருக்கே. இதைத் தவிர வேறு பொழைப்பு இல்லையே'' என்று காவல்துறையிடம் அடிக்கடி சொல்வதாகவும் அவர்கள் இவர்களைக் கஞ்சியாகவும், கஞ்சாவாகவும் மட்டுமே பார்க்கிறார்கள் என்றும் குறைபட்டாள். ''எல்லோருக்கும் ஏதோ ஒரு சங்கம் இருக்கிறது எங்களுக்கு என்ன இருக்கிறது. நாதியில்

லாதவங்க நாங்க'' என்று அவள் சொன்னபோது, அத்தனை அலிகளும் கண் கலங்கினார்கள். பேசி முடித்த பிறகு, நான் ஐம்பது ரூபாய் நீட்டியபோது அதை வாங்க மறுத்தார்கள். மாறாக, எனக்கும் என் நண்பருக்கும் 'கேம்பா கோலா' வாங்கிக் கொடுத்தார்கள். அந்தக் குடிசைப் பகுதியை விட்டு வெளியே வருவது வரைக்கும் ''சார், சார், போலீஸைப் பத்தி நாங்க சொன்னது வெளியில தெரியப்படாது சார் தெரிஞ்சா சாவடி கொடுப்பாங்க சார்'' என்று அந்த அலிகள் மாறி மாறிச் சொன்னது இன்னும் என் மனதை நோக வைக்கிறது. இவர்களோடு அல்லாது, 'சொந்தக்காரர்கள்' வீட்டிலேயே இருந்து ஏதோ ஒரு வேலை செய்து கொண்டிருக்கும் அலிகளையும் சந்தித்தேன். பம்பாயிலிருந்தும், டில்லியிலிருந்தும் சென்னைக்கு அடிக்கடி வரும் குறிப்பிட்ட சில அலிகளையும் சந்தித்துப் பேசினேன். ஒவ்வொருவரிடமும் ஒரு சோகச்சுமை. கூட்டிலிருந்து சிறகு முளைக்கு முன்பே தரையில் தள்ளப்பட்ட குருவிக் குஞ்சைப் போன்ற பரிதாபம்.

இவர்களைச் சந்தித்த பிறகு, எனது உறவு டாக்டர்களான, ராஜ்குமார், கலைவாணன் ஆகியோரைச் சந்தித்து இந்த அலிகள் உடல் ரீதியில் எப்படி ஆகிறார்கள், என்று தகவல் சேகரித்தேன். சென்னை மாநிலக் கல்லூரியில் பணியாற்றும் பேராசிரியர் சுப்ரமணியத்திடமும் உடல்கூறு பற்றி விசாரித்தேன். ஆக மொத்தத்தில், அலிகள் ஆண் உடம்பில் சிறைபட்ட பெண்கள், அல்லது பெண் உடம்பில் சிறைபட்ட ஆண்கள். இவர்கள் ஆணிலிருந்து பெண்ணா

கவோ, பெண்ணிலிருந்து ஆணாகவோ மாறுகிற வகையைச் சேர்ந்தவர்கள் அல்ல. கருவிலேயே அலிக ளாகி கருகிப் போனவர்கள். குரோமோசம்கள் பழுத டைந்ததால் பழுதுபட்டுப் பிறந்தவர்கள். இவர்களை சமூகம் இன்னும் கேலியும் கிண்டலுமாய் பார்த்து வருவது கண்டனத்திற்குரியது. ஆனாலும், வடநாட்டு அலிகள், சிறிது மதிக்கப்படுகிறார்கள். நல்லது கெட்ட துக்கு மக்கள் அவர்களுடைய உதவியை நாடுகிறார் கள். விகடனில் வெளியான 'வாடாமல்லி' வாசகர்க ளின் மனசாட்சியை உலுக்கியது. இதனால் என் எழுத்தின் நோக்கம் நிறைவடையவில்லை என்றாலும், அதன் எல்லையை நோக்கி போய்க் கொண்டிருப்பதாக நினைக்கிறேன்.

*குறிப்பு : அண்மையில் திருப்பூரில் முற்போக்கு படைப் பாளி சுப்பிர பாரதிமணியன் முயற்சியில் சேவை நிறுவனம், கலை இலக்கிய பெருமன் றம் ஆகிய அமைப்புகள் சார்பில் வாடா மல்லி விமர்சனக் கூட்டம் நடைபெற்றது. இலக்கிய மோதல்களில் எனக்கு எதிர்ப்பக் கம் நின்ற கோவை ஞானி அவர்கள் இந்த நாவலைப் பாராட்டினார். எனது நாவல் வணக்கத்திற்குரியது என்றும் தெரிவித்தார். என்னோடு பத்திரிகைகளில் மோதினாலும் தனது ஆய்வு நூலில் எனக்குரிய இடத்தைத் தனது பாணியில் கொடுத்தவர். இவருடன் இடதுசாரி தோழர்களான பழனிச்சாமி, பொன்னுச்சாமி, அலோசியஸ், எஸ். ஏ. பாலகிருஷ்ணன் ஆகியோர் என் படைப்பு களை ஆக்கபூர்வமாக விமர்சனம் செய்தார் கள்.*

# 20

# பேச முடியாதவைகளுக்காக...

## முயல் போட்ட மூன்று முடிச்சு

அண்மையில் வானொலிச் செய்தியாளர் என்ற முறையில் திருவண்ணாமலைக்கு அருகே உள்ள ஒரு முயல் பண்ணைக்குச் சென்றேன். ஸ்பிக் பல இளைஞர் களுக்கு பயிற்சி அளித்து முயல் பண்ணை, மீன் பண்ணை, காளான் பண்ணை போன்றவற்றை அமைத் துக் கொடுத்திருக்கிறது. நான் மாவட்ட அதிகாரிகளுட னும் ஸ்பிக் நிறுவன ஊழியர்களுடனும் ஒரு முயல் பண்ணையைப் பார்வையிட்டேன். விதவிதமான முயல்கள்; பொன்நிறம் கொண்டவை, ஜோதி நிறமா னவை பல்வேறு வகைகள். ஆனால் அத்தனைக்கும் ஒரு ஒற்றுமை. இவற்றை அறுத்தால்கூட சத்தம் போடாதாம். அந்த அளவிற்கு அப்பிராணிகள். பண்ணை இளைஞர் ஒரு முயலை காதோடு அழுந்தப் பற்றி தூக்கினார். அப்போதுகூட அதன் முகத்தில் ஒரு சின்ன முணுமுணுப்பு இல்லை. இந்த முயல்களைப்

பற்றி அவர் சொன்ன இன்னொரு தகவல் என்னை வியப்புறச் செய்தது. பொதுவாக பெண் முயல்களை யும், ஆண் முயல்களையும் தனித்தனிக் கூடுகளி லேயே அடைத்து வைக்க வேண்டுமாம். ஆண் முயலை, பெண் முயலின் கண்ணில்கூட காட்ட கூடாதாம். அப்படிக் காட்டிவிட்டால் போதுமாம் பெண் முயலுக்கு, தான் கர்ப்பம் தரித்து விட்டோம் என்று எண்ணம் ஏற்பட்டு ஒரு போலித்தனமாக கர்ப்பம் கூட ஏற்பட்டு விடுமாம். பிரசவம் இல்லாத சேர்க்கை கர்ப்பம். இதனால் ஆண் முயலின் சேர்க்கைக் குப் பிறகும் இந்தப் பெண் முயல்கள் கர்ப்பம் அடைய முடியாதாம். ஆகையால் பெண் முயல்களுக்கு பருவம் வரும்போது (ஆறாவது மாதம் இவைப் பூப்பெய்து விடுமாம்.) இந்த பெண் முயலை ஆண் முயலின் கூட்டில் விட வேண்டுமாம். இதன் கூட்டில் ஆண் முயலை விட்டால் பெண் முயல் அந்த ஆணைத் துரத்தி விடுமாம். ஆகையால் பெண் முயலை, ஆண் முயல் கூட்டில் விட்டு அது சூழல் புரியாமல் குழம்பும்போது, ஆண் முயலை சேர்க்கைக்கு விட்டு விட வேண்டுமாம். எல்லாம் சரி, பெண் முயலுக்கு விரகதாபம் வந்திருப்பதை எப்படி அறிந்து கொள் வது? அடித்தால்கூட அழத் தெரியாத இந்தப் பெண் முயலுக்கு பருவதாகம் வரும்போது அதன் பிட்டம் ஆடுமாம். அல்லது அதை ஆட்டிக் காட்டுமாம். பிட்டத்து முடிகள் அதிர்ந்து, அதிர்ந்து நெளியுமாம்... இந்த சமிக்ஞைதான் பெண் முயல், துணை தேடும் வேட்கையைப் புலப்படுத்துவது. இந்த விவரங்களை உள் வாங்கிக் கொண்டு சென்னைக்குத் திரும்பினேன். குமுதம் பத்திரிகை பெண்களுக்காக ஆரம்பித்திருக்

கும் 'மலர் மல்லிகைக்கு' ஒரு கதை கேட்டார்கள். வழக்கம்போல் அடையார் பீச்சில் உட்கார்ந்து ஒரு அப்பாவி முயல் போல் விவரம் தெரியாமல் வளர்க்கப் படுகிற ஒரு பெண்ணும், தனக்கு திருமணம் செய்ய வேண்டும் என்பதை மறந்துபோன பெற்றோருக்கு எப்படி புலப்படுத்துவாள்? என்று எண்ணிப் பார்த்தேன். அதுவே ஒரு யதார்த்தம் கலந்து கற்பனையாகி கதையானது. இதற்கு 'நெளிவு' என்று குமுதம் பால்யூ பெயரிட்டார். 'முயல் போட்ட மூன்று முடிச்சு' என்பது பொருத்தமாக இருக்கும் என்றும் பின்னர் குறிப்பிட்டார்.

### *சிறைச்சாலை என்ன செய்யும்...?*

இதேபோல் சிவகாசிப் பக்கம் டூர் போயிருந்த போது ஒரு புறாக் கூண்டைப் பார்த்தேன். பல்வேறு வகையான புறாக்கள்... இந்தப் புறாக்கள் காட்டுக்குப் போய்விட்டு மீண்டும் திரும்பி வந்து விடுமாம்.. வரும்போது காட்டு ஆண் அல்லது பெண் புறாக்களை கூட்டி வந்து விடுமாம்... காட்டில் சுதந்திரமாகத் திரியும் புறாக்கள் காதல் வயப்பட்டு, பூனைகளும், நாய்களும் பயமுறுத்துகிற கிராமங்களுக்கு காதல் கிழத்திகளோடு வருகின்றன என்றால் அது புனிதக் காதல் அல்லவா?... நாட்டுப்புற புறாக் காதலிகளோடு அல்லது காதலர்களோடு கூண்டில் அடைபட சம்மதிக் கின்றன என்றால் அது காதலின் சக்திதானே.... இதை வைத்து 'சிறைச்சாலை என்ன செய்யும்,' என்ற சிறுகதை எழுதினேன்...

## ஒரு யானையின் காதல்

இதேபோல் கர்நாடக மாநிலத்தில் சிமோகா காட்டிற்கு டூர் போயிருந்த போது காட்டிலாகா அதிகாரிகள், ஒரு அரிய விபரத்தைச் சொன்னார்கள்... அதாவது சங்கிலியால் பிணைக்கப்பட்ட பெண் யானையை, காட்டு ஆண் யானை விரும்புமாம். ஒரு வேளை அதன் கண்களுக்கு இந்தச் சங்கிலி யானை நகை நட்டுப் போட்ட குடும்பப் பெண்ணாகத் தெரியுமோ என்னமோ! பழக்கப்பட்ட பெண் யானைக்கும் இந்த காட்டு யானைதான் பிடிக்குமாம். பக்கத்தில் உள்ள பழக்கப்பட்ட ஆண் யானை பிடிக்காதாம். ஆகையால் வன இலாகா அதிகாரிகள் பழக்கப்பட்ட இந்தப் பெண் யானைகளை காட்டுக்கு அனுப்பி விடுவார்களாம். இவைகளும் காட்டு யானைகளுடன் சல்லாபம் செய்துவிட்டு வன இலாகா அதிகாரிகளிடமே திரும்பி விடுமாம். எவ்வளவு பெரிய சத்தியக் கட்டுப்பாடு... எவ்வளவு பெரிய காதல் வேகம்... பாவம்... பழக்கப்பட்ட ஆண் யானையை.... இம்போடன்ட் பெல்லோ... எந்தப் பெண் யானையும் சீண்டாதாம்... இதை வைத்து, 'மனிதா தெரிந்து கொள்' என்று தேவியில் ஒரு சிறுகதை எழுதினேன்... தலைப்பு வேறு வைத்திருக்கலாம் போல் தெரிகிறது....

# 21

# இஸ்லாமியத் தோழர்களுக்காக

## *மூட்டம்*

அயோத்தி சம்பவத்திற்கு பிறகு நெல்லைக்கு போய்விட்டு ரெயிலில் திரும்பி வந்தபோது பழமையான பழுத்த காங்கிரஸ்வாதியும், நேர்மையான நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. எஸ்.கே.டி.ராமச்சந்திரன், தி.மு.க. பிரமுகர் திரு. ஜின்னா ஆகியோருடன் வந்து கொண்டிருந்தேன். அப்போது அயோத்தி சம்பவங்களுக்கு எதிரொலியாக நடைபெற்ற வகுப்பு கலவரங்களைச் சுட்டிக்காட்டி, தமிழகத்தில் நீண்ட பாரம்பரியத்தின் காரணத்தால், இப்படிப்பட்ட சம்பவங்கள் நடைபெறவில்லை என்று பெருமிதமாகச் சொன்னேன். அப்போது திரு. ஜின்னா குறுக்கிட்டு, தமிழக முஸ்லீம்கள்தான் இப்போது அதிகமாக பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள் என்றார். வட இந்தியாவிலாவது முஸ்லீம்கள் திருப்பி தாக்கி, தங்களது ஈகோவை, திருப்தி செய்துக் கொண்டார்கள். ஆனால் தமிழகத்திலோ முஸ்லீம்கள் மனப்பிராந்தியோடு வாழ்கிறார்கள் என்றார். இதற்கு எடுத்துக்காட்டாக நெல்லை மாவட்டம் மேலப்பாளையத்தை இந்து வகுப்புவாதிகள் முற்றுகையிட்டு, அங்குள்ள முஸ்லீம் மக்களை மூன்று நாள் பட்டினி போட்டுச் சரணடையச் செய்ததையும், போலீஸ் துப்பாக்கி சூடு ஏற்பட்டதையும், நினைவுபடுத்தினார். இப்பொழுது தமிழக முஸ்லீம்கள்தான் மற்ற முஸ்லீம்களை விட கையறு நிலையில் தவிப்பதாகத் தழுதழுத்த குரலில் குறிப்பிட்டார்.

மறுமுறை நெல்லைக்குச் சென்றபோது மேலப்பா

ளையத்திற்குச் சென்றேன். திரு. ஜின்னா அவர்கள் சொன்னதுபோல அங்குள்ள முஸ்லீம் பெருமக்கள் இயலாமையில் தவிப்பதைப் புரிந்து கொண்டேன். விவரங்களைச் சேகரிக்கச் சேகரிக்க அங்குள்ள முஸ் லீம் மக்கள் அநியாயமாகப் பழிவாங்கப்பட்டது புரிந்தது. இதை ஒரு நாவல் ஆக்கவும் திட்டமிட்டேன்.

இஸ்லாமிய மக்களைப் பற்றி ஒரு (இந்து) எழுத்தாளன் எழுதும்போது எவ்வளவு எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதைச் சொல்ல வேண்டிய தில்லை. ஆனாலும் இவர்களை ஒரு ஆத்மார்த்தமாக நேசித்ததால் தைரியப்பட்டேன். மசூதிகளுக்குச் சென்று இவர்களின் தொழுகை முறைகளை தெரிந்து கொண்டேன். பெரியவர்களிடம் என்னுடைய நோக் கத்தை குறிப்பிட்டு பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்து கொண்டேன். பெரியவர்களின் வரவேற்பு கிடைத்த அதே சமயம் சில முஸ்லீம் இளைஞர்கள் என்னை குறுக்கு விசாரணை செய்து, வேண்டாவெறுப்பாய் அனுமதித்தார்கள். நான் மனம் தளரவில்லை... திருக்கு ரானைப் படித்தேன்... பல்வேறு இஸ்லாமிய தொழுகை முறைகளை விளக்கும் நூல்களை வாசித்தேன்... என் முஸ்லீம் நண்பர்களோடு 'ஜமாத்' பற்றியும், அவர்க ளது வீட்டு கலாச்சாரம் பற்றியும் துல்லியமாகத் தெரிந்து கொண்டேன். அதோடு கல்லூரி படிப்பிற்குப் பிறகு சின்னாளப்பட்டிக்கு அருகேயுள்ள ஆத்தூரில் முஸ்லீம் தாய்மார்களுக்கான பாய் முடையும் கூட்டு றவு சங்கத்திற்கு, இன்ஸ்பெக்டராக நியமிக்கப்பட்டி ருந்தேன். அந்த தாய்மார்களின் வீட்டிற்குத் தாராளமா கச் சென்று உணவு அருந்தும் உரிமை எனக்கிருந்தது. ஆகையால் மேலப்பாளையம் சம்பவத்தை 'மூட்டம்' என்ற பெயரில் செம்மலரில் தொடர்கதையாக எழுதி னேன். ஒரு இந்துவுக்கும், முஸ்லீமுக்கும் (இருவருமே

கொழுத்த பணக்காரர்கள்) ஏற்படும் 'தொழில் போட்டி' அயோத்தி சம்பவத்திற்கு பிறகு எப்படி வகுப்புவாத மாக மாறுகிறது என்பதையும், அதே சமயம் இந்து, முஸ்லீம் பாட்டாளிகள் எப்படி அண்ணன் தம்பியாக வாழ்கிறார்கள் என்பதையும் விளக்கி இருந்தேன். கல்லூரி இந்து - முஸ்லீம் காதல் பகையாக மாறும் போது, பெட்டிக்கடை - வெற்றிலை பாக்கு இந்து முஸ்லீம் காதல் எப்படி உதயமாகிறது என்பதையும் எழுதியிருந்தேன். அண்மையில் நான் எழுதிய நாவல்க ளில் எனக்கு பிடித்த நாவல் இது....

ஒரு படைப்பு அதன் சமூக தாக்கத்தின் அடிப்ப டையில் விமர்சிக்கப்பட வேண்டியது என்பது என் கருத்து. நல்ல தாக்கத்தை ஏற்படுத்தினால் அது நல்ல படைப்பு... மோசமான தாக்கத்தை ஏற்படுத்தினால் அது நச்சுப் படைப்பு... இப்படித்தான் விமர்சன அணுகுமுறை இருக்க வேண்டும்.. ஆனால் நமது விமர்சன பண்டிதர்களோ, ஒரு படைப்பின் சமூக தாக்கத்தைப் பற்றி கவலைப்படாமல் அதிலுள்ள இலக்கியக் கிருமிகளைத் தான் பூதக்கண்ணாடி போட்டு ஆராய்ச்சி செய்கிறார்கள். இந்த விமர்சன நீரோக்களுக்கு 'மூட்டம்' பிடிக்காமல் போகலாம்... ஆனால் முற்போக்கு இலக்கியத்தில் இது ஒரு முத் திரை....

**நன்றி தோழர்களே...**<br>
**வாய்ப்புக் கிடைத்தால்...**<br>
**அதாவது இந்தக் கதைகளின் கதை**<br>
**கையைக் கடிக்கவில்லையானால்,**<br>
**இதே பாணியில்**<br>
**மீண்டும் சந்திப்போம்...**

# என்னுரை

ஒரு படைப்பாளி, தன்னையும் சேர்த்தே படைப்பாக்குகிறார்.

மேட்டுக்குடியினரால் புறந்தள்ளப்பட்ட, நமது நாட்டுப்புறப் பாடல்களுக்கு, புத்துயிர் வழங்குபவர்களில் ஒருவரான கவிஞர். குருவிக்கரம்பை சண்முகம், இந்த முன்னுரை எழுதுவது பற்றி நான் சிந்தித்துக் கொண்டிருக்கும்போது, தொலைக்காட்சியில் ரத்தினச் சுருக்கமாக தெரிவித்த கருத்து, நான் எழுதும் இந்த உரைக்கு முதல் வரியானது. ஆனாலும் —

ஒரு படைப்பாளி, தன்னை எப்படி அந்தப் படைப்பில் சேர்த்துக் கொள்கிறார் என்பதே முக்கியம். இது அவரது படைப்பை மேன்படுத்தலாம் அல்லது வீணடிக்கலாம். இதனால்தானோ என்னவோ, எனது மானசீக இலக்கியக் குருவான லியோ டால்ஸ்டாய், "அனுபவம் முக்கியமல்ல... அனுபவத்தில் படிப்பினை கிடைப்பதே முக்கியம்" என்றார். இதை மேலும் புரிய வைப்பதற்காக, "வாழ்க்கை என்பது ஒரு சாளரம். அதன் வழியாக தெருவைப் பார்க்க வேண்டுமேயன்றி அதுவே தெருவாகி விடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்" என்றார்.

இந்தப் பின்னணியில்தான், இந்த நூல், உங்களின் மேலான பார்வைக்கு வருகிறது. எனது அனுபவங்களில், சமூக வாழ்க்கையைக் குறுக்கிக் கொள்ளாமல் இந்த சமூகத்திற்குள், அவற்றை ஊடுருவ விட்டிருக்கிறேன்.

அனுபவம் எவ்வளவு முக்கியமோ, அந்த அனுபவத்தை பகிர்ந்து கொள்வதும் முக்கியம். அனுபவம் என்ற ஆசானால், எனது இளமைக் கால வாழ்க்கையை, கசப்போ இனிப்போ இல்லாமல் அசைபோட முடிகிறது. பின்னர் ஏற்பட்ட அனுபவங்கள் எனது சமூகக் கண்ணோட்டத்திற்கு நங்கூரம் ஆகின்றன. ஒரு மூத்த படைப்பாளி என்ற முறையில் இப்போது விழுதுகள் விட்டுக் கொண்டிருக்கும் நான், எனது வேர்கள் பற்றி எடுத்துரைக்க வேண்டியதும் அவசியமாகிறது... கடமையாகிறது.

**கல்லூரிக் காலத்திலே...**

பல்வேறு நல்லதும், கெட்டதுமான அனுபவங்களை உள்வாங்கிக் கொள்ளும் பக்குவம் எனக்கு, கல்லூரி காலத்திலேயே ஏற்பட்டது. அப்போது கொடிகட்டி பறந்த திராவிடக் கலாச்சாரத்திலிருந்து விடுபட்டு, சுய சிந்தனையுள்ள ஒரு மாணவ தேசியவாதியாக இருந்தேன். அன்றைய 1960-ம் ஆண்ட காலக் கட்டத்தில், "தேசிய முழக்கம்" என்ற வாரப்பத்திரிகையில் ஒரு கவிதை எழுதினேன். இந்தப் பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் ஒருவரும், கல்லூரியில் என் மூத்த சகாவுமான திரு.ச. ராசமாணிக்கம் (செந்தில்நாதனின் அண்ணன்) என்னைக் "கண்டெடுத்து", வடசென்னையில் கோவிந்தப்பன் நாயக்கன் தெருவிலுள்ள 'தேசிய முழக்கம்' அலுவலகத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கே, தாய்மொழி மலையாளம் ஆனாலும், தன்னைத் தமிழ்மணி என்று ஆக்கிக் கொண்ட சகாவுடனும், தெலுங்கரான பகத்சிங், பிராமணரான கரிகாலன், மற்றும் பலராமன், நேருதாசன், தர்மலிங்கம் போன்ற தேசிய தோழர்களின் நட்பு கிடைத்தது. பின்னர் நேருதாசனை ஆசிரியராகக் கொண்ட ஐக்கிய இந்தியா என்ற பத்திரிகையில், "முட்கலூர் அழகி", என்ற முற்றுப்பெறாத சரித்திர தொடர்கதையையும், 'சாண்டில்யன் பாணியில்' எழுதினேன். கல்லூரி பேச்சுப் போட்டிகளில் திராவிட இயக்க மாணவர்களோடு, நட்பு குறையாமல், எனக்குக் கிடைத்த வெற்றி தோல்விகள் என்னை ஒருசமூக சிந்தனையாளனாக மாற்றியது. இந்தப் பின்னணியில்தான் பல்வேறு கதைகளை எழுதினேன். இதற்குப் பிறகு பல்வேறு கட்டங்களில் எனக்குக் கிடைத்த தோழமை, என்னை நாடறிந்த நல்ல எழுத்தாளனாக மாற்றி விட்டது.

**நண்பர் வட்டத்தில்...**

பழுத்த தமிழ் அறிஞர்களும், சிறந்த இலக்கியவாதிகளுமான, பேராசிரியர் பாக்கியமுத்து, பேராசிரியை சரோஜினி பாக்கியமுத்து ஆகியோர் நடத்திய 'நண்பர் வட்டத்தில்', 1988-டிசம்பர் முதல், 1993-மே வரை என் கதைகளின் கதைகள் பற்றி நான் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பே இந்த நூல், அந்தப் பத்திரிகையின் பக்க கட்டுப்பாட்டைக் கருதி, குறிப்புகளாக எழுதப்பட்டவை. அந்த நேர உணர்வுகளை, பிரதிபலிக்கும் வகையில் அவற்றை மாற்றாமல்,

அப்படியே சேர்த்திருக்கிறேன் (முட்டம் நாவல் மட்டும் இதற்கு விதிவிலக்கு) கிறிஸ்தவ இலக்கிய சங்கத்தின் மூலம் என்னை அறிமுகப்படுத்தியவர் பேராசிரியர் பாக்கியமுத்து. இந்தச் சங்கத்தின் இனிய பொதுச் செயலாளரான டாக்டர் தயானந் பிரான்சிஸ் அவர்கள் என்னை இன்னும் கௌரவப்படுத்திக் கொண்டு இருப்பதை நினைத்தால் நெஞ்சம் நெகிழ்கிறது.

ஆனந்த விகடனில் என் சிறுகதைகளை வெளியிட்ட அதன் ஆசிரியர் திரு.பாலசுப்பிரமணியம் என்றால், அதை வெளியிட உதவியவர்கள் தாமரைமணாளன், ஜே.எம். சாலி, வி.எஸ்.வி. ஆகியோர். இதேபோல் குமுதத்தில் என் கதைகள் வர காரணமானவர் எஸ்.ஏ.பி. அவர்கள். இதற்கு உதவியவர்கள் ஜ. ரா. சுந்தரேசன், சண்முகசுந்தரம் ஆகியோர். இந்தக் கட்டத்தில் என் கதைகளைப் பாராட்டி முதன் முதல் கடிதம் எழுதியவர் "இலக்கிய வீதி" இனியவன். இவரும், இந்த அமைப்பைச் சேர்ந்த எழுத்தாளர்களும், கவிஞர்களுமான மது.ராஜேந்திரன், எம்.வி.குமார், எஸ்.குமார், எஸ். வெங்கடேசரவி, குமார கிருஷ்ணன், தாராபாரதி, பல்லவன் ஆகியோர் இன்றும் என் எழுத்தையும், என்னையும் நேசிப்பவர்கள்.

**தாமரையில்...**

அடுத்த கட்டமாக, என் கதைகளுக்கு, அழுத்தம் சேர்த்தவர் கவிஞர் கே.சி.எஸ். அருணாசலம்; இவரை ஆசிரியராகக் கொண்ட தாமரையில், கடல்மணி என்ற பெயரில் "புறம்போக்கு மரங்கள்" என்ற சிறுகதை முதன் முதலாக பிரசுரமாயிற்று. "இந்த மரம் அபாரம். இதில் ஒரு கொப்பைக் கூட நான் ஒடிக்கவில்லை" என்று கவிஞர் எழுதியதை இப்போது இனிமையோடு நினைத்துப் பார்க்கிறேன். இவர் மூலம் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் நட்பும், அதன் மூலம் தொ.மு.சி., - தி.க.சி. "சரஸ்வதி" ஆசிரியர் விஜயபாஸ்கரன், "சோவியத்நாடு" பத்திரிகையைச் சேர்ந்த பெரியவர்கள் ஆளவந்தார், ராதாகிருஷ்ணன், ஜனசக்தியைச் சேர்ந்த ஆர்.கே. கண்ணன், எம்.எஸ். கிருஷ்ணன், தா. பாண்டியன் ஆகிய சிந்தனையாளர்களின் தோழமை கிடைத்தது. வழக்கறிஞர் என்.டி.வானமாமலை, கம்யூனிஸ்ட் தலைவர்கள் கல்யாணசுந்தரம், பா. மாணிக்கம், தியாகராஜன், ஆர். நல்லகண்ணு, கே.டி.கே. தங்கமணி, கோவில்பட்டி அழகிரிசாமி, கோபு ஆகிய தன்னல மறுப்பு

வாதிகளிடம் ஒரு மாணவனைப் போல் அணுகி இருக்கிறேன். இப்போது புதுடெல்லியில் கட்சி மேலிடத்தில் அங்கம் வகிக்கும் என் இனிய தோழர் து. ராஜாவும், நானும் 25 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு கதை சம்பந்தமாக காரசாரமாய் வாதிட்டதும், இதனாலேயே அவரும், நானும் சொந்த சகோதரர்களாய் ஆகிவிட்டதும், என் இலக்கிய பயணத்தில், நான் களைப்படையாமல் இருப்பதற்கான, கனிதரு நிழல்கள்... பேராசிரியர் நா. வானமாமலை அவர்கள், இலக்கியத்தை எப்படி அணுக வேண்டுமென்று எனக்குப் பாடம் புகட்டியவர்... தாமரையில் வெளியான "ஐம்பெரும் விழா" என்ற குறியீட்டுக் கதையை விமர்சனம் செய்த முதல் திறனாய்வாளர். அவரது இழப்பு எனக்கும், பொன்னீலனுக்கும் பெரும்பேரிழப்பு. என்றாலும் ஆர்.என்.கே. அவர்களும், தாமரையில் இப்போதைய பொறுப்பாசிரியர் தோழர் மகேந்திரனும், என்னை மேன்படுத்தும் பல்வேறு குறிப்புகளை தாமரையில் எழுதி, என் எழுத்துக்கு ஊன்றுகோலாய் இருக்கிறார்கள், என்.சி.பி.ஹெச். நிறுவனம் என்னை தனது எல்லா விழாக்களிலும் பேசவைத்து கௌரவித்துள்ளது. தமிழகத்தின் தலைசிறந்த வழக்கறிஞரான என்.டி.வானமாமலை அவர்கள் இன்றளவும் என் கதைகளை விமர்சித்து என்னை உற்சாகப்படுத்துபவர்.

தாமரையுடன் தொடர்பு ஏற்பட்ட காலக்கட்டத்தில், என் சிந்தனையை வளப்படுத்தியவர்களில் முக்கியமானவர் கவிஞர் இளவேனில். சர்வதேச இலக்கியத்தையும், அரசியலையும், மார்க்சிய முறையில் பார்த்த இந்த தோழரும், நானும், சா. கந்தசாமி, மலர்மன்னர், ஞா. மாணிக்கவாசகன், வ.உ.சி.யின் பேரன் இளங்கோ போன்றோரிடம் 20 ஆண்டுகளுக்கு முன்பு நடத்திய இலக்கிய வாதம் இன்னும் காதுகளில் ஒலிக்கிறது. இளவேனிலின் மனிதநேயமிக்க நட்பு இன்னும் என்னை செழுமைப் படுத்திக் கொண்டிருக்கிறது.

**செம்மலரில்...**

இதற்கு அடுத்த கட்டமாக, என் எழுத்து ஆழப்படுவதற்கும், ஒரு இயக்கமாக மாறுவதற்கும் காரணமாகத் திகழ்வது தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கமும் செம்மலர் பத்திரிகையும்... மணியக்காரரின் மகனாகப் பிறந்தாலும் சொத்துக்களை உதறிவிட்டு, தூய தொண்டில் ஈடுபட்ட பெரியவர் கே.முத்தையா அவர்களை,

சாஸ்திரி பவனில் இப்போதைய தொலைக்காட்சி செய்தி ஆசிரியர் ராமகிருஷ்ணன், சரியாக 23 ஆண்டுகளுக்கு முன்பு அறிமுகப்படுத்தி வைத்தார். அதற்கு முன்பே என் குடும்ப நண்பரும், த.மு.எ.ச.வின் இப்போதைய தலைவருமான தோழர் செந்தில்நாதனின் 'சிகரம்' பத்திரிகையில் "சத்திய ஆவேசம்" என்ற தொடர்கதையை எழுதிக் கொண்டிருந்ததை கே.எம். நினைப்பூட்டினார். இதற்கு மேலும் ஒரு படி சென்று எனது நான்கைந்து படைப்புகளை செம்மலரில் அறிமுகம் செய்து வைத்தார். இந்த இருவரது நட்பும், ஒரு நிறுவன நட்பாகி, சிறந்த இடதுசாரி சிந்தனையாளர்களான த.மு.எ.ச. செயலாளர் கதிரேசன், பொருளாளர் வரதராஜன், இந்த இயக்கத்தோடு இரண்டறக் கலந்த எஸ்.ஏ. பெருமாள், நன்மாறன், அகத்தியலிங்கம், குமரேசன், பிரளயன், சி.ஏ. முத்து, உதயகுமார், கமலாலயன், சு. வெங்கடேஷ், இரா.தெ. முத்து, புலவர் கி.த. பச்சையப்பன், மகேந்திரன் ஆகியோரது நட்பை ஈட்ட வைத்த மார்க்சிய கட்சி தலைவர்களான, பெரியவர்கள் ஏ.நல்லசிவன், சங்கரைய்யா, லட்சுமணன், வரதராசன், மீனாட்சிசுந்தரம், ஜவகர் ஆகியோரின் கண்துஞ்சா சமூக நினைப்பு என்னை இன்னும் பிரமிக்க வைக்கிறது.

**இலக்கிய மகாநதி...**

பெரியவர் வல்லிக்கண்ணன் அவர்களின் நட்பு எனக்கு கிடைத்த மிகப் பெரிய பேறு. அந்த இலக்கிய மகாநதி இன்னும் என் இலக்கிய பாத்திகளுக்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருக்கிறது. இவரை தி.க.சி. யோடு சந்திக்கும்போது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி ஏற்படும். இப்போது கூட எனது கதையின் கருவை, பெரியவர் வல்லிக்கண்ணன், தோழர்கள் செந்தில்நாதன், எஸ்.ஏ.பி., சென்னை வானொலி நிலைய இயக்குனரும், சிறந்த இலக்கியவாதியுமான திரு. விஜய திருவேங்கடம் ஆகியவர்களில் ஒருவரிடம், விவாதித்த பிறகே பேனாவை எடுப்பேன். இதேபோல் அகில இந்திய ஜனநாயக மாதர் மன்றத்தைச் சேர்ந்த சகோதரிகள், மைதிலி சிவராமனும், பாப்பா உமாநாத், உ. வாசுகி, பாலபாரதி ஆகியோர் என் கதைகளில் பெண்ணியம் பெரும்பங்கு வகிக்க காரணமானவர்கள்.

**மணிவாசக மெய்யப்பன்**

எனக்கு அச்சுரதம் கொடுத்தவர், மணிவாசகர் நூலகத்தின்

உரிமையாளர் பேராசிரியர் ச. மெய்யப்பன். கடந்த 25 ஆண்டு காலமாக என் படைப்புக்களை தொடர்ந்து பிரசுரிப்பவர். இந்த நூலகத்தின் முக்கிய பங்காற்றிய நாவலாசிரியர் திரு. நாராயணன் அவர்கள் "புருப்பில்" என் கதைகளைப் படித்துவிட்டு அதன் நயங்களை எடுத்துரைக்கும்போது மெய் மறந்து போவேன். மேலும், மேலும் என்னை எழுதத் தூண்டியவர் இவர். இவரும், என் படைப்புக்களை பல அரங்குகளில் எடுத்துரைத்த பேராசிரியர் மெய்யப்பனும், என் எழுத்துக்கு கிடைத்த வரப்பிரசாதங்கள். திரு. நாராயணன் இடத்தில் இப்போது அமர்ந்திருக்கும், திரு. குருமூர்த்தி அதே பாரம்பரியத்தை என்னிடம் தொடர்ந்து கடைப்பிடிப்பவர். (அந்தக் காலத்தில் கவிஞர் கண்ணதாசன், எம்.எஸ். விஸ்வநாதனுக்கு உற்சாகமூட்டுவதற்காக இளையராஜாவை பத்திரிகையில் தாக்கியபோது, கவிஞரின் நெருங்கிய நண்பரான நாராயணன் அவர்கள் மூலம் அந்த தாக்குதலை நிறுத்தியவன் நான்) மணிவாசகர் நூலகத்திற்கு அடுத்தபடியாக எனக்கு ஆக்கமும், ஊக்கமும் தருகிறவர் வானதி பதிப்பக உரிமையாளர் பெரியவர் திருநாவுக்கரசு அவர்கள்.

**திறனாய்வாளர்கள்...**

ஆங்கிலத்திலும், தமிழிலும் வல்லமை வாய்ந்த வலம்புரிஜான், பேராசிரியர்கள் ரபீர்சிங், இளவரசு, பொற்கோ, தி.சு. நடராசன், ராமகுருநாதன், ராமன், ராஜாராம், ராமலிங்கம், சிவசுப்பிரமணியம், சு. வெங்கடராமன், எம்.எஸ். ராமசாமி, சரஸ்வதி ராம்நாத், ஒரு கோட்டுக்கு வெளியே நாவலை இந்தியில் மொழிபெயர்த்த திருமதி. விஜயலட்சுமி சுந்தர்ராஜன், தொடக்க காலம் முதல் என்னை ஆக்க ரீதியாக அணுகும் டி.எஸ். ரவீந்திரதாஸ், இந்து பத்திரிகையின் சி.வி.ஜி. விமர்சகர் சுந்தரேசன் உள்ளிட்ட பல சிந்தனையாளர்கள் என்னை இன்னும் எழுதும்படி சொல்லாமல் சொல்கிறவர்கள். கோவை ஞானி அவர்களின் அண்மைக்கால நட்பும், கடிதங்களில் புலப்படுத்தும் அவரது இலக்கிய மேதமையும் என் எதிர்கால படைப்புகளை மேலும் செழுமைப்படுத்தும் என நம்புகிறேன். சக படைப்பாளிகள் என்ற முறையில் டி. செல்வராஜ், பொன்னீலன், தனுஷ்கோடி ராமசாமி, செ. யோகநாதன், கு. சின்னப்ப பாரதி, மேலாண்மை பொன்னுச்சாமி, கந்தர்வன், தமிழ்ச்செல்வன், தேனி சீருடையான், தோப்பில் முகம்மது மீரான், சுப்ரபாரதி மணியன், ரோஜா குமார், வேல. ராமமூர்த்தி,

பிரபஞ்சன், கமலாலயன் ஆகியோர் என்னுள் தாக்கத்தை ஏற்படுத்துகிறவர்கள். எல்லாவற்றிற்கும் மேலாக ரெயில்களில், பேருந்துகளில், இதர பொது இடங்களில், என்னிடம் அறிமுகம் செய்து கொண்டு என் கதைகளை நினைவு படுத்தும், எண்ணற்ற சகோதர சகோதரிகள், தொழிலாள தோழர்கள் கடிதங்கள் எழுதும் வாசக பெருமக்கள் ஆகியோர் என் நெஞ்சை விட்டு நீங்காத நேயர்கள்.

சென்னை பிரசிடென்சி கல்லூரியில் தாவரவியல் பேராசிரியர் சுப்ரமணியன், நான் இடுகுறிக் கதைகளை எழுதுவதற்கு பல்வேறு விஞ்ஞானத் தகவல்களை தந்து கொண்டிருப்பவர். எனது அரசியல் சமூக அணுகுமுறையில் இருந்து முற்றிலும் மாறுபட்ட தமிழகத்தின் தலைசிறந்த பேச்சாளர்களில் ஒருவரான ஆலடி அருணா, மாணவர் நகலக உரிமையாளர் சகோதரர் அருணாசலம், ஆகியோரிடம் தொடர்ந்து நான் மேற்கொள்ளும் எதிர்வாதம் என் கருத்துக்களை வலுப்படுத்திக் கொள்ளவும், மறுபரிசீலனை செய்யவும் உதவுகின்றன. தமிழ்ச் சான்றோரான சிலம்பொலி செல்லப்பன் அவர்கள், கவனகர் இரா. கனகசுப்புரத்தினம் ஆகியோர் மூலம் தமிழின் ஆழ்ந்த புலமை என்னை பிழைபட எழுதாமல் இருக்கவும், ஆங்கில வார்த்தைகளைத் தவிர்க்கவும், தூண்டுகின்றன. எழுத்தாளர் கோவி. மணிசேகரன், என்னை "எழுதாமல் இருக்காதே இருக்காதே" என்று உசுப்பி விடுகிறவர். 'ஏவிஎம்' குடும்பத்தைச் சேர்ந்த நவீன சிந்தனையாளரான திரு. அருண். வீரப்பன் அவர்கள் வாழ்க்கையில் புதிய அனுகுமுறையைப் போதிப்பவர். இப்படி பலப்பல மனிதநேயர்கள், என் எழுத்தின் நோக்கத்தை அர்த்தப் படுத்துகிறார்கள்.

இறுதியாக ஒரே ஒரு வார்த்தை -

எனது முதல் சிறுகதை தொகுப்பான "குற்றம் பார்க்கில்" 1976-ஆம் ஆண்டு வாக்கில் திரு.அன்பரசனால் வெளியிடப்பட்டது. செங்கை மாவட்டத்தின் அப்போதைய ஆட்சித்தலைவரும், என் இனிய நண்பருமான காலம் சென்ற திவான் முகம்மது அவர்கள் தலைமையில் நடைபெற்ற நூல் வெளியீட்டு விழாவில் அகிலன் அவர்கள் இப்படிப் பேசினார்.

"மற்ற எழுத்தாளர்களை, அவரைப்போல் எழுதுகிறார்...

இவரைப்போல் எழுதுகிறார் என்று மேல்நாட்டு எழுத்தாளரோடு ஒப்பிடலாம். ஆனால் சு. சமுத்திரத்தை அப்படி ஒப்பிட முடியாது. காரணம் அவரது படைப்புகள் அத்தனையும் "ஒரிஜினல்."

அகிலன் அவர்கள் சுட்டிக் காட்டியதுபோல் என் மக்களின் ஆசைகளை, நேசங்களை நிராசைகளை, ஆர்ப்பாட்டங்களை கண்டறிந்து, உள்வாங்கி அவற்றை விஞ்ஞான ரீதியாக பார்த்து மீண்டும் அவர்களுக்கே திருப்பிக் கொடுக்கிறேன். இதனால்தான் மாடனிசம், போஸ்ட் மாடனிசம், மேஜிக்கல் ரியலிசம் போன்ற இலக்கிய வாதைகள் இல்லாமல் என்னால் சுய தன்மையுடன் நிற்க முடிகிறது. என் இலக்கியத்தை அகராதி வைத்து எவரும் படிக்க வேண்டியதில்லை. என் மொழி மக்கள் மொழி. என் எழுத்தில் பெருமைகள் இருந்தால் அவை மக்களுக்கும், சிறுமைகள் இருந்தால் அவை எனக்கும் சேர வேண்டியவை. என் எழுத்து ஏழ்மையின் வெற்றியாகாமல், ஏழைகளின் வெற்றியாக வேண்டுமென்பதே என் நோக்கம்.

தமிழில் முதன் முதலாக அய்.ஏ.எஸ். தேர்வு எழுதி வெற்றி பெற்ற தோழர் பாலகிருஷ்ணன், தமிழக அரசின் மூத்த அதிகாரி பூர்ணலிங்கம் ஆகியோர் என்னை ஆங்கில வார்த்தைகளைத் தவிர்த்து நல்ல தமிழில் எழுத வற்புறுத்துகிறவர்கள்.

இதேபோல் இலங்கை எழுத்தாளர் செ. யோகநாதன், பத்திரிகையாளர் திருப்பூர் கிருஷ்ணன் ஆகியோரிடம் நான் மேற்கொள்ளும் விவாதங்கள் என் எழுத்துப் பணியை செம்மைப்படுத்தும். திறனாய்வாளர் எம்.எஸ். ராமசாமி, டாக்டர் ரபீர்சிங், டாக்டர் இராமகுருநாதன், டாக்டர் பழ. முத்துவீரப்பன், பேராசிரியர்கள் டாக்டர் நளினிதேவி, தியாகமணி போன்றோர் என் படைப்புக்களை நாடறியச் செய்தார்கள்.

பெரியவர் ஆர்.என்.கே. சொன்னதுபோல் இந்த நூல் இளம் படைப்பாளிகளுக்கு ஒரு தூண்டுகோலாக இருந்தால் மகிழ்ச்சி அடைவேன். இதைப் படிக்கும் தோழர்கள் இந்த நூல்பற்றி முடியுமானால் ஒரு வரி எழுதிப் போடலாம்.

தோழமைமிக்க,<br>**சு. சமுத்திரம்**

சு. சமுத்திரம்

# எனது கதைகளின் கதைகள்



ஏகலைவன் பதிப்பகம்

9, இரண்டாவது குறுக்குத்தெரு
டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர்
சென்னை - 41
☎ 4917594